வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 56 | சுடர்: 28 | கதிர்: 230 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 30, ஞாயிறு 14.07.2013

மொத்தமாகவும் சில்லறையாகவும்
புதிய மக்கள்வங்கி முன்பாக, 79/2, A9 வீதி, கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு:
077 2612452, 077 3357333
077 3322993, 021 2283829
Fax : 0212283829
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

# ஆஸி. கடலில் கவிழ்ந்தது படகு பச்சிளம் குழந்தை பரிதாபச் சாவு

## 9 பேர் மாயம்; 88 பேர் உயிருடன் மீட்பு

கான்பரா, ஜூலை 14
ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற அகதிகள் படகு ஒன்று கிறிஸ்மஸ் தீவில் இருந்து 87 கடல் மைல் தொலைவில் கடலில் மூழ்கியதில், உயிரிழந்த ஒரு குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 88 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர் மேலும் 8 பேர் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.
நேற்று முன்தினம் முற்பகல் 10.45 மணியளவில் ஆஸ்திரேலியக் கடற்படைக் கப்பல்களால் காப்பாற்றப்பட்ட 88 அகதிகளும், நேற்று அதிகாலை கிறிஸ்மஸ் தீவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.
இந்தோனேசியாவில் இருந்து

தொடர்ச்சி: பக்கம் 21



## நாட்டை பிரிக்கமாட்டோம் என வேட்பாளரிடம் சத்திய கடதாசி

### கோருகிறார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, ஜூலை 14
நாடு பிளவுபடுத்தப்படுவதை எதிர்ப்பதாக மாகாண சபையில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளர்களும் தனித் தனியாகச் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், தமது வேட்பு மனுவுடன் நாட்டைப் பிளவுபடுத்துவதை எதிர்ப்பதாக, தனித் தனியாகச் சத்தியக் கடதாசியையும் சமர்ப்பிக்க வேண்டும். எந்த வேட்பு மனுக்களையும் நாம் நிராகரிக்க விரும்பவில்லை. அதனால் எதிர்ப்புகளைத் தெரிவிக்கக் கால அவகாசம் எதுவும் வழங்கப்படமாட்டாது.
ஆகையால் தவறுகளில்லாமல், வேட்பு மனுக்களைச் சமர்ப்பிக்குமாறு கட்சிகளைக் கோருகின்றோம் என்று தேர்தல் ஆணையாளர் கூறினார். (த-5)

செய்தி


பக். 03
அமைச்சர் மேர்வின் சில்வாவை கணக்கெடுக்காத யாழ்.மக்கள்

விளையாட்டு



பக். 22
வெற்றி வாகை சூடியது ?ருத்தித்துறை ஐக்கியம்


பக். 23
ஹோக்லி முன்னேற்றம்

# முதன்மை வேட்பாளர் தெரிவு இழுபறியில்

## மூன்று கூட்டங்கள் கடந்தும் முடிவில்லை

## பெரும்பாலானோர் மாவைக்கே ஆதரவு





யாழ்ப்பாணம், ஜூலை 14
வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை முடிவு செய்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து மோதல்- இழுபறி-நிலை தொடர்ந்து நீடிக்கிறது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவை நிறுத்த வேண்டும் என ஒருமித்த குரலில் கருத்து வெளியிட்டு வருகின்றபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனையே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்பதில் விடாப்பிடியாக உள்ளார் எனத் தெரிய வருகிறது.
இதனால் முதலமைச்சர் வேட்பாளரைத் தெரிவு செய்வதில் இழுபறி நீடிக்கிறது.
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மூன்றரை மணி நேரம் இடம்பெற்ற கூட்டத்திலும் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது முடிவு செய்யப்படவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 கட்சிகளினாலும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்புக் குழுவில் உள்ளவர்களில் 18 பேர் வரை வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டனர் அவர்கள். மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று கருத்து வெளியிட்டனர். அத்துடன் கட்சி ஒன்றின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவர், சுழற்சி முறையிலான முதலமைச்சர் முறைமையை ஏற்படுத்தலாம் என யோசனை முன்வைத்தார்.
இதேவேளை, நேற்று மாலை 4 மணிக்கு முதலமைச்சர் வேட்பாளரைத் தெரிவு செய்யும் இறுதிக் கலந்துரையாடல் இடம்பெற ஏற்பாடாகியிருந்த போதும் பின்னர் இரத்துச் செய்யப்பட்டு, நாளை திங்கட்கிழமை அது இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## தேர்தல் விதிகளை ஜனாதிபதியே மீறுகிறார்

கொழும்பு, ஜூலை 14
தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளது.
இதனையடுத்து அறிவுறுத்தல்களை நாளை திங்கட்கிழமை வழங்குவதாக தேர்

தொடர்ச்சி: பக்கம் 21

## வெற்றிலையில் டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 14
வடமாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. தனது வீணைச் சின்னத்தைக் கைவிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிடவுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம

தொடர்ச்சி: பக்கம் 21

## “தோல்வி உறுதி”

### ஒத்துக்கொள்கிறார் றெமிடியஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 14
வடக்குத் தேர்தலில் நான் தோல்வி அடைவேன் என்ற போதிலும் கடந்த 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், ஸ்ரீகாந்தா போன்று படுதோல்வியைச் சந்திக்க மாட்டேன் என கூட்டமைப்பில் இருந்து அரசு பக்கம் தாவிய றெமிடியஸ் தெரிவித்துள்ளார்.
''அவர்கள் எடுத்த வாக்குகளை விட மாகாண சபைத் தேர்தலில் நான் அதிக வாக்குகள் எடுப்பேன்'' என்றும் அவர் கூறியுள்ளார்.
யாழ். நீதிமன்றில் சக சட்டத் தரணிகளுடன் உரையாடிக்கொண்டிருந்த வேளையிலேயே அவர் இப்படிக் கூறினார்.
''நான் சிங்களக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுகிறேன் என்று மக்களுக்குக் கவலை இருந்தாலும் கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் மக்கள் எனக்கு வாக்களிப்பாளர்கள்'' என்றும் றெமிடியஸ் கூறினார். (த-5)

## விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக நிறுத்த தமிழரசுக்கட்சி யாழ்.கிளை எதிர்ப்பு

### தலைவர் சம்பந்தனுக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
வடக்கு மாகாணத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை நிறுத்துவதற்கு கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் எடுத்துள்ள முடிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளை கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.
கட்சிகளின் ஒட்டுமொத்த விருப்பத்தைப் பெறாமல் தலைவர் ஒரு தலை பட்சமாக எடுத்துள்ள முடிவை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இதனை உடனடியாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அது தலைவர் சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பான கடிதம் ஒன்று அவசர அவசரமாக தமிழரசுக் கட்சியின் யாழ். கிளையினால் தலைவர் சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதும் விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக நிறுத்தும் முடிவை மீள் பரிசீலனை செய்யும் நோக்கம் எதுவும் தலைவர் சம்பந்தனிடம் இல்லை என்றும் இது கட்சியின் யாழ். கிளை உறுப்பினர்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும் அறிய முடிந்தது. (த)

## திருகோணமலையில் அமெ. 'சீல்' படையணி

### இலங்கை இராணுவத்துடன் கூட்டுப் பயிற்சி



கொழும்பு, ஜூலை 14
ஓசாமா பின்லேடனைக் கொன்ற அமெரிக்காவின் 'சீல்' படையணியினால், இலங்கைப் படையினருக்குத் திருகோணமலையில் வைத்துப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயாறில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான மீன்பிடி



யாழ்ப்பாணம்,ஜூலை 14
முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறுக் கடல் பகுதியில் சட்டவிரோதமான தொழில் நடைமுறைகளைப் பாவித்து தொடர்ச்சியாக மீன்பிடித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.
கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் தொடர்ச்சியாகத் திடீர் பரிசோதனைகள் நாயாற்றுக் கடல்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றபோதும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நாயாற்றுக் கடல் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு, முல்லைத்தீவுக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரும் கடற்படையினரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.
இதன்போது புல்மோட்டை மற்றும் கொக்கிளாயைச் சேர்ந்த மீனவர்கள் 3 பேர் அமுக்கு வலை பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து வலைகள், படகுகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர்.
இதன்போது 3 மீனவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கை 16 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார் நீதிவான்.
இதேவேளை இந்தவார ஆரம்பத்திலும் சுருக்கு வலை பயன்படுத்தி நாயாற்றுக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட 2 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# கேரளா செல்வதை தவிர்த்தார் பஸில்

கொழும்பு,ஜூலை 14
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாதுகாப்புக் காரணங்களினால் கேரளா மாநிலத்துக்குச் செல்வதைத் தவிர்த்துவிட்டார் என்று 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தியாவின் கேரள மாநிலத்துக்குப் பயணம் மேற்கொள்ள அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விருப்பம் கொண்டுள்ள போதிலும், பாதுகாப்புக் காரணங்களால் அவரது பயணம் பிற்போடப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டள்ளது.
அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுக்கான கருத்தரங்கு ஒன்று செப்ரெம்பர் 21 தொடக்கம் 23 வரை கேரளா முலங்குன்னத்துக்காவு என்ற இடத்தில் உள்ள கேரள உள்ளூராட்சி நிர்வாக நிறுவகத்தில் நடத்தப்படவுள்ளது.
இந்நிலையில், கேரளாவில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன, அவற்றின் நிர்வாக முறை தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விருப்பம் வெளியிட்டிருந்தார் என கேரள உள்ளூராட்சி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் பி.பி.பாலன் தெரிவித்துள்ளார்.
போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத்தைப் பலப்படுத்த கேரளா உள்ளூராட்சி நிர்வாக நிறுவகம் உதவவுள்ளது.
தன்னாட்சி பயிற்சி, ஆராய்ச்சி, மற்றும் ஆலோசனைகளை வழங்கும் நிறுவனமான கேரள உள்ளூராட்சி நிர்வாக நிறுவகம், கேரளாவில் உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக இலங்கைக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ளது.
கேரள மாதிரி அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான ஒரு செயல் விளக்கத்தை இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்குக் கொடுத்தோம். அவர் அதனைத் தமது நாட்டில் செயற்படுத்த விருப்பம் வெளியிட்டார்.
கேரளாவில் உள்ள கிராம சபைகள், இலங்கையில் மாகாண சபைகளை ஒத்ததாகும் என்பதுடன் அமைச்சர் பஸில் கேரளாவுக்கு வருகைதருவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார்.
ஆனால், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது பயணம் பிற்போடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (த)

## மாளிகாவத்தையில் சேரிப்புற வீடுகளை உடைக்கத் தடை



கொழும்பு, ஜூலை 14
கொழும்பு, மாளிகாவத்தையில் சேரிப்புற வீடுகளில் வாழ்வோரை புதிய வீடுகளில் குடியமர்த்தும் திகதி தீர்மானிக்கும் வரை அவர்களுடைய பழைய வீடுகளை உடைக்க வேண்டாம் என உயர் நீதிமன்றம் பணித்துள்ளது.
மாளிகாவத்தையில் சேரிப்புறத்தில் வாழும் மக்கள் தாக்கல் செய்த மனுவை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்த போதே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டது.
பழைய வீடுகளை உடைக்க வேண்டாம் என்ற அறிவிப்பை உயர் நீதிமன்றம், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியுள்ளது. (த-10)

## பள்ளிவாசல் தாக்குதலுக்கு எதிராக உரிய நடவடிக்கை

### ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14
மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், பள்ளியினுள் பன்றி இறைச்சி வீசப்பட்டமை ஆகியன தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
நீர்கொழும்பில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நீதிமன்றக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கும் விழாவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா தாக்கப்பட்ட விவகாரம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த-10)



## இலங்கைக் கடற்படையைக் கண்டித்து நாகை மீனவர்கள் வேலை நிறுத்தம்

சென்னை,ஜூலை 14
இலங்கைக் கடற்படை தொடர்ந்து தமிழக மீனவர்களின் வலைகளைக் கிழிப்பதையும், மீனவர்களைக் கைது செய்வதையும் கண்டித்து நாகை மாவட்ட மீனவர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
நாகை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் கடந்த வாரம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் வலைகளை பறித்து, அறுத்துவிட்டுச் சென்றனர். இலங்கைக் கடற்படையுடன் சீன மீனவர்களும், இந்திய மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதனால், அதிருப்தி அடைந்த நாகை உள்பட 9 கிராம மீனவர்கள், நேற்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
மத்திய, மாநில அரசுகள் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுத்து இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தை அடக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளர். (த)

## வெலிக்கடை கைதிகளிடம் ஆறு 'மொபைல்'கள் மீட்பு



கொழும்பு, ஜூலை 14
வெலிக்கடைச் சிறைச்சாலையில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளிடம் இருந்து ஆறு கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜீ.பீ.குலதுங்க தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ள B மூன்றாம் இலக்க கூடத்தில் தேடுதல் நடத்தப்பட்டது. இதன் போதே கையடக்கத் தொலைபேசிகள் கண்டெடுக்கப்பட்டன. அத்துடன் 'சிம்' அட்டைகள், 2600 ரூபா பணம் மற்றும் கேரளாக்கஞ்சா போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன– என்றார். (த-10)

## கலைப்பீட விரிவுரை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் சட்டக் கற்கை நெறிகளுக்கான அனைத்து வருட மாணவர்களுக்கும் புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.
அனைத்து மாணவர்களையும் வருகை தருமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் கேட்டுள்ளார்.
தவிர இசை, நடனம் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கை நெறிகள் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன.
நான்காம் வருட மாணவர்கள் கற்கையை முடித்து வெளியேறி விட்டனர். புதிய கல்வியாண்டின் புதுமுக மாணவர்கள் கடந்த முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழகத்துக்கு அழைக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. இவர்கள் மட்டுமன்றி 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான புதிய ஆண்டுக் கற்கை நெறிகளும் நாளை ஆரம்பமாகின்றன–என்றார். (ஓ-4)

## விசேட சட்டத் திருத்தத்தின் மூலம் 4,989 பேரே வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, ஜூலை 14
விசேட வாக்காளர் பெயர்ப் பட்டியல் திருத்தச் சட்டத்தின் ஊடாக 10 ஆயிரத்து 243 பேர் விண்ணப்பித்த போதும் 4 ஆயிரத்து 989 பேரே வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
இவர்களில் யாழ்.மாவட்டத்தில் 166 பேரும், மன்னார் மாவட்டத்தில் 3ஆயிரத்து 135 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 318 பேரும், வவுனியா மாவட்டத்தில் 370 பேரும் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
விசேட வாக்காளர் பெயர்ப் பட்டியல் திருத்தச் சட்ட மூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உள்ளடங்காத 1983 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடையில் இடம்பெயர்ந்த மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன.



இதற்கமைவாக 10 ஆயிரத்து 243 விண்ணப்பங்கள் தேர்தல்கள் திணைக்களத்திற்கு கிடைத்த போதும் ஆயிரத்து 412 விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டன.
இவர்களில் இரண்டு தடவை விண்ணப்பித்தவர்களும் ஏற்கனவே பதிவு செய்தவர்களும் அடங்குகின்றனர். எஞ்சிய 8 ஆயிரத்து 831 விண்ணப்பங்களில் 4 ஆயிரத்து 989 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. (த-5)

## '13' பழைய பாண் துண்டு

### கூறுகிறார் சோமவன்ஸ

கொழும்பு,ஜூலை 14
13 ஆவது திருத்தம் என்பது பழைய பாண் துண்டு என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.
இந்த எண்ணங்கள் பழையவை. சரியாக கூறுவதாயின் 'பழைய பாண் துண்டு போன்றதாகும்' எமது நாட்டில் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை குழப்புவதற்காக இந்தியாவினால் பலவந்தமாக திணிக்கப்பட்டதே 13 ஆவது திருத்தமாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
ஜே.வி.பி மாகாண சபை முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற நிலையில் மாகாண சபையில் அங்கம் வகிக்கின்ற ஜே.வி.பி கட்சி உறுப்பினர்களை விலக்கிக்கொள்வீர்களா? எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அதுவேண்டாம், இது வேண்டும் என்று யார் கோஷம் எழுப்பினாலும் இந்தியா கைநீட்டுகின்ற போது பலர் அமைதியடைந்து விடுகின்றனர்.
ஜனாதிபதியின் சகோதரர் இந்தியாவுக்குச் சென்று திரும்பினார். இந்தியாவுக்கு எதிராக விரல் நீட்டியவர்கள் இன்று மௌனம் காத்து நிற்கின்றனர்.
13 ஆவதுக்கு எதிராக கோஷம் எழுப்பியவர்கள் எங்கே? எதனை நீக்கினார்கள்? எனினும் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக இருப்பதைக் கொடுப்பதை விடவும் அதற்கு அப்பால் வழங்குவதற்கு இவர்கள் இந்தியாவுக்கு உறுதி கூறியுள்ளனர். அது என்னவென்று யாருக்கு தெரியும்? இந்த மாகாண சபை முறைமையானது நாட்டுக்குப் பாரமானது. நாட்டுக்கு எவ்விதமான சேவைகளையும் செய்யாத முதலமைச்சர் மற்றும் ஏனைய மாகாண அமைச்சர்கள் பெரிய அளவில் நிதியைச் செலவிடுகின்றனர்
இவ்வாறான நிலையில், மாகாண சபை முறைமையை முற்றாக இல்லாதொழிக்குமாறு நாம் கூறுகின்றோம். மக்கள் விடுதலை முன்னணி அன்றும் கூறியது. இன்றும் கூறுகின்றது நாளைக்கும் அதனை கூறும் –என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் மேர்வின் சில்வாவை கணக்கெடுக்காத யாழ்.மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்.நகருக்கு நேற்று வந்திருந்த பொதுசன மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வாவிடம், பொது மக்கள் தமது பிரச் சினைகள் தொடர்பில் கதைக்க முன் வரவில்லை.

உங்கள் பிரச்சினைகளைத் தெரிவியுங்கள் அல்லது எழுத்து மூலமாகவென் றாலும் தாருங்கள் என்று ஏற் பாட்டாளர்கள் பல முறை கத்திக் கத்தி அறிவித்த போதும் எவரும் பிரச்சினைகளைக் கூற முன் வரவில்லை. இதனால் அமைச்சர் 10 நிமிடம் கூட நகரில் நிற்காமல் புறப் பட்டுச் சென்றுவிட்டார்.



தனது ஆதரவாளர்களுடன் வந்திருந்த அமைச்சரை சிவில் உடையினருடன் சேர்ந்து அமைச்சரின் ஆதரவாளர்கள் சிலர் யாழ்.நகர் வின்சர் சந்தியில் வரவேற்றனர்.

திருமண வைபவத்தின் போது மாப்பிள்ளைக்கு அணியும் தலைப்பாகை அவருக்கு அணிவிக்கப்பட்டது. எனினும் அதனைக் கழற்றிவிட்டு தான் கொண்டு வந்த தொப்பியை அணிந்து கொண்டு அவர் கஸ்தூரியார் வீதி வழியே பொலிஸ், இராணுவ அதிகாரிகள் மற்றும் ஆதரவாளர்களுடன் நடந்து மின் சார நிலைய வீதி, யாழ். வைத் தியசாலை வீதியூடாக சத்திரத்துச் சந்தி வரை சென்றார்.

உங்கள் பிரச்சினைகளை தெரிவியுங்கள். எழுத்து மூலமாக வேனும் எமக்குத் தகவல் தாருங்கள் என்று அவரது ஏற்பாட்டாளர்கள் பலமுறை அறிவித்துக் கொண்டிருந்த போதும் பொது மக்கள் எவரும் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

> ஏற்பாட்டாளர்கள் பலமுறை அறிவித்துக் கொண்டிருந்த போதும் பொது மக்கள் எவரும் அதனைக் கவனத்தில் கொள்ள வில்லை.

அதனால் வேறு வழியின்றி 10 நிமிடங்கள் கூட நிற்க வில்லை. அங்கிருந்து புறப் பட்டுச் சென்று விட்டார். நேற்று முன்தினம் சாவகச் சேரிக்கு வந்த அவர் நேற்று நாவாந் துறைப் பகுதி மற்றும் நயினாதீவு ஆகிய இடங்களுக்கும் சென்றிருந்தார். (ஒ-4-21)

## இளமாணி, முதுமாணி கற்கைகளுக்கு இந்திய அரசின் புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இந்திய அரசால் வழங்கப்படும் இளமாணி, முதுமாணிக் கற்கைகளுக்கான 'ஆயுஷ் புலமைப் பரிசில்' திட்டத்தின் கீழ் தகுதியானர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இந்தியத் துணைத் தூதரகத்தினால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013-2014 ஆம் கல்வியாண்டுக்கான 'ஆயுஷ் புலமைப் பரிசில்' திட்டத்தின் கீழ் ஆயுள்வேதம், சித்த மருத்துவம், யுனானி, ஹோமியோபதி மற்றும் யோகா என்பவற்றுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. எட்டுப் புலமைப் பரிசில்களே வழங்கப்படவுள்ளன.

செயலாளர், உயர் கல்வி அமைச்சு, இல.18 வார்ட் பிளேஸ், கொழும்பு-7 எனும் முகவரிக்கு இந்த மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளமாணிக் கற்கைகளுக்கான அடிப்படைத் தகைமைகளாக, எதிர்வரும் 19ஆம் திகதியன்று 22 வயதுக்குட்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பான பாடங்களில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில மொழியியல் உயர் பரீட்சயம், நல்ல உடல் ஆரோக்கியமும் கற்கைக் காலத்தில் இந்தியாவில் வசிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

அரச துறையில் அல்லது நியதிச் சபையில் கடமையில் இருக்காமை, இளமாணிப் பட்டம் நெறிக்கு ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் ஏற்கனவே பதிவு செய்திருக்காமை அல்லது அரசதுறை உயர் கல்வி நிறுவனமொன்றில் முழு நேரக் கற்கை நெறிக்குப் பதிவு செய்திராமை ஆகியவற்றுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

முதுமாணிக் கற்கைநெறிக்கான அடிப்படைத் தகைமைகளாக எதிர்வரும் 19ஆம் திகதி 45 வயதுக்குட்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். சீ.சீ.ஐ.எம். இனால் அங்கீகரிக்கப்பட்ட பி.ஏ.எம்.எஸ். பட்டம் பெற்றிருத்தல். அத்துடன் கலாநிதிப் பட்டம் பெற விரும்புபவர் ஆயுள் வேதத்தில் சீ.சீ.ஐ.எம். இனால் அங்கீகரிக்கப்பட்ட எம்.டி. பட்டம் பெற்றிருத்தல், இலங்கையின் பொதுத்துறை நிறுவனத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமை செய்தல், ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி, நல்ல உடல் ஆரோக்கியம், தற்காலிக அல்லது அமைய நிலையிலுள்ள ஒப்பந்த ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரமும் விண்ணப்பப் படிவமும் உயர்கல்வி அமைச்சின் இணையத்தில் பெறமுடியும். (www.mohe.sov.lk). (த-9)

## 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி

யாழ்ப்பாணம், ஜூலை 14

7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



வியாபார நோக்கில் பொருள்களைப் பெற்றுக் கொண்டு காசோலையைக் கொடுத்தனுப்பியுள்ளார் குறித்த சந்தேகநபர்.

எனினும் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படாததனால் காசோலையைப் பெற்றுக் கொண்ட நபர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அதனடிப்படையில் வல்வெட்டித்துறை பத்தினியம்மன் கோயிலடியைச் சேர்ந்த குறித்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த மார்ச் 29 ஆம் திகதி காசோலை கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. (4)

## சிக்கினர் திருடர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். நகரில் பலசரக்குக் கடையில் பணிபுரியும் ஊழியர் இருவர், அங்கிருந்து அரிசி, பால்மா என 21 ஆயிரம் ரூபா பொருள்களைச் சிறிது சிறிதாகத் திருடி வந்த நிலையில் கடை உரிமையாளரிடம் மாட்டிக் கொண்டனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்க நிதி மன்று உத்தரவிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகர் கே.கே.எஸ். வீதியில் உள்ள பலசரக்குக் கடையில் பணிபுரியும் இருவரே அதே கடையில் திருடியதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டனர். ஒரு தொகுதி பொருள்கள் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். இருவரும் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப் பட்டது. (த-4)

## ஆயுள்வேத மருத்துவத்துறையை வடக்கில் மேம்படுத்தத் திட்டம்

அச்சுவேலி, ஜூலை 14

வட பகுதியில் ஆயுள்வேத மற்றும் சுதேசவைத்தியத் துறையை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



பொதுமக்களுக்கு மூலிகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அவர்களின் உதவியுடன் மூலிகைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் மூலிகைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு மூலிகை நாற்றுக்கள் இலவசமாக வழங்கப் படுவதுடன் அவற்றைப் பொருத்தமான முறையில் பராமரிப்பதற்கு ஆலோசனைகளும் வழங்கப்படும்.

உற்பத்தி செய்யப்படும் மூலிகைகளை நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

சுதேச வைத்தியத்துறைக்கான மூலிகைகளை மக்கள் இனங்கண்டு தமது வீட்டுத் தோட்டங்களில், பயிர்ச் செய்கை நிலங்களில் ஊடு பயிராகச் செய்கை பண்ணுவதன் மூலம் தமது வாழ்க்கையில் பக்கவிளைவு இல்லாத மூலிகை உணவு வகைகளைப் பயன்படுத்துவ தோடு அதனை விற்பனை செய்வதன் மூலம் கணிசமான வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

பொதுமக்கள்- விவசாயிகள்- உள்ளூர் சுதேச வைத்தியர்கள் கூட்டு இணைப்பு மூலம் மேற்கொள்ளப்படவுள்ள மூலிகைப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்துக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு உதவிகளை வழங்குவதற்கு தன்னார்வ நிறுவனங்கள் பல முன்வந்துள்ளன.

கிராமிய மட்டத்தில் மூலிகைச் செய்கை மேம்படுத்துவதற்கான இந்த வேலைத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்குப் பொருத்தமான முறையில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருப்பதோடு இணைந்து கொள்பவர்களுக்கு விசேட கருத்தரங்குகள் செயற்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. (த-11)

## வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் பதில் உதவித் தேர்தல் ஆணையாளர்கள்

0773107680

யாழ்ப்பாணம்,ஜூலை 14

வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில், வடமாகாணத்தின் 5 மாவட்டங்களும் பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களே கடமையில் உள்ளனர்.

அத்துடன் வன்னித் தேர்தல் தொகுதியின் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களில் பெரும்பான்மை இனத்தவர்களே உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாண சபைக்கு முதன்முறையாக தேர்தல் இடம் பெறவுள்ளதுடன், தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர் வரும் 25 ஆம் திகதி முதல் கோருவதற்கான அறிவிப்பும் தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் நிரந்தர உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் நியமிக்கப் படவில்லை. 5 மாவட்டங்களும் பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்துக்கு ஓய்வுபெற்ற உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.ஓ.கருணாநிதி பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும், மன்னார் மாவட்டத்துக்கு குருநாகல் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தர்சன பிரவீன பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு திருகோணமலை உதவித் தேர்தல் ஆணையாளர் நாலக்கவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு கண்டி உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கபீரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

வடமாகாண தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்ட க.அச்சுதன், யாழ். மாவட்ட பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Northern Academic & Leadership Training Center (NALTC)**
Northern Academic & Leadership Training Center தமது சேவையை

Opening Ceremony
14.07.2013
Sunday
12.00 noon

**Australian Tamil Management Service**
உடன் இணைந்து நடத்துகிறது.

**Children development programs. (6 to 12 years.)**
a. Learning with Activities (Saturday & Sunday only)
சிறுவர்களுக்கான ஆங்கிலத்துடன் கூடிய கற்றல் செயற்பாடுகள்
(சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்)

b. Spoken English Classes for 6 to 12 years children.
சிறுவர்களுக்கான ஆங்கிலத்துடன் கூடிய கற்றல் செயற்பாடுகள்
(இவ் வகுப்பிற்கு 10 மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். எனவே பதிவுகளுக்கு முந்துங்கள். பதிவுகளை காலை 10.00 - 12.00 மணிவரைபெற்றுக்கொள்ளலாம்.)

**Effortless Spoken English programs**
இலகுவான ஆங்கில செயன்முறை கற்கை நெறி பயிற்சி
Students, School leavers & Employees
மாணவர்களின் தர அடிப்படையில் செயன்முறை ஊடான ஆங்கில பேச்சு பயிற்சி மற்றும் வேலையாளர்களின் வசதிக்கேற்ப பயிற்சி வழங்கப்படும்.

14.07.2013 முதல் 15.08.2013 வரை மட்டுமே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிப் பட்டறை
(பதிவுக்கு முந்துங்கள் தகைமை A/L, O/L & Above)

பதிவுகளுக்கு முந்துங்கள்

499/1, Point Pedro Road, Jaffna.
Hot Line: +94770569642 / +94770166746
E-Mail: naltcjaffna@gmail.com

## டெயின்டி உற்பத்திகள்
### விநியோகிப்பதற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை
### (SALES REPRESENTATIVES)

SLS

Daintee

நாட்டின் முன்னோடி இனிப்புப் பண்ட உற்பத்தி நிறுவனமான டெயின்டி நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகிக்கும் டொபி, ஜெலி, சொக்லேட், ஸ்னெக்ஸ், வேபர்ஸ் பிஸ்கட், குரக்கன் கிரன்ச், கோன் பிலெக்ஸ், 40+கிரேன் பிலேக்ஸ், நூடில்ஸ், லொலிபொப், ஜம்போ பீநட்ஸ் மற்றும் ரோயல் பிலென்ட் தேயிலை போன்ற அபிமானமிக்க உற்பத்திகள் மற்றும் புதிய உற்பத்திகள் பலவற்றை விநியோகிப்பதற்கு விற்பனை .பிரதிநிதிகள் தேவை.

எமது நிறுவனத்தின் சிறப்புத்தன்மை
- இலங்கையில் SLS தரச் சான்றிதழ் பெற்றுள்ளமை
- ISO சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றுள்ளமை
- எமது உற்பத்திகள் நுகர்வோர் மத்தியில் அபிமானம் பெற்றுள்ளமை
- ஊடகங்களுடாக தொடர்ச்சியாக சமூக மற்றும் அறிவியல் ரீதியான நிகழ்ச்சிகளை நுகர்வோருக்கு வழங்குகின்றமை

தகைமைகள்
- க.பொ.த(சா.த) கணிதம் உட்பட சித்தியடைதல்
- பாதுகாப்பு வைப்பாக ரூபா 15000 பணத்தை வைப்பிலிட முடிகின்றமை
- வயது 18க்கு மேல் உள்ளமை
- சிங்களம் பேசக் கூடியமை விசேட தகைமையாகக் கருதப்படும்

எமது நிறுவனத்தின் உற்பத்திகளை விநியோகிப்பதனூடாக உங்களால் திருப்தியடைய முடிவதோடு அதன் மூலம் கவர்ச்சிகரமான வருமானத்தையும் பெறமுடியும்.

விற்பனை பிரதிநிதிகள் என கடித உறையில் இடது பக்கத்தில் குறிப்பிட்டு 10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

SLSI CERTIFIED SYSTEM ISO 9001

விற்பனை முகாமையாளர்
டெயின்டி மார்கடிங்
72C.கந்தவல வீதி,ரத்மலானை.பெக்ஸ்:2626012

டெயின்டி நிறுவனம்- ISO மற்றும் SLS தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும்

## நன்றி நவிலல்



## பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்
முன்னாள் கலைப்பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
முன்னாள் முதல்வர் வவுனியா வளாகம்

பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் 14.06.2013 அன்று காலமானர். அன்னாரின் இறுதிச் சடங்கு 16.06.2013 அன்று கனத்தை பொது மாயனத்தில் நடைபெற்றது. அன்னார் மகேஷ்வரியின் அன்புக் கணவரும், இந்திரன், பிரதாபன், வசந்தன் ஆகியோரின் பாசமிக்க தந்தையும் மற்றும் பிரிந்தினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அவருக்கு அன்பான மருத்துவ உதவியையும் ஆதரவையும் வழங்கிய Asian Institute of Gastroenterology, Hyderabad-India, Lanka Hospital and Durdans Hospital ஆகியவற்றைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களுக்கும் தாதியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இந்த துக்ககரமான நிகழ்வில் எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வில் பங்கேற்ற சகல உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் ஏனைய நலன் விரும்பிகளுக்கும், மலர் வளையம் வழங்கியவர்களுக்கும், அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் வேறு பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது அன்பான நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

தனிப்பட்ட ரீதியில் நன்றி தெரிவிக்க இயலாமையையிட்டு நாம் மிகவும் வருந்துகிறோம்.

-குடும்பத்தினர்

44-2/2 Vandervert place, Dehiwala | 0114 851168

## கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிசேகம் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிரியைகளைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஐ)

## யாழ். தேவி அநுராதபுரம் வரை மட்டுப்படுத்து

வவுனியா, ஜூலை 14

கொழும்பில் இருந்து ஓமந்தை வரை இயக்கப்படும் யாழ். தேவி ரயில் நேற்று அநுராதபுரத்துடன் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் கொழும்பில் இருந்து வடக்குக்கு வர இருந்த பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

வவுனியாவுக்கும், அநுராதபுரத்துக்கும் இடையில் ரயில் பாதையில் ஏற்பட்ட தடங்கல் காரணமாகவே அநுராதபுரம் வரையில் சேவை மட்டுப்படுத்தப்பட்டதாக கோட்டை ரயில் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

(ஐ-435)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
உரும்பிராய் சந்திக்கு அண்மையில் நல்ல சூழலில் 2 பரப்பு 1½ குளியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 4அறைகள் கொண்ட சகலவசதிகளுடன் பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு- 0772968338, 0217900014

### விற்பனைக்கு
அரைக்கும் ஆலைக்குரிய அனைத்து உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. (நெல் உடைக்கும், அரிசி, மிளகாய், கோப்பி அரைக்கும் இயந்திரங்கள்) ஆலைக்குரிய மின்மோட்டர் எஞ்சின் ஆகியவையும் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0778035350, 0778756891

### விற்பனைக்கு
WB-xxxx தொடர் இலக்கமுடைய Discover 150cc நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0771063515

### காணி விற்பனைக்கு
வலந்தலை காரைநகர் பிரதேச செயலகத்துக்கு அருகில் மொந்திபுலம் வீதியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 077 1049798

### நாய்க்குட்டி விற்பனைக்கு
55 நாள்கள் நிரம்பிய அல்ஷேசன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் ஊசி போடப்பட்ட பதிவுப் புத்தகத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு-R.தயாநிதி, பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

### வீடு வாடகைக்கு
K.K.S. வீதிக்கு மிக அருகில் யா/இந்துக் கல்லூரியில் இருந்து 1km தொலைவில் சகல வசதிகளுடனும் கூடியவாகன தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.
இன்று மட்டும் காலை 8.00 - 4.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 0770832227
(30911)
(10,18,14)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாதேவி மகாலிங்கம்



பருத்தித்துறை வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாதேவி மகாலிங்கம் நேற்று (13.07.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் U.K சிவப்பிரகாசம்பிள்ளை -சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான குழந்தைவேலுமகாலிங்கத்தின் (முன்னாள் 5ஆம் குறுக்குத் தெரு, முதலிகேயின் பங்கு தாரரும், திருகோணமலை கணகம் மில் உரிமையாளரும்), அன்பு மனைவியும், விஜிதா M.B.A.(இந்தியா), தயாநிதி M.B.M(U.K), கோபிகுமார் M.COM.(U.K), நிசாந்தகுமார் B.E.(U.A.E), தீபகரன் B.E.(இந்தியா), ஆகியோரின் அன்புத் தாயும், Dr.ஞானமோகன்(இந்தியா), கஜேந்திரன் B.E. (U.K), ரம்யா B.B.A(U.K), கிரிசாந்திM.sc(U.A.E), அருள்மொழி B.E. (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திருகோணமலை பிரபல வர்த்தகர் V.K.S பாலசுப்பிரமணியம் மற்றும் பத்மசோதி, பத்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாலட்சுமி, ராமசந்திரன், மகேந்திரன்(CANADA), காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் மைத்துனியும், ரிஷிநாதன், ஹரிணி, ரித்திஹாசினி, யவின், கௌதம், கவீன், பிரணிதா, ஹர்ஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் மதுரை அண்ணாநகரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (15.07.2013) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
00919791096157/00919952538558

தகவல்:
குடும்பத்தினர்.

## VACANCY
### MANAGEMENT TRAINEE
எமது நிறுவனத்துக்கு மேற்குறிப்பிட்ட வெற்றிடத்துக்கு ஆள்கள் தேவை. பொருத்தமான தகமை உடையவர்கள் விண்ணப்பிக்களாம்
தொடர்பு:- VISVAKARMA (PVT) LTD
28, MAARI AMMAN LANE, THIRUNELVELY, JAFFNA.
TEL: 021 222 6781, FAX:- 021 221 9976
email- msivam25@yahoo.com.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 18 | 14 |
| 09 | 06 |
| 1918 | 2013 |



அமரர்
## செல்லத்துரை வைத்திலிங்கம்

அன்னாரின் மறைவை அறிந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியை – ஊர்வலங்களில் பங்குபற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை எமது துயரத்தின் மத்தியிலும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்

* மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
* போய்ச் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

முன்பதிவுகளுக்கு மட்டும்: 077 256 8122

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பயடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 1831, 021 492 1832

## தேவை

ரவல் ஏஜென்சியை நடத்தக் கூடிய AMADEUS, ABACUS சிஸ்ரத்தில் அனுபவம் உள்ளவர்களும், குறைந்த வாடகைக்கு அட்வான்ஸ் இல்லாமல் ஆபிஸ் ரூம், வீடு அல்லது கடை யாழ்நகருக்குள் தேவை.
Mob: 0041 78905 9080 (SMS)
Email: Zhtravel 55@gmail.com

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, புலோலி கொடிகாமம் வீதியில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு அருகில் பழைய வீட்டுடன் கூடிய 3 பரப்பு 2குளி காணி விற்பனைக்கு உண்டு.
NoBrokers
தொடர்பு: 077 892 8128

## VAN FOR HIRE

குடாநாட்டிலுள்ள மத ஸ்தலங்களுக்கும் மற்றும் வெளி மாவட் டங்களுக்கும் செல்வதற்கான வான் சேவையை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: JANA TOURS
077 474 0796,
021 222 3858

## வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான பிளாஸ்ரிக் பொருள்களினதும் உடைவுகள் சீர் செய்து கொடுக்கப்படும். மோட்டார் வாகனங்களின் 01.கண்ணாடிப் பொலிசிங், 02.பெயின்ரிங், 03.பிளேற்றிங் மொப்பிங், 04.ஸ்பிறே பெயின்ரிங், 05.பைவர் மோர்ட்டிங் என்பன சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். பிளாஸ்ரிக் பொருள்களுக்கு இரண்டு வருட உத்தரவாதம் வழங்கப்படும்.
கி.கேதீஸ்வரன், இல.286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொடர்பு- 0773512591
(30818)(3.6)

## மாங்கல்யா திருமண சேவை

* 1975, உத்தரட்டாதி, செவ்வாய் தோசமற்ற, கிரபாவம் 19, நிர்வாகப் பொறுப்பு அதிகாரியாக அரசாங்கத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. பட்டதாரிக்கு மேல் இருக்கவேண்டும், சைவ போசனம் விரும்பத்தக்கது.
* உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருபாலாரது குறிப்புகள் உண்டு. திருப்தியான நம்பிக் கையான, துரிதமான சேவையை நாடவேண்டிய இடம்.

தொ.பே. 021 720 0811
எல்லா நாள்களிலும் ஒரு மணிக்குப்பின் நேரில் தொடர்புகொள்ளலாம்.
கு.திருவிளங்கம்,
90,சட்டநாதர் கோயில் வீதி,
நல்லூர் வடக்கு.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2013

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 15.07.2013 – 29.07.2013 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 09.30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | 570/= (வற் வரி,தே.க.வரி உள்ளடங்கலாக) |
| கேள்வி படிவம் விநியோகிக்கும் திகதி | 15.07.2013 - 25.07.2013 பிற்பகல்2.30மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | 29.07.2013 முற்பகல் 09.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | 29.07.2013 முற்.பகல் 10.00 மணிக்கு |

துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - 10,000/=
ஏனைய கடைகளுக்கான மீளளிக்ககூடிய வைப்புப்பணம் - 2,000/=

விண்ணப்படிவங்கள் யாவும் ஆணையாளர் மாநகரசபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 29.07.2013 முற்பகல் 09.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித்தொகையினை 01.08.2013 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு:-

1. கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும் விளம்பரங்கள், விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.
2. கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணமாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. நல்லூர் உற்சவ கால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
12.07.2013

திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

(C/10450)

## தேவை

பிரபல ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், அச்சுவேலி, சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு ஆசிரியர் தேவை. G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் உட்பட சித்தியடைந்தவர்கள் 20.07.2013 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
தொ.பே. 021 222 5796, 077 700 9653
(சி/10444)
(45.6.3)



உங்கள் துக்கம்
சந்தோஷமாய் மாறும் ...
(யோ 16:20)
யாழ்
வீரசிங்கம்மண்டபத்தில் ....

"அற்புத விடுதலைப்பெருவிழா"

தேவ செய்தியாளர்:
சுவிசேஷகர் .T.ஸ்டீபன்
இந்தியா தேசத்தில் மிக வல்லமையாக உபயோகிக்கப்படும் தேவ ஊழியரும், தீர்க்கதரிசியும், ஏஞ்சல் டிவி மற்றும் சத்தியம் டிவி ஆகிய தொலைக்காட்சிகளில் செய்தி கொடுப்பவர்.

காலம்: 16ம்,17ம் 18ம் திகதி யூலை 2013
(செவ்வாய், புதன், வியாழன்)
நேரம்: தினமும் மாலை 4.30 மணிக்கு

விசேஷமாக தீராத வியாதியுள்ளவர்கள், பிசாசின்பிடி, கவலை, கண்ணீர், யாவற்றிலும் இருந்து விடுதலைபெற ஜெபிக்கப்படும்
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்...
(30761)(2.6.3)
(தொடர்பு: - Pas. Gladson Nallah Tel- 0771293097, 0779843352)

"யாழ்.நகரில் புதியதோர் உதயம்"

## ஆதித்ஜன் மோட்டோஸ்



யாழ்.நகரில் இல.06 B , சிறாம்பியடி ஸ்ரான்லி வீதியில் (கோசி றெஸ்ரோரன்ஸ் முன்பாக) புதியதோர் உதயம்

## ஆதித்ஜன் மோட்டோஸ்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்று (14.07.2013) காலை 9.30 மணிக்கு உதயமாகிறது ஆதித்ஜன் மோட்டோஸ்.



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(30830)(2.6.3)

சிறாம்பியடி, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். உரிமையாளரும், பணியாளர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தணக் குருக்கள் தேவை

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்துக்கு நித்திய பூஜைக்கு அந்தணக் குருக்கள் தேவைப்படுவதால் 17.07.2013 புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு விரும்பியோர் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி/10459) கி.கணேசமூர்த்தி, தலைவர்

## கணக்காய்வுப் பயிலுநர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் பிரபல கணக்காய்வு நிறுவனமாகிய Selvendra &Co. விற்கு கணக்காய்வு பயிலுநர்கள் தேவை. AAT, HNDA, CHARTERED, CIMA கற்கை நெறி பயிலுகின்ற மாணவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: முகாமையாளர்
**Selvendra &Co,633 1/1, K.K.S Road, Jaffna.selvendracoja@sltnet.lk**
**021 222 1227, 077 132 2465** (30737) (3.6.11)

## வேலையாள்கள் தேவை

வாகனத்தில் பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு:0777240612
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) (30884)

## வீடு கடை வாடகைக்கு

யாழ்.பலாலி வீதிக்கு அருகில் 3 கடை அறைகள் மற்றும் மாடி வீடு சகல வசதிகளுடன் 7 அறைகள், வரவேற்பறை, வாகன தரிப்பிட வசதியுடன் குறுகிய நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு உண்டு (30835)

தொடர்பு:0779371896, 0726258947

## விநியோகஸ்தர்கள் தேவை

இந்தியாவின் முன்னணி டயர் உற்பத்தி நிறுவனத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற எம்றல்ட் (EMRALD) ரியூப் மற்றும் டயர்கள் நாடு முழுவதும் விநியோகிப்பதற்காகப் பிராந்திய விநியோகஸ்தர்கள் தேவை.

### "விஷேட விலைக் கழிவு"

விவரங்களுக்கு:
இலங்கையின் ஏக விநியோகஸ்தர்களான
குளோபல் ஓட்டோ இஞ்ஜினியரிங்
சொலியுஸன்ஸ் அன்ட் ரேடிங்
(பிறைவேற்) லிமிடெட் கொழும்பு
தொ.பே: 0112053333, 0771839664 (30851)

## அக்ஷயா

ஒரு வார கால பயிற்சி நெறி | பயிற்சி கட்டணம் 7000/= மட்டுமே

பேசியல், மேக்கப், கெயாஸ்டைல், தலைமுடி அயன் பண்ணுதல், சுருட்டுதல, கேளிங், சாறி பிளவுஸ், சாறிவேக், மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. *ஒட்டிய கன்னங்களைக் குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை *உடல் எடை கூட்டும் குளிசை *உடல் எடை குறைக்கும் குளிசை, பால்மா, கோப்பி *கருவளையம், வயதான தோற்றம், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான குளிசை *தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் *எடை கூடுவதால் வரும் மூட்டுவாத குளிசை *கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள் அனைத் தையும் மாற்றும் ஒறியினல் வைத்னிங் கிறீம் *எடை குறைக்கும் மெஷின் என்பன விற்பனைக்கு உண்டு.

பதிவு இல:16168
தொ.பே.0772106155
அக்ஷயா-நாவலர் வீதி (பிறவுண் வீதிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

## லொறி விற்பனைக்கு

48-XXXX இலக்கமுடைய TATA 12500L கொள்ளளவுடைய தண்ணீர் பவு சருடன் கூடிய ஏனைய பொருள்களும் அவசர விற்பனைக்குண்டு (30885)

தொடர்பு:0779798199

## காணிகள் விற்பனைக்கு

01.சுன்னாகம் மயிலணி பகுதியில் 7½ பரப்பு காணி வீடு கட்டுவதற்கேற்ற குடிமனைகள் நிறைந்த இடத்தில் உள்ளது.
02. சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்துக்கு (Power Station) அண்மையில் 15 பரப்பு தோட்டக்காணி (தற்போது பயிர்ச் செய்கை நடைபெறுகிறது) ஆகியன விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு- 0441689857639 or 0776215500 (c/3495) (3.6)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

அம்பலவாணர் வீதி, உடுவிலில் (பிரதான வீதிக்கு அருகில்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு மற்றும் 4¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (30832)

தொடர்பு : 0774832247
0778094439

## சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக்கொள்வதற்குரிய விளக்கம்

### (Employment Pass)

* இரண்டு வருட வேலை
* மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
* மாபிள் தொழிற்சாலை.
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

107 x 1250 = 133,750/=

முன்பதிவுகளுக்கு மட்டும் **0772 568122**

**அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்**
**இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**Tel: 0214 921831, 0214 921832** (சி/10447) (10,6,3)

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குளி விஸ்தீரணம் கொண்ட 5அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 711 1400
(38952) (15.6)

## Bank Balance வசதி

Canada, UK, Australia, New Zealand, German, France, Swiss,Italy போன்ற நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக் கும் Bank Balance வசதி செய்து கொடுக்கப்படும். (சி/10362) T.P:0773637864

## தேவை

Keetha consulting Pvt ltd is looking for Programmers, English Graduates, Social Media Writters. For more information visit (சி/10361)
**http; //www.keethacosusulting.com**

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

**For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas**

**077 4789289**

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

**No.52, Davidson Road, Colombo -04.**
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

## TVS

# No.1 முகவராகப் பணியாற்ற நீங்கள் தயாரா?

TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டட் என்பது யுனைட்டட் மோட்டர்ஸ் பி.எல்.சி. மற்றும் இந்தியாவின் TV சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். TVS லங்கா மோட்டோர் கம்பனி லிமிட்டட்டின் செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்காக 2003 ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த நிறுவனம் கடந்த சில வருடங்களில் மகத்தான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிள்களின் உள்நாட்டுச் சந்தையில் நாமே இப்பொழுது முன்னணி வகிக்கிறோம். இந்த வெற்றியைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பொருட்டு, TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டட் பின்வரும் இடங்களில் அதன் வியாபாரத்தை விரிவுபடுத்த இருக்கிறது. ஆகவே, எம்முடன் இணைந்து வாகன விற்பனைத் துறையில் உயர்ந்த நிலையை அடைய முன்வருமாறு பிரபல வியாபார முயற்சியாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

## TVS KING முச்சக்கர வண்டிகளுக்கான விற்பனை முகவர்கள் தேவை

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் மாவட்டங்களில் விரும்பத்தக்கது:**

**முல்லைத்தீவு மாவட்டம்**- முல்லைத்தீவு. | **கிளிநொச்சி மாவட்டம்**- கிளிநொச்சி.

**குறைந்தபட்ச தேவைகள்:**

- குறைந்தபட்சம் ரூ.1.5 மில்லியனுக்கான வங்கி உத்தரவாதம்
- காட்சியறை பிரதான வீதியில் 18அடி நீளம் கொண்ட முன்புற வாயிலைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட நகரங்களில் காட்சியறையின் பரப்பு 600 – 800 சதுர அடி உள்ளதாக இருக்க வேண்டும்.
- விற்பனை வேலைகளுக்காக குறைந்தபட்சம் 2 விற்பனை அலுவலர்கள்.

**உங்கள் விண்ணப்பங்களை பின்வரும் விளாசத்திற்கு அனுப்பவும்:**

தேசிய விற்பனை மேலாளர்
TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
இல. 38, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை.
தொலைபேசி: + 94 11 4 605200
பக்ஸ்: + 94 11 4 614909
மின்னஞ்சல்: info@tvslanka.lk
இணையத்தளம்: www.tvslanka.lk

மேலதிக விபரங்களுக்கு:
0771 266759

## Do you want to make a career in Singapore Construction Industry ?




**REQUIREMENTS**
1. Must have basic English proficiency
2. Accommodation and meals provided during training
3. Training duration: 30 - 60 days
4. No experience required although skilled workers are preferred

**TRAINING**
Our training programme includes, among others, carpentry, brick laying, tiling, electrical fitting, welding, pipe fitting, suspended ceiling, internal drywall installation, thermal insulation, aluminum form-work.

*Singapore, your gateway to a fulfilling future in the construction industry*

Upon the successful completion of the training programme, each candidate will Receive the Trade Certificate which guarantees the person a job in Singapore. Progressive Lanka OTC (Pvt) Ltd / Neo Global (Pvt) Ltd's training center is located in Kalaniya, with regional presence in Thailand, India, Bangladesh, Myanmar, Vietnam, Pakistan and China too.

Enrole Now! & Meet Your Opportunites With Us!
Call Us On : 0114333111

Accredited by the BCA Building and Construction Authority Singapore

185/A, Kelanimulla Ambatale, Mulleryawa New Town, Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொறி விற்பனைக்கு

ASOKE LAYLAND,1612, GOLD COMET, LN-XXXX,
கென்டெய்னர் பெட்டி பொருத்தப்பட்ட புத்தம் புதிய லொறி உடன் விற்பனைக்குண்டு. 7000 km ஓடியது.
தொடர்பு: 071 845 2548

## வரகு விற்பனைக்கு

புதிய வரகு விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 618 3200

## விற்பனைக்குண்டு

நல்ல இன ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு.
20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி
(சி/10300)(3.6.11)

## காணி விற்பனைக்கு

வளாக வீதியில் மக்கள் வங்கிக்கு அருகில் ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 546 8239
(30806)(3.6.11)

## வீடு வாடகைக்குண்டு

கோப்பாய் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: சுதா 077 495 5593

## கார் விற்பனைக்கு

NPKU-xxxx தொடரிலக்க முடைய நல்ல நிலையில் உள்ள United motors Elite viva white color manual gear கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 222 5531
(30738)(10,6,3)

## காணி உடன் விற்பனைக்கு

கரந்தன், நீர்வேலியில், இராச வீதிக்கு மேற்குப் பக்கமாக 500m தூரத்தில் உள்ள (தெல்லுளுவை) 17¼ பரப்பு விவசாயக் காணி நீர்ப்பாசன வசதிகளோடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: சுதா
077 495 5593
(30708)(3.6.11)

## காணி விற்பனை

அளவெட்டி, குருக்கள் கிணற்று பிள்ளையார் கோயிலடி (எட்டாம் கட்டை வீதி)8½ பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 379 5291 (38297)(3.6.11)

## காணி விற்பனைக்குண்டு

சாவகச்சேரி, தனங்கிளப்பு சந்திக்கு அருகில் உள்ள பனங்காய் குளவயல் காணி70 பரப்பு உறுதியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 693 6744, 071 627 4916
(30718)(3.6.11)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் விவசாயக் கல்லூரிக்கு முன்பாக அண்ணா பாமுக்கு அருகில் 4 பரப்பு தோட்டக் காணி தனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 990 6856

## Hatton National Bank

### அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 31.05.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15.07.2013 தொடக்கம் 18.07.2013 (திங்கள்- வியாழன்) வரை காலை 9மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இல.212, 214 ஆஸ்பத் திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளை யில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

* கடனுக்குரிய வட்டியையும், கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத் தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி-

(சி/10431) (45.3.6)

## ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளினால் வழங்கப்படும் விளக்கவுரையாடல்!

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளினால் லொத்தரி வீசா (கிறீன் காட், Green Card Lottery Visa) நிகழ்ச்சி பற்றிய விளக்கவுரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி நகரங்களில் நடைபெறவுள்ளது. இலவசமாக எவ்வாறு விண்ணப்பிப்பது பற்றிய விளக்கங்கள் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புடன் வழங்கப்படும்.

அனைவருக்கும் அனுமதி இலவசம். விளக்கவுரையாடலின் முக்கிய குறிப்புகள் கையடக்க தொகுப்பாக இலவசமாக வழங்கப்படும்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
|---|---|
| இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் | இடம்: கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபம், கிளிநொச்சி |
| திகதி: ஜூலை, 19 2013, நேரம்: மாலை 4:00 மணி | திகதி: ஜூலை, 20 2013, நேரம்: காலை 11:00 மணி |

## MINISTRY OF CONSTRUCTION, ENGINEERING SERVICES, HOUSING & COMMON AMENITIES

### DEPARTMENT OF BUILDINGS

### INVITATION FOR BIDS

Electrical Installation work at E-Learning Centre for Faculty of Management, University of Jaffna-Stage I

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for "Electrical Installation work at E-Learning Centre for Faculty of Management, University of Jaffna-Stage 1" as described below and estimated to cost Rs.2.78 million.
   The contract period is 45 Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall have experience in similar nature costing minimum Rs.2 million in a single project during last 3 years and shall be registered in the field of Building Construction for Grade C8 or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna**, and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021-2222781, Facsimile: 021-2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application from the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna,** from **15-07-2013** until **29-07-2013** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees One Thousand (Rs1,000/-).
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna** to reach **on or before 10.30 hrs on 01-08-2013.** Bids will be opened soon after closing at Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 63 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.55,600.00**
   - valid up to **05-11-2013**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

**A. Nawas Atham**
Actg. Director (ED)
Department of Buildings
2nd Floor,"Sethsiripaya",
Battaramulla.

(சி/10445) (6.3)

## MIGRATE TO

## NORWAY- SWEDEN - HOLLAND ENGLAND - NEW ZEALAND



### OCCUPATIONS IN DEMAND

**01. ENGINEERS** (Civil / Electrical / Electronics / Mechanical / Telecom / Gas & Petroleum & Chemical Engineers etc.)
- Age upto 50 with NDT or BSc Degree

**02. MANAGERS** (General Manager/ - Finance Manager / Account Manager / Audit Manager / Admin Manager )
- Age upto 50 with CIMA or Degree

**03. MARKETING & SALES MANAGERS** / (Product Manager / Brand Manager / Hotel Manager)
- Age upto 50 with ICM or Degree

**04. IT MANAGERS / PROGRAMMERS & IT ENGINEERS**
- Age upto 50 with a Computer Diploma / Degree



ICFE Consultant in Sri Lanka,
Dr. Prabath C. Ukkwatte
Dr. of Education (USA), Dr. of Business Administration (USA) MBA (USA), MABE (UK)
Chairman

**Assessment and Interviews:**
July 20th Saturday
10.00 a.m. to 4.00 p.m.
Call over with your Bio-data

★ Approval within 4-6 Months ★ Good English

★Free Education & Living Allowances for Children below 18 Years
★Free Consultancy for Employment

(சி/10484)

ICFE Partner in Sri Lanka,
**OXFORD COLLEGE FOR INTERNATIONAL CAREERS (PVT) LTD.**
360, Oxford Building, Old Kottawa Road, Udahamulla, Nugegoda.
Tel: 011-5 644895 , Romesh: 0777700659, 0777700281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14/07/2013

## 500-1 விதை நெல்

தரமான பரிசோதிக்கப்பட்ட 500-1 விதை நெல் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0775226462

## காணி விற்பனைக்கு

கொய்யாத்தோட்டம், பழைய பூங்கா வீதியில் 84ஆம் இலக்க வெற்றுக்காணி (பழைய வீட்டுடன்) விற்பனைக்கு உண்டு. 1பரப்பு 7குளி. தரகர்கள் இல்லை

தொடர்பு- 0779710525

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
071-1781771

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 ஆண்டு, துந்துபி வருடம் சித்திரை மாதம், உத்தரம் 3ஆம் பாதம், கிரகபாவம்19 உடைய பொறியியலாளர், அரசஅதிகாரிக்கு (செவ்வாய் அற்ற) பட்டதாரி உடைய அழகான மணமகள் உடன் தேவை. ஜாதகம், படம் மற்றும் விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 446170 C/O உதயன்.

## காணி விற்பனைக்கு

கரணவாய் தெற்கில் முத்து விநாயகர் கோவிலில் இருந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் 5½ பரப்பு வீடு கட்டக் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு
0771 749 369

## காணி விற்பனைக்கு

யாழ் உரும்பிராய், பலாலி வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 9½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு :
0773 658 485

## காணி விற்பனைக்கு

யாழ் கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் லேனில் 1 3/4 பரப்பு உடன் விற்பனைக்கு

தொடர்பு :
0773 658 485




## முன்னோடி நாயகர்களுக்கு என்றும் மறவா நன்றியில்..

சமுர்த்தி எனும் விடியலால்....
வாழ்வாதார ஒளியூட்டிய

**அங்கஜன் இராமநாதன்** (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர், யாழ்.மாவட்டம்) அவர்களுக்கும் மற்றும் இணைப்பாளர் சீலன் அவர்களுக்கும் இதயங்கனிந்த நன்றிகள்! வாழ்த்துக்கள்.

(30068) வாழ்த்துவோர்:- கிராம மக்கள், தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

## மெய்வன்மைப் போட்டி

ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப.1.30 மணிக்கு முன்பள்ளி முன்றலில் தலைவர் சி.இளங்கோ தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் சி.திரிகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-5)

## காணி விற்பனை

சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு அருகாமையில் 3 பரப்பு நல்ல காணி உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு :
0774469820

## விற்பனைக்கு

இல37, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் 2 நிலப்பரப்பில் அமைந்துள்ள வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய இரண்டு மாடியில் அறைகள் கொண்ட ஹோட்டல் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 021 222 3252, 0779467807, 004550392552

## O/L மற்றும் A/L பரீட்சையை முடித்த மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு...




- ★ Spoken English
- ★ General English
- ★ Spoken English for Beginners
- ★ A1, A2, B1, B2

மற்றும் IELTS, உயர் கல்விக்கான College Admission வழங்கப்படுகின்றன. பாட இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இல்லத்தரசிகளே ஆங்கிலம் பேச முடியவில்லையா...
கவலையை விடுங்கள்.
உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்..

**Royal Overseas Education Center (Pvt) Ltd**
11-2/1, 33rd LANE, WELLAWATTE, COLOMBO-06
TEL : 011-2363440, 077 0121682
Web : www.ricvisas.com Email : ricsrilanka@yahoo.com



## ரூ பிளவர் கூரை ஓடுகள்

- உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
- ஒரு கூரை ஓட்டின் நிறை 2.7 கிலோ கிராம்
- நவீன தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்டது
- கூரை ஓட்டை உடைத்து சோதனை செய்தால், 100% சுடப்பட்டிருப்பதை உணரலாம்
- 10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
- வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை, மன்னார் மற்றும் வடக்கிற்கு நம்பிக்கையான முகவர்கள் தேவை.

**திந்தரி கூரை ஓடு தொழிற்சாலை**
கொனவில, தங்கொடுவ.
மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி
0770503076 / 0776859225
0773427843 / 0312258747

## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திதிற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். அதே நாள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

MMW

## காணி தேவை

யாழ்ப்பாணம் அரியாலை மணியந்தோட்டம் பகுதிகளில் நல்ல கடற்கரையை அண்டிய பகுதிகளில் உறுதியுடன் கூடிய காணிகள் நியாயமான விலைக்கு வாங்கப்படும். வேறு பகுதியில் நல்ல கடற்கரையுடன் இருந்தால் தொடர்பு கொள்ளவும் 077 - 0648160

## வீடு வாடகைக்கு

நல்லூர் மருதடி வீதி (No35)யில் வைரவர் கோவிலருகில் 5Rooms கொண்ட வீடு சகல வசதிகளுடன் நிறுவனங்களுக்கு அல்லது குடும்பத்துக்கு வாடகைக்கு கெடுக்கப்படும்.

தொடர்பு- 0712446926

## வீடு விற்பனைக்குண்டு

பருத்தித்துறையில் ஹாட்லி, மெதடிஸ்ட் பாடசாலைகளுக்கு 1/2km தூரத்தில் 4 ¼ பரப்புக் காணியிலமைந்த 5 அறைகளுடன் சமையலறை, பெரிய ஹோல், இணைந்த குளியலறை, கிணறு, சுற்று மதிலுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு: 0713-671394

## சுஜீவா வைத்தியசாலை

சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

**விடுமுறை அறிவித்தலும் சேவைநேர மாற்றமும்**

15/07/2013 திங்கட்கிழமையன்று மட்டும் தவிர்க்கமுடியாத காரணத்தால் வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும்.
செவ்வாய் முதல் 16/07/2013 கீழ்வரும் புதிய நேரப்படி வைத்தியசாலை இயங்கும்.
காலை:6.30 முதல் மதியம் 2.30 வரை. வெள்ளிக்கிழமை விடுமுறை.

வெளிமாவட்ட மக்கள் தயவு செய்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும்.

0775594147,
021 5685333

Dr.ஜெ.ஜெயவன் Dr.ச.ஜெயவன்
Dr.க.ஒ.இராஜரட்ணம்

## Super Visa to CANADA

UK, Canada, USA, Australia, Italy, Japan, Lativia, New Zeland, Soudi, Qatar, Dubai, Singapore, Malaysia போன்ற நாடுகளுக்கான வேலைவாய்ப்புகள் உள்ளன. இந்த மாதம் 15ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.
உடன் தொடர்புகொள்ளவும்.

Australian Skill Migration 6 மாதத்தில் உடன் குடியேறலாம்.

- ★வயது எல்லை 18-50- ஏதாவது Degree
- ★IELTS 6 இற்கு மேல் 3 Years Work Experience

ஆகக் குறைந்த தகைமை O/L 2 வாரத்திற்குள் Offer, Canada வில் சிறந்த கம்பனியில் வேலை பெற்றுத் தரப்படும். குறிப்பிட்ட வீசா மட்டுமே. உடன் தொடர்பு கொள்ளவும். (Salary 300, 000/=)

- ★வங்கி வைப்புச் செய்து தரப்படும்.
- ★வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு உடன் அரிய வாய்ப்பு.

ROyal Over Seas Education Center (Pvt) Ltd
#11-2\1, 33rd Lane, Wellawatte, Colombo-06
Tel:0112363440/ 0770121682
Web:www.ricvisas.com/ e-Mail:ricsrilanka@yahoo.com
(சி/10358)

## STUDY & WORK IN CANADA

UK, NEW ZELAND, AUSTRALIA, SWEDEN, GERMANY, INDIA, UKRAINE, DUBAI, CYPRUS, ITALY, CARIBIEN COUNTRIES, MALAYSIA, SINGAPORE & SCHENGAN COUNTRIES

**CANADA** we assist you for
- Student Visa
- Work Permit Visa
- Super Visa
- Skill Migration
- Federal Skill Workers
- English Course (3 Months)

**UK** we assist you for
Student Visa
Minimum Qualification
O/L with IELTS
- Holiday Maker Visa
- Family Sponsor
- Tourist Visa

MBBS/ MD in Caribien Countries (America)
Ukraine, Russia, Belarus
Minimum Qualification: A/L with 2B, 1C or Equivalent

100% Legal Assistance
Work Permits Available
Indian Students Visas, New Zeland, Canada & Shengan Countries Work Permits.

ALL EMBASSY FORM FILLING

**SIEG INTERNATIONAL**
111/2, Brown Road, Kokovil East, Jaffna.
(Near Technical College)
Mobile: 077 3502612, 072 3502611

## 1952 முதல் மக்கள் மனதை வென்ற ஓதிரிஸ்

ODIRIS

நம்பிக்கையுடன் முன்னோக்கி



துருப்பிடிக்காத உருக்கு இரட்டை அலகு உடன்

ஓதிரிஸ் மேசை தேங்காய் துருவி



மின்சார தேங்காய் துருவி

உற்பத்திசெய்து விநியோகிப்போர்

**ஓதிரிஸ் இன்ஜினியரிங் (தனியார்) நிறுவனம்**
இல. 45, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை, தெஹிவளை.
தொ.பே 2811065 பெக்ஸ் 5341037
email : odiriseng@sltnet.lk
website : odiriseng.com

## விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

எங்கள் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை. (எமது பொருள்கள் சோயா, நூடில்ஸ், பப்படம், ஜாம் ஏனைய 78 வகை பொருள்கள்)

தகுதி: வங்கி உத்தரவாதம், வாகன வசதி, அனுபவம் பத்து நாள்களுக்குள் உங்கள் விண்ணப்பங்களை இம் முகவரிக்கு அனுப்பவும்.

**Chant Lanka (Pvt) ltd, Mapolagama Ethumale, Galle.**
Fax: 091-5634185
Field Sales njhlh;Gfs;: - R.Rajeev
075 201 8742 / 071 305 5894/
077 225 3181
E-Mail: rajvincent37@gmail.com
(C/10348)(3.8.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 124

# பச்சிளம் பாலகர்களில் அவதானிக்கப்பட வேண்டிய ஆபத்தின் அறிகுறிகள்



பச்சிளம் பாலகர்களில் ஏற்படக் கூடிய ஆபத்தான நோய்களுக்கான அறிகுறிகளை பெற்றோர், உறவினர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் வேளைக்கே கண்டறிவதன் மூலம் உரிய காலத்தில் சிகிச்சையை வழங்க முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் காலதாமதமும் நோய் முற்றிய பின் சிகிச்சைக்கு குழந்தையை கொண்டு வருதலுமே பச்சிளம் பாலகர்களின் இறப்பிற்கு முக்கிய காரணங்களாகும்.

1. குழந்தை பிறந்து 10 நாள்களின் பின்னரும் நிறை அதிகரிப்பைக் காட்டாது விடல்.
சாதாரணமாக குழந்தை பிறந்து முதல் 5 நாள்களில் நிறை இழப்பு ஏற்பட்டு, (அதாவது பிறப்பு நிறையிலிருந்து 10 வீதத்துக்கும் குறைவான நிறை இழப்பு), 10 நாள்கள் அளவில் அதன் பிறப்பு நிறையை அடைந்து தொடர்ந்து நிறை அதிகரிக்கும். இந்த நிறை அதிகரிப்பு பொதுவாக ஒரு நாளைக்கு 15-20 கிராமாக காணப்படும்.

2. குழந்தையானது பாலுறிஞ்சவில்லையாயின்
ஒரு சாதாரண குழந்தை பசி எடுக்கும் சந்தர்ப்பங்களில் அது தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும். பொதுவாக ஒரு குழந்தை 2-3 மணித்தியாலத்துக்கு ஒரு முறை பாலைக் குடிக்கும். அப்படியல்லாமல் பால் அருந்தாது, சோம்பலாகக் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

3. சுவாசிப்பதில் கடினமும், சுவாச வீதம் வேகமாகக் காணப்படலும்.
சுவாசிப்பதில் சிரமமும் சுவாசிக்கும் வீதம் அதிகரித்து காணப்படினும் பிள்ளைக்கு ஆபத்தான நோய் உண்டு என அறிந்து கொள்ள வேண்டும்.

4. குழந்தையின் உடல் வெப்பநிலை அதிகரித்து காணப்பட்டோ (காய்ச்சல்) அல்லது உடல் குளிர்வடைந்து காணப்பட்டாலோ உடனடியாக வைத்திய சாலைக்கு குழந்தையைக் கொண்டு செல்ல வேண்டும்.

5. தொப்புள் கொடிப்பகுதி சிவந்து சீழ் வடிந்து காணப்பட்டாலோ, அதேபோல் கண்கள் வீங்கி, சிவந்து, சீழ் வடிந்து காணப்பட்டாலோ, கொப்புளங்கள் காணப்பட்டாலோ குழந்தைக்கு கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளது என அறியலாம். இவற்றுக்கு ஊசி மூலம் ஏற்றப்படும் மருந்துகளே தேவைப்படும் என்பதால் உடனடியாக சிகிச்சைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

6. குழந்தையின் தோலின் நிறம் சாதாரண இளஞ்சிவப்பு நிறத்தை விட வேறுபட்டு மஞ்சள் நிறமாகவோ, வெளிறிக் காணப்பட்டோ அல்லது உதடு, வாய், உள்ளங்கை, பாதங்கள், நீல நிறமடைந்தோ காணப்பட்டாலும், அவை ஆபத்தான நோய்களுக்கான அறிகுறிகளே.

7. சில வேளைகளில் பிறந்த குழந்தைகளுக்கு குருதி உறைவதில் குறைபாடு காணப்படின் தோலின் சிவப்பு புள்ளிகள் ஏற்படுவதுடன் தொப்புள் கொடி பகுதியிலிருந்தோ, வேறு பகுதியிலிருந்தோ இரத்தம் கசியலாம்.

8. பிறந்த குழந்தையின் வயிறு வீங்கிக் காணப்படினும் பித்தம் கலந்த வாந்தி எடுப்பதுடன் மலம் கழிக்காவிடினும் ஆபத்தான குடல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு அறிகுறிகளாகும்.

9. சிறுநீர் கழிக்கும் தடவைகள் குறைவடைந்தோ அல்லது சிறுநீர் கழிக்காத விடத்து, குழந்தைக்கு போதியளவு பால் அருந்தவில்லை அல்லது சிறுநீர் தொகுதியில் ஏதாவது பிரச்சினைகள் உண்டோ என ஊகிக்கலாம்.

10. குழந்தை சாதாரண அசைவுகளைக் காட்டாமல், வலிப்பு போன்ற அசைவுகளை கை, கால்களில் காட்டிலும், கண்ணைச் செருகினும், உதடுகளில் அசாதாரண அசைவுகளைக் காட்டிலும் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

எனவே மேற்கூறிய மிகமுக்கிய அறிகுறிகளை கண்டறிந்து உரிய வேளையில் குழந்தையை சிகிச்சைக்கு கொண்டு செல்லின் தகுந்த சிகிச்சையை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

Dr. ந.ஸ்ரீசரவணப[illegible],
குழந்தை வைத்[illegible],
குழந்தைகள் பராமரிப்பு பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை.

# கொலஸ்திரோல்

## நல்ல கொலஸ்திரோலைக் (HDL) கூட்டுவதற்கும் கூடாத கொலஸ்திரோலைக் (LDL) குறைப்பதற்கும்

நாம் தினமும் உண்ணுகின்ற உணவில் மாப்பொருள், கொழுப்பு, புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பன அடங்கியுள்ளன. நாம் மேலதிகமாக உள்ளெடுக்கும் மாப்பொருள் கொழுப்பாக மாற்றப்படுவதும், அதிக கொழுப் புச் சத்துள்ள உணவை உண்ணுவதும் குருதி யில் உள்ள கொலஸ்திரோலைக் கூட்டுகின்றது.


கொலஸ்திரோலிலும் நல்ல கொலஸ்திரோல் (HDL) கூடாத கொலஸ்திரோல் (LDL) என வகையுண்டு. கூடாத கொலஸ்திரோல் (LDL) இரத்தத்தில் அதிகரிக்கும் பொழுது இரத்தக் குழாய்களில் படிவடைந்து சொரசொரப்பான மேற்பரப்பை ஏற்படுத்துகின்றது. இதனூடாக செல்லும் இரத்தம் கட்டிபட்டு இரத்தக் குழாயை அடைக்கிறது. இதனாலேயே மாரடைப்பு, பாரிசவாதம் என்பன ஏற்படுகின்றன. இதற்கு நேர்மாறாகவே, நல்ல கொலஸ்திரோல் (HDL) செயற்படுகின்றது. அதாவது, நல்ல கொலஸ் திரோலானது இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படும் வாய்ப்பை குறைத்து மாரடைப்பு, பாரிசவாதம் ஏற்படுவதை தடுக்கிறது.

சரியான உணவுப் பழக்க முறையும், வாழ்க்கை முறையை மாற்றுதலும் ஒழுங்காக மாத்திரை களை உள்ளெடுத்தலுமே LDL கொலஸ் திரோலை குறைப்பதற்கும், HDL கொலஸ் திரோலைக் கூட்டுவதற்கும் உதவும்.


ஒரு நாளில் குறைந்தது 30 நிமிடங்களுக்கு வேகமான நடைப் பயிற்சியும், உடற்பருமனா னோர் உடல் நிறையை குறைத்தல் வேறு உடற் பயிற்சி முறைகளைக் கைக்கொள்ளல், புகைப்பிடிப்பதை நிறுத்துதலும், மது அருந்து வதைக் குறைத்தலும் எமது உணவு முறை மையை மாற்றுவதன் மூலம் கொலஸ்திரோலை கட்டுப்படுத்தலாம்.

> “ கூடாத கொலஸ்திரோல் (LDL) இரத்தத்தில் அதிகரிக்கும் பொழுது இரத்தக் குழாய்களில் படிவடைந்து சொரசொரப்பான மேற்பரப்பை ஏற்படுத்துகின்றது. இதனூடாக செல்லும் இரத்தம் கட்டிபட்டு இரத்தக் குழாயை அடைக்கிறது. இதனாலேயே மாரடைப்பு, பாரிசவாதம் என்பன ஏற்படுகின்றன.

மாற்றியமைக்கப்படவேண்டிய உணவு முறை களாக சமையல் எண்ணெயாக நல்லெண் ணெயையோ, சூரியகாந்தி எண்ணெயையோ பயன்படுத்தல், மரக்கறி எண்ணெயையோ, தேங்காயெண்ணெயையோ தவிர்த்தல், இறைச்சி வகைகளில் ஆட்டிறைச்சி, மாட்டி றைச்சி, பன்றியிறைச்சியை தவிர்த்து, கோழி யிறைச்சியை உண்ணுதல், மாச்சத்துள்ள உணவைக் குறைத்து புரதமுள்ள உணவை உண்ணுதல் என்பன வாகும்.




கொலஸ்திரோலை கட்டுப்படுத்த உண்ணக் கூடிய உணவுகளாக கீரைவகைகள், பயறு வகைகள், Vitamin நிறைந்த பழங்கள். குறிப்பாக தோடம்பழம், அப்பிள், பப்பாளிப் பழம், திராட்சைப்பழம் என்பன. கோவா வகைகள், போஞ்சி, சோயா அவரை வகைகள், உள்ளி, வெங்காய வகைகள், இலங்கை யில் கிடைக்கக் கூடிய மீன்வகை கள் குறிப்பாக நெத்தலிமீன், சூரைமீன் (Tuna), சூடைமீன் (Sardrne), அறக்குளா (markernl) மீன் வகைகள், பாதாம்பருப்பு வகைகள் என்பனவாகும்.




கடைசியாக குறிப்பிட்டுள்ள பாதாம் பருப்பு வகைகள் மேற் குறிப்பிட்டுள்ள மற்றைய உணவுகளுடன் ஒப்பிடும் பொழுது விலை மிக அதிகமானதும், இலகுவில் பெறக் கூடியனவும் அல்ல.

எனவே நாம் எமது அன்றாட உணவில் மலிவாகக் கிடைக்கக் கூடிய மேற்குறிப்பிட்ட உணவுகளைச் சேர்த்து உணவுப் பழக்க முறைமையை மாற்றியும், தகுந்த உடற் பயிற்சி மூலமும், வாழ்க்கை முறை மூலமும் குருதியில் உள்ள கொலஸ் திரோலைக் கட்டுப்படுத்த முடியும்.

க.சிந்துஜானி,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1951.11.24 மறைவு 2008.07.08

### அமரர் முத்தையா தியாகராசா

(முன்னாள் கிராம உத்தியோகத்தர் வட்டுவாகல் முல்லைத்தீவு)

திதி :14.07.2013

உங்கள் நினைவுகள் என்றும் நிலையானவை,
உங்களை மறப்பதென்பது கணமேனும் நடப்பதில்லை,
உங்கள் பிரிவை நினைவுகூரும் 5 ஆம் ஆண்டில் உங்கள்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

வட்டுவாகல்,
முல்லைத்தீவு.

(30857)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சண்முகம் சுப்பையா

*அன்பின் ஊற்றாய் விளங்கி ஆதரவு
காட்டியே
இன்ப வாழ்வு நாம் வாழ உம்மையே
அர்ப்பணித்தீர்!
துன்பச் சுவடே தெரியாமல் எமை
வளர்த்து
கண்ணின் மணிபோல வாழ்ந்து விண்ணில்
மறைந்தீர்!
மண்ணிலே நல்ல மாண்புடனே
வாழ்ந்திருந்த உங்களை
எப்போது காண்போம் இனி... பெற்றிடுவீர்
ஆத்மசாந்தி...*

திதி:14.07.2013

தோற்றம்: 15.05.1919 மறைவு: 22.06.2011

ஞானவைரவர் வீதி, கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில்

என்றும் நினைவில்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தகுமாரி சந்திரகுமார்



மாகியம்பதியைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வசந்தகுமாரி சந்திரகுமார் 30.06.2013 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நோர்வேயில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கனகராசா– இராசமலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லப்பா-செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரகுமாரின் அன்பு மனைவியும், வினுஜா, விக்னன், ஜனோஜன் ஆகியோரின் பாசமிகு தாயும், குசலகுமாரி, காலஞ்சென்ற கோமளகுமாரி மற்றும் யோகராசா, மகேந்திரகுமாரி, உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணசீலன், சுமதி, அசோக்குமார், தமயந்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.07.2013) திங்கட்கிழமை நோர்வேயிலும், ஆத்மசாந்தி நிகழ்வு மட்டுவில் வடக்கு சந்திரபுரம் செல்லப்பாவின் (சின்னவேலு) இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரபுரம், மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(35100)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம்



இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், G 2/6 அன்டசன் தொடர்மாடி, நாரஹென்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம் 12.07.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் த.சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னமணி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், புஷ்பமாலா, இந்திரகுமார், புஷ்பவதனா, புஷ்பலதா ஆகியோரின் பாசமிகு தாயும் சிவலிங்கம், சித்ரா, சங்கர் இரட்ணதுரை ஆகியோரின் அன்பு மாமியும், மாயா, மயூரா, விஷ்ணுகரன், ஐங்கரன், செந்தூரன், அபர்ணா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், அருண், தரண் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்ற குணரட்ணம், இராஜேஸ்வரன், புவனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மஹாலட்சுமி, தவமணி, சாந்தநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நேற்று (13.07.2013) சனிக்கிழமை காலை முதல் ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று மாலை 5 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பொரளை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G 2/6, அன்டசன் தொடர் மாடி, நாரஹென்பிட்டி.
தொ.பே: 0777590205

(30870)

தகவல்:
குடும்பத்தினர்.

## விபுலானந்தர் விழா நாளை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 14
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் சுவாமி விபுலானந்தர் விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திரு முருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தி யத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகமும் கலந்துகொள்வர்.
சிறப்புப் பேருரையை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.யோகேஸ்வரன் நிகழ்த்துவார்.
அதனைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவுகளும், இந்து ஒளி சிறப்பிதழ் வெளியீடும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இந்து நிறுவனங்களுக்கான கணினிகள் வழங்கும் நிகழ்வும், ஆலையடி வேம்பு இந்து மாமன்ற சிவத்தொண்டர்கள் வழங்கும் நாட்டிய நிகழ்ச்சியும், தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ந-14)

### ராஜகோபுர அடிக்கல்

கோண்டாவில் மேற்குப் புகையிரத வீதியில் அமைந்துள்ள மகா கணபதிப் பிள்ளையார் (காளி கோவில்) ஆலய இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய தர்மகர்த்தா சபையினரால் மேற் கொள்ளப்படவுள்ளது. (ந-86)

### அனுமதி அட்டைகளைப் பெறவும்

யாழ். மத்திய கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் கேட்டுக்கொள்கின்றார். (ந)

## மரண அறிவித்தல்

### செல்வன்
### அல்ட்ரிக் சௌஜன்யன்



வவுனியாவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், ஜோர்தானை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அல்ட்ரிக் சௌஜன்யன் அவர்கள் 10.07.2013 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், கிறிஸ்ரிரூபன் நிமலினி தம்பதிகளின் அன்பு மகனும், றொமோல்ட் சைதன்யன், பியோ சின்மயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தம்பியையா மனோன்மணி தம்பதிகளினதும், காலஞ் சென்றவர்களான அகஸ்ரின் திரேசம்மா தம்பதிகளினதும் அன்புப் பேரனும், குமணன் - பத்மபிரியா (கனடா), மேரிஎலிசபெத் (ஜெயராணி) - சூசைநாதன், குயின்மேரி - குலேந்திரராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதர்ஜினி ஆகியோரின் அன்பு மருமகனும், எழிலினி - சஞ்சீவன், ஞானரூபன் (ஜோஜ்) - அஞ்சலா (பிரான்ஸ்), காலஞ்சென்ற வசந்தரூபன் ஆகியோரின் அன்பு பெறாமகனும், யாமளன், றொசாந், லாவண்ஜா, துசான், திரேசிகன், வினி, ஜஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஞந்தினி, மலரவன், ஓவியா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 213, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை **15.07.2013** திங்கட்கிழமை காலை **09.30** மணி அளவில் வட்டக்கச்சி புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாயவனூர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
தம்பியையா : +94 718474749
+94 718455618
சூசைநாதன் ஜெயராணி: +94777402085

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா தம்பிராசா



நீர்வேலி மத்தியைச் சேர்ந்த திருமதி இராசம்மா தம்பிராசா 12.07.2013 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர்-கொழும்பு), சரஸ்வதி (நீர்வேலி மத்தி) ஆகியோரின் அன்புத் தாயும், சின்னத்துரை (ஓய்வுபெற்ற இலிகிதர்), கமலாதேவி (கொழும்பு) ஆகியோரின் மாமியும் பகீரதி (ஆசிரியர் அத்தியார் இந்துக் கல்லூரி), பகீரதன் (ஜேர்மனி), திலீபன் (பொறியியலாளர்-கனடா), தீபிகா (கணக்காளர்-கொழும்பு), பிரதீபன் (கனடா), பிரதிகா (கொழும்பு), கஜாநத் (கொழும்பு-மாணவன்), கங்காதரன் (ஆசிரியர் யா/பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), பொற்கலா (ஜேர்மனி), ரங்கன் (பொறியியலாளர்-கொழும்பு), கங்காயினி (வைத்தியர்-கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சங்கீர்த்தனா (பொஸ்கோ வித்தியாலயம்), பானுஜன் (கிட்ஸ் பார்க் உரும்பிராய்), தக்ஷிகா (ஜேர்மனி), லபிஷன் (ஜேர்மனி), சுஜானி (கொழும்பு), சுபான் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி.

தகவல்:
மகன்- த.கந்தசாமி

## நீங்கா நினைவில் ஓராண்டு

### அமரர் சிவ ஸ்ரீ கதிரவேலு குமாரசாமி ஐயா
### (பூசகர்)



(வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப்பிள்ளையார் ஆதீன அறப்பணியாளர், துத்தியில் ஐயனார் ஆலய பரம்பரை அறங்காவலர், வேரவில் பூநகரி)

அன்னைமடியில்
14.06.1926

ஆண்டவன் அணைப்பில்
25.06.2012

திதி:14.07.2013
வளர்பிறை சஷ்டி

அன்பும் அறனும் கொண்டு அறவாழ்வு வாழ்ந்து
தென்புலம் எய்தி இன்றுடன் ஓராண்டாயின்
எனினும் அன்று நாம் வாழ்ந்த வாழ்வில்
நீங்கள் காட்டிய வழியே இன்று வாழ்ந்து
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வேரவில், பூநகரி.

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்திகளின் தொடரை வளப்படுத்தும் டெல்மேஜ்

டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கொம்பனி லிமிட்டெட் நிறுவனமானது அத்தியாவசியமான சமையலறை மசாலா (வாசனைத் திரவிய) வகைகளை அண்மையில் உள்நாட்டுச் சந்தைக்கு அறிமுகப்படுத்தியதன் மூலம், பரந்துபட்ட தொடர்களிலான தனது நுகர்வோர் உற்பத்திகளை மேலும் வளப்படுத்தியுள்ளது.

சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட அதேவேளை, உயர் தராதரங்கள் உறுதிப்படுத்தப்படும் இந்த மசாலா வகைகள் அனைத்தும் எந்தவொரு இலங்கையரின் சமையலறைக்கும் அடிப்படைத் தேவைகளாக காணப்படுபவையாகும்.

50 கிராம், 100 கிராம் மற்றும் 250 கிராம் போன்ற சிறிய கைக்கடக்கமான பைக்கற்றுகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ள இந்த மசாலா வகைகளுள் - மிளகாய்த் தூள், கறித் தூள், மஞ்சள் தூள், கலவையாக பதப்படுத்தப்பட்ட கறித் தூள், மிளகாய் துகள்கள் மற்றும் மிளகு தூள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

டெல்மேஜ் இன் நுகர்வோர் தொகுதி நிறுவனப் பிரிவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஷான் கன்னங்கர கூறுகையில், 'பல்வேறு வர்த்தகக் குறியீடுகளிலான மசாலாக்கள் இப்போது சந்தையில் இருக்கின்றனதான். ஆயினும் சுவை, நறுமணம் மற்றும் தரம் தொடர்பான சுயாதீன சமையற்கலை நிபுணர்கள் மூவரினால் கடுமையாக பசோதிக்கப்பட்டு அவர்களால் மிகவும் சாதகமான பெறுபேறுகள் வழங்கப்பட்ட எமது புதிய உற்பத்திகளையே நாம் வழங்குகின்றோம். உள்நாட்டில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற மிகச் சிறந்த உள்ளீடுகளைப் பயன்படுத்தியே இந்த மசாலா பொருள்கள் அனைத்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன்மூலம் உண்மையான இலங்கையரின் உற்பத்தியாக இது மாற்றப்படுகின்றது. டெல்மேஜின் 150 வருடங்கள் பழைமைவாய்ந்த பாரம்பரியத்தை எமது மசாலா வகைகள் தம்மோடு கொண்டு வருகின்றன. இந்தப் பாரம்பரியமானது - மிகவுன்னத தரம், நீண்டகாலமாக பரீட்சித்து உறுதிப்படுத்தபட்ட நம்பகத் தன்மை மற்றும் எமது பழம்பெரும் சிறப்புத்துவம் போன்றவற்றை ஒருங்கே கொண்டதாகவுள்ளது' என்றார்.



சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களினால் இரத்ததானம் வழங்கப்பட்டது. சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி அலுவலகத்தில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட ஊழியர்களும் வாடிக்கையாளர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்த தானம் வழங்கினர். (த-86)

## தாய் - சேய் சுகாதார அபிவிருத்திக்கு கைகொடுக்கும் நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ்



நோயற்ற எதிர்கால சந்ததியை கட்டி எழுப்புவதற்கு தாய், சேய் சுகாதாரம் மிக முக்கியமாகும். ஆகையால் தாய், சேய் சிகிச்சைகளை முன்னெடுக்கும் வைத்திய சாலைகளின் சேவைகளை சிறந்த முறை யில் முன்னெடுத்து செல்வதன் ஊடாக அவர்களுக்கான சுகாதார சேவையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

> மஹரகம தேசிய வாய் சுகாதார நிறுவ னத்தின் நீண்டகால தேவையாக நிலவிய சிகிச்சை அட்டைகளை வழங்குவதற்கு 'நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் பெண்டா பேபி' அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

இந்த தேசிய தேவையை உணர்ந்து கொண்ட இலங்கையின் முதற்றர சிறுவர்களுக்கான உற்பத்தியான 'நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் பெண்டா பேபி' தயாரிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறு வனம் தாய் - சேய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக 'நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் பெண்டா பேபி' என்ற பெயரில் பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது. அதனூடாக நோயற்ற சிறுவர் சமுதாயமொன்றை உருவாக்குவதே 'நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் பெண்டா பேபியின்' பிரதான நோக்கமாகும்.

மஹரகம தேசிய வாய் சுகாதார நிறுவ னத்தின் நீண்டகால தேவையாக நிலவிய சிகிச்சை அட்டைகளை வழங்குவதற்கு 'நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் பெண்டா பேபி' அண்மையில் நடவடிக்கை எடுத்தது. இந்த நடவடிக்கை ஊடாக தேசிய வாய் சுகாதார நிறுவனத்தின் சிறுவர்களுக்கான சிகிச்சை பிரிவின் செயற்பாடுகள் இலகு படுத்தப் பட்டுள்ளன. அதுதவிர சிகிச்சை பிரிவுக்கு வர்ணம் பூசி சிகிச்சைக்கு வரும் தாய் சேய் ஆகியோருக்கு உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கும் நிறுவனம் தேவை யான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் தாய் மற்றும் சேய் மருத்துவ பிரிவான கேத்துமதி பிரிவை புனரமைக்கவும் 'நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் பெண்டா பேபி' நடவடிக்கை எடுத்தது. இது பாணந்துறை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலிருந்து வருகை தரும் தாய் மற்றும் சிறுவர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு வாய்ப்பை ஏற்ப டுத்தியுள்ளது.

நாடு முழுவதிலும் பல பகுதிகளில் அமைந்துள்ள தாய் மற்றும் சிறுவர் சிகிச்சை மத்திய நிலை யங்களை புனரமைக்க 'நேச் சர்ஸ் சீக்ரெட்ஸ் பெண்டா பேபி' எதிர் பார்த்துள்ளதுடன் அத்தகைய தேவைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் தமக்கு அறியத்தருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றது. (த)

## ஹமீடியாவின்விமானச் சீட்டுக்களை வென்ற அதிஷ்டசாலிக் குடும்பம்



இலங்கையின் ஆண்கள் ஆடைத் துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனமாக திகழும் ஹமீடியா, இலங்கையிலுள்ள அனைத்துத் தந்தையர்களுக்காகவும் நடத்திய மனமகிழ்ச்சி தரக்கூடியதும் இவ்வாறான ஒரேயொரு முன்னெடுப்புமான விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தில், கொழும்பு 4 ஐச் சேர்ந்த சுரங்க பெர்னாண்டோ சிங்கப்பூர் சென்று திரும்புவதற்கான 03 இருவழி விமானப் பயணச் சீட்டுக்களை வென்றெடுத்துள்ளார்.

இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இரண்டரை வார காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற நூற்றுக் கணக்கான நுழைவுப் பத்திரங்களுள் அவரது மகளான கியாரா பெர்னாண்டோ (பிஷப் கல்லூரியில் தரம்-5 இல் கற்பவர்) தனது தந்தை பற்றி எழுதியிருந்த கடிதமும் ஒன்றாகும்.

மாபெரும் இறுதிப் பரிசுக்கு மேலதிகமாக, இரவு விருந்திற்காக 15 அதிர்ஷ்டசாலி குடும்பங்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஐந்து நட்சத்திர விருந்தும் அனுபவம் ஒன்று வழங்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர்.

அண்மைக் காலங்களில் இதுவரைக்கும் நாம் முன்னெடுத்த தந்தையர் தின விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுள் இது மிகவும் நிகரற்ற ஒன்றாக அமைந்துள்ளது. இது தொடர்பாக உருவாகியிருந்த ஆர்வம் எம்மை திக்குமுக்காடச் செய்த அதேவேளை, இதற்காக அனுப்பப்பட்ட சில நுழைவுப் பத்திரங்கள் ஊக்கமளிப்பதாகவும் ஆழமான உணர்வு மாற்றத்தை தருவதாகவும் காணப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்னவென்றால், அதிகளவிலான நுழைவுப் பத்திரங்கள் வெளி மாவட்டங்களில் இருந்து கிடைக்கப் பெற்றதாகும். இவ்வாறான நிகழ்வுகள் கொழும்புடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையே இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது என்று ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் தெரிவித்தார்.

சிங்கப்பூர் சென்று திரும்புவதற்கான (இருவழி) விமானப் பயணச் சீட்டுக்களை வென்றெடுத்த சுரங்க பெர்னாண்டோ கூறுகையில், ஒன்றல்ல - மூன்று விமானப் பயணச் சீட்டுக்களை வென்றெடுத்தமை எனக்கு ஆச்சரியமானதாகவும் அதேநேரம் சந்தோசமானதாகவும் இருந்தது. நவ நாகரிகம் என்று வருகின்ற போது ஹமீடியா நிறுவனமானது நவீன பாணியில் அதிலுள்ள விடயங்களைச் செய்கின்றது என்பதை நானறிவேன்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பிரதேசங்கள் தோறும் தேவை பிரசைகள் குழுக்களின் சேவை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் பல துறைகள் சார்ந்த தேவைகள், அபிவிருத்தியை நாடிய செயற்பாடுகள், மற்றும் வாழ்வியல், அரசியல் உரிமைகள் என்பன முன்னேற்றம் கண்டுள்ளனவா என்ற வினா பென்னம் பெரிதாக உயர்ந்து எழுந்து நிற்கிறது.

பலப்பல துறைகளில், தேவைகளில் அந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டியவை வழங்கப்படுகின்றன. அதற்கான வசதிகள், வாய்ப்புகள் படிப்படியாகச் செய்யப்படுகின்றன என்று அரச தரப்பு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி அதிகாரிகளும் சொல்கிறார்கள்; நிறுவ முயல்கிறார்கள்.

ஆனால், மக்கள் திருப்திகொள்ளும் அளவுக்கு, தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் மட்டத்துக்கு, பல அம்சங்களிலும் அலகுகளிலும் செயற்பாடுகள் மந்தமாகவே உள்ளன என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

இவற்றை மக்கள் சார்பில், ஒன்று சேர்ந்து வெளிப்படுத்தும் நிலைமை இன்னும் தோன்றவில்லை, தோற்றுவிக்கப்படவில்லை என்ற கள நிலைமை கசப்பானது. தமக்குள்ள போதாமைகள், அழுத்தங்கள் காரணமாக மேலெழும் விடயங்களை, ஒன்று சேர்ந்து, ஒரே குரலில் ஒலிக்கவல்ல அமைப்புகள் எமது பிரதேசங்களில் அருகிவிட்டன.

மிகக் குறிப்பாகச் சொல்வதானால், தமிழ்ப் பிரதேசங்களின் தேவைகளை, உரிமை மறுப்புகளை புள்ளிவிவரங்களுடன், ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தி வெளிப்படுத்தவல்ல பிரசைகள் குழுக்கள், வடக்கில் தலை எடுப்பதாக இல்லை என்பது பெரும் இடைவெளியை உண்டாக்கி உள்ளது.

வடக்கே வரும் வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள், மற்றும் கொழும்பிலுள்ள அனைத்துலக நாடுகளின் தூதுவர்கள், உதவி வழங்கும் நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் மட்டுமன்றி, பல வகையறாக்களைச் சேர்ந்த பிரமுகர்களும் மக்களை நேரில் கண்டு இன்றைய உண்மை நிலையை அறிய விரும்புகிறார்கள். சில பிரமுகர்களை அல்லது அமைப்புகளைச் சந்தித்து விவரம் அறிந்து செல்வதும் வழமையாகிவிட்டது.

அவர்களுக்கு சரியான, அச்சொட்டான சரியான நிலைமைகள் ஆதாரங்களுடன் விலாவாரியாக முழு அளவில் எடுத்துச் சொல்லப்படுகின்றனவா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. ஆனால் அவர்களது அத்தகைய பேரார்வத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆதாரபூர்வமான தரவுகள் வழங்கப்படுகின்றனவா என்றால், இல்லை!

எனினும், முல்லைத்தீவில் இயங்கும் பிரசைகள் குழு, தம்மைச் சந்திப்போரிடம் புள்ளிவிவரங்கள் மற்றும் ஆதாரபூர்வமான அறிக்கைகளுடன் அந்த மாவட்ட மக்கள் சகல துறைகளிலும் பாதிக்கப்படுவதையும், பாரபட்சமான செயற்பாடுகளை அனுபவிப்பதையும் ஆவணங்களாக வழங்கி வருவது விசேடமாகக் குறிப்பிட்டுத் தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

போருக்கு நான்கு வருடங்களுக்குப் பின்னரான இப்போதைய உண்மை நிலை, உலக நாடுகளுக்குத் தெரிய வேண்டிய தேவை, இப்போது முன்னர் எப்போதும் இல்லாத அளவில் அதிகம் எனலாம். மேலும், மனித நேயத்துடனும் மனிதாபிமானத்துடனும் தாம் வழங்கும் உதவிகள், உரிய அளவில் பாதிப்புற்ற மக்களை சென்று அடைகின்றனவா என்பதனை அறிவதற்கு அவை விரும்புவது இயல்பே.

அதனை மனதிற் கொண்டேனும், பாதிப்புற்ற தரப்பினர் நிலை குறித்த தரவுகளை தகவல்களாக்கி ஆவணங்களாக மாற்றினால் மட்டுமே, உண்மை நிலையை ஆதாரபூர்வமாக முன்வைக்க இயலும்.

இந்தப் பணியைப் பிரசைகள் குழு போன்ற அமைப்புகள் ஆற்ற முடியும். முல்லைத்தீவு பிரசைகள் குழுவை அதற்கான முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.


பிரசைகள் குழுக்களில் மூத்த பிரசைகள், கல்வி மற்றும் தொழில்சார் துறைகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள், மகளிர்கள், சமூக ஆர்வலர்கள், சமயப் பிரமுகர்கள் போன்றவர்களை உள்ளடக்குவது பொருத்தம். அவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் பெறுமதியான புள்ளி விவரங்களை, உண்மை நிலைகளை, வெளிப்படுத்த முடியும்.


போர்க் காலத்துக்கு முன்னர் பிரதேசவாரியாகச் செயற்பட்ட பிரசைகள் குழுக்கள், அந்த இடர்காலத்தில் மக்களுக்கும் அதிகாரத் தரப்புக்கும் இடையில் ஒரு பாலமாக விளங்கி பெரும் தொண்டாற்றியதை மீட்டுப் பார்த்து, பகுத்துச் செயற்பட முனையலாம்.

# தெரிவுக் குழுவின் முதல் அமர்வும் மேனனின் வருகையும்

டெய்லிமிரர் கட்டுரையில் இருந்து

கோகுலன்





தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன் வைப்பதற்கென உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டம் கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தின் இரண்டாம் இலக்க குழுக்கள் அறையில் குறிக்கப்பட்ட நேரத்தை விட பத்து நிமிடம் தாமதமாக ஆரம்பமானது. அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, ஜி.எல்.பீரிஸ் உட்பட்ட அரசு தரப்பு உறுப்பினர்கள், ஆவணங்கள் கோப்புகள் சகிதம் அறைக்குள் பிரவேசித்தார்கள்.

அன்றைய அமர்வு 40 நிமிடங்கள் நடைபெற்றது. அமர்வின் போது இடம்பெற்ற விவாதங்களின் விவரங்களை அறிவதில் ஆர்வம் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் குழுவொன்று அமைச்சர் விமல் வீரவன்சவை நோக்கிச் சென்றது. அமைச்சர் வாய் திறக்கும் முன்பே தெரிவுக் குழுவின் தலைவரும், அந்தச் சமயத்தில் விமல் வீரவன்சவுக்கு அருகில் இருந்தவருமான அமைச்சர் சிறிபால டி சில்வா கூட்ட விவரங்கள் எதனையும் வீரவன்ச கசிய விட்டுவிடாதபடி விரைவாக அவரைத் தடுத்து நிறுத்தினார்.

பத்திரிகையாளர்களுடன் எதையும் விவாதித்து நீதிமன்றத்தை மீறிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகி விட வேண்டாம் என்று சில்வா குறிப்பிட்டார்.

அதற்கு வீரவன்ச ''பார்த்தீர்களா அவர்கள் சட்ட ரீதியான விடயங்களை எம்முடன் விவாதிக்கப் பார்க்கிறார்கள்?'' என்று விடை பகிர்ந்தார்.

ஆரம்பத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது அரசியல் ரீதியான விடயங்களை விரிவான முறையில் ஆராய்வதாகவே இருந்தது. ஆனால் இப்பொழுது 13 ஆவது திருத்தம் தொடர்பான விடயங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து ஆராய்வதாகத் தெரிகின்றது.

விசேட அனுமதி இருந்தால் தவிர, நாடாளுமன்ற நிலையியல் விதிகளின்படி தெரிவுக் குழுவின் விவாதங்களை ஊடகங்கள் வெளியிடலாகாது என்பது நியமங்களில் ஒன்றாகும்.

எனவே அதன் அமர்வுகளை ஒழுங்கு முறையாக ஊடகங்கள் அவதானித்து வெளியிடும் சந்தர்ப்பங்கள் குறைவு. எனவே தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பொது மக்களுக்கு முறையான வழிமுறைகளில் கிடைப்பது சிரமமாக இருக்கப் போகின்றது. எனவே அதன் தினசரி விவாதங்களை விரிவாக வெளிப்படுத்துவது சாத்தியமில்லாமல் இருக்கும்.

இருந்த போதிலும் முதல் அமர்வின் போக்கினைப் பார்க்கும்போது, ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் இது வெகுவாக நீடித்துப் போவதை அரசு விரும்புவது போல் தெரிகின்றது.

தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் ஜூலை26 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிகின்றது.

[illegible]
13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை பலம் குறைக்கச் செய்வது என்ற திட்டத்திலிருந்து அரசு ஓர் அடி பின்னகர்ந்திருப்பது இப்போது தெரிகின்றது. இந்த நிலைமை ஏற்படுவதற்கு இந்தியா திரும்பவும் தனது ராஜதந்திர பலத்தைப் பிரயோகித்திருப்பதுவே காரணம் எனலாம். நடந்து முடிந்துள்ள சம்பவங்களையும் செய்திகளையும் பார்க்கையில் இதுவே புலப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த வாரம் புதுடில்லிக்குச் சென்றிருந்த போது இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு ஒன்று அதனையும் கடந்த நிலையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தியிருந்தார்கள்.

சிவ்சங்கர் மேனன் இலங்கைக்கு வருகை தந்ததன்பின், ஒரு நாள் கழித்து நாடாளுமன்றத் தெரிவு குழு தனது அமர்வை நடத்தியிருந்தது.

மேனனின் வருகையின் முக்கிய நோக்கத்துக்கு அப்பால் இலங்கை இந்திய உறவுகளில் சம்பந்தப்பட்ட முக்கிய பிரமுகர் என்ற முறையில் அரசியல் விடயங்களையும் இலங்கை பிரமுகர்களுடன் அவர் விவாதிப்பதில் ஈடுபட்டார்.

திங்கட்கிழமை மதியம் இலங்கையில் வந்திறங்கியதும் முதல் விடயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மேனன் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் போது வடக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விளக்கிக் கூறினார்.

காணி அபகரிப்பு, வடக்கு இராணுவமயமாகியுள்ள நிலைமை மற்றும் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பாக அவர் விளக்கினார். ஆரம்பத்திலேயே பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். இந்த நாட்டின் குடிமக்களின் ஒரு பிரிவினராக தமிழர்களும் இருப்பதாக உணரச் செய்யப்பட வேண்டும் என்பதை மேனன் எடுத்து கூறினார். சம்பந்தனுடன் வேறு சிலரும் கருத்துக்கள் சொல்ல முற்பட்டனர் என்றாலும் அவைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்க மேனன் விரும்பவில்லை. இவைகள் எல்லாவற்றையும் புதுடில்லியில் நாம் சந்தித்த போது விவாதித்திருக்கிறோம். எனவே மீண்டும் அவைகளை நாம் விவாதிக்கத் தேவையில்லை என்றார் மேனன்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஒவ்வொரு அம்சமும் இலங்கை அரசினால் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே கூட்டமைப்பின் அறுதியான வலியுறுத்தலாக இருந்தது.

வடக்குத் தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட வேண்டும். இராணுவம் முகாம்கள் முடக்கப்பட வேண்டும் என்பவையும் கூட்டமைப்பின் கோரிக்கையாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதற்குப் பதில் அளித்த மேனன் வடமாகாண சபை தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா, இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது என்றும் அத்துடன் 13 ஆவது திருத்தம் முழுமையாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எடுத்துக் கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த அறைக்கு அடுத்த அறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டத்தில் கலந்து கொள்ள மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா வந்திருந்தார். ஆனால் அவர் தவறுதலாக 2 ஆம் இலக்க அறையின் கதவைத் திறக்க முயன்றார். அது திறபடவில்லை. அங்கு காணப்பட்ட அறிவித்தலில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கூட்டம் என்று காணப்பட்டது. அதிர்ச்சியில் பின் வாங்கிக் கொண்டவர் ''கடவுளே பெரும் அனர்த்தத்தில் சிக்கிக் கொள்ளப் பார்த்தேன்'' என்று சிரிப்புடன் கூறினார். அங்கிருந்த ஏனையவர்களும் சிரித்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளாமல் இருப்பது தெரிந்ததே. ★

> காணி அபகரிப்பு, வடக்கு இராணுவமயமாகி யுள்ள நிலைமை மற்றும் திட்டமிட்ட குடியேற்றங் கள் தொடர்பாக இரா.சம்பந்தன் விளக்கினார். ஆரம்பத்தி லேயே பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். இந்த நாட்டின் குடிமக்களின் ஒரு பிரிவின ராக தமிழர்களும் இருப்பதாக உணரச் செய்யப்பட வேண்டும் என்பதை மேனன் எடுத்து கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கு செவி சாய்ப்போம்

ஆர்.கே.மேனன்



தற்போது டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டுவருகின்றன. இதற்கு செவிகொடுத்த சமுகக் குழுக்களின் விகிதாசாரத்தை நோக்கும் போது, அது மிகக்குறைவாகவே உள்ளமை அவதானிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள் வீதியோரம் நின்று சுலோகங்கள் மூலம் இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்கள். இருந்தும் வீதியோரம் செல்லும் மக்களில் எத்தனை பேர் இது தொடர்பான உள்வாங்கல்களைப் பெற்று தமது சுற்றாடலில் மாற்றத்தினை ஏற்படுத்தினார்கள் என்பது கேள்விக்கு உரியதொன்றே.

தற்கால மக்கள் சுயநலப்போக்குள்ள ஓர் இயந்திர வாழ்க்கை முறையைக் கைக்கொள்பவர்களாக மாறி வருகின்றனர். இதற்கான காரணம் தற்கால சூழலியல் மாற்றங்கள் என்பது ஒரு புறமிருக்க எமது எதிர்கால அழிவிற்கு அது வித்திடுமாயின் இது தொடர்பாக சிந்திக்க வேண்டியது கட்டாய தேவையாகவுள்ளது. சுகாதாரப்பிரிவும் கல்வித்திணைக்களமும் சேர்ந்து கட்டாய தேவையென இதைக்கருதி மாணவர்களை வீதியோரம் நிறுத்தி இதனை மேற்கொள்ளுமளவிற்கு உள்ள தேவையின் அளவினை மக்கள் உணரவேண்டும். சென்ற தடவை டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களைவிட இனி வரும்காலங்களில் உயிரிழப்பு அதிகரிக்குமென வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர். இதனால் சாகடிக்கப்படுவது யார்?.. எமது உறவுகளே. இதனைப்பாரா முகமாக இருப்பது நியாயமா?.... நோய்க்கட்டுப்பாட்டுக்கான வழிகளை உடன் மேற்கொள்ளவேண்டும். இதுவும் ஒரு சமூகசேவையே. இலங்கையின் சுகாதாரத் திணைக்களம் பல நோய்க்கட்டுப்படுத் தல்களில் வெற்றியும் கண்டுள்ளது. உதாரணமாக தொழுநோய் மற்றும் போலியோ போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே இத்தகைய செயற்பாடுகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கவேண்டியது கட்டாய தேவையாகும்.

எயிட்ஸ் எனும் நோய் இதுவரை காலமும் பாலியல் நோய் எனும் பெயரில் பெரியோர் முதல் சிறுவர்கள். குழந்தைகள் வரை தாக்கி மரணத்தை விளைவித்தது. இதற்கான சிகிச்சை முறைகள் கண்டறியப்பட்டு தற்போது ஓரளவுக்கேனும் இந் நோய்க்கான பரிகாரம் தேடப்பட்டு வரும் தெம்பில் மனித குலமிருக்கும் போது உடலுறவின் மூலம் பரவுகின்ற மற்றொரு நோயான ''வெட்டை நோய்'' (ஆங்கிலத்தில் கொனோரியா என்றழைக்கப்படும் புதிய நோய்) பீதியைக்கிளப்ப ஆரம் பித்துள்ளது. இந்த வகையானது பிறபொருளெதிரி நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு கட்டுப்படாத போக்கு அதிகரித்து வருவதால் அந்நோய் விரைவில் குணப்படுத்த முடியாத ஒரு நோயாக மாறி வருவதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் எனப்பிரிட்டனில் இடம் பெறவுள்ள மருத்துவ மாநாட்டில் எச்சரிக்கப்பட உள்ளது. பாலியல் நோய் தொடர்பாக விழிப்புடன் இருக்கவேண்டியகட்டாயத்தேவையை தற்கால நடப்புச் செய்திகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இதனைவிட தொழு நோய் இலங்கையில் மீண்டும் பரவிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இழப்புக்களை சுமந்து வாழ்ந்த எமது தமிழினம் மேலும் இழப்புக்களைச் சுமக்கமுடியாது. தொற்று நோய்தொடர்பான விடயத்தில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டியது கட்டாய தேவையாகும். ஏனெனில் இதற்கு மருத்துவம் கிடையாது. ஆதலால் வருமுன்காக்கும் விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கு செவிகொடுத்துச் செயற்பட வேண்டும். தெருவோரம் நிற்கின்ற மாணவர்களைப்பார்த்து ''ஏனிந்த மாணவர்கள் இப்பிடி நிக்கிறார்கள் அண்ணை ''ஏதோ டெங்கு ஒழிப்பாம், வாத்திமாருக்கும் வேற வேலையில்ல, பிள்ளைகளை எல்லாத்துக்கும் பயன்படுத்துவினம்'' என்றவாறான மனோபவங்களும் எழுந்தமானமான பேச்சுக்களும் எம்மக்கள் மத்தியில் இருக்கும்வரை விழிப்புணர்வுகளின் அர்த்தம் எவர்க்கும் புரியாது. ★

> இழப்புக்களைச் சுமந்து வாழ்ந்த எமது தமிழினம் மேலும் இழப்புக்களைச் சுமக்கமுடியாது. தொற்று நோய்கள் தொடர்பான விடயத்தில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டியது கட்டாய தேவையாகும்.

---

# டெங்கு வராமல் பாதுகாக்க வழிமுறைகள்

Dr.இ.தெய்வேந்திரன்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு வைரஸ் நோய் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும், செயற்படவேண்டிய அவசரமானதும், அவசியமானதுமான தேவை எழுந்துள்ளது. இந்த நோயால் பீடிக்கப்படுவதைத் தடுப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், குணப்படுத்துவதற்குச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

**டெங்கு தொற்று என்பது என்ன?**

இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய். இது இருவகையாக வெளிப்படும்.

★ டெங்கு காய்ச்சல் (DF)

★ இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சல் (DHF)

**டெங்குக் காய்ச்சலின் குணங்குறிகள்**

★ சடுதியாக ஏற்படும் காய்ச்சல்


★ கடுமையான தலையிடி

★ கண்ணின் பிற்பகுதியில் நோ

★ தசை, எலும்பு, மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ

**இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சலின் குணங்குறிகள்**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் உறுப்புக்களில் இரத்தம் கசிதலும், அதிர்ச்சி நிலை ஏற்படும் விதத்திலும் சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாள்களுக்குக் காணப்படும் இந்த நிலை 5-6 நாள்கள் (103 பாகை-105 பாகை) தொடரும். 3-4 நாள்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில் நோயாளிக்குப் பலவீனமான நிலை ஏற்பட்டு இயலாத்தன்மை ஏற்படும். இந்த நோய் மக்களிடையே சடுதியாகப் பெருகிப் பலரைத் தாக்கும் சக்தி கொண்டது.



**டெங்குக் காய்ச்சலை அடையாளம் காணும் வழிகள்:-**

★ சடுதியாக ஏற்படும் காய்ச்சல்

★ கடுமையான தலையிடி குறிப்பாக நெற்றிப் பகுதிகளில்

★ கண்களின் பிற்பகுதிகளில் கடும் நோவும், கண்களை அசைக்கும் போது நோவு கூடுதலும்

★ உடலின் முழுப்பகுதிகளிலும், மூட்டுக்களிலும் நோ

★ ஓங்காளம், வாந்தியெடுத்தல்

**கடுமையான டெங்கு, இரத்தத் தாக்க நிலை அதிர்ச்சி நிலையை எவ்வாறு இனங்காண்பது**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் கீழே தரப்படும் ஏதாவது 1 முதல் 3 வரையான குணங்குறிகள் இருப்பின் ஆபத்து நிலையாக கணிக்கலாம்.

★ கடுமையான தொடர்ச்சியான வயிற்றுநோ அல்லது வலி

★ மூக்கு, வாய், முரசு, தோலின் அடியில் குருதி ஒழுக்குக் காணப்படுதல்

★ அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல்

★ மலம் கறுப்பு நிறமாக வெளியேறுதல்

★ நாவறட்சி மற்றும் தண்ணீர்த் தாகம் ஏற்படல்

★ வெளிறிய/குளிர்ந்த நிலையில் தோல் காணப்படல்.

**நோயை இனங்காணும் முறைகள்**

சுலபமாக செய்யக் கூடிய ஆய்வு முறைகள் (Platelet Count, PVC Count, Tourniquet test, Haematocrit test, Scanning test, Dengue Antibody test) எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் இருப்பின் உடனடியாகச் சிகிச்சை உடன் மேற்கொள்ள வேண்டும்.

**சிகிச்சை முறைகள்**

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியம். ஆரம்பத்திலேயே சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும், உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின் (Aspirin), புறுபென் (Brufen) கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அவை நோயை மேலும் சிக்கலாக்கும். பரசிற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம். கடுமையான வயிற்று நோவு, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளியேறுதல், மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக் கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள். ஆகவே அவ்வேளையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

**டெங்கு பற்றிய அடிப்படைத் தகவல்கள்**

1. Aedes வகை நுளம்பினால் இந்த நோய்த் தொற்று ஏற்படலாம்

2. ஒரு நோயாளியைக் கடித்த நுளம்பு ஒரு சுகதேகியை கடித்தால் அவருக்கு 5-7 நாள்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம்.

**நுளம்பு பெருகும் இடங்கள்**

நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப் போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும், தண்ணீர் தொட்டிகளிலும், மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும். தண்ணீரைத் தேக்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாள்களுக்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்துப் பெருகும்.

**நுளம்பு கடிப்பதைத் தவிர்த்தல்**

★ டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

★ முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களைப் பாதுகாக்கும் வகையில் உடை அணிதல் வேண்டும்.

★ நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளைப் பாவித்தல்.

★ நுளம்புச் சுருள் மற்றும் அழிக்கும் இரசாயனப் பொருள்களைப் பாவித்தல்.

★ நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் (குறிப்பாக குழந்தைகள், சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு, யன்னல் வலைகளைப் பயன்படுத்தல்.

★ நோய்ப்பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல். நோயாளியிடமிருந்து ஏனையோருக்கு பரவாமல் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

**நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல்**

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப்புறத்திலுள்ள நீர் தேங்கும் இடங்களில் இருந்து பரவுகின்றது. அதனைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:-

★ வீட்டுச் சூழலிலுள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல்.

★ வீட்டிற்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல்.


★ தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல்.

★ பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச் சூழலிலிருந்து அகற்றி அழித்தல்.

மேற்கூறப்பட்ட வழி முறைகளை கவனத்தில் எடுத்து செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14/07/2013



பம்பைமடு நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் விழா அண்மையில் நடைபெற்ற போது... (க-402)




ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழாவின் முதல் நாளன்று கொடிச் சீலை கற்சிலைமடு சம்மனந்தார் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட போது... (க-435)





இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், கிளிநொச்சி பொலிஸ் நிலையமும் இணைந்து பாடசாலை மாணவரிடையே போக்குவரத்து விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகளை நடத்தின. (க-6)



அக்கராயன் மகாவித்தியாலயத்தில் தேசிய மாணவர் படையணியில் பயிற்சியை நிறைவு செய்த மாணவன் ஒருவருக்கு ஆசிரியை திருமதி தே.சபாரத்தினம் சின்னம் சூட்டுகிறார். (க-18)



கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆக்கத்திறன் செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். (க-18)




மாந்தை கிழக்கு சிறாட்டிகுளத்தில் அமைந்துள்ள பாலத்தின் புனரமைக்கப்படாத நிலையிலுள்ளதும் மற்றும் புனரமைக்கப்பட்ட பின்னருமான இருவேறு தோற்றங்கள். (க-6)




அக்கராயன் மகாவித்தியாலய உயர் தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கரைச்சிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் வரவேற்கப்படுவதையும், அருகில் பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் நிற்பதையும் காண முடிகின்றது. (க-18)




கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலையில் இடம்பெற்ற கல்வி விழிப்புணர்வுச் செயற்பாட்டின் போது... (க-18)



இரணைமடுக்குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களை அழிக்கும் கால்நடைகள். (க-6)



புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் கிராமத்தில் இப்படியுமொரு கிணறு மக்களின் பாவனையில் உள்ளது. (க-500)



ஒட்டுசுட்டான் பெரிய இத்திமடு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவின் போது... (க-435)



மாங்குளம் பிரதான தபாலகத்தின் கட்டுமானப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நியூயோர்க்கிள் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மாணவர்களினால் உருவாக்கப்பட்ட 'அவுட் ஒஃப் த புளூ'' என்னும் இசைக் குழு றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தது. அந்தக் குழு இசைக்கருவிகள் எதுவுமின்றி வாய் மூலம் எவ்வாறு இசையை எழுப்புவது மற்றும் அதை ரசனையுடையதாக ஆக்குதல் சம்பந்தமான பயிற்சி ஒன்றை யாழ்ப்பாணத்தில் உள்ள 'கேற்வே' நிறுவனத்தில் வழங்கியது. இதன்போது பல மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-21)



மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பழைய மாணவன் நடராஜா நினைவாக அமைக்கப்படவுள்ள புதிய மாணவர் விடுதிக்கான அடிக்கல்லை பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.விவேகானந்தராஜா நட்டு வைப்பதையும், அருகில் கல்லூரி அதிபரையும் காணலாம். (ஒ)




மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவன் ஜெ.ஜெகதீஸ்வரனுக்கு, பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த வடமாகாணக் கல்வித் திணைக்கள ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப் பாளர் ந.சோமஸ்கந்தராசா பதக்கம் அணிவித்து கௌரவிக்கிறார். அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, பாடசாலை முதல்வர் செ.பேரின்பநாதன் ஆகியோர் நிற்கின்றனர். (எ)



யாழ். கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை நடத்துவதற்கு லண்டனில் இருந்து வருகை தந்த அதே இடத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ கெங்காதரக் குருக்கள் இறுதி நாள் உற்சவத்தில் வேதாகம தத்துவ ஞான கிரியா சிகாமணி என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (எ-421)



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் ஜுபிலி பெருவிழாவில் இளையோர் ஒன்றியத்தினால் அரங்கேற்றப்பட்ட 'சஞ் சுவாம்' என்னும் தென்மோடி நாட்டுக்கூத்தில் பங்குபற்றிய கலைஞர்களுடன் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை, ஆலய செயலாளர் சொ.சூ.சிறில், திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் இணைந்து காணப்படுகிறார்கள். (ஒ-51)



கைதடி நவீல்ட் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு வருகை தந்த விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். (ஒ-4)



வரணி மாசேரி கிராம சிவில் பாதுகாப்புக் குழுவினருடன் சந்திப்பு ஒன்றின் போது கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். எதிரிசிங்கவுடன் குழுவினர். (ஒ-122)



யாழ். வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்ட கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் இடம் பெற்ற ஆசிரியர் தி.தவரத்தினம் எழுதிய மானுடமும் சோதிடமும் நூல் வெளியீட்டு விழாவில் வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மங்கல விளக் கேற்றுவதையும் நடுவில் நூலாசிரியருடன் பிரமுகர்களும் நிற்கின்றனர். (எ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்து போவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் டென்ஷன், அலைச்சல் நீங்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**இடபம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தினரு டன் கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். உடன்பிறந்தவர்களின் அதரவு கிட்டும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்..

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள்.உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**கடகம்:** கையில் காசுபணம் புரளும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். வீட்டில் சுபகாரியங்கள் ஏற்பாடாகும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. பிள்ளைகள் எதிர்த்துப் பேசுவார்கள். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். முன்கோபத்தால் பகை உண்டாகும்.

**கன்னி:** உறவினர்களால் சங்கடங்கள் வரும். வாகனத்தில் செல்லும் போதும், சாலையைக் கடக்கும் போதும் கவனம் தேவை. வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச் சுமையால் சோர்வடைவீர்கள்.

**நாளை**

ஆனி-31 திங்கட்கிழமை 15.07.2013
திதி: ஸப்தமி பி.ப. 05.14 வரை
நட்சத்திரம்: அத்தம் மா. 06.07 வரை
சுபநேரம்: 12.00 - 01.30 வரை
இராகுகாலம்: 07.30 - 09.00 வரை

**துலாம்:** எண்ணம்போல் செயல்பட வேண்டுமென எண்ணுவீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். தாயாரின் உடல் நிலை சீராக இருக்கும். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். பிள்ளைகளின் பேச்சை ரசிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பணஉதவி கிடைக்கும். தந்தை வழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**தனுசு:** உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மகரம்:** அக்கம் - பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படாதீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களுடன் போராட வேண்டி வரும்.

**கும்பம்:** நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். பிள்ளைகளின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத்துக்காக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | 1 | 3 | 7 | | |
| | | 6 | | | | | 2 | |
| | | 4 | 6 | | | 5 | 3 | 8 |
| | | | | 7 | 9 | 6 | | |
| 2 | 7 | | 4 | | 6 | | 1 | 3 |
| | | 9 | 3 | 2 | | | | |
| 5 | 4 | 8 | | | 7 | 3 | | |
| | 2 | | | | | 4 | | |
| | | 1 | 9 | 5 | | | | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 1 | 2 | 6 | 5 | 9 | 7 | 4 |
| 6 | 4 | 9 | 8 | 1 | 7 | 3 | 2 | 5 |
| 2 | 5 | 7 | 4 | 3 | 9 | 8 | 1 | 6 |
| 1 | 7 | 6 | 9 | 2 | 4 | 5 | 3 | 8 |
| 9 | 3 | 6 | 1 | 5 | 6 | 2 | 4 | 7 |
| 5 | 2 | 4 | 7 | 8 | 3 | 1 | 6 | 9 |
| 8 | 9 | 2 | 6 | 4 | 1 | 7 | 5 | 3 |
| 4 | 1 | 3 | 5 | 7 | 8 | 6 | 9 | 2 |
| 7 | 6 | 5 | 3 | 9 | 2 | 4 | 8 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்ப்டுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


காவியமாய் நெஞ்சின் ஓவியமாய்

# நினைவுச்சுடர் ஆண்டு (02)



## சுப்பிரமணியம் - ராஜராஜேஸ்வரி (தங்கம்) (NN) (பண்டத்தரிப்பு)

அன்னையின் மடியில்
12.11.1950

நயினை அன்னையின் அடியில்
14.07.2011

மண்ணில் நீரில்லை - அம்மா
ஈரமெல்லாம் என் கண்களுக்குள் - தாயே
இடி மின்னல் மின்னாது, மழை வந்தாற்போல
மரங்கள் அசையாமல் தென்றல் வந்ததுபோல
என்னிடம் ஒரு வார்த்தை பேசாமல் சென்றுவிட்டாயே - அம்மா
உங்களுடைய மரணம் என் மனதை அசைத்து விட்டது - தாயே
எதனை இழக்கக் கூடாதோ அதனை இழந்து விட்டேன் - அம்மா
இன்னுமென்ன இருக்கிறது இழப்பதற்கு என்னிடம்
நினைவுகளாக இருப்பதைவிட
உணர்வுகளாக இருக்க விரும்புகிறேன் - தாயே
நீங்கள் என்னை மறந்துவிடக்கூடாது என்பதற்காக

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்

என்றும் உங்கள் நினைவுடன்:
பிரதாப்குமார் (மகன் – MBA)
கங்கா (மருமகள் – MBBS)
நதிஷினா (குட்டித்தங்கம் – பேர்த்தி) U.K.

(30790) (2.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



மு/ முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த **அன்ரனி கிளேற்றஸ் வினோசன் குருஸ்** தேசிய மட்டத்திலான பசுமை கருத்திட்டப் போட்டியில் கலந்து தேசிய மட்டத்திலான திறமை விருதைப் பெற்று பாடசாலைக்கு நன்மதிப்பையும் பெருமையையும் பெற்றுத் தந்துள்ளார். அவருடைய திறமை மேன்மேலும் வளர பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

Best Wishes

**முல்லைத்தீவு.** (30873)(3.6.11) **பாடசாலைச் சமூகம்.**

## ஆண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

# மலேசியா

மலேசியாவில் உள்ள பிரபல்யமான நிறுவனத்தில்

**GENERAL WORKERS (Cleaners)**

**மாதாந்த சம்பளம் RM 900**

**இலங்கைப் பெறுமதிக்கு ருபா. 37,000**

- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- தங்குமிடவசதி (Accommodation) - இலவசம்
- ஒப்பந்த முடிவில் இலவச விமான டிக்கட் (Air Ticket)
- 3 வருட கால ஒப்பந்தம் (3 Years Contract)

8 மணிநேர வேலை + Over Time

வாரத்தில் 6 நாள்கள் வேலை

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம்

Labour Licence No. 2598

**Asma Enterprise Travels & Tours**

111-1/1, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.

(சி/10336) Tel : 011-3091521 Hotline : 077-3179592

## 3D Glass

உங்கள் கணினிகளிலும் 3D அனுபவத்தைப் பெற்றிட Red Blue 3D glasses+ 3D Movies only 999/= "Special prize for whole sale"

தொடர்பு: 075 210 1998 (30856)(3.6.11)

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள குடும்பம் கனடா PR, 1978, விசாகம், கொம்பியூட்டர் இன்ஜினியர், 1981 ரோகிணி, 7 செ, கி.மீ 60, வங்கியில் கடமை புரியும் (அமெரிக்கா) சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: 077 147 9416 (35296)(3.6.11)

## காணி விற்பனைக்கு

கஸ்தூரியார் வீதியில் (இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்னால்) 1¼ பரப்புக் காணி சுற்று மதிலுடனும் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு: 021 373 4376 (30866)(3.6.11)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் (பழைய ஸ்ரேசன் றோட்டில், மெடிக்கல் பக்கல்ரிக்கு அருகில்) நிலப்பரப்பு 6 குளி 13.33 விஸ்தீரணம் கொண்ட காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 210 0797, 021 320 9540

siva23@hotmail.com (30872)(3.6.11)

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கிவரும் Bio Chem நிறுவனத்தின் 2ஆவது கிளை வவுனியாவில் திறக்கப்படவுள்ளது. இக் கிளையின் நிர்வாகப் பிரிவுக்கு 25 பேருக்கும் குறைந்த இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தகைமை: O/L and A/L

தங்குமிட வசதி இலவசம்

077-3745831
077-3466511
077-6795940

(30880)(10,6)

## St Antony's Computer SALE

LAPTOP HP 1000 - 48500/=
TOSHIBA C850 - 49500/=
TAP PC 7'' - 11500/=
TAP PC 10'' - 17500/=

HP FULL SET 19" LCD யுடன்

**24750/= மட்டுமே**

5 வருட உத்தரவாதம்

(15 ஆவது வருட சேவையில்)

187, K.K.S. Road, Jaffna.

021-222-4865 / 0750698608 (சி/3493)(10,6,3)



**சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் - 2013**

## இரண்டாம் திருவிழா


தினம் தினம் மனம் கனிந்துன் பதம் பணியும்
இனம் நாம் தூய தொண்டர்குழாம் என்று
இதம் தரும் இனிய இறைசேவை நாடி கரிமுகன்
தினமிது பெருந்திருவிழா இரண்டில் இன்புற்று ஏத்தவே!

ஆக்கம்: சங்கை - சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :

நிற்சாமம் ஞானவைரவர்
ஆலயபரிபாலன சபையினர்.

(சி/9756)(2-6-3)



# Yal's Town Inn

யாழ்.நகர மத்தியில் நல்ல விருந்தோம்பல் செய்யக்கூடிய குளிரூட்டப்பட்ட ஆடம்பரமான அறைகளைக் கொண்ட அழகான ஹோட்டல் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறது.

திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா போன்ற வைபவங்களுக்கும் நிறுவனங்கள் கருத்தரங்கு நடத்துவதற்கும் Hall வசதியுடன் உணவு வசதியும் உண்டு.

இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்:

(30734)(2.6.3) **Yal's Town Inn**

இல.57/48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 077 703 1300, 021 222 1700, 1 ,2

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 13 . 10 . 1948

மறைவு: 11 . 06 . 2013

திருமதி

## ஸ்ரீரஞ்ஜினி செல்வராஜா

(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

11.06.2013 அன்று இறைபதமடைந்த திருமதி. ஸ்ரீரஞ்ஜினி செல்வராஜா அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 10.07.2013 அன்று முகத்துவாரத்தில் நடைபெற்றன. அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(C/10360)(10,6)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**YAMAHA FAZER, WR - X X X X** இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: A.G.செல்வம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் 1980, நட்சத்திரம் மகம் முதலாம் கால், 7இல் செவ்வாய் கிரகபாவம் 16½, பட்டதாரி மணமகனுக்கு 1இல் 2இல் செவ்வாய் உள்ள தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 196 2054

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 3 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. மாத வாடகை ரூபா 10,000

மேலதிக தொடர்பு: 077 908 6864, 077 212 1123.

## SALES & REPAIRS

**Computers Desktop & Laptop**
**Hardware & Software**
**Home & Office Visits-in Jaffna District,**

சகல விதமான கணனிகளும் அதன் உதிரிப்பாகங்களும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**North Lead Computer & Accessories-Wholesaler**, # 328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460

## வீடுகள் வாடகைக்கு உண்டு

1. கொட்டடி சீனிவாசகம் வீதியிலுள்ள 3 அறைகளுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு விடப்படும். (தனியார் நிறுவனங்களுக்கும்)
2. இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில் கிழக்கிலுள்ள 4 அறைகளுடன் கூடிய விசால மான வீடு வாடகைக்கு விடப் படும்.

தொடர்புகளுக்கு: 0776875764 / 0771880401

(30819)(10,6,3)

## காணி விற்பனைக்குண்டு

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில், வளன்புர ஒழுங்கையில் உள்ள நிலப்பரப்பு 3 குளி 6.09 விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 055 6787 (30820)(3.6.11)

## COMBINED MATHS

**Examination Style Papers**
**For A/L 2013 and A/L 2014**
**By S. THURAIAPPAH, MSc (Ag.Eng)**

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்

தொடர்பு: 077 663 0793

## தேவை

மலேசிய நாட்டில் உற்பத்தியான மோட்டார் சைக்கிள்களை யாழ். குடா நாட்டில் விற்பனை செய்வதற்கு காட்சியறை வசதியுடன் உத்தரவாதம் கொடுக்கக் கூடியவர்கள் 7 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

754, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

077 730 7494

## யாழ் ஒடியல் கூழ் விற்பனைக்கு

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒடியல் கூழ் ஒவ்வொரு சனி, ஞாயிறுக்கிழமைகளில் நண்பகல் 12.00 மணிக்கு பெற்றுக் கொள்ளலாம்.

**500ml - 150/= மட்டுமே**

**Sunjeya Foodland** (Branch)

(சி/10454)(6.3) 713, Hospital Road, Jaffna.

T.P- 0212217070, 0776777500

## T- Shirt பிரியர்களிற்கு ஒரு நற்செய்தி

பாடசாலை கழகங்கள் மற்றும் அலுவலகங்களிற்குத் தேவையான அனைத்து வகையான **T- Shirt** வகைகளையும் எம்ரோய்டறி வேலைப்பாடுகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 077 653 7129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
சு. புஸ்பரங்கன் அவர்களின் அன்புத் தந்தை

**நாகலிங்கம் சுப்பிரமணியம்**

இப் புவிதனில் இன்புற வாழ்ந்து
இயற்றிய கருமங்கள் யாவும்
இணையற்றிருக்கையில் உம் நினைவுகள்
உறவுகள் தனை விட்டகலாது!

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், மு/ கற்சிலை மடு அ.த.க பாடசாலை, ஒட்டுசுட்டான்

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை மனோகரன்

(புதுக்கவி)

(ஆசிரியர், யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், கரணவாய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மனோகரன் (12.07.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளம்சிங்கம்-திறேஸ்மலர் தம்பதியரின் அன்பு மருமகனும், இளவரசியின் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) அன்புக் கணவரும், ரவிவர்மன், ரவிசங்கர், வனுசாந்தி, அபிமன்ன, ஆதித்யா ஆகியோரின் தந்தையும், பொன்னம்மாவின் பெறாமகனும், மகேஸ்வரன், பகீரதன், சுதர்சன், ராசசிறீ (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிளோமினா, மனோகரி, மனோரதி, மனோரஞ்சினி, மாலினி, தமிழ்ச் செல்வன், ஜீவன், ரவி, ஜீவி, ராசா ஆகியோரின் மைத்துனரும், கவிதா, குமுதா, விஜிதா ஆகியோரின் சித்தப்பாவும், உமா, தாரா, நிதர்சன், அகர்ஜன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
T.P: 0771386925

(30887)
(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மார்க்கண்டு சுவாமிகள் அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழா

பண்டத்தரிப்பு பிரான்பற்றில் இன்று ஞாயிற்றுக்கிழமை மார்க்கண்டுசுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலையின் ஆரம்ப விழா நடைபெறவுள்ளது. மார்க்கண்டு சுவாமிகள் சபையால் ஆரம்பிக்கப்படும் இந்தப் பாடசாலையின் ஆரம்ப விழா, சபைத் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் கலந்து கொள்வார். (ந)

## 3 சைக்கிள்கள் சிக்கின

வலி.தென்மேற்கு, ஜூலை 14

மூன்று சைக்கிள்களைத் திருடிய இரு இளைஞர்கள் பொலிஸார் விரித்த வலையில் வகையாக மாட்டிக் கொண்டனர். அவர்களிடமிருந்து மூன்று சைக்கிள்களையும் கைப்பற்றிய பொலிஸார் இருவரையும் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இருவரையும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ந-115)

## ஆலயத் திருப்பணி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இணுவில் தெற்கு, பாற்பண்ணை ஒழுங்கையிலுள்ள ஞானலிங்கேச்சுரர் (ஞான வைரவர்) திருக்கோயிலை விசாலிக்கும் திருப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. விசாலிக்கப்படவுள்ள இந்த ஆலயக் கட்டடத்துக்கான அத்திபாரமிடுதல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இவ்வைபவத்தில் இலங்கை மற்றும் இந்திய சைவத் தமிழ் பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். தமிழ்நாடு அறநிலையத் துறையைச் சேர்ந்தவரும் திருமுருக கிருபானந்தவாரியாரது மருமகனுமான தமிழ் மாமணி மு.பெ.சத்தியவேல்முருகனாரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் ஆசிரியை திருமதி **லலிதாதேவி மகாலிங்கம்** அவர் களின் அன்புத் துணைவர்

**விஜயரட்ணம் மகாலிங்கம்** அவர்கள்

இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்/குழு.
பழைய மாணவர் சங்கம்
யாழ் இந்து ஆரம்பப் பாடசலை.

# மரண அறிவித்தல்

## திருமதி வல்லிபுரம் தங்கமுத்து



தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும், மந்துவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் தங்கமுத்து நேற்றுமுன்தினம் (12.07.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், நாகம்மா (உ.க.பணிப்பாளர் தமிழ் மடுவலயம்), கந்தையா, கமலாம்பிகை, சிவபாக்கியம், விக்னேஸ்வரி (அசிரியை யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), உதயகுமார் (ஆஸ்திரேலியா), உதயகுமாரி (பிரதேச வைத்தியசாலை, வரணி)காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், சிவஞானசேகரம், இலட்சுமிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, மஞ்சுளா ஆகியோரின் மாமியும், செந்தூரன் (E.D.O, தனங்கிளப்பு J/299), மனோரதி, மயூரன், சுதர்சன், ஜனகராஜ், கீர்த்தனா, விதுஷன், நிவேதிகா, ஜெனார்த்தனி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சகாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கந்தசாமி (மில்மாமா)



நாவலர்மடம், நவிண்டில் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தசாமி கடந்த (10.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கணேசலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், அருள்மோகன், துஷ்யந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன், கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனும், இராஜேஸ்வரி, கனகரட்ணம், சிறிதரன், பரஞ்சோதி, இராஜேஸ்வரி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேவச்சந்திரன், சிவன், அஜிஷன், அனிக்ஷன், ஜகஜித், அக்ஷயன், ஆகேஷ் ஆகியோரின் பேரனும், செல்வமலர், யோகமலர், காலஞ்சென்ற விவேகானந்தன், அருளானந்தன் ஆகியோரின் தாய்வழி மாமனும், ராஜ்மோகன், வத்சலா, முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலர்மடம்,
நவிண்டில்,
கரவெட்டி.
T.P- 0212262427

தகவல்:
K.அருள்மோகன்
(மகன்)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாக வும், 5ஆம் வாய்க்கால், கரடிப்போக்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும், தற்போது அரியாலையில் வசித்தவருமாகிய ஆறுமுகம் கணபதிப்பிள்ளை கடந்த (11.07.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம்-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தில்லாத்தப்பிள்ளையின் அன்புக் கணவரும், பாசமலர் (கனடா), நிர்மலராணி (லண்டன்), சுந்தரராஜன் (தேசிய சேமிப்பு வங்கி-கிளிநொச்சி), செல்வராணி, சிறிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன் (கனடா), தியாகராஜா (லண்டன்), வளர்மதி (தேசிய சேமிப்பு வங்கி-பருத்தித்துறை), கலைகதிர் செல்வன்-(பிரதேச செயலகம்-நெடுந்தீவு) காந்திமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், தகிர்ஷன், விதுர்ஷன் (கனடா), பிரணவி (லண்டன்), கிரு ஷிகன், தர்சிகா, சரணிகா, வெங்கடேஸ் (கனடா), ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான முருகப்பர், வேலுப்பிள்ளை, சீதேவிப்பிள்ளை, நாகாத்தைப்பிள்ளை மற்றும் பத்தினிப்பிள்ளை (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்க ளான கற்பகம், கமலம், சிந்தாமணி மற்றும் நாகம்மா (கனடா), கந்தையா, பாலசிங்கம் (கனடா), கோபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

29/2, சுப்பிரமணிய வீதி,
அரியாலை கிழக்கு,
0776348261

(சி/10460) (10.16,14)

தகவல்:
ராசன்-மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

யாழ். புங்கங்குளம் வீதி கணக்கர் சந்திக்கு அருகில் சகல நவீன வசதிகளுடன் கூடிய விசாலமான வீடு கட்ட உகந்த காணிகள் விற்பனைக்குண்டு. புகழ் பெற்ற கட்டடக் கலைஞரின் கைவண்ணத்தில் சிறிய காணியில் அமைக்கப்பட்டு வரும் பெரிய வீட்டின் மாதிரியையும் பார்வையிடலாம்.

**விவரங்களுக்கு:**
**சிவா - 077 311 4353**
**சந்திரன் - 077 748 5091** (C/10348)(3.6.11)

இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின்

## விருத்திக்கு!

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை

**Free Gift**
**Shiv-Hanuman Pendant & Idol**



ஜூலை 20ம் திகதிக்கு முன் கொள்வனவு செய்யுங்கள்

flex அருள் WELLAWATTE
SRI LANKA 0777 614 186

மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்!
JAYA TV CAPTAIN TV MEGA TV Z தமிழ்
FLEX Graphic

## NEW ERA ACADEMY (UK) இன் பரீட்சைகள்
## இம்முறை யாழ் மண்ணில்

கடந்த கால மாணவர்களின் சிறந்த பெறுபேற்றின் அடிப்படையிலும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் இம் முறை யாழ் மண்ணில் நடத்தப்படவுள்ளது. October 2013 பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். February 2014 பரீட்சைப் பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

1. Elocution வயது 3 இல் இருந்து
   - Preparatory grade
   - Introductory grade
   - Preliminary grade
   - Transition grade
2. Grade 1 - Grade 8
3. Pre Diploma in Proficiency in Teaching English
4. Spoken English ESL

**கற்கை நிலையங்கள்:**

1. சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
2. அம்மன் வீதி, திருநெல்வேலி.
3. மாணிக்க இடைக்காடர் வீதி, இடைக்காடு, அச்சுவேலி.
4. இலகடி வீதி, கரவெட்டி.
5. விக்னஸ்வரா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**தொடர்புக்கு:**

**District Co-ordinator**
New Era Academy
Jaffna District.
0772116733

(30878) (10,6)

## VAN வாடகைக்கு

ஹைஏஸ் வான் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 373 4109 (30876) (3.6.11)

## காணி விற்பனைக்கு

யாழ் குறோசெற் வீதியில் (நாவலர் வீதியிலிருந்து 50 m தூரத்தில்) 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

**தொடர்பு:**
தொ.பே.இல. 0778355510 (30887) (10,6)

## தவறிவிட்டது

9ஆம் வட்டாரம், விடத்தல் தீவு என்னும் முகவரியைச் சேர்ந்த அ. கஜேந்திரன் என்பவரது வாகன அனுமதிப் பத்திரம், வங்கி அடகு சிட்டை மற்றும் சில ஆவணங்கள் 11.07.2013 அன்று 8.30-9.30 a.m. மன்னாரில் (Town) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்

0716792994, 0715777739, 0235682040
(சி/10464) (10,16)

## மணமகள் தேவை

1. யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த UK இல் Duty Manager 1987 அனுஷ நட்சத்திர அழகிய மணமகனுக்கு UK PR மணமகள் தேவை.
2. யாழ். இந்து கௌரவ குடும்பம், வங்கி அலுவலர் 1986, கேட்டை நட்சத்திர அழகான மண மகனுக்கு UK, Australia, France, Canada, Singapore நாடுகளில் PR மணமகள் தேவை.

**Rashmini Marriage Service,**
**No 11, 2nd Floor, 33nd Lane,**
**Colombo-06(011) 236 3440 /**
**077 767 3813/ 077 012 1682**
**rashminimarriage@yahoo.com**
(C/10356)(3.6.11)

## மணமகள் தேவை

1. யாழ் இந்து கௌரவ குடும்ப பட்டா தாரி 1979 சித்திரை 1ஆம் பாதம் சிவந்த அழகிய மணமகனுக்கு அழகிய உள் நாட்டு வெளிநாட்டு மண மகள் தேவை.
2. விஸ்வகுலம் 1984 கேட்டை நட் சத்திரம் UK இல் MSc Software Engineering படிக்கும் அழகிய மணமகனுக்கு UK, USA, Canada, Aus, Europ Countries இல் PR மணமகள் தேவை.

**Rashmini Marriage Service,**
No.11, 2nd Floor, 33rd Lane,
(011)2363440 / 0777 673813 / 0770-121682
(சி/10356) (10,16)



ஜெய்குருதேவ்
தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி
அவர்களின்

## முதுநிலை தியானப் பயிற்சி (பாகம் II)

இடம்:- கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்
காலம்:- 19.07.2013 - 22.07.2013 வரை (முழுநாள்)
உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 100 0750
077 726 82 79, 077 066 2114

## SB TRAVELS & TOURS
SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 14,300/- | LONDON | 92,500/- |
| TRICHI | 15,800/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 15,500/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,800/- | TORONTO | 139,500/- |
| BENGALURU | 23,900/- | NEW YORK | 113,500/- |
| KOCHI | 17,200/- | MELBOURNE | 104,000/- |
| DELHI | 42,500/- | PERTH | 71,800/- |
| MALAYSIA | 30,800/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,200/- | NARITA | 68,000/- |
| BANGKOK | 28,900/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 16,500/-, DUBAI -19,800/-, DOHA - 23,800/-
விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கடார், துபாய்க்கு பியுரோ அரேங்மென்ட் செய்து தரப்படும்.
E-mail: sbtravels99@yahoo.com
Hotline: 077 1083481
**No: 132 Sri Kathiresan Street, Colombo 13.**
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

## VACANCY

### Office Assistant/Coordinator in Jaffna.

We are one of the leading Air conditioning companies in Sri Lanka. For our branch in Jaffna we are looking for a young dynamic smart girl preferably with one or two years experience in NGO or any other business organization.

Age around 25 years, should be able to handle computers, knowledge of English, Tamil and communication skill are essential.

Training will be given for the selected candidate. Attractive salary plus incentive and other benefits will be offered.

Please apply within 7 days to adm.gtssl@sltnet.lk or gtsslregional@gmail.com
(சி/10342) **Contact No.0772106030**

## State Bank of India
### Branch Manager / Assistant Manager

Applications are invited from suitably qualified and experienced candidates for the following positions.

**Branch Manager - Jaffna**
Requirements:

- Should possess a minimum of 3 years' experience as a branch manager in a licensed commercial bank in Sri Lanka.
- Thorough knowledge in credit management and banking operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university.
- Candidates having professional qualifications like CBF/DBF from IBSL will be preferred.
- Should have flair for marketing and business development.

**Assistant Manager – Jaffna**
Requirements:

- Should possess a minimum of 3 years' experience as an officer in a licensed commercial bank in Sri Lanka.
- Thorough knowledge of branch operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university or equivalent professional qualifications.
- Should have flair for marketing and business development.

Selected candidates will be offered a remuneration package commensurate with qualification and experience. Candidates have to furnish in their application the full details of the present salary and expected salary for the post applied for.

Interested candidates may forward their curriculum vitae under registered post, along with photocopies of documents in support of age, qualifications and experience on or before 19th July 2013 to:

*The RH & Chief Executive Officer*
**State Bank of India**
*16, Sir Baron Jayatilake Mawatha, Colombo- 01*
*Phone: 4622 350 e mail: careers.lk@statebank.com*
*Visit us at www.sbisrilanka.net*

**Serving Sri Lanka since 1864**

Skyline

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் மருத்துவப் பரிசோதனைகள்



நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்களுக்கு டெங்குநோய் தொடர்பான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவப் பரிசோதனை நேற்று முன்தினம் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் புளியங்குளம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ச.குணசாந்தன் தலைமையில் இடம்பெற்றது. இதில் தரம் 04, 07, 10 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த 90 மாணவர்களுக்கு நெடுங்கேணி பொது வைத்தியசாலை மருத்துவர் கே.அசங்க சஞ்சீவவினால் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது மூன்று மாணவர்கள் மேலதிக மருத்துவ சிகிச்சை பெற வேண்டுமென இனங் காணப்பட்டுள்ளனர். இதில் இதயநோய் தொடர்பாக ஒரு மாணவனும், காது,மூக்கு நோய்கள் தொடர்பாக இரண்டு மாணவர்களும் இனங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-435)

# அகற்றப்பட்டன 8,214 கண்ணிகள்

## டாஸ் நிறுவனத்தால்

கிளிநொச்சி, ஜுலை 14

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் டாஸ் நிறுவனத்தால் இதுவரை 8 ஆயிரத்து 214 வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் நடைபெற்ற பகுதிகளிலும், மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை பல்வேறு நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இதில் டாஸ் நிறுவனம் ஆனையிறவு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிறுவனம் இதுவரைக்கும் சுமார் 368 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் கண்ணிவெடிகளையும், வெடிக்கும் நிலையில் காணப்பட்ட வெடிபொருள்களையும் அகற்றியுள்ளது. இவ்வாறு சுமார் 8 ஆயிரத்து 214 வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை மேலும் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீள்குடியமர்வுப் பிரதேசங்களில் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களை மீட்டெடுத்தல், வீதிப் புனரமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளை விரைவாக முன்னெடுத்தல் ஆகியவற்றை நிறைவேற்றும் நோக்குடன் குறித்த வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)



## வீதியைப் புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை

### பழைய முறிகண்டி மக்கள்

அக்கராயன், ஜுலை 14


துணுக்காய் பழைய முறிகண்டிக் கிராமத்திலிருந்து அக்கராயன் பகுதிக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பழைய முறிகண்டி கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பழைய முறிகண்டிக் கிராமத்திலிருந்து ஆரம்பிக்கும் இந்த வீதி துணுக்காய்-அக்கராயன் வீதியில் முடிவடைகின்றது. மக்களின் இடம்பெயர்வுகளுக்கு முன்னர் இந்த வீதி பயன்பாட்டில் இருந்தது. இடம்பெயர்வுக்குப் பின்னர் காடு மூடிய நிலையில் பயன்பாடு இன்றிக் காணப்படுகின்றது.

சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளத்துக்காவது இந்த வீதி புனரமைக்கப்படுமாயின் அக்கராயன் மருத்துவமனை, அக்கராயன் மகாவித்தியாலயம் என்பவற்றுக்கு இக்கிராம மக்கள், இலகுவாகச் செல்லக் கூடியதாக இருக்கும்.

மேலும் இந்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்படுமாயின் பழைய முறிகண்டிக் கிராம மக்கள் கிளிநொச்சிக்கும் இதனூடாக இலகுவாகப் பயணிக்கக் கூடியதாக இருக்குமென்பதும் குறிப்பிடத்தக்கது. (க-18)





கிளிநொச்சி புதுமுறிப்பில் இடம்பெற்ற கணித பாடச் செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்கள். (க-18)

## 'மறுவளம்' நூல் வெளியீடு

புலம்பெயர்ந்து வாழும் இலக்கியப் படைப்பாளியான கிருஷ்ண மூர்த்தியின் 'மறுவளம்' நூல் வெளியீடு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழா கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.ரஜீவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வெளியீட்டுரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் நிகழ்த்தினார். ஆய்வுரைகளை படைப்பாளியான பெ.கணே சனும், உதவிக் கல்விப் பணிப் பாளர் துசிலனும் நிக ழ்த்தினர்.

யாழ்ப்பாணம் இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இலக்கியப் படைப்பாளியான கிருஷ்ண மூர்த்தி புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் நூலை வெளியிட்டு வைக்க இலங்கை வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். (க-18)

# எமது கல்விப் பாரம்பரியத்தை கட்டியெழுப்புவோம்

## வவுனியா நகர சபை பதில் தலைவர் அறைகூவல்

வவுனியா, ஜூலை 14

விதையாய் வீழ்ந்து கிடக்கும் நாம் மலைபோன்று எழுந்து எமது கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் கட்டிஎழுப்புவோம்.

இவ்வாறு தெரிவித்தார் வவுனியா நகரசபையின் பதில் தலைவரான எம்.எம்.ரதன்.

டயலொக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்த நாம் இன்று வீழ்ந்து விட்டோம் என்பது உண்மைதான். கீழே வீழ்வது தோல்வியல்ல. எழாமல் கீழேயே கிடப்பதுதான் தோல்வி. ஏனெனில் சருகாய் நாம் விழவில்லை. விதையாய்த் தான் விழுந்தோம். எழும்போது மலை போல் எழுவோம். எழுந்து எமது கல்விப்பாரம்பரியத்தைக் கட்டி எழுப்புவோம்.

எமது இனத்தின் பாதுகாப்பு அல்லது அழிக்க முடியாத சொத்து என்பது கல்விதான். எமது இனம் யாவற்றையும் இழந்து நின்றாலும் கல்வியில் சாதனையை நிலை நாட்டி வருகின்றமை சிறப்பானதாகும். ஆயினும் தாயகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெறுபேறுகளில் சாதனை நிலைநாட்டும் மாணவர்கள் பலர் அகில இலங்கை ரீதியில் முதலிடத்துக்கு வரமுடியாத நிலையில் உள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் அகில இலங்கை ரீதியில் கல்வியில் சற்று பின் நோக்கியே நகர்ந்திருக்கின்றோம். இனிவரும் காலங்களிலாவது அகில இலங்கை ரீதியில் முதலிடத்துக்கு வரமுயற்சி செய்ய வேண்டும்.

இந்த நிறுவனம் கல்விக்காக சென்ற ஆண்டு இறுதியிலே வன்னியில் பல சேவைகளை மேற்கொண்டது. குறிப்பாக முள்ளி வாய்க்கால் மண்ணிலே காணப் பட்ட பாடசாலையை முழுமையாகப் புனரமைத்து இயங்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். இது பாராட்டத்தக்கதே. இதே போன்று எமது இனத்தின் கல்வியின் எழுச்சிக்குப் பலதரப்பட்ட சேவைகளை ஆற்ற இந்த நிறுவனம் முன்வர வேண்டும்.

1970களில் கல்வியில் தரப்படுத்தலுக்கெதிராக போராடிய தமிழ் மாணவர் சமூகம் இன்று தரப் படுத்தல் நீக்கப்படுதலுக்கெதிராக போராடவேண்டிய நிலையில் உள்ளது. இவை யாவற்றையும் கருத்தில் கொண்டு கல்வியில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று எமது இனத்துக்கும் மண்ணுக்கும் பெருமை தேடித் தாருங்கள் என அவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

(க-4)

## தீர்வு தராத நடமாடும் சேவை

புதுக்குடியிருப்பு, ஜூலை 14

புதுக்குடியிருப்பு, வள்ளுவர்புரம் பகுதியில் இடம்பெற்ற காணிப் பிரச்சினை தொடர்பான நடமாடும் சேவையால் தமக்குத் தீர்வு கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வள்ளுவர்புரம் பகுதியில் பொதுமக்களின் காணிகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் காணிகளுக்குரிய ஆவணங்களை வழங்குவதற்குமாக நடமாடும் சேவை ஒன்று கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்கள் நடாத்தப்பட்டது.

ஆனால் இந்த நடமாடும் சேவையால் தமக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரை முகாம்களுள் முடக்க என்னால் முடியாது

## கைவிரித்தார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, ஜூலை 14 இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கும் அதிகாரம் எனக்கில்லை. ஜனாதிபதிக்கே அந்த அதிகாரம் உண்டெனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் கூறினார்.

அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மதியம் தேர்தல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

வடமாகாண சபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வடபகுதியில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்க வேண்டும் என்று நாம் கோரினோம். அதற்கான அதிகாரம் தனக்கு இல்லை எனவும், ஜனாதிபதிக்கே அந்த அதிகாரங்கள் உண்டு எனவும் தேர்தல் ஆணையாளர் எம்மிடம் கூறினார்.

நீதியாகவும், நியாயமாகவும் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமாக இருந்தால் இதனைச் செய்தாக வேண்டும் என்று நாம் அவரிடம் வலியுறுத்தினோம்.

கொழும்பிலும் இராணுவத்தினர் இருக்கின்றனர் தானே, வடபகுதியில் மட்டும் தான் இராணுவத்தினர் இருப்பது போன்று நாம் கூறுகிறோம் எனத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

வட பகுதியில் குண்டுகள் வெடித்தால் யார் பொறுப்பு எனவும் தேர்தல்கள் ஆணையாளர் எம்மிடம் கேள்வியெழுப்பினார். அதற்கு நாம் கடந்த 4 வருடங்களாக வட பகுதியில் வெடிக்காத குண்டு இனி எப்படி வெடிக்கும் என்று கேட்டோம் -என் றார் சுரேஷ். (த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# ஆஸி. கடலில் கவிழ்ந்தது படகு பச்சிளம் குழந்தை பரிதாபச் சாவு

இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான் நாடுகளைச் சேர்ந்த 97 பேர் பயணம் செய்ததாக, ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் ஜாசன் கிளேர் தெரிவித்துள்ளார். பெரிய அலை ஒன்றினால் தாக்கப்பட்ட அகதிகள் படகினுள் நீர் உட்புகுந்ததால், படகு மூழ்கத் தொடங்கியது.

இதையடுத்துப் படகில் இருந்த ஒருவர், நேற்று முன்தினம் காலை 11.15 மணியளவில் மெல்பேர்னில் இருந்த ஒருவருக்குத் தமது படகு ஆபத்தில் இருக்கும் தகவலைத் தெரிவித்தார்.

அவர் ஆஸ்திரேலியப் பொலிஸாருக்கு உடனடியாக அது குறித்து அறிவித்ததையடுத்து, அவர்கள் கடற்படையினருக்குத் தெரியப்படுத்தினர். உடனடியாக அந்த இடத்துக்கு ஆஸ்திரேலியக் கடற்படைக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தேடுதலின் பின்னர் மூழ்கிக் கொண்டிருந்த படகு கண்டு பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் இரவு அதிலிருந்த 88 பேர் மீட்கப்பட்டனர்.

ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது. எனினும் 8 பேர் காணாமற்போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி நேற்றும் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இதில் எத்தனை இலங்கையர் பயணம் செய்தனர் என்ற விவரமோ, காணாமற்போனவர்கள் எந்த நாட்டவர்கள் என்ற விவரமோ இன்னமும் தெரியவரவில்லை. (த)

## திருகோணமலையில் அமெ. 'சீல்' படையணி

கடந்த 2 ஆம் திகதி திருகோணமலை டொக்யார்ட்டில் இந்தப் பயிற்சி ஆரம்பமாகியுள்ளது. 'பிளாஸ்ட் ஸ்ரைல்' கூட்டுப் பயிற்சி என்ற பெயரில் ஆண்டு தோறும் நடத்தப்படும் போரல்லாத கூட்டுப் பயிற்சித் திட்டத்தின் கீழேயே இந்தப் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இந்தப் பயிற்சிகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

கடற்படையினரின் சிறப்புப் படகு அணி, அதிவேகத் தாக்குதல் படகு அணி, சுழியோடிகள், துரித மீட்பு அணி என்பனவும் இலங்கை விமானப் படையின் எம்.ஐ-24 தாக்குதல் ஹெலி அணியும், சிறப்புப் படைப் பிரிவும் இந்தப் பயற்சியில் பங்கேற்றுள்ளன.

அமெரிக்க கடற்படையினரின் சார்பில் 'சீல்' எனப்படும் சிறப்புப் படைப் பிரிவும், சிறப்புப் படகு அணி, விமானப் படை ஆகியவற்றைச் சேர்ந்த 10 பேர் கொண்ட குழுவும் இந்தப் பயிற்சியில் பங்கேற்றுள்ளன.

போரப் பயிற்சி அல்லாத இந்தப் பயிற்சி போரில் காயமுற்றவர்களை தந்திரோபாயமாக கவனித்தல், நீரில் வேகமாக மீட்புப் பணியில் ஈடுபடுதல், ஹெலி மூலம் மீட்புப் பணிகளை மேற்கொள்ளல் என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது. (த-5)

## தேர்தல் விதிகளை ஜனாதிபதியே மீறுகிறார்

தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கான தேர்தல் பிரகடனம் வெளியிடப்பட்டு, வேட்பு மனுக்கள் கோரப்பட்ட பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் வைத்து நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கி உள்ளார்.

போர் காரணமாக உயிரிழந்த, காயமடைந்த மற்றும் சொத்துக்களை இழந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கினார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அரச நன்கொடை வழங்கல், உதவிகள் வழங்கல் என்பன தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்குச் சுட்டிக் காட்டியது. இதனையடுத்து தேர்தல் விதிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (த-5)

கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கியில் பணிபுரியும் சுந்தரராஜன் அவர்களுடைய அன்புத் தந்தை

ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

அமரத்துவம் எய்தியதைக் கேள்வியுற்று மனம் வருந்துகின்றோம். அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிர்வோர்.
கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கி, முகாமையாளரும் பணியாளர்களும்.

## வெற்றிலையில் டக்ளஸ்

ஜெயந்த தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் தொடர்பில் அறிவிப்புகள் வெளியாவதற்கு முன்னர், ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டியிடுவதா, இணைந்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் பல கலந் துரையாடல்களை நடத்தியிருந்தது. தற்போது வடமாகாண சபைக்கான தேர் தல் அறிவிப்பு வெளியாகி யுள்ள நிலையில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியில் போட்டியிடுவதற்கு இரண்டு தமிழ் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சிறிரெலோ ஆகியனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட்டியிட இணங்கியுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார். (த-5)

கண்ணீர் அஞ்சலி

எமது சக வைத்தியர் கிளமென்ரினா அவர்களின் தந்தை
அமரர் வஸ்தியாம் பிள்ளை சிறில்
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்.
(30834) (10,16,14)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15.10.1926
உதிர்வு 05.07.2011
அமரர் கந்தையா சதாசிவம்
திதி- ஷஷ்டி

போற்றுமுவர் புண்ணியனார் சதாசிவப் பெருமகனார்
புவி நீத்து பொன்னுலகப் புகழ் வாழ்வில் ஈராண்டு
காற்றினில் கலந்தாடும் நினைவலைகள் கானம்பாட
கைலாய நாதனுடன் களித்திருந்து நமக்கு
போற்றுமுவர் வாழ்வினோடு புகழும் மாண்பும்
பூத்தலாம் வாழ்வில் வசந்தம் தழுவிட
ஏற்றுமுலர் எங்கள் குலத்தலைவனாய் ஏற்றமுற்று
இன்று நீலம் நீத்த ஈராண்டு நாளை நினைவோமே

No.15, ராஜசிங்க றோட்,
வெள்ளவத்தை.
0112364662

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(30913)(10,16,14)

விற்பனை / வாடகை

கொக்குவில் மேற்கு பிரதேசத்தில் 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டாக பிரித்தும் கொடுக்கப்படும். கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0777111716 (30907) (10,16,14)

கடைகள்

A9 வீதி, கிளிநொச்சி நகரில் 1ஆம் மாடியில் அமைந்துள்ள கடைகள் வாடகைக்கு உண்டு.
அறைகள் அல்லது களஞ்சியசாலைக்கு பயன்படுத்தக்கூடிய இடம் A9 வீதி கிளிநொச்சியில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0773500082, 0212285789

New Lovers Corner
164, Ramanathan Road, Jaffna.
T.P: 021 221 9499
அழகானவர்களின் அழகுக்கு அழகு சேர்க்கவும் சிறந்த தெரிவிற்கும் அன்பளிப்புப் பொருட்களுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்



மும்பாய், சைனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகுசாதனப் பொருட்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஆடித்தள்ளுபடியை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன்
அதிரடி மலிவு விற்பனை
17ம் திகதி முதல் 31ம் திகதி வரை



இல.164, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிதபால்கள் பொதிகள் DHL சேவை திருமுருகன் கொம் நெற்

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள் CD, VCDகள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
11 kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில்.

விசேட சலுகை!
10–30 வீதம் வரையான விலைக்கழிவு!!
31.07.2013 வரை மட்டுமே



திருமுருகன் கொம் நெற் … சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.
… யாழ்ப்பாணம். - 021 222 7835
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
EXPRESS TCN Express இல. 28, நெல்சன் பிலேஸ், கொழும்பு- 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகம் எதிர் விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.
பி.ப.4.30 மணி
அராலி செனிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டைகலையொளி விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 14
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பிரிவு 'பி'
இரவு 7 மணி
கைதடி நவசக்தி விளையாட்டுக் கழகம் எதிர் மட்டுவில் விநாயகர் விளையாட்டுக் கழகம்.
பிரிவு 'ஏ'
இரவு 7.30 மணி
கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகம். (ற-23)



★★★

பருத்தித்துறை, ஜூலை 34
பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
மு.ப. 9 மணி
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் எதிர் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம்
யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி கலைமகள் விளையாட்டுக் கழகம்.
திருநாவலூர் விளையாட்டுக் கழகம் எதிர் உபய கதிர்காமம் விளையாட்டுக் கழகம். (ற-34)

### 'பருத்தி நகரின் பெரும் சமர்'

# வெற்றி வாகை சூடியது பருத்தித்துறை ஐக்கியம்



பருத்தித்துறை, ஜூலை 14
'உதயன்' ஊடக அனுசரணையுடன் அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட 'பருத்தி நகரின் பெரும் சமர்' கிரிக்கெட் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நேற்று சனிக்கிழமை தும்பளை கணக்கிலாவத்தை மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி துடுப்பாட்டத்தை முதலில் தெரிவு செய்தது.

ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். எனினும் நாவலர் விளையாட்டுக் கழகத்தின் துல்லியமான பந்துவீச்சில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஓட்டவேகம் குறைவாகவே இருந்தது.

18.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த ஐக்கிய விளையாட்டுக் கழக அணியினர் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கிருபா 19 ஓட்டங்களையும், கரிகரன், சதீஸ் ஆகியோர் தலா 14 ஓட்டங்களையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.

நாவலர் விளையாட்டுக் கழகம் சார்பாகப் பந்துவீசிய, அயந்தன் 5 இலக்குகளையும், டினோ 2 இலக்குகளையும், சஞ்சீவன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

78 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நாவலர் விளையாட்டுக் கழக அணி, வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முயன்று இலக்குகளை இழக்கத் தொடங்கியது.

ஐக்கிய விளையாட்டுக் கழக அணியின் துல்லியமான பந்துவீச்சால், 17.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்த தும்பளை நாவலர் விளையாட்டுக் கழக அணி 67 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியைத் தழுவினர்.

சகலதுறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் சார்பாக வினோதன், காண்டீபன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களையும் தருணேஸ் 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

ஐக்கிய விளையாட்டுக் கழகம் சார்பாகப் பந்துவீசிய பிரசாந் 3 இலக்குகளையும், யசி 2 இலக்குகளையும், சதீஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டத்தின் நாயகனாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரசாந் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரனாக அதே அணியைச் சேர்ந்த சதீஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த பந்துவீச்சாளராக தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அயந்தன் தெரிவாகினார்.

இந்த வெற்றியின் மூலம் அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இரண்டாவது தடவை தம்வசமாக்கியுள்ளது.

நிகழ்வுகளின் போது பருத்தித்துறைதுடுப்பாட்டத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வணிகபீட முன்னாள் பீடாதிபதி (யாழ். பல்கலை) மா.நடராஜசுந்தரத்துக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ற-34)

## விளையாட்டு போட்டிகளின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 14
அரியாலை சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை காசிப்பிள்ளை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆண்களுக்கான 10 கிலோமீற்றர் வீதியோட்டப் போட்டியும், 2 மணிக்கு வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நுணாவில் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் அரியாலை சனசமூக நிலையத்தின் இல்லங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட இறுதியாட்டம் இடம்பெறும். தொடர்ந்து 4 மணிக்கு வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் இடம்பெறவுள்ளன. அதில் தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 7 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்:

'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டத்தில் பன்னாலை கணேஷா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

அதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

'பி' பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

அதில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 14
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்:

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சில்வெஸ்ரார் 'பி' அணிக்கும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அராலி திருமகள் விளையாட்டுக் கழகத்துக்கும் சில்



வெஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் சில்வெஸ்ரார் 'ஏ' அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் அராலி செனிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி செனிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அராலி பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றுக்கொண்டமையால், வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

### நெடியகாடு இ.வி.க. உதைபந்துத் தொடர்

## ஞானமுருகன் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 14
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில், ஆட்டநேரமுடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. அதையடுத்து வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக தலா 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் 1:0 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ற-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹோக்லி முன்னேற்றம்



சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஒருநாள் ஆட்டத்துக்கான தரவரிசைப்பட்டியலில் இந்திய வீரர் கோஹ்லி 3ஆவது இடத்தையும், அணித்தலைவர் டோனி 6வது இடத்தையும் பெற்றுள்ளனர்.
மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற முத்தரப்பு போட்டியில் இந்தியா வென்றுள்ள நிலையில் நேற்று கிரிக்கெட் வீரர்களின் சர்வதேச தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.
முதல் 10 இடங்களில் கோஹ்லி, டோனி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். கோஹ்லி 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். டோனி 6ஆவது இடத்துக்கு இறங்கியுள்ளார்.
துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்காவின் டிவிலியர்ஸ் முதலிடத்தில் இருக்கிறார்.
முத்தரப்புத் தொடரில் அசத்தலாகப் பந்துவீசி 10 இலக்குகளைக் கைப்பற்றிய இந்தியாவின் புவனேஷ்குமார், 20ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறார்.
பந்து வீச்சாளர்களில் முதல் இடத்தை சுனில் நரைன் பெற்றுள்ளார். 2ஆவது இடத்தை சயீத் அஜ்மலும், 3ஆவது இடத்தை ஸ்டீவன் பின்னும் பிடித்துள்ளனர். (ற)



இயன் பெல்

## இங்கிலாந்து முன்னிலை

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஆஷஷ் தொடரில் மூன்றாம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி முன்னிலையைப் பெற்றுள்ளது.
மூன்றாம் நாள் ஆட்டத்தில் ஸ்ருவேர்ட் ப்ரோட், இயன் பெல் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.
2 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, மூன்றாம் நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.
மூன்றாம் நாளில் இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 6 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களுடன் தடுமாற்றியது. எனினும் ஸ்ருவேர்ட் ப்ரோட், இயன் பெல் இருவரும் 7ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத 108 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்தை முன்னணிக்குக் கொண்டு சென்றனர்.
இன்னமும் 4 இலக்குகள் கைவசமுள்ள நிலையில், இங்கிலாந்து அணி 261 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.
துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 64 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 50 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், மற் பிரயர் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க், அஸ்ரன் ஏகர் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஜேம்ஸ் பற்றின்சன், பீற்றர் சிடில் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 215 ஓட்டங்களையும், ஆஸ்திரேலிய அணி 280 ஓட்டங்களையும் பெற்றுள்ளன. (ற)

## ‘கிரிக்கெட் நுணுக்கங்கள் எனக்கு அத்துப்படி’

### டோனி கூறுகின்றார்

கிரிக்கெட் நுணுக்கங்கள் அத்துப்படியானது எனக்குக் கிடைத்த வரம் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணித் தலைவர் டோனி.
இந்தியா, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் மோதிய முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டி மேற்கிந்திய தீவுகளில் உள்ள போர்ட் ஆப் ஸ்பெயினில் நடைபெற்றது.




அதில் முதலில் களமிறங்கிய இலங்கை அணி 48.5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி 202 ஓட்டங்களைபெற்றால்வெற்றிஎன்ற நிலையில் களம் இறங்கியது.
இறுதிவரை போராடிய இந்திய அணி 49.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று தொடரின் சம்பியன் ஆனது.
இந்திய அணித்தலைவர் டோனி தனித்து நின்று போராடி வெற்றியை உறுதி செய்தார். அவர் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களை பெற்றார். இது குறித்து டோனி கூறுகையில்,
''கிரிக்கெட் நுணுக்கங்கள் அத்துபடியானது எனக்கு கிடைத்த வரம் என்று நினைக்கிறேன். கடைசிப் பந்துப்பரிமாற்றத்தில் என்னால் 15 ஓட்டங்கள் எடுக்க முடியும் என்பதை அறிந்திருந்தேன். அந்த நம்பிக்கை பலித்தது மகிழ்ச்சி அளிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார். (ற)

## மேற்சட்டை அணிந்து ஆட்டத்துக்கு வாருங்கள்





கால்பந்து இரசிகர்கள் போட்டிகளைக் காண மேற்சட்டை அணிந்து வர வேண்டும் என்று பிரேஸிலில் உள்ள புகழ்பெற்ற மரக்கானா உதைபந்தாட்ட மைதான நிர்வாகம் கட்டுப்பாடு விதித்துள்ளது.
பிரேஸில் நாட்டின் புகழ்பெற்ற மரக்கானா கால்பந்து மைதானம் புதுப்பிக்கப்பட்டு சென்ற மாதம் திறக்கப்பட்டது. பிரசித்தி பெற்ற இந்த மைதானத்தின் கலாசார பண்பாட்டைத் தொடரும்விதமாக, ரசிகர்களுக்கான புதிய விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.
தென் அமெரிக்காவின் பெரிய மைதானமாகக் கருதப்படும் இங்கு விளையாடுவதற்கு உள்நாட்டு உதைபந்து அணியான ''ப்ளுமிநென்ஸ்'' 35 வருட கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன்போதே இந்த நடத்தை விதிமுறைகள் பற்றி மைதானத்தின் நிர்வாகம் அறிவித்தல் விடுத்துள்ளது.
தென் அமெரிக்காவின் கடும் வெயில் காரணமாக இங்கு வரும் ரசிகர்கள் பொதுவாக மேலே சட்டையின்றி காணப்படுவர். அவர்கள் போட்டியின் போது நின்றுகொண்டும், கூச்சலிட்டுக் கொண்டும், எப்போதாவது எதிர் அணி ரசிகர்களுடன் சண்டையிட்டுக் கொண்டும் இருப்பார்கள். அதனால் இங்கு வரும் ரசிகர்கள் சட்டை அணிந்துகொண்டு வரவேண்டும் என்றும், ஆட்டத்தைப் பார்க்கும் போது அமர்ந்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இசைக்கருவிகளோ, கொடிகளை ஆட்டுவதற்காக மூங்கில் குச்சிகளையோ மைதானத்திற்குள் கொண்டு வரக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.
இந்த மாதம் இறுதியில் தொடங்கவிருக்கும் போட்டிகளின்போது, மைதானத்திற்கும், ரசிகர்களுக்கும் இடையே தடுப்பு வேலி ஒன்று எழுப்பப்படும். அடுத்த வருட உலகக் கால்பந்து போட்டியை பிரேசில் நடத்தும்போது இந்த வேலி நீக்கப்படும். அப்போது உலகக் கால்பந்து சம்மேளனம் இந்த மைதானத்திற்கு பொறுப்பெடுத்துக்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இங்கு விளையாடும் அணியினரையும் தங்களின் பழக்கங்களை மாற்றிக் கொள்ளுமாறு கூறப்போவதாக இந்த மைதானத்தை நிர்வகிக்கும் கூட்டுச் சங்கங்களின் பொறுப்பாளர் ஜொவாவோ போர்பா தெரிவித்தார்.
எல்லோரும் இந்தப் பிரிவினையை விரும்பவில்லை. ரசிகர்களை விளையாட்டு அணியினரிடமிருந்து இது போல் பிரிக்கக்கூடாது. அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று பிரேசிலின் முன்னாள் கால்பந்து வீரர் பெபெட்டோ இணையதளத்தில் கருத்து தெரிவித்துள்ளார். (ற)





## அரசியலில் இறங்கும் தடகள வீரர்

எதியோப்பிய தடகள வீரர் ஹெய்லி 2015 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அந்நாட்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.
40 வயதுடைய ஹெய்லி விளையாட்டுப் போட்டிகளிலிருந்து விலகவுள்ள தருணத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. எனினும் அவர் எந்த கட்சியுடன் இணைந்து போட்டுயிடவுள்ளார் என்ற தகவல் வெளிவரவில்லை. ஹெய்லி 10 ஆயிரம் மீற்றர் தடகளப் போட்டியில் இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டில் இல. 85, (381) விகாரைக்கு அருகிலும் புகையிரத நிலைய குவாட்டஸிற்கு முன்பாகவும் 4 விசாலமான கடைகள் வாடகைக்குஉண்டு.

தொடர்பு:- 077 6786230

## Ten Wheel வாகனம் விற்பனைக்கு

NPLI-XXXX தொடர் இலக்கமுடைய வெள்ளை நிறமுடைய Container Box ஏற்றிய Ten Wheel வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0776181414 (37646)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## சைப்பிரஸில் படிக்க, உழைக்க இலவச உணவு, இருப்பிடம் இலட்ச ரூபா சம்பாத்தியம்

சட்ட ஆலோசனைக்கு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0212219016, 0215689090

# ஐ.நா. படையில் இலங்கை பெண் சிப்பாய்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையில் இணைந்து கொள்வதற்கு இலங்கையைச் சேர்ந்த 100 பெண் படையினர் காத்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். அவர்கள் அந்த சந்தர்ப்பத்துக்காகக் காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமைதி காக்கும் படையில் பெண் படையினரை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பால் நிலை சார்ந்தவன் முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்காகவே அமைதிப் படையில் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (த)

எமது சட்ட ஆலோசனையில் கனடா விசா ஆலோசனை பெற்று வெற்றி பெற்றவர்களும் தோல்வி கண்டவர்களும் நேரில் கலந்தாய்வு



## அதிரடியான முன்மாதிரியான கைங்கரியம்

இடம்:- திசைகாட்டி கேட்போர் கூடம்
காலம்:- சனிக்கிழமை 20.07.2013
நேரம்:- முன்பதிவின்போது தெரிவிக்கப்படும்
தொலைபேசி:- 021 221 9016, 021 5689090

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(30901)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* இறுதியாக இடம்பெற்ற நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தி பெற்ற தர்மகுலசிங்கம் தக்ஷலா (உரும்பிராய்) குணசிங்கம் நிரஷா (உடுப்பிட்டி) அந்தோனிப்பிள்ளை அஸ்வினி (ஆனைக்கோட்டை) ஆகியோரை எமது கல்வி நிறுவனம் சார்பில் வாழ்த்துகின்றோம்.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464

(Gov. Reg. No: W/A 76795)

## விற்பனை முகவர்கள் தேவை (Distributors)

இலங்கையில் உயர்தரமான Chicken களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் Prima Chicken நிறுவனத்துக்கு கீழ்வரும் பிரதேசங்களில் விற்பனை முகவர்கள் தேவை (Distributors) உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் வவுனியா

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தற்போது விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0777755482, 0777731494,

(C10469(10.16.14)

## CIMA~UK பெறுபேற்றில் MCS மாணவர்கள் சாதனை

PO-75%



S.Kanisdda

நேற்று வெளியான CIMA பெறுபேற்றில் MCS நிறுவன மாணவர்கள் அனைவரும் சித்தி பெற்றுள்ளனர். இதன் மூலம் **Managerial/Operational** மாணவர்களும் **100 %** சாதனை சித்தியைப்பெற்றுள்ளனர். இவ்வெற்றியினை கொண்டாடும் முகமாக இம்மாதம் 25ம் திகதிக்கு முன் பதிவு செய்யும் மாணவர்களிற்கு **CIMA_UK Reg Fee** 16000 ரூபா புலமைப்பரிசிலாக வழங்க உள்ளோம். புலமைப்பரிசிலிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உங்களது **<NAME> <CIMASC>** என **type** செய்து 772 395 895 க்கு **sms** செய்யவும். **November** பரீட்சைக்கு தோற்றும் மாணவருக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றது. மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** வளாகத்தில்.

PO-74%



T.Sanjeevan

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093

61, Kachchery-Nallur Road, Jaffna

(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிரி

G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

புலமைப்பரிசிலிற்கு:Type <BIT><your name> & send to 772 395 895

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சிவசுப்பிரமணியம்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ந.சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (12.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமையா-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மதிவதனியின் பாசமிகு கணவரும், குமரேந்திரன், காலஞ்சென்ற வாசுதேவன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அக்னஸின் அன்பு மாமனாரும், எலோமா அஸ்வினி, அஜித்குமார் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
மனைவி :- 0779672828,
மகன் :- 0718495019 (30865)

தகவல்:- குடும்பத்தினர்

## வீடு, கடை வாடகைக்கு

சிறிய குடும்பத்திற்கான வீடும், கடை ஒன்றும் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக பிறவுன் வீதியில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 2336238

## Personal Class-கணினி

* 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
* பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
* குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.

ஆசிரியர்:KRC

TP:0779672038

## சிறு நீரகம் தேவை

$B^+$ குருதிப்பிரிவுடைய 25-38 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் சிறுநீரகம் தந்துதவ விரும்பினால் எம்மைத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 5904031

38683




GCE (O/L) தகமை போதுமானது

September/ October தவணை

நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்

COLLEGES
- Yearly Payment £3500
- IELTS overall: 4.5 or B1

UNIVERSITIES
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5

011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230

Karthiga

Usha Gowry

EXPONET

379 - 1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

## Grand Opening

Aqua

14.07.2013 (SUNDAY)

On 10.45 am @ Raja Plaza, 74, Palaly Road, Kondavil East, Your Town

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக யப்பானில் இருந்து நேரடியாக உங்கள் கனவு வாகனத்தினை இறக்குமதி செய்து கொள்ளலாம்.

அரச அனுமதிப் பத்திரம் (Permit) மூலமும் வாகனம் இறக்குமதி செய்து கொள்ளலாம்.

TOYOTA HONDA NISSAN MITSUBISHI BMW Audi Mercedes-Benz

You Too Can Have A Car

**AQUA**

CAR SHOWROOM

Importers of Motor Vehicles from Japan



Hotline: 0773 169433

www.aquaholding.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

14 07 2013

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## 13

ஆம்

## முப்பரிமாணம்

கூட்டல்

கழித்தல்

ஒழித்தல்



**த**மிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரைத் தெரிவு செய்வதில் பங்காளிக் கட்சிகள் இடையே பலத்த சர்ச்சை ஏற்பட்டது. முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை வேட்பாளராக முன்னிறுத்துவதில் கருத்தொற்றுமையை ஏற்படுத்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடுமையாக முயற்சி எடுக்க வேண்டியிருந்தது. கட்சிகள் அனைத்தும் மாவைக்கு ஆதரவாக இருந்தபோதும் விக்னேஸ்வரனுக்கு உறுதியான, முழுமையான ஆதரவை வழங்கினார் சம்பந்தன். அவரது தெரிவுக்காக அயராது உழைத்த சம்பந்தன் இப்போது சர்ச்சைக்குள் சிக்கிக் கொண்டுள்ளார். இந்தப் இதன் பின்னணியில் இருந்ததா என்பதே சர்ச்சை.

# சர்ச்சைகளின் நாயகர்

இழப்புகளை நேரில் கண்டறியுங்கள்

## ஐக்கிய நாடுகள் சபையே அவதானிப்புக் குழுவை அவசரமாக அனுப்பு!

இடம்பெயர்ந்தோர் மாநாட்டில் ஏகமனதாக தீர்மானங்கள்

1985 நவம்பர்

## கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் துரிதம்

வீதியால் வந்தவர்களும் வேலை வாங்கப்படுகின்றனர்


கட்சிகளில் மட்டுமே மாற்றம் கதையிலில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டில்கள் வீழக்கூடாது

ஔண்யன்





"…. அவர்களைக் காதலிப்பது தவறேயில்லை'' என்ற அறுதியான முடிவுக்கு தமிழ்ப் பெண்கள் வருகிறார்கள். பொறிகளில் சிக்கிக் கொள்கிறார்கள். ஊரறியாக் கருக்களை சுமக்கிறார்கள். காதலித்தவன் வேறு இடத்துக்கோ தன் சொந்த ஊருக்கோ சென்றதோடு இந்தக் காதலையும் கைகழுவிச் செல்கிறான். புதிய இடத்தில் காதல் கண்ணி வைத்து இன்னொரு தமிழ்க் கன்னிக்காக அவன் காத்திருப்பான்.

கடலுக்குள் பிறப்பெடுத்து, அங்கேயே வாழ்ந்து வந்த ஆமை ஒன்று எதிர்பாராத விதமாக கரைக்கு வந்தது. மீளவும் கடலுக்குச் செல்லும் வழி அதற்குத் தெரியவில்லை. சற்று உயரமான இடத்தில் நின்று பார்த்தபோது பெரிய நீர்ப் பரப்பு ஒன்று தெரிந்தது. அதுதான் தன்னுடைய கடல் என்று நினைத்து 'தொபுக்' என்று பாய்ந்துவிட்டது. ஆனால் உண்மையில் அது கடலல்ல, குளம். குளத்து நீர் கடல் நீரைப் போல உப்புக் கரிக்கவில்லை. இது ஆமைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. கொஞ்ச நேரம் செல்லத்தான் கடல் என்று நினைத்து குளத்துக்குள் வந்துவிட்ட சங்கதி ஆமைக்குப் புரிந்தது. என்றாலும் தன்னுடைய ஆதிக்கத்தை குளத்திலும் செலுத்த வேண்டும் என்று அது நினைத்தது. ஆனால் கடலுக்கும் குளத்துக்கும் நிறைய வித்தியாசம். குளத்திலேயே பிறந்து வளர்ந்த உயிரிகளோடு ஆமையால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இதனால் எல்லோரிடமும் குளத்தைப் பற்றி குறை சொல்லத் தொடங்கியது ஆமை.

''அது எப்படி! கடலில் முழுதும் உப்புத் தண்ணியாய் இருக்கும் பொழுது குளத்தில் மட்டும் ஏன் நல்ல தண்ணீர் இருக்க வேண்டும்? இது அக்கிரமம். அநியாயம். குளத்திலும் உப்புத் தண்ணீர் இருப்பதே நியாயம். கடவுள் செய்த சதிதான் இது'' என்று காலம் முழுக்க அது புலம்பிக் கொண்டே இருந்தது. கடைசி மட்டும் குளம் உப்பாக மாறவேயில்லை.

★ ★ ★

'' புலிகள் சிங்கள சமூகத்தினரை வடக்கு, கிழக்கில் இருக்க அனுமதிக்கவில்லை. அடித்து துரத்தினார்கள். 30 வருடங்களாகச் சிங்களவர்கள் அங்கு இருக்கவில்லை. அதனால் அவர்களது எண்ணிக்கை அதிகரிக்காமல் தடை செய்யப்பட்டது. எல்லா இடமும் இருப்பது போன்று வடக்கு, கிழக்கிலும் சகஜ நிலைமை இருந்திருந்தால் அதிகளவான சிங்களவர்கள் அங்கு இருந்திருப்பார்கள். நான் யாழ்ப்பாணத்தில் இரண்டாவது லெப்டினன்ட்டாக கடமை புரிந்தபோது அதிக அளவில் அங்கு சிங்களவர்கள் வாழ்ந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் இவ்வாறு ஏராளமான சிங்கள மக்கள் இருந்தனர். இப்போது எங்கே அவர்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது?

புலிகள் அவர்களை விரட்டி விட்டார்கள். அவர்களது எண்ணிக்கை குறைந்தது மட்டுமன்றி மீண்டும் அவர்கள் வரவேயில்லை. இது எந்தளவு நியாயம்? உதாரணமாக திருகோணமலையை எடுத்துக் கொள்ளுங்கள். 80ஆம் ஆண்டுக்கு முன்னர் திருகோணமலையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது அங்கு சிங்கள மக்கள் சிறுபான்மையினராக இருக்கின்றனர். இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது? விடுதலைப் புலிகளின் தந்திரத்தினால்தான் இந்நிலைமை ஏற்பட்டது. போர் மட்டும் ஏற்படவில்லை என்றால் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் 78 வீதமாக இருக்கும் பெரும்பான்மை சமூகத்தினர் வடக்கிலும் கிழக்கிலும் 78 வீதமாகவே இருந்திருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு வடக்கு, கிழக்கு நிலபரப்பில் தமிழர்கள் மட்டும் 98 வீதமாக இருப்பது என்ன நியாயம்?''- நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் புலம்பல்.

★ ★ ★

போர் முடிந்துவிட்டதாக அரசு தெரிவித்து நான்கு வருடங்கள் கடந்து விட்டது. எனினும் உண்மையில் தமிழர்களுக்கு எதிரான போர் வேறு வடிவங்களில் தொடரவே செய்கின்றது. பேரினம் தன் மனதில் வடித்துள்ள திட்டத்தை முழுமையாக நிறைவேற்றும் வரை இந்தக் கண்ணுக்குத் தெரியாத போர் நீளத்தான் போகிறது. எல்லா இடங்களிலும் இருப்பதைப் போன்று தமிழர் தாயகத்திலும் சிங்கள மக்களே பெரும்பான்மையினராக இருக்க வேண்டும் என்பதே மஹிந்த வாதிகளின் கனவு. இந்தக் கனவைத் தான் அட்சரம் பிசகாமல் தன்னுடைய ஒவ்வொரு நேர்காணல்களிலும் ஒப்புவித்து வருகிறார் பாதுகாப்புச் செயலர். அவரின் கனவுகளின் படியேதான் காரியங்களும் நடந்தேறுகின்றன. வன்னியில் வேக வேகமாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ராணுவக் குடியிருப்புக்கள், தமிழர் வாழ்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள், வடக்கு கிழக்கு கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் தென்னிலங்கை மீனவர்கள், நாங்களே பூர்வீகக் குடிகள் என்று நாவற்குழிக்கு வந்து சேர்ந்த தென்னிலங்கைவாசிகள் என்று எல்லாம் கோத்தபாயவின் கனவுகளில் இருந்து தெறித்த நனவுலக விம்பங்களே.

எப்படியேனும் தமிழர்களின் குடிசனப் பரம்பலில் வீழ்ச்சியை உண்டு பண்ணி அதே வீழ்ச்சியில் தமது இனத்தின் காலூன்றலுக்காக பயன்படுத்த பேரினம் காத்திருந்து காரியமாற்றுகின்றது. இதற்காக வெளிப்படையாக குடியேற்றங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் அரசு, அதை விடவும் வேகமாக கண்ணுக்கு புலனாகாத இன்னொரு வழிமூலமும் இனச் சுத்திகரிப்பில் இறங்கியுள்ளது.

★ ★ ★

முல்லைத்தீவு விழாக்கோலம் பூண்டிருந்தது. ஜனாதிபதி வருகை தந்தால் எவ்வாறு அந்த இடம் பரபரப்பாகவும் அலங்காரமாகவும் இருக்குமோ அதைவிடவும் அன்றைக்கு முல்லைத்தீவு அதிக பரபரப்போடு தன்னை அலங்கரித்துக் கொண்டது. மேள தாளங்களும், படை வீரர்களும் வரிசை கட்டிக் கொண்டு வாழ்த்துக்கூற அந்தப் படைச் சிப்பாய் மணமகளின் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான். எங்கும் பூமாரி. ஊடக புகைப்படக் கருவிகளின் இயங்குதலில் 'பளிச் பளிச்' என செயற்கை மின்னல்கள் நீண்ட நேரமாக அங்கேயே மையம் கொண்டன. அடுத்த நாள் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களில் எல்லாம் இந்தத் திருமணத்தைப் பற்றியே பேச்சாக இருந்தது.

''முல்லைத்தீவுத் தமிழ்ப் பெட்டையை ஆமிக்காரன் ஒருத்தன் கலியாணம் செய்திருக்கிறானாம்''. காட்டுத் தீயை விடவும் இந்தச் செய்தி நம்மவரிடையே வேகமாகப் பரவியது. நிறைய வாதப்பிரதிவாதங்கள். என்றாலும் அவற்றின் மையமாக ''ஆமிக்காரனும் நல்லவன் தான். காதலிச்ச பெட்டையை கட்டிப்போட்டானே'' என்ற பாராட்டுப் பத்திரம் முதன்மை பெற்றிருந்தது. எதை அதிகாரம் எதிர்பார்த்ததோ அது நன்றாகவே நடந்து முடிந்தது.

★ ★ ★

போர்க் காலங்களில் படைகளும் மக்களும் அதிகம் நெருங்குவதில்லை. எப்போதும் கந்தகப் புகையின் சூடு தணியாமல் இருக்கும் துப்பாக்கிகள் படைகளின் மீதான பயத்தை இன்னும் அதிகமாக்கி தூரப் போகச் செய்தன. புலிகள் பற்றிய பயம் கனவிலும் படைகளுக்கு இருந்ததால் அவர்களுக்கு கன்னிகளைப் பற்றிக் கனவுகாண நேரம் இருக்கவில்லை. கன்னிகள் அவர்களுக்கெல்லாம் அப்போது வெடிகளாகத் தெரிந்தார்கள். ஆனால் முடிந்து போன போர் இவை எல்லாவற்றுக்குமான புதிய வாசல்களைத் திறந்து விட்டிருக்கிறது. இதற்கு அதிகாரத்தின் உயர் முனையும் பச்சைக்கொடி காட்ட, ஒவ்வொரு காவலரணும் இப்போது புதிய பாதையில் பயணிக்கின்றன. தமிழ்ப் பெண்களை நோக்கி வசியம் கொண்ட புன்னகைகள் பச்சை உடைகளிலிருந்து பறந்து போயின. அவசர அவசரமாக

''உங்கட பேர் என்ன?''

''உங்கட போன் நம்பர் என்ன?''

''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?'' என்பன போன்ற தமிழ்ச் சொற்களைப் பலர் கற்றுக்கொள்கிறார்கள். அதிகாரம், சுடுகலன் மீதான பயம், ஏற்கனவே படைகளால் உண்டான அழிவுகளால் மனதில் உள்ள பயம் என்பன நீங்க பருவ வயதின் உணர்வுகள் தமிழ்ப் பெண்கள் சிலரின் மனங்களும் மாறத் தொடங்கின.

''பச்சை உடைகளைக் காதலிப்பதொன்றும் தண்டனைக்குரிய காரியமன்று. மாறாக அது வசந்த வாசலின் திறவுகோல்தான். அவர்களைக் காதலிப்போர் கைவிடப்படார். கலியாணம் கட்டி வைக்கப் படுவார்கள். உலகே இந்த இனக் கலப்பு திருமணம் பற்றி ஆச்சரியப்படும். எல்லா வசதிகளோடும் வாழ்க்கை கிடைப்பதோடு வரலாற்றின் பக்கங்களிலும் இடம் கிடைக்கும்'' என்ற விளம்பரப் படுத்தல்களுக்கே அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடந்தேறும் திருமணங்கள் உலகறிய வைக்கப் படுகின்றன.

இத்தகைய விளம்பரங்களை நம்பி '' … அவர்களைக் காதலிப்பது தவறேயில்லை'' என்ற அறுதியான முடிவுக்கு தமிழ்ப் பெண்கள் வருகிறார்கள். பொறிகளில் சிக்கிக் கொள்கிறார்கள். ஊரறியாக் கருக்களை சுமக்கிறார்கள். காதலித்தவன் வேறு இடத்துக்கோ தன் சொந்த ஊருக்கோ சென்றதோ[டு] இந்தக் காதலையும் கைகழுவிச் செல்கிறான். புதிய இடத்தில் காதல் கண்ணி வைத்து இன்னொரு தமிழ்க் கன்னிக்காக அவன் காத்திருக்கையில் அப்பாவித் தமிழ்ப் பெண் வயிற்றில் சுமக்கும் கருவால் ஊர் முன் தலைகுனிந்தோ அல்லது நைலோன் கயிற்றில் தொங்கியோ தன் காதலுக்கு முடிவுதேடிக் கொள்கிறாள்.

தூய தமிழ் இனம் என்ற ஒன்று இருக்கவே கூடாது என்பதற்காகவே திட்டமிட்ட காய் நகர்த்தல்களாக இவை இருக்கலாம். அதற்கான விளம்பரப்படுத்தல்களும், இடைவிடாத காதல் படையெடுப்பும் தமிழ்ப் பெண்களின் மனதை சலனப்படுத்தி பொறிகளுக்குள் வீழ்த்திவிடவே செய்கின்றன. ஏமாந்த பெண்கள் பற்றிய ஏராளமான கதைகளுக்கு இரும்புத் திரையிடப்பட்ட போதும் அதையும் மீறி சில கதைகள் உடைப்பெடுக்கவே செய்கின்றன. அண்மையில் கூட காதலித்துக் கைவிட்ட சிப்பாயைத் தேடி அலைந்த யாழ்ப்பாணத்து யுவதி ஒருத்தி நஞ்சருந்திய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளாள். இவளைப் போல இலவுகாத்த கிளிகளாக மாறிய ஏராளமான பெண்கள் தாங்கள் ஏமாந்த கதைகளை சமூகத்தின் காறித்துப்பல்களுக்கு அஞ்சி தமக்குள்ளேயே புதைத்தபடி அழுகிறார்கள். கவனம்! விலகி நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். விட்டில்கள் வெளிச்சம் என்று நம்பி விளக்கில் விழுந்து வெந்து மடிவது இனியும் தொடராது இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியத்தைப் பாதுகாக்க இந்தியா விரும்பும்.

# அசாதாரண குறிப்புகள்

இலங்கையில் உத்தியோக மொழி சிங்களம். தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக இருக்கும்.


இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான பாரம்பரிய நட்புறவைப் பலப்படுத்துவது, அதிகரிப்பது, வளர்ப்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் -இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அவசித்தையும் இலங்கையில் வாழும் இன மக்களின் பாதுகாப்பு, நலன், செழிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும்– இத்திகதி (29.07.1987) இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்கின்றோம். (இந்திய– இலங்கை ஒப்பந்தம்)

ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தேர்தல் நடைமுறைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல இன வாக்காளர்களும் சுதந்திரமாகப் பூரணமாகப் பங்கு பற்றுவதை இலங்கை அரசு உறுதிப்படுத்தும். இது சம்பந்தமாக இலங்கை அரசுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

மாகாணங்கள் ஒரு நிர்வாக அமைப்பாக உருவாவதை இலங்கை அரசு முன்மொழியும் அதே நேரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தமட்டில் பிரிந்து செல்ல சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கீழ்க் கூறப்பட்டபடி ஏற்றுக்கொள்கிறது.
வடக்கு– கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கும். அதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இருக்கும். அந்த அமைப்புக்கு ஒரு கவர்னர் (ஆளுநர்), ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவை இருக்கும்.

பொது மன்னிப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ள அரசியல் கைதிகள் மற்றும் கைதிகளுக்கும் பொது மன்னிப்பை ஜனாதிபதி வழங்குவார். நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள் அனைவரும் இப்பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் அடங்குவர். தேசியப் பெரு வாழ்வின் போராளி இளைஞர்களை இணைத்துக் கொள்ளத் தேவையான மறுவாழ்வு வேலைகளுக்கு இலங்கை அரசு விசேட முயற்சிகளை எடுக்கும். இதற்கு இந்தியா உதவும்.

ஜெரா




வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் சரித்திர காலந் தொட்டும் வாழ்ந்து வருகின்றனர்; அவர்கள் இது காலவரை ஏனைய இனப் பிரிவுகளுடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அங்கீகரிப்பது –

இன வன்செயல்களினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இடம் பெயர்ந்தோர் இந்த (வடக்கு– கிழக்கு இணைப்பு) சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமையுடையவர்கள். அவர்கள் பழைய இடங்களுக்குத் திரும்புவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.
சர்வஜன வாக்கெடுப்பைக் கண்காணிக்க பிரதம நீதியரசர் தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்படும். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இலங்கை அரசுப் பிரதிநிதி, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஆகியோர் குழுவில் இருப்பர்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய இன மக்கள் வாழும் பல்லின, பல மொழி பேசும் நாடாக இலங்கையை ஏற்றுக்கொள்வது.

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டைப் பலப்படுத்துவதையும், இலங்கை பல இன, பல மொழி, பல சமய மக்கள் வாழும் நாடு என்பதைப் பாதுகாப்பதையும், இலங்கை மக்கள் பாதுகாப்பு இறைமை, சமத்துவம் ஆகியவற்றுடன் தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து வாழ வேண்டும் என்பதையும் ஊக்குவிக்கும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல இன மக்களும் பத்திரமாகவும் உயிர்பாதுகாப்புடனும் இருப்பதை உறுதிப்படுத்துவதில் இந்திய, இலங்கை அரசாங்கங்கள் ஒத்துழைக்கும்.


ஒவ்வொரு இனப் பிரிவும் தனித்துவமான கலாசார மொழியைக் கொண்டுள்ளது; அவற்றைக் கவனமாக வளர்க்க வேண்டும் என்பதை அங்கீகரிப்பது –

இந்தக் குறிப்புக்களை சாதாரணமானவை என்று குறிப்பட முடியாது. அதனால்தான் அசாதாரணமானவை என்று எழுத வேண்டியாயிற்று. அந்தளவுக்கு இலங்கையின் இன நல்லிணக்கம் சார்ந்த விடயங்களில் பெருந்தூணாக இவைகள் இருக்கின்றன. இங்கு அசாராண குறிப்புக்களாக இணைக்கப்பட்டுள்ளவை இலங்கையில் இன நல்லிணக்கம் ஏற்படவும், ஈழத் தமிழர்கள் சுபீட்சமான வாழ்வை பெறவும், இந்தியாவின் பிரசன்னம் தொடர்ந்தும் இலங்கை மீது இருக்கவும் அவசியமானவை. அதனால்தான் அந்தச் சட்டத்சீர்திருத்தத்தையே நீக்கும் அல்லது நீர்த்துப்போகச் செய்யும் முனைப்புகள் சிங்கள அரசியல் வானில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.
தமிழரின் விடுதலைப் போராட்டம் சோகமான முடிவை எட்டிய பின்னர் இலங்கைக்கு தமிழர்களும், இந்தியாவும் வேண்டப்படாதவர்களாயினர். வேண்டப்படாத இரு பிரிவினரும் பணம் காய்க்கும் அல்லது சுரக்கும் பொருள்களாக மட்டுமே இலங்கையின் அரசியல், நோக்கு நிலையில் வைத்துப் பார்க்கப்படுகின்றது. ஆகவேதான் இருவர் நலன்சார்ந்ததுமான '13' ஆம் சட்ட சீர்திருத்தம் இறுதிக் காலத்தை எட்டியிருக்கின்றது.
பொதுவாக, இலங்கை அரச தரப்பும், அவர்களின் நிழலில் இயங்கும் இனவாத சக்திகளும் ஒரு முடிவை எடுத்தார்களாயின் அதில் வெற்றி பெறாமல் கீழிறங்கியதில்லை. அவர்களின் இராஜதந்திர, அரசியல் சாணாக்கிய பலத்தின் மீதான எல்லா கணிப்புக்களையும், கவனிப்புக்களையும் வெட்டியாடுவதில் அவர்களை மிஞ்ச யாருமில்லை. உலகளவில் மிகச் சிறிய இனமாக இருந்து கொண்டு, உலகத்தையே தம் கட்டுக்குள் வைத்திருக்கும் ராஜதந்திரப் வலு சிங்களவர்களுக்குரியது. எவ்வளவு பெரிய வல்லரசச் சாத்தானாக இருந்தாலும் தம் காலடிக்கு கொண்டுவரும் மாயவரம் பெற்றவர்களாக சிங்கள மன்னர்களும், ஜனநாயகச் சாயம் பூசிக்கொண்ட சர்வ[illegible] ஆட்சியாளர்களும் இருக்கின்றனர். அந்த வழிவந்தவர்கள் இப்போது எடுத்திருக்கின்ற முடிவு '13' ஆம் சீர்திருத்தத்துக்கு ஏதாவது ஒன்று செய்தல். அதாவது அதனை நீக்குதல் அல்லது நீர்த்துப் போகச் செய்தல் என்பதாகும். அதில் வெற்றி பெறப்போவதும் அவர்கள்தான்.
அதில் அவர்கள் வெற்றி பெற்றால் இங்கு குறிப்படப்பட்டிருக்கும் அடிப்படையான அசாதாரண குறிப்புக்களை தமிழர்களும், இந்தியாவும் இழக்க நேரிடும். தமிழர்களுக்கு இருக்கின்ற மொழியுரிமை உள்ளிட்ட அடிப்படையான அரசியல் உரிமைகளை இழக்கின்ற அதேவேளை, இந்தியாவுக்கு இருக்கின்ற பாதுகாப்பு நலன்சார்ந்த முக்கிய வாய்ப்புகளையும் இழக்கவேண்டியேற்படும்.
போர் ஓய்ந்த பின்னர் இந்த இரண்டு தரப்புக்களுமே இலங்கையை பொறுத்தவரையில் செல்லாக்காசுதான். எனவே அவர்களின் நலனில், பாதுகாப்பில் அக்கறை காட்டவேண்டியதேவையோ, பதில் சொல்லவேண்டிய கட்டாயமோ இலங்கைக்கு இல்லை. இந்தியாவை மீறிப்போனால் நேரடி இராணுவத் தலையீடு ஏற்படும், நீண்ட கால பகையாளியாக உபகண்ட வல்லரசினிடத்தில் மாறவேண்டி வரும் என்ற வெருட்டல் எல்லாம் இலங்கையினிடத்தில் செல்லுபடியாகாது. இந்திய குழு, பாதுகாப்புத்துறையின் ஆலோசனைக் குழு, வருவதும்,இங்கிருந்து ஒரு தொகுதியினரை அழைத்து பேசுவதும், இருதரப்புக்கும் கவலையளிக்கிறது, வலியுத்துகின்றோம் என அறிக்கை விடுவதும்தான் இப்போதைக்கு நடக்கவிருக்கும் அரசியல் பம்மாத்துக்கள். ஆனால் இலங்கை மிகத் தெளிவாக இருக்கின்றது. இலங்கையை மட்டுமாவது தூய பௌத்த சிங்கள நாடாக்குவது என்ற கொள்கையின் கீழ் மிகத் தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றது. அதற்காக இனி அவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியமுமில்லை. உரிய முறையில் இதுபோன்ற சட்டதிருத்தங்களை நீக்கினாலே இலங்கை தனி பௌத்த சிங்கள நாடாகிவிடும். அதன் முதற்படி '13' நீக்கம் அல்லது நீர்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம்: 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை

■ ரெங்கன்



# வடகொரிய சீற்றம் வெறும் புஸ்வாணம்

## பொருளாதார நெருக்கடியால் தணிகிறது கோபம்

வடகொரியா சில மாதங்களுக்கு முன் எடுத்த எடுப்பும், விடுத்த அறிக்கைகளும் வெறும் புஸ்வாணங்கள் என்பதாக உலகம் இப்போது எடைபோடத் தொடங்கியுள்ளது.
அணுகுண்டு பரிசோதனைகளையும் தொலைதூர ஏவுகணைப் பரிசோதனைகளையும் ஐ.நா.வின் கடும் எதிர்ப்புக்களைப் புறக்கணித்துவிட்டு நடத்திய துணிவில் அண்டை நாடுகளையும் அமெரிக்காவையும் கடுந்தொனியில் அந்நாடு அச்சுறுத்தி வந்தது. அமெரிக்காவின் முக்கிய பகுதிகளைத் தாக்கும் அளவுக்கு தன்னிடம் ஏவுகணைகள் இருப்பதாகவும், சில வேளைகளில் அறிக்கைகளை விடுத்துக்கொண்டிருந்தது. கொரிய கடல் பிராந்தியம் பெரும் போர்க்களமாக மாறி சிலவேளை அது பெரும் அணு ஆயுதப் போராகவும் மாறலாம் என்று அநேகர் அச்சம் கொண்டிருந்தார்கள்.
வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா.வும் அமெரிக்காவும் நடைமுறைப் படுத்தியுள்ள பொருளாதாரத் தடைகளும், கொரிய கடல் பிரதேசத்தில் அமெரிக்கா தென்கொரியாவுடன் இணைந்து நடத்திய போர் ஒத்திகைகளும் வடகொரியாவை ஆத்திரம் கொள்ளச் செய்திருந்தன.
இந்த நிலைமையில் இரண்டு கொரியாக்களும் எல்லைப்பகுதியில் ஒருமித்து நடத்திவரும் தொழில் பேட்டையை ஒருதலைப்பட்சமாக மூடி விடுவதற்கும் வடகொரியா நடவடிக்கை எடுத்தது. அந்த தொழில் பேட்டையில் பணிபுரிந்த ஏராளமான பணியாளர்கள் இரு தரப்பிலும் வேலை இழந்து நாடு திரும்பினர். தொழில் பேட்டையில் வர்த்தக மற்றும் உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழில் முனைவோரும் நாடு திரும்பினர்.
இந்த நெருக்கடிகளுக்கிடையில் கொரிய கடல் பகுதியில் அமெரிக்கா பிரமாண்டமானதோர் போர்ப் பயிற்சியை தென்கொரியாவுடன் இணைந்து நடத்தியிருந்தது. இந்தப் பயிற்சியில் அமெரிக்காவின் மிகப் பெரிய விமானம்தாங்கிக் கப்பல் ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அந்தக் கப்பலில் அணு குண்டுகளைச் சுமந்து சென்று எதிரிகளின் நிலைகள் மீது வீசிவிட்டுத் திரும்பக்கூடிய ஏராளமான விமாணங்களும் இடம்பெற்றிருந்தன.

### பொருளாதார பாதிப்பு

உண்மையில் வடகொரியா அறிவித்திருந்தமை போன்று பெரும் போரொன்றை அதனால் வெற்றிகரமாக நடத்தி முடிக்க முடியாது என்று நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருந்தார்கள் என்பது ஒருபுறமிருக்க , ஏற்கனவே ஸ்திரமற்று காணப்படும் அதன் பொருளாதாரமும் அமெரிக்காவும், ஐ.நா.வும் விதித்துள்ள தடைகளால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது என்பது தெளிவு. இவை மட்டுமன்றி வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடான சீனாவும் அதன் நிலைப்பாட்டை அங்கீகரிக்கவில்லை. வடகொரியா தன் போக்கை மாற்றிக் கொள்ளும்படி சீனாவும் மறைமுகமாக அறிவுறுத்தியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகின்றது.
இந்த நிலையில் தான் தென்கொரியாவுடன் தொழில் பேட்டையை மீண்டும் திறப்பது பற்றி பேச்சு நடத்த வடகொரியா கோடி காட்டியது. இதன் பிரகாரம் நடைபெற்றுள்ள இருதரப்புப் பேச்சுக்களில் கடந்த சில மாதங்களாக இருதரப்புக்குமிடையில் நிலவி வந்த கெடுபிடிகளைக் குறைத்துக் கொண்டு எல்லைப் பகுதியில் மூடப்பட்டுக் கிடக்கும் தொழில் பேட்டை வலயத்தை மீண்டும் திறந்து இயங்க வைப்பதற்கு இரு தரப்பும் இணங்கியிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இந்த ஏற்பாட்டினால் மீண்டும் இருதரப்புக்குமிடையில் நல்லிணக்கம் ஏற்படுவது சாத்தியமாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### தொழில் பேட்டை திறக்க சம்மதம்

உலக நடப்புகள் ஒரு பார்வை

இருதரப்புக்குமிடையில் தொடர்ந்து 15 மணி நேரம் இடம்பெற்ற கடும் கருத்துப் பரிமாறல்களுக்குப்பிறகு வடகொரிய எல்லையிலுள்ள கீசொங் என்ற இடத்தில் மூடப்பட்டுள்ள தென்கொரிய நிறுவனங்களை சரியான சமயம் வரும்போது திறப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூட்டறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.
கீசொங் நகரில் உள்ள வட-தென் கொரிய தொழில் நிறுவனங்கள் அவை செயற்படுத்துவதற்கு ஆயத்தமாகும் சமயத்தில் இயங்க அனுமதிப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த செயற்பாடு குறித்து மீண்டும் இரு தரப்பும் சந்தித்து கலந்துரையாடுவதென்று தீர்மானிக்கப்பட்டதுடன், இந்தத் தொழில் பேட்டை வடகொரியா ஒரு தலைப் பட்சமாக இனிமேல் மூடிவிட முடிவெடுக்கக்கூடாது என்ற வகையில் வாக்குறுதி வழங்கப்பட [illegible]டும் என்று தென்கொரியா [illegible]துள்ள கோரிக்கை குறித்தும் அச்சமயத்தில் ஆலோசிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தென்கொரியாவின் இந்தக் கோரிக்கையை வடகொரியா ஏற்றுக் கொள்வது கடினமாக இருக்கும் என்று அவதானிகள் கருதுகிறார்கள். காரணம் தொழில் பேட்டை மூடப்பட்டமைக்கான காரணம் தானே என்பதை வடகொரியா ஒப்புக்கொண்டதாக அமைந்து விடும் என்ற அச்சமாகும்.
இந்தத் தொழில் பேட்டை 2004 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்தத் தொழில்பேட்டை எல்லையிலிருந்து ஆறு மைல் தொலைவில் இருக்கின்றது. இரு நாடுகளுக்குமிடையில் ஒத்துழைப்புக்கான அறிகுறியாக இது விளங்கும் என்று கருதப்பட்டது.
ஆனால்தெற்குபகைமைப் போக்கை கைக்கொள்வதாகக் கூறி வடகொரியா அங்கு 123 சியோல் நிறுவனங்களில் பணிபுரிந்து வந்த 53,000வடகொரிய பணியாளர்களை ஏப்ரல் மாதத்தில் திருப்பி அழைத்துக் கொண்டது. அதன் விளைவாக தென்கொரியாவின் சுமார் 120 நிறுவனங்களின் மேலாளர்கள் மே மாதத்தில் திருப்பி அழைக்கப்பட வேண்டியவர்களானார்கள்.
கடந்த ஞாயிறு கூட்டறிக்கையில் கையெழுத்திட்டதன் பின்னர் கருத்து வெளியிட்ட தென்கொரிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் சுஹ்ஹோ தொழில் பேட்டையை மீளவும் இயக்கச் செய்வதில் வடகொரிய பிரதிநிதிகள் மிகவும் ஆர்வம் காட்டினார்கள் என்று கூறினார். வளங்கள் குறைவாகவுள்ள கம்யூனிஸ் நாடான வடகொரியாவுக்கு இந்த தொழில் பேட்டையில் இருந்து நிறையவும் பெறுமதி மிக்க வெளிநாட்டுப் பணம் வந்து சேர்வதாக கருதப்படுகிறது. [illegible] தொழில் பேட்டை [illegible] இரு தரப்புமே உரிமை கோரியிருக்கவில்லை. அது தற்காலிகமாகவே மூடப்பட்டிருப்பதாகக் கூறிக்கொண்ட போதிலும் ஒன்றை ஒன்று குற்றஞ்சாட்டி வந்துள்ளன.
கீசொங் தொழில் பேட்டை மீண்டும் திறக்கப்படவிருப்பதை தென்கொரிய தொழில் முனைவோர் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். அங்குள்ள 123 நிறுவனங்களின் பிரதிநிதி கூறுகையில்; தகவல் கிடைத்தவுடன் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டேன் என்றார். ஆனால் வேறு சிலர் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமையால் கொள்வனவு செய்பவர்களை மீண்டும் வரவழைப்பது கஷ்டமாகவிருக்கும் என்றனர்.

### எகிப்தில் விரைவில் பொதுத் தேர்தல்

எகிப்தில் புதிய தற்காலிக அதிபராக நியமனம் பெற்றுள்ள அட்லிமன்சூர் விரைவில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளார்.
கடந்த திங்கட்கிழமை கெய்ரோவுக்கு அருகில் நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது பெரும்பாலும் அதிபர் மோர்சியின் ஆதரவாளர்கள் 51 பேர் கொல்லப்பட்டதையடுத்து இந்த அறிவித்தல் வந்துள்ளது.
கடந்த வாரம் இராணுவம் ஆட்சியைப் பொறுப்பேற்றதையடுத்து மோர்சியின் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு நடத்திய பெரும் எடுப்பிலான ஆர்ப்பாட்டங்களின் போது மக்களை கிளர்ந்து எழுமாறு அறைகூவல் விடுக்கப்பட்டது.
கெய்ரோவில் திங்களன்று நடைபெற்ற தொழுகையின்போது தமது ஆதரவாளர்கள் பொலிஸாராலும் , இராணுவத்தினாலும் பெரும் எண்ணிக்கையில் நசுக்கிக் கொல்லப்பட்டனர் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

### கவுண்டனாமோ கைதிகளின் விமோசனம் ஒபாமா கையில்

கவுண்டனாமோ சிறையில் உண்ணாவிரதம் இருந்து வரும் பயங்கரவாத சந்தேகக்காரர்களான கைதிகள் பலவந்தமாக உணவூட்டப்படும் விடயத்தில் தலையிட்டு இந்தச் சர்ச்சைக்குரிய விடயத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரும்படி அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவை நீதிபதி ஒருவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். கவுண்டனாமோ சிறைக் கைதி ஒருவர் தாம் பலவந்தமாக உணவூட்டப்படுவதை நிறுத்த உத்தரவிடும்படி தொடர்ந்திருந்த வழக்கில் தம்மால் அவ்வாறு உத்தரவிடுவது சாத்தியமில்லையென்று தெரிவித்துள்ள நீதிபதி இந்த விடயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஏதும் செய்ய முடியுமா என்று பார்க்கும்படி அமெரிக்க அதிபர்ஒபாமாவைகேட்டுக்கொண்டார்.
கவுண்டனாமோ சிறையில் 120 கைதிகளில் உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில் 44 பேர் வரை பலவந்தமாக உணவூட்டப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.
அமெரிக்க மாவட்ட நீதிபதிகளில் ஒருவரான களடிஸ் கெஸ்லெர் என்பவர் தமது தீர்ப்பில் கூறும் போது, கவுண்டனாமோ சிறைத் தடுப்பு தொடர்பாக தாம் தலையீடு செய்வதை காங்கிரஸ் சபை நிறைவேற்றியுள்ள சட்டங்கள் தடுக்கின்றன. சட்ட அதிகாரம் இல்லையென்ற வகையில் இந்த கைதியின் கோரிக்கையை நான் நிராகரித்து விட முடியும் என்றாலும் இந்த விடயத்தில் தலையிட்டு தீர்மானம் எடுக்கக்கூடிய ஒருவர் இருக்கிறார் என்றார். மே 23 ஆம் திகதி அதிபர் ஒபாமா நிகழ்த்தியிருந்த ஒரு உரையை நினைவுறுத்திய நீதிபதி இதுதானா எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்லவிருக்கும் அமெரிக்கா, எமது நீதியின்பாற்பட்ட உணர்வு அதனை விட பலம் வாய்ந்தது என்று ஒபாமா கூறியிருந்ததை சுட்டிக்காட்டினார். அமெரிக்க படைகள் அனைத்துக்குமே பிரதம கட்டளைத் தளபதி என்ற வகையில் அதிபரால் இதில் தலையிட முடியும் என்றார் நீதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரஆஷாத்



# பௌத்தமத சமூகத்தை அதிர வைத்த புத்தகயா

அண்மையில் இந்தியாவின் பீகார் மாநிலத்திலுள்ள புத்தகயாவில் இடம்பெற்ற தொடர்குண்டு வெடிப்புக்கள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன் இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாகவும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தியத் தூதரிடம் இது தொடர்பாக அறிக்கை கோருமளவுக்கு இந்தச் சம்பவம் இலங்கையையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

புத்தபெருமான் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் போதி மரம் அமைந்துள்ள இந்த வளாகத்தில் ஐம்பத்தியொரு நாடுகளின் விகாரைகளும் மடாலயங்களும் உள்ளது அவ்வளவு தூரம் இந்த வளாகம் பௌத்த சமூகத்துக்கான ஒரு சர்வதேச மையமாகத் திகழ்ந்து வருகிறது. வருடந்தோறும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பௌத்த மக்களும் உல்லாசப் பயணிகளும் அங்கு சென்று வருவதால் இந்தியாவுக்கு அந்நியச் செலவாணியை கொடுப்பதிலும் இவ்விடம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது.

இப்படியான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் அமைந்துள்ள நேபாள நாட்டின் விகாரையில் 4 குண்டுகளும் திபெத் நாட்டு விகாரைக்கு அருகில் நான்கு குண்டுகளும் வளாகத்துக்கு வெளியே முகப்பில் அமைந்துள்ள 90 அடி உயரப் புத்தர் சிலையின் பின்புறமாக ஒரு குண்டும் என 9 குண்டுகள் வெடித்துள்ளன. இந்த அனர்த்தத்தின்போது நேபாளம், திபெத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்குவும் ஒரு யாத்திரீகரும் படுகாயமடைந்துள்ளனர். விகாரைகளுக்கோ மடாலயங்களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மூன்றாவது நாளே வளாகம் மீண்டும் யாத்திரிகர்களுக்காகத் திறந்து விடப்பட்டது.

அந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவும் பீகார் மாநில காவல்துறையும் பல முனைகளிலும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளன. சில ஊடகங்கள் கைது செய்யப்பட்டவர் இந்திர முஹாஜரதீன் அமைப்பைச் சேர்ந்தவர் என்ற ஊகங்கள் வெளியிட்டுள்ள போதும் இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவமானது இலங்கை அரசும் கடும் போக்குச் சிங்கள பௌத்த அமைப்புகளும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமற் செய்ய அல்லது பலவீனப்படுத்த எடுத்து வரும் முயற்சிகளுக்கும் எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டது என ஒரு சிங்கள பௌத்த கடும் போக்கு அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. அதுமட்டுமன்றி இலங்கை அரசு அநுராத புரத்திலுள்ள புனித வெள்ளரசு மரத்துக்கும் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

நாய்க்கு எங்கு அடி விழுந்தாலும் நாய் காலையே தூக்கிக் கொண்டு ஓடும். சிங்கள பௌத்த இன வெறியர்களுக்கும் இந்த நாய்களின் குணம் உண்டு. அதாவது உலகின் எந்தப் பகுதியில் எந்தவொரு சம்பவம் நடந்தாலும் அதை அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கத் தவறுவதில்லை. குண்டுச் சட்டிக்குள் குதிரையோடி சிங்கள மக்களை இனவெறியர்களாகத் தக்க வைக்கும் இவர்களின் சின்னத்தனமான முயற்சிகள் பற்றி உலகம் அக்கறைப்படப் போவதில்லை.

தொடர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்களின் அடிப்படையில் நோக்கும்போது இந்தத் தாக்குதலுக்கான காரணங்கள் தொடர்பாக இரு கேள்விகள் எழுகின்றன. அதாவது இந்திய அரசுக்கெதிராக முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளால் இந்தியாவின் மும்பை உட்படப் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக அல்லது இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளின் பௌத்த மத வெறியர்களால் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடிய வன்முறைகளுக்குக் கொடுக்கப்பட்ட பதிலடியா என்பதுதான் இது.

இந்தியாவில் காஷ்மீர் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் அடிப்படையில் காஷ்மீர் விடுதலை முன்னணி போன்ற அமைப்புகளால் பல வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றைப் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளே நடத்துவதாக இந்தியா குற்றம் சாட்டி வந்தது. எனினும் இந்தத் தாக்குதல்கள் காஷ்மீர் எல்லைக்குள்ளேயே இடம்பெற்றன. பின்பு அயோத்தியில் அமைந்திருந்த பாபர் மசூதி இந்துத்துவ மதவெறியர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அதையடுத்து நாடு பரந்த அளவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இந்தச் சம்பவத்தின் பின்பு ஹைதராபத், இந்திய நாடாளுமன்றம், மும்பை என இந்தியாவின் பல பகுதிகளிலும் குண்டு வெடிப்புகளும் துப்பாக்கிச் சமர்களும் மேற்கொள்ளப்பட்டன. இவை முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளாக லக்சர்ன தொய்பா, முஹாஜரதீன் போன்ற அமைப்புகளாலேயே நடத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இந்தத் தாக்குதல்களின் போது வெளிநாட்டவர்கள் உட்படப் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

புத்தகயாவில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலும் ஏற்கனவே இந்தியாவில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்களின் தொடர்ச்சி இந்திய அரசுக்கு எதிரான ஒரு தாக்குதலோ எனக் கருதவும் இடமுண்டு.

மியன்மாரில் முஸ்லிம் வர்த்தக ஆதிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் பௌத்த வெறியர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் அண்மைக் காலமாக 'விராது' என்ற புத்த பிக்குவின் தலைமையில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இதனால் பல பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டன. பலநூறு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் வீதிகளில் நிர்வாணமாக விரட்டப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் குடும்பங்கள் தங்கள் உறவுகளையும் சொத்துக்களை இழந்து பங்களாதேஷ் நாட்டுக்கு இடம்பெயர்ந்தனர். மியன்மார் அரசு இந்த வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதோ பௌத்த மதவெறியர் மேல் நடவடிக்கை எடுப்பதோ கிடையாது. இது மியன்மாரில் உள்ள நிலைமை.

இலங்கையில் இதுவரை சிங்கள பௌத்த வெறியர்களான பொது பலசேனா, சிங்கள ராவய, ஜாதிக ஹெல உறுமய, இராவணா அமைப்பு போன்ற அரச அனுசரணை பெற்ற அமைப்புகளால் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

ஞாயிறு காரம்

அநுராதபுரத்திலிருந்த 500 ஆண்டுகள் பழைமைவாய்ந்த முஸ்லிம் தர்க்கா இடிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து இதுவரை பதினாறு பள்ளிவாசல்கள் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டன. கிராண்ட் பாஸ், தெஹிவளை ஆகிய இடங்களில் அமைந்திருந்த பள்ளிவாசல்கள் மூடப்பட்டன. முஸ்லிம்களின் புனித நூலான குர் ஆன் வீதியில் தூக்கி வீசப்பட்டன. மசூதியில் பலவந்தமாக உட்புகுந்த பிக்குகள் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை விரட்டி விட்டு பிரித் ஓதினார்கள். முஸ்லிம்களின் ஹலால் சான்றிதழ் முறை தடுத்து நிறுத்தப்பட்டது. தற்சமயம் இறைச்சிக்காக மாடு வெட்டுவதற்கு எதிராகவும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. சீன தேசத்தில் கூட அடிக்கடி முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

இப்படியான மியன்மார், இலங்கை, சீனா ஆகிய நாடுகளில் முஸ்லிம்கள் மேல் நடத்தப்படும் கொடிய வன்முறைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவும் எச்சரிக்கை செய்யும் விதமாகவும் புத்தகயாவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இந்த இரு காரணங்களில் ஒன்றாகவோ அல்லது இரண்டுமாகவோ அல்லது இவற்றை விட வேறானதாகவோ கூட இந்தத் தாக்குதல் அமையக் கூடும். எனினும் பல நாடுகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளின் எதிர்விளைவே இந்தத் தாக்குதல் என்பதை நாம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

மதமும் மதம் தொடர்பாக கோட்பாடுகளும் மனித குல ஆன்மிக ஈடேற்றத்துக்கெனவே வகுக்கப்பட்டன. எல்லா மதங்களுமே அன்பு, கருணை, மனிதப் பண்பு, அகிம்சை என்பவற்றையே போதிக்கின்றன. பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையே ஒரு முக்கிய வழிமுறையாகப் போதிக்கின்றன. இந்தக் கோட்பாடுகளைச் சரியான முறையில் நெறிப்படுத்தி வழிநடத்தவே மதங்கள் நிறுவனமயப் படுத்தப்பட்டன. இந்துமதம் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட போதிலும் அதன் நிலப்பிரபுத்துவ, சாதீயத் தன்மை காரணமாக முதலாளித்துவ வளர்ச்சியில் அந்த நிறுவனமயம் பலவீனப்படுத்தப்பட்டு விட்டது. ஆனால் பௌத்த மதம் விகாரைகளைச் சுற்றியும் கிறிஸ்தவ மதம் தேவாலயங்களைச் சுற்றியும் முஸ்லிம் மதம் பள்ளிவாசல்களைச் சுற்றியும் நிறுவனமயப்படுத்தப்பட்டு கட்டுக்கோப்பான முறையைக் கொண்டுள்ளன. ஆனால் மதப்பற்று என்பது மதவெறியாகச் சில சக்திகளால் திட்டமிட்டு மாற்றப்படும்போது இதே கட்டுக்கோப்பு மதக் கோட்பாடுகளுக்கு விரோதமாகப் பயன்படும் அபாயம் ஏற்படுகிறது. மியன்மார் இலங்கை போன்ற நாடுகளில் புனிதமான பௌத்த மதத்துக்கு இந்த நிலையே ஏற்பட்டு விட்டது.

கௌதம புத்தர் புத்தகயாவில் உள்ள போதிமரத்தின் கீழேயே ஞானம் பெற்றார் எனக் கூறப்படுகிறது. அந்த ஞானத்தின் அடிப்படையில் அவர் அன்பையும் கருணையையும் மனித நேயத்தையும் மக்களிடம் கொண்டு சென்றார்.

தனது போதனைகளை நிலை நிறுத்த துறவிகளை உருவாக்கி சங்கம் அமைத்தார்.

இன்று அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டிய துறவிகளில் பலர் அதற்கு நேர்விரோதமான பாதையில் இறங்கிவிட்டனர். மதவெறியர்களாகவும் கொலை வெறியர்களாகவும் மாறிவிட்டனர். தனிப்பட்ட முறையில்கூட மது அருந்துபவர்களாகவும் பாலியல் வன்புணர்வாளர்களாகவும் தன்னிச்சைக் கோரிக்கையாளர்களாகவும் பேராசை பிடித்தவர்களாகவும் காணப்படுகின்றனர். அதாவது தீவிரவாதிகள் போதி மர வளாகத்தில் குண்டை வெடிக்க வைக்கின்றனர். ஆனால் சில பௌத்த மதவெறி அமைப்புகளோ போதி மரத்தடியில் பெற்ற ஞானத்தையே தூக்கி எறிந்துவிட்டு மூன்றாம் தர மஞ்சள் அங்கிப் பயங்கரவாதிகளாக மாறிவிட்டனர். அந்தக் கொடூரத்தின் எதிர்விளைவே புத்தகாயாக் குண்டு வெடிப்பு என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## தேசிய இனங்களும் நாடுகளும்



பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



1 1945ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் நாடு ஆகியவை ஜெர்மன் நாட்டைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. சோவியத் நாட்டுக்கு அளிக்கப்பட்ட பகுதி கிழக்கு ஜெர்மனியென அழைக்கப்பட்டது. மற்ற மூன்று நாடுகளின் கைவசம் இருந்த பகுதிகள் இணைக்கப்பட்டு மேற்கு ஜெர்மனி என அழைக்கப்பட்டன. 1989ஆம் ஆண்டு மேற்கு-கிழக்கு ஜெர்மனிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஜெர்மன் குடியரசு உருவானது.

1971ஆம் ஆண்டு ஏழு எமிரேட்டுகள் இணைந்து ஐக்கிய அரசு எமிரேட்கள் உருவானது.

1945 ஆம் ஆண்டு ஜப்பானியர் வசம் இருந்த கொரியா நேச நாடுகள் வசம் வந்தது. அமெரிக்காவும் சோவியத் நாடும் கொரியாவைத் தமக்குள் பிரித்துக் கொண்டன. வடகொரியா கம்யூனிஸ்ட் நாடானது. தென்கொரியா அமெரிக்க ஆதரவு நாடானது. 1950ஆம் ஆண்டு இரண்டு கொரியாக்களும் தம்முள் மோதிக் கொண்டன. அது வல்லரசுகளின் மோதலாக மாறி மூன்றாம் உலகப் போர் மூண்டுவிடுமோ என்ற அச்சத்தை எழுப்பியது ஐ.நா. பேரவை தலையீட்டின் பேரில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. 2000ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளையும் இணைப்பதற்கான பேச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1960ஆம் ஆண்டில் இத்தாலிய ஆதிக்கத்தில் இருந்த சோமாலியா பகுதிகளும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த சோமாலியா பகுதிகளும் இணைந்து சோமாலிய குடியரசு உருவானது.

மேலே கண்ட நாடுகளில் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களே வாழ்ந்தனர். பல காரணங்களால் செயற்கையாகப் பிரிக்கப்பட்டனர். எனவே மீண்டும் அவர்கள் இணைந்து ஒரே நாடாக உருவெடுக்க முடிந்தது.

### இணைந்து பின் பிரிந்த நாடுகள்

வரலாற்றுக் கட்டாயத்தாலும், போரின் விளைவாகவும் ஒரே தேசிய இனத்தைக் கொண்ட நாடு இரண்டாகவோ அதற்கு மேலாகவோ பிரிக்கப்பட்டாலும் தேசிய இன உணர்வு மேலோங்குவதன் காரணமாக மீண்டும் இணைவது உண்டு. வரலாற்று நெருக்கடி, வலிமை வாய்ந்த பேரினத்தின் ஆக்கிரமிப்பு போன்ற பல காரணங்களினால் பல்வேறு தேசிய இனங்கள் ஒன்று கூடி அமைத்த கூட்டாட்சிகள் காலப்போக்கில் சிதறியுள்ளன.

கூட்டாட்சியைக் குறிக்க ஆங்கி » z v Å Federation என்ற சொல் வழங்கப்படுகிறது. இது Foedus என்ற இலத்தீன் சொல்லின் அடிப்படையில் எழுந்ததாகும். இச்சொல்லிற்கு உடன்படிக்கை என்று பொருள். பல நாடுகள் தம்மிடையே உடன்பட்டு இணைவதே கூட்டாட்சி முறை எனப்படுகிறது.

கூட்டாட்சி முறையில் பலவகை உண்டு.

தனித்தனியான சுதந்திர நாடுகள் தம்முள் இணைந்து கூட்டாட்சியை அமைத்துக் கொள்வது,

சுயாட்சித் தன்மை வாய்ந்த பலகுதிகளைக் கொண்ட நாட்டில் அப்பகுதிகள் தம்முள் இணைந்து கூட்டாட்சி அமைத்துக் கொள்வது என்பன அதில் சில.

கூட்டாட்சியில் இணைந்துள்ள எந்தத் தேசிய இனமாவது தங்களின் தனித்தன்மையும் சுதந்திரமும் பாதிப்புக்கு உள்ளாகிறது என்ற உணர்வுக்கு ஆட்படுமேயானால் கூட்டாட்சியிலிருந்து அமைதியான முறையிலோ அல்லது போராட்டம் நடத்தியோ பிரிந்து சென்று தனி நாட்டினை அமைத்துக் கொள்கின்றது. இந்தச் சூழ்நிலை உருவாகாமல் இயங்குவதின் மூலம்தான் கூட்டாட்சி நீடிக்க வழி ஏற்படும். சட்டத்தின் மூலம் கூட்டாட்சியை நீடிக்க முடியாது. கூட்டாட்சியில் அங்கம் வகிக்கும் அத்தனை தேசிய இனங்களுக்கும் சம உரிமை அளித்து, சமமாகப் பேணி, சிறு சச்சரவுக்குக்கூட இடம்கொடுக்காமல் இயங்குவதின் மூலம்தான் கூட்டாட்சிகள் வெற்றி பெறுகின்றன. அவ்விதம் இல்லாவிட்டால் அவை உடைந்து சிதறுகின்றன.

உலக வரலாற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட தேசிய இனங்கள் தம்முள் இணைந்து புதிய கூட்டாட்சி நாடாக உருவாகிப் பின்னர் தனித்தனியே பிரிந்து தனி நாடுகளான நிகழ்ச்சிகள் பல உண்டு.

**கிரேட் பிரிட்டன் :** 1908ஆம் ஆண்டில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாண்டு, அயர்லாந்து, பிரிட்டிஷ் தீவுகள் போன்ற 13 நாடுகள் இணைந்து கிரேட் பிரிட்டன் உருவானது.

1921 ஆம் ஆண்டு அயர்லாந்து பிரிந்து தனி நாடானது. ஆனாலும் வட அயர்லாந்து பகுதி இன்னமும் பிரிட்டனுடன் இணைந்துள்ளது. அதை அயர்லாந்துடன் இணைக்கப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

**ஸ்கொட்லாந்து :** தனக்கெனத் தனி நாடாளுமன்றமும், சுயாட்சி உரிமையும் கேட்டுப் போராடி வெற்றி பெற்றது. அதைப் போல வேல்சுப் பகுதியும் சுயாட்சி பெற்றுள்ளது.

**கொலம்பியா கூட்டாட்சி:** 1819 ஆம் ஆண்டு நியூகிரனடா, வெனிசுலா, ஈக்வேடார் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து கொலம்பியா பெருங் T mhÕm] (Greater columbia confederation) உருவானது. ஆனால் 1821 ஆம் ஆண்டு வெனிசுலா பிரிந்து தனி நாடானது. 1930 ஆம் ஆண்டு ஈக்குவடார் பிரிந்து தனி நாடானது.

**சோவியத் ஒன்றியம் :** 1917 ஆம் ஆண்டில் நடைபெற்ற அக்டோபர் புரட்சிக்குப் பிறகு 1922 ஆம் ஆண்டில் கீழ் கண்ட தேசிய இனக்குடியரசுகள் இணைந்து சோவியத் ஒன்றியம் உருவானது. அசர்பைசான், அர்மீனியா, உக்ரைன், உஸ்பெகிஸ்தான், எஸ்தோனியா, கஜாகஸ்தான், கிரிகிஸ்தான், தாஜிக்ஸ்தான், துர்க்மேனிஸ்தான், மால்டோவா, லாத்வியா, லிதுவேனியா, ஜார்ஜியா, ரஷ்யா, பெலாரஸ் (பைலோரஷ்யா).

ஆனால் 75 ஆண்டுகளுக்குப் பிறகு 1991ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியம் சிதறியது. அதில் அங்கம் வகித்த அத்தனை குடியரசுகளும் பிரிந்து தனித்தனி நாடுகளாயின.

**செக்கோஸ்லாவாக்கியா :** 1918 ஆம் ஆண்டு ஆஸ்திரியா ஹங்கேரி பேரரசிலிருந்து செக்கோஸ்லாவாக்கியா விடுதலை பெற்றது. ஆனால் 1993ஆம் ஆண்டு செக் குடியரசு, சுலேரவாக்கியா முடியரசு என இருநாடுகளாகப் பிரிந்தன.

**யூகோசுலேவியா :** 1946 ஆம் ஆண்டில் 6 குடியரசுகள் இணைந்து யூகோஸ்லாவியா குடியரசு அமைக்கப்பட்டது.

1991ஆம் ஆண்டில் சுலேவேனியா, மாசிடோனியா, குரோஷியா ஆகியவை பிரிந்தன. 1992 ஆம் ஆண்டு பொஸ்னியா சுதந்திர பிரகடனம் செய்தது.

மற்றொரு குடியரசான கொசாவோவில் வாழும் மக்களில் பெரும் பகுதியினர் அல்பேனிய இனத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஆவர். எனவே அல்பேனியாவுடன் இணைய அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் போது நேட்டோ இராணுவம் படையெடுத்துச் சென்று கொசாவோவாவை விடுவித்தது.

தற்போது செர்பியா, மோன்டனக்ரா ஆகிய குடியரசுகள் மட்டுமே யூகோஸ்லாவியாவில் உள்ளன.

**ஐக்கிய அரபுக் குடியரசு :** 1954 ஆம் ஆண்டு எகிப்து- சிரியா ஆகிய நாடுகள் இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசு உருவானது. ஆனால் 1961ஆம் ஆண்டில் சிரியா பிரிந்தது.

**மாலி - கூட்டாட்சி:** 1960 ஆம் ஆண்டு பிரெஞ்சு சூடானும், செனகலும் இணைந்து மாலி கூட்டாட்சி உருவானது. ஆனால் அதே ஆண்டில் செனகல் பிரிந்தது.


**மலேசியா :** 1963 ஆம் ஆண்டு மலேயா, சிங்கப்பூர், வடபோர்னியா, சாரவாக் ஆகியவை இணைந்து மலேசிய நாடு உருவானது. ஆனால் இரண்டே ஆண்டுகளில் 1965 ஆம் ஆண்டு சிங்கப்பூர் பிரிந்து தனிநாடானது.

(வளரும்)




> வரலாற்று நெருக்கடி, வலிமை வாய்ந்த பேரினத்தின் ஆக்கிரமிப்பு போன்ற பல காரணங்களினால் பல்வேறு தேசிய இனங்கள் ஒன்று கூடி அமைத்த கூட்டாட்சிகள் காலப்போக்கில் சிதறியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நா காக்க...

மிருசுவில் தமிழ்தாசன்

சித்திரை மாதத்து வெயில் சுள்ளென்று வாட்டிக் கொண்டிருந்தது. சே! வெயில் என்றால் அப்படி ஒரு வெயில். வீட்டின் பின்புறத்தில் சடைத்து வளர்ந்து மூதாதையர் காலத்து வேப்ப மரத்தின் கீழ் சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொள்கின்றேன். அருமையான நிழல், உடலுக்குச் சற்று ஆறுதலளிக்கக் கண்களை மெல்ல மூடியபடி....அப்பாடா! இதுவரை தகித்துக் கொண்டிருந்த வெம் மையை விரட்டி விட்டு இதமான வேப்ப மரத்துக் காற்றில் உறக்கம் அரவணைக் கத் துடித்துக் கொண்டிருந்தது. என்னை யறியாமலே விழிகளிரண்டும் சொருகிக் கொண்டு போகின்றன.

''எடக் கடவுளே! இப்பிடியே போனால் படுத்து நித்திரையாகிப் போடுவன் போலை கிடக்கு. பிறகு எல்லாம் கிழிஞ்சு போயிடும். பொன்னான சந்தர்ப்பத்தை மண்ணாக் கினால் என்ரைநோக்கம், இலட்சியம் எல்லாமே பாழ்பட்டுப் போயிடும்.''

என்னைச் சுதாகரித்துக் கொண்டு பல வந்தமாகக் கண்களைத் திறந்து கொள் கின்றேன். விட்ட இடம் மறந்து போக மீண்டும் புதிதாகச் சிந்தனைகள், தேடல்கள்... தேடல்கள்! ''எண்ணைச் சிலவுதான் ஆனால் பிள்ளை வளருற தாய்க் காணயில்லை'' பழமொழியும் மனதைத் தொட்டுப் போகின்றது. இருந் தாலும் விடுவேனா! சிந்தனை! சிந்தனை! சிந்தனையே!

''என்னப்பா உங்களுக்குப் பிடிச்ச சனியன்! விடிஞ்சால் பொழுதுபடு மட்டும் உலகத்தை மறந்து தனிமை யிலையிருந்து என்னத்தை யோசிச்சுக் கொண்டிருக்கிறயள்! அன்னம் தண்ணி யில்லாமல்...! எழும்புங்கோ! ஏற்கனவே 'லோபிறெஷர்' எண்டு டாக்குத்தர் வேறை சொல்லியிருக்கிறார். போனது போகட்டும். எழும்புங்கோ சாப்பிட!''

சொல்லியபடி சாய்வு நாற்காலியின் சட்டத் தில் மெதுவாக அமர்ந்து கொள்கின்றாள் என தருமைப் பத்தினி பத்மாவதி.

''சரி! சரி! நீர் போம்! நான் வாறன்!'' நான் சொல்லியும் அவள் விடுவதாயில்லை.

''இஞ்சை! இண்டைக்கு எங்கடை செத்த வீட்டுக்குத் தம்பு வாத்தியார் ஆக்கள்தான் சாப்பாடு கொண்டு வந்தவை. நல்ல புரி யாணிச் சோறு! பிரட்டற் கறி! குழம்பெல் லாம்... சோக்காய்க் கிடக்கு. நான் போறன்! வந்து சாப்பிடுங்கோ! மினைக்கெடாமல் வாங்கோ!''

என்ன நினைத்தாளோ, இதற்கு மேலும் என்னை வற்புறுத்தவில்லை. தகரப் படலையைத் தடாரென அடித்துச் சாத்தியபடி தனது தாய் வீட்டை நோக்கிப் போய்விட்டாள்.

அப்பாடா பெருங்காரியம்! மகிழ்ச்சியோ மகிழ்ச்சி! இப்போது எனக்கு வேண்டியது தனிமை! தனிமை! அது ஒன்றே போதும். ஆளரவமற்ற அமைதியான சூழலே எனக்குத் தேவைப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் எனது சிந்தனை வண்டியில் அந்தக் கற்பனைக் குதிரைகளைப் பூட்டி உல்லாச மாகச் சவாரி செய்யலாம். அந்த அமைதிக் குப் பங்கமாய் யாரிருந்தாலும் அவர்களே இப்போதைய பரம எதிரிகள் எனக்கு.

கடவுள் செயலால் எனது தனிமைக்குத் தீனி போடுவது போல் எனது மனைவி யும் அடிக்கடி தனது பிறந்த வீட்டுக்குப் போவதும், பிள்ளைகள் மூவரும் அங் கேயே 'காம்ப்' அடித்து இரவு பகலாகத் தங்குவதும் மிகப் பெரிய வரப்பிரசாதமாய் அமைந்து விட்டது.

போன வாரம், எனது மனைவியின் தந்தை வழிப்பாட்டி அதாவது தந்தையின் தாயானவள் செத்துப்போனார். எங்கள் வீட்டு ஒழுங்கையிலே ஐந்தாவது வீடுதான் பாட்டியினுடையது. எமது குடும்பத்து உறவுகள் அனைவரும் அங்கேயே முகாமிட்டு ஊரார் கொண்டு வரும் 'ஓசிச்' சோற்றிலே நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். நானும் அவர்களில் ஒருவனாகியிருப்பேன். இந்தப் பாழாய்ப் போன வேலையாலை...!

தனது பாட்டி இராசம்மாவை அப்பாச்சி என்றே அழைப்பாள் என் தர்மபத்தினி. அதனைப் பார்த்து என் பிள்ளைகள் உட்பட உற்றார் உறவினர், அயலவர் எல்லோருக்குமே அவர் அப்பாச்சியா கியிருந்தார். அமரர் இராசம்மா ஏன்! நானும் கூட அதே அப்பாச்சி அப்பாச்சிதான்.

அப்பாச்சி இறக்கும் போது அவருக்கு எண்பத்திரண்டு வயதென்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஆனால் அவருக்கு எழுபதுக்கு மேல் என்று கற்பூரம் அணைத்துச் சத்தியம் பண்ணினாலும் யாரும் நம்பமாட்டார்கள். மூக்குக் கண் ணாடியணியாது பத்திரிகை படிக்கும் தோரணை, எல்லா வேலைகளையும் ஓடியாடித்தானே பொறுப்பெடுத்துச் செய்யும் சுறுசுறுப்பு, மழையோ பனிக்குளிரோ வைகறையில் துயிலெழுந்து வயற்கரைப் பிள்ளையார் கோயிலில் தொடங்கி ஆலடி வைரவர் வரை வரிசையாக மூன்று கோயில்களைத் தரிசித்து நெற்றி நிறைய விபூதி சந்தன மிட்டுக் காட்சிதரும் அக்கோலம் அடடா! பார்க்கப் பதினாறு கண்கள் வேண்டும். அப்படியொரு தெய்வீகக் களை குடிகொண் டிருக்கும். ''அந்த நாளையிற் குரக்கன் புட் டென்ன! ஒடியற் புட்டென்ன! கூழென்ன! எவ்வளவு சத்தான சாப்பாடு சாப்பிட்டு வளர்ந்த உடம்பெல்லே! இந்த வயதிலை யும் கிழவி உப்பிடி உசாராயும் சுறுசுறுப் பாயுமிருக்கு.'' பக்கத்து வீட்டுப் பரமசாமி யர் பெருமையாகவோ இல்லை.. பொறாமை யாகவோ அடிக்கடி இப்படிச் சொல்லிக் கொள்வதை நானும் பல தடவைகள் கேட்டிருக்கின்றேன்.

அத்தனை திடகாத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்த அப்பாச்சிக்கு யுார் கண்பட்டதோ என்னவோ! இரண்டே இரண்டு நாள்கள் மட்டும் அடித்த காய்ச்சலில் பொசுக்கென்று போய்ச் சேர்ந்து விட்டார். அப்பாச்சி. அவரின் திடீர் மறைவு உண்மையிலேயே எல்லோருக்கும். பெருந்துயராகவே பட்டது.

''எங்கடை ஆசை அப்பாச்சியை தாத்தாதான் வந்து கூட்டிக் கொண்டு போயிற்றார்'' இது மனைவியின் தங்கை திலகவதி. ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு காலமாகிப்போன அப்பாச்சியின் கணவர் கதிர்காமத் தம்பி மீது இயலாமையின் வெளிப்பாடாக இப்படியொரு அபாண்ட மான குற்றச்சாட்டு. உடலில் சற்று சோர்வு தெரிகின்றது. ஒரு கப் பிளேன்ரி அடித்தால் எவ்வளவு உஷாராயிருக்கும்? 'ப்பிளாஸ்'கிலிருந்து ஒரு கப் பிளேன்ரியை ஊற்றி உறிஞ்சிக் கொள்ள... கூடவே ஒரு தம்மும் அடித்தால்...! மனம் அலைபாய அதையும் நிறைவேற்றிக் கொள்கின்றேன்.

'என்ன மச்சான்! புண்பட்ட நெஞ்சைப் புகை விட்டு ஆத்திறியள் போலை!'' சிவபூசைக் கரடியாக பற்களைக் காட்டியபடி பக்கத்தில் வந்தமர்கின்றான் எனது மைத்துனன். அதுதான் மனைவியின் அண்ணனாகப்பட்ட அமிர்தலிங்கம். எப்படியோ ஒரு வாத்தியார் வேலையைக் கைப்பற்றிக் கொண்டவன். அயலூரில் ஒரு ஆரம்பப் பாடசாலை, அதிலும் தலைமை ஆசிரியர் பதவி வேறு. ஆலையில்லா ஊருக்குச் சர்க்கரையாகிக் கொண்டான்.

''அதுசரி மச்சான்! இவ்வளவு படிச்சு உத்தியோகம் வேறை பார்க்கிற உங்க ளுக்கு இனியும் நாங்கள் புத்திசொல் லாமே! உலகத்திலை எல்லோரும் சாகிறது தான். சாகாமல் தொடர்ந்து வாழ ஏலுமே! சும்மா யோசிச்சுக் கொண்டிருக்காமல் போய்ச் சாப்பிடுங்கோ. சாப்பாட்டையும் வச்சுப் பார்த்துக் கொண்டிகிறாளவை. பங்கை போய்ச் சாப்பிடுங்கோ.'' சொல்லி யபடி விறுக்கென்று எழுந்து போகின்றான் மைத்துனன்.

எனக்கு எல்லாமே புரிந்து கொள்கின்றன. இவையெல்லாம் மனைவியின் வேலையென்று. அண்ணனுக்கு நன்றாகப் பற்ற வைத்திருக்கிறாள்.

''கடவுளே! நான் போற ரூட் வேறை, இது கள் பாவங்கள் ஒவ்வொரு விசர்க்கதை யளையும் கதைச்சுக் கொண்டு வந்து... சே...! விசர் விசராய் வருகுது!''

தலையைப் பிய்த்துக் கொள்கின்றேன். கடவுளே! யாரிடம் சொல்லி ஆறிக்கொள் ளலாம். ''ஓ! ஓ! கருவொண்டு அம்பிடுகுது. அம்பிடுகுது உப்பிடித் துவக்கினால்.. அப்பிடிக் கொண்டு போய்... முடிவை... ஓ! எப்பிடியோ சமாளிக்கலாம்.'' மனத்தில் ஒரு சிறிய ஆறுதல்! சிறிய முன்னேற்றம்.

''பின்னையென்ன! மனிசன் நினைச்சால் இந்த உலகத்திலை ஏலாது எண்டு ஒண்டுமில்லை. உவங்கள் ஏதோ என்னைச் சிம்பிளாய் நினைச்சிட்டாங்கள் போலை!''

மனத்துக்குள் கறுவிக் கொள்கின்றேன். அதற்குள் எனது கைத்தொலைபேசியும் தொண தொணக்கின்றது.

''ஆரடா இவன்! பொறுத்த நேரத்திலை'' இந்தப் பாழாய்ப் போன தொலைபேசியைத் தொல்லை குடுக்கவெண்டே கண்டுபிடிச்சிருப்பாங்கள் போலை!'' கோபத்துடனும் எரிச்சலுடனும் காதோரம் வைத்துக் கொள்கின்றேன்.

''ஹலோ மச்சான்! பந்தயம் என்ன மாதிரி? பிரசவம் முடிஞ்சுதோ? இல்லை மொட்டையடிப்புத் தானோ? சொல்லிப் போட்டன். இதிலை சிநேகிதம் கிநோகித மொண்டும் பார்க்கேலாது. பந்தயமெண் டால் பந்தயம்தான்!'' அலுவலக நண்பனின் நக்கலும் நளினமும்! அத்துடன் பயமுறுத்தல் வேறு.

வெறுப்புடன் தொலைபேசியை வீசிவிட்டு வானத்தை நோக்குகின்றேன்.

ஐயையோ! வந்த கருவும் கலைஞ்சு போச்சுது எத்தினை கருக்கள் வந்து வந்து எல்லாமே கலைஞ்சு போச்சுது. ஒரே கருக்கலைப்புத்தான் சே!

நானாய்த் தேடிக்கொண்ட வினை இது. அந்த இலக்கிய விழாவுக்குப் போனதுதான் போயாச்சு பார்த்துப் போட்டுப் பேசாமல் வாயை மூடிக் கொண்டுவர வேண்டியது தானே! இப்ப பொல்லைக் குடுத்து அடிவாங்கிற நிலை!

மாதாந்தம் நடைபெறும் இலக்கிய விழா அங்கே பேச்சு, சிறுகதைப் போட்டி, கவியரங்கம் இன்னோரன்ன நிகழ்ச்சிகள் நடைபெறும். இறுதியில் வெற்றியீட்டியவர் களுக்குப் பாராட்டு, பரிசில் இப்படி ஏக அமர்க்களம்.

எழுத்தாளர் முகில் வண்ணன் எழுதிய னுப்பிய 'ஆகாயப் பூக்கள்' சிறுகதைக்கு முதற்பரிசிலுடன் மண்டபம் நிறைந்த கைதட் டல்கள் கரகோஷங்கள் தாராளமாகக் கிடைத் தன. என்னுடன் வந்திருந்தமுன்று அலுவ லக நண்பர்களும் பாராட்டி மகிழ்ந்தனர்.

''சிறுகதை எழுதிறது அப்பிடியொண்டும் பெரிய வேலையில்லை மச்சான்! எங்கையேன் ஓர் இத்துப்போன கருவை எடுத்து வச்சுக்கொண்டு ஏதோ கன்னா பின்னாவெண்டு எழுதித்தள்ளுறது தானே! நினைச்சால் என்னாலையும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூரியனுக்கும் புவிக்கும் இடையே அமைந்துள்ள கோள்க ளான புதன், வெள்ளி ஆகிய இரண் டும் உட்கோள்கள் (Inner Planets) என்று அழைக்கப்படுகின்றன. புவி யைத் தாண்டிச் சுற்றி வரும் கோள்களான செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியன வெளிக்கோள்கள் என்று அழைக் கப்படுகின்றன.

# சுவாரஸ்யமான சூரியக் குடும்பம்

நளன்

18ஆம் நூற்றாண்டில் சூரியக் குடும்பத் தோற்றம் பற்றிய மற்றொரு கொள்கையும் உருவானது. விண் வெளியில் திரியும் மற்றொரு விண் மீன் சூரியனின் அருகே வர நேர்ந்த போது, ஈர்ப்பின் காரணமாக, சூரிய னது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்தது; அவ்வாறு சூரியனிலிருந்து பிரிந்த வாயுக்கள் குளிர்ந்து கோள்களாக உருவாயின.

சூரியக் குடும்பம் எவ்வாறு தோன்றியது? இதற்கு உறுதியான கொள் கையோ, பதிலோ இதுவரை கண்ட றியப்படவில்லை. சூரியக் குடும்பம் தோன்றியது குறித்து இதுவரை பல்வேறான கருத்துக்கள் கூறப்பட்டு வந் துள்ளன.

### புகையுருக் கோட்பாடு

தொடக்கத்தில் – 18ஆம் நூற்றாண் டில் – புகையுருக் கோட்பாடு என்ற தத்துவம் கூறப்பட்டது. பல வாயுக் களால் அமைந்த பெரும் தொகுதி ஒன்று, சுழற்சியினால் மெதுவாகக் குளிர்ந்து சுருங்கத் தொடங்கியது. அந்தச் சுருக்கத்தின் காரணமாக அந்தத் தொகுதி முழுவதும் ஈர்ப்பு-சக்தியின் அணைப்பினால் சுழற்சி வேகம் மேலும் அதிகரித்தது. அத னால் அத்தொகுதியின் வெளிப்பரப் பின்வேகம் மிகவும் அதிகமாக, ஈர்ப்பை மீறத் தொடங்கியது. இதி லிருந்து சிறு சிறு துண்டுகள் விடுபட்டுக் கோள்கள் உருவாயின. நடுப்பகுதி மட்டும் சூரியனாக ஒளி யையும், வெப்பத்தை யும் அளித்துக் கொண்டுள்ளது.

இவ்வாறு புகையு ருக் கோட்பாடு, சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றிக் கூறுகிறது.

பின்னாள்களில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியால் தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் ஈர்ப்பு விசையை மீறி இடைப்பட்ட துண்டுகள் வெளியேற முடியாது என்று அறியப்பட்டது. இவற்றின் காரணமாக புகையுருக் கொள்கை நிராகரிக்கப்பட்டது.

18ஆம் நூற்றாண்டில் சூரியக் குடும் பத் தோற்றம் பற்றிய மற்றொரு கொள்கையும் உருவானது. விண் வெளியில் திரியும் மற்றொரு விண் மீன் சூரியனின் அருகே வர நேர்ந்த போது, ஈர்ப்பின் காரணமாக, சூரிய னது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்தது. அவ்வாறு சூரியனிலிருந்து பிரிந்த வாயுக்கள் குளிர்ந்து கோள்களாக உருவாயின என்று அக்கொள்கை விளக்க மளிக்கிறது.

இரு விண்மீன்களுக்கு இடையே யுள்ள தூரம் மிக அதிகமாகையால் சூரியனை நோக்கி அதன் அருகே மற்றொரு விண்மீன் வந்திருக்கும் என்பதும் ஏற்புடையதாக இல்லை.

### ஏற்கப்பட்ட கொள்கை

இறுதியாகத் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கொள்கை ஒன்று உள்ளது. அது பின்வருமாறு விளக்கமளிக்கிறது. வெகுகாலத் திற்கு முன் ஒரு மிகப் பெரிய விண் முகில் இருந்தது. அதன் ஒரு பகுதியில் நிறைச் செறிவு ஏற்பட்டது. இப்பகுதி ஏனைய பகுதிகளை ஈர்க்க ஆரம்பித்தது. அதாவது நியூட்டனின் ஈர்ப்பு விதியின்படி, இரு பகுதிகளான விண்முகிலில் நிறை ஈர்ப்புச் செறிவு மிகுந்த பகுதி, மறுபகுதியை ஈர்க்க ஆரம்பித்தது. இதன் பின் சொந்த நிறை ஈர்ப்பினால் விண் முகில் சுருங்கத் தொடங்கியது. இந்த நிலை யில் இது ஒரு வாயுப் பந்து போல் சுருங்கச் சுருங்க அது சுழலும் வேகமும் அதிகரித்தது.

காலப்போக்கில் இதன் மையப் பகுதி குமிழ் போன்றும் சுற்றுப்பகுதி வட்டுப் போன்ற அமைப்பையும் பெற்றது. இதன் பின்னர் வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் அதிகரித்ததால் மையப் பகுதியில் உள்ள குமிழ் மேலும் சுருங்கியது. இதனால் மையத் தில் வெப்பம் அதிகரித்து மையப்பகுதி ஒரு விண்மீனாக (சூரியன்) மாறியது. சுற்றியுள்ள வட்டு உடைந்து சிறு பகுதிகளாகப் பிரிந்து வெவ்வேறு கோள்களாக மாறின.

### வாயுக் கோள்கள்

சூரியனுக்கு அருகில் உள்ள கோள் களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகியன மிக அதிகமான வெப்ப நிலையிலிருந்து குளிர்ந்து உருவானவை. இதனால் இவை திடக் கோளங்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலிக்கான், இரும்பு போன்ற தாதுக்கள் காணப்படுகின்றன. இத் திடக் கோளங்களைச் சுற்றி மென் மையான வாயு மண்டலம் காணப் படுகின்றது. ஆனால் சூரியனிலி ருந்து தொலைவில் உள்ள கோள் கள் உயர்வெப்ப நிலையை அடை யாது குளிர்ந்த வாயு நிலையிலேயே சுழன்று வருகின்றன. இவை பெரும் பாலும் ஹீலியம், ஹைட்ரஜன் ஆகிய வாயுத் தனிமங்களைக் கொண்டவை யாகக் காணப்படுகின்றன.

சூரியனுக்கு அருகிலிருந்து இருக்கும் இடப்படி முறையே புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என அமைந் துள்ளன. சூரியனுக்கும் புவிக்கும் இடையே அமைந்துள்ள கோள்க ளான புதன், வெள்ளி ஆகிய இரண் டும் உட்கோள்கள் (Inner Planets) என்று அழைக்கப்படுகின்றன. புவி யைத் தாண்டிச் சுற்றி வரும் கோள்களான செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியன வெளிக்கோள்கள் என்று அழைக் கப்படுகின்றன. சூரியனைச் சுற்றி வரும் கோள்கள் அனைத்தின் பாதை யும் நீள்வட்டமே. அதே வேளையில் இவை ஏறக்குறைய ஒரே தளத்தில் அமைந்துள்ளன.



## னைக்கு இன்று விடுதலை நாள்

ஜம்புலிங்கத்தின் மனைவி ஒருநாள் நடு இரவில் தூக்கத்திலிந்து திடீரென விழித்துக் கொண்டார். தன் கணவர் அருகில் இல்லாததை உணர்ந்து அவரைத் தேடினார்.

வீடு முழுவதும் தேடி, கடைசியில் அவர் சமையலையறையில் அமர்ந்திருந்ததைக் கண்டார். ஆழ்ந்த சிந்தனையில் சுவரை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார் ஜம்புலிங்கம்.

இடையிடையே கண்ணில் வழியும் கண்ணீரைத் துடைத்தபடி அமர்ந்திருந்தார். மனம் பதைபதைத்துப் பயந்துபோன மனைவி ஜம்புவின் அருகில் சென்று, இதமாகக் கையைப் பிடித்து, "என்ன ஆயிற்று? இந்த நடு இரவில் இங்கே வந்து தனியாக அமர்ந்திருக்கிறீர்களே?" என்று கேட்டார்.

ஜம்பு: "உனக்கு நினைவிருக்கிறதா? 20 வருடங்களுக்கு முன்னால் உனக்கு 18 வயதாகும்போது நாம் இருவரும் தனியாக பார்க்கில் சந்தித்தோமே?

மனைவி: ஆம்! நினைவிருக்கிறது.

ஜம்பு (தொண்டை அடைக்கக் கமறலுடன்): அன்று உன் அப்பாவிடம் இருவரும் மாட்டிக்கொண்டோமே?

மனைவி: ஆம்! அதற்கென்ன? (கணவரின் கண்களைத் துடைத்து விடுகிறார்)

ஜம்பு: என் நெற்றிப்பொட்டில் துப்பாக்கியை வைத்து மரியாதையாக என் மகளைத் திருமணம் செய்து கொள் என்று அவர் மிரட்டினாரே!

தாலி கட்டாவிட்டால் 20 ஆண்டுகள் உன்னை சிறைக்கு அனுப்பவா? என்று உன் அப்பா என்னைக் கேட்டது உனக்கு நினை விருக்கிறதா?

மனைவி: அதுவும் நினைவில் இருக்கிறது. அதற்கென்ன இப்போது?

ஜம்பு கண்களைத் துடைத்தவாறு, அன்று என்னை சிறைக்கு அனுப்பியிருந்தால் இன்று எனக்கு விடுதலை நாள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி மந்திரம்



சா.ரமேஸ்குமார்,
மருதனார் மடம்.

தாயினும் சிறந்த தெய்வம் இல்லை. காயத்ரியினும் பெரிய மந்திரம் இல்லை என்பார்கள் சான்றோர்கள். பண்டைய காலம் முதல் இன்று வரை மிகவும் அற்புதம் வாய்ந்த மந்திரம் என கருதப்படும் காயத்தி ரிக், ஜசுர், சாம, அதர்வண வேதங்களிலும் நன்கு புகழப்பட்டுள்ளது. ஆகவே இதன் காலம் சுமார் 5000 வருடங்கள் எனக் கணிக்கப்படுகிறது. கரயத்ரியை உருவாக்கிய விசுவாமித்திர மகரிஷி ஒரு ஷத்திரியர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஷத்திரியர் உருவாக்கிய காயத்ரியை பிராமணர்களும் ஓதுகிறார்கள் பக்தி சிரத்தையுடன். இந்த மந்திரத்தை ஜாதி, மத பேதமில்லாது உலகத்தில் வாழும் அனைத்து இன மக்களும் ஜெபிக்கலாம் என்று சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி, சாயிபாபா போன்ற பெரிய மகான்கள் வலியுறுத்தியுள்ளனர்.

காயத்ரியை விஞ்ஞான நோக்கோடு சில ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்துள்ளனர். பிரிட்டனைச் சேர்ந்த ஹல்டன் என்ற விஞ்ஞானி காயத்ரி மந்திரத்திலுள்ள 'சவிதுர்' என்ற சுலோகத்தின் அர்த்தத்தை சுட்டிக்காட்டி பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் சூட்சுமமான ஏதோ ஒன்று இயக்குகின்றது என்ற கருத்தை விஞ்ஞானம் இப்போது ஏற்றுக் கொள்கின்றது. இதனை காயத்ரி பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே அடையாளப்படுத்தி உள்ளது எனவும் வியந்துள்ளார். ஹங்கேரி நாட்டு ஆதர் ஹொயிஸ்லர் என்ற விஞ்ஞானி தனது ஆராய்ச்சி முடிவில் ''அணு சக்தியால் வரக்கூடிய பேராபத்தை தடுத்து நிறுத்தக்கூடிய சக்தி காயத்ரி மந்திரத்திற்கே உண்டு'' எனக் கூறியுள்ளார். ஆற்றல்களின் ஓசை காயத்ரிக்கே உண்டு'' என விஞ்ஞானிகள் மெய்ச்சுகிறார்கள். அந்தளவுக்கு காயத்ரி மந்திரம் சனாதன தர்மத்தை உயர்த்தி நிற்கின்றது.

'ஓம்'-பிரம்மம் (இறைவன்)
'பூர்,புவ, சுவ'-விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்க நிலை
'சவிதுர்'-சகலதையும் இயக்குதல்
'வரேண்யம் பர்க்கோ'-வர்ணிக்க முடியாத பேரொளி
'தேவஷ்ய-தெய்வீகமானது
'தீமஹி'-தியானிப்போம்
'தியோ யோ நப்ரசோதயாத்'-எனது புத்தியை பிரகாசிக்கச் செய்யட்டும்.

ஓம் பூர்புவஸ்ஸுவ/ தத் ஸவிதுர்வ ரேண்யம்
பர்கோ தேவஷ்ய தீமஹி/தியோ யோ நபரசோதயாத்//

காயத்ரிமந்திரத்தின் வடிவத்தையும் அதன் ஆழ்ந்த பொருளையும் நாம் பார்த்தோம்.

காயத்ரி என்ற வார்த்தையிலுள்ள 'காய' என்ற பகுதி பாடுவதற்குரிய என்று பொருள் தருகிறது. இரண்டாம் பகுதியான 'த்ரி' என்பது 'த்ராயதே' என விரிவுபட்டு பயத்திலிருந்து காப்பாற்றுகிறது என்று பொருள் தருகிறது. இந்துக்களாகிய நம்மில் எத்தனை பேருக்கு காயத்ரி மந்திரம் பற்றித் தெரியும்? தெரிந்திருந்தும் அதன் ஆற்றல்களை நாம் உள்வாங்கிக் கொள்வதில்லை.

இளைஞர், யுவதிகளாகிய நாமும் வீணிலே காலம் கழிக்காது இந்த கலியுகத்தில் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகவும் நம் மன அமைப்பை தகர்த்தெறியவும் காயத்ரி என்ற தாயை மீண்டும் மீண்டும் நம் இதயங்களில் சுமந்து பண்டைய ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், மகான்க்கள் வழியில் நாமும் ஆத்மிக புரட்சி செய்வோமாக.

**ஹங்கேரி நாட்டு ஆதர் ஹொயிஸ்லர் என்ற விஞ்ஞானி தனது ஆராய்ச்சி முடிவில் 'அணு சக்தியால் வரக் கூடிய பேராபத்தை தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி காயத்ரி மந்திரத்திற்கே உண்டு' எனக் கூறியுள்ளார். ஆற்றல்களின் ஓசை காயத்ரிக்கே உண்டு என விஞ்ஞானிகள் மெய்ச்சுகிறார்கள்.**



# இசைந்து போவது எப்படி?

இன்றைய நவீன உலகில் மனிதன் சமூகச் சூழலுடன் இசைந்து வாழ வேண்டிய தேவை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சூழ்நிலைக்கு இசைந்து போகாதபோது உயிர்கள் துன்பத்துக்கு ஆளாகின்றன. மனித வாழ்க்கையைப் பொறுத்த வரை சூழலுடன் மட்டுமன்றி பல்வேறு அம்சங்களிலும் ஏதோ ஒரு வகையில் இசைந்து போக வேண்டிய தேவை காணப்படுகின்றது. உறவுகளால் உருவாவதே மனித வாழ்வு. இதில் ஒருவர் இன்னொருவர் மீது காட்டும் செயலாக்கமான அக்கறை, நாம் ஒவ்வொருவரும் எம் வாழ்க்கையில் அரும்பாடுபட்டு தேடும் ''அன்பு'' என உளவியலாளர் ''எரிக் புறொம்'' (Eric Fromm) கூறுகிறார். இந்த அன்பை அர்த்தமுள்ளதாக உருவாக்க நம்பிக்கை, ஆதரவு, பகிர்வு, விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, அக்கறை என்பவற்றுடன் மெருகூட்ட இசைந்து போதல் தேவைப்படுகிறது.

இசைந்து போகாமையினால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முரண்பாடுகளை நீக்க இசைந்து போதல் அவசியமாகிறது. ஆழமும் அர்த்தமும் நிறைந்த மனித வாழ்க்கை அதன் தன்மையில் இருந்து சிதைந்து போகாமல் இருப்பதற்கு இசைந்து போதல் அவசியம் ஆகும். புரிந்து கொள்ளலின் அடிப்படையில் நடைபெறுமாயின் அதன் பெறுமதி உயர்ந்ததாக இருக்கும்.

யோ.கினுஜா, ஊர்காவற்றுறை



# நண்பனின் துரோகம்

ஜம்புவின் தடாலடிகள்

ஜம்புலிங்கத்தின் நண்பன் ஒருவன் மிக வயதான பின்னர் திருமணம் செய்து கொண்டான். அந்த திருமண வீட்டுக்கு ஜம்பு தனது மனைவியுடன் சென்றார். ஜம்புவின் பாரியார் நண்பனின் மனைவியைப் பார்த்ததும் "உங்கட நண்பனுக்கு மனைவியாகப் போகிற பொம்பிள நல்லாவே இல்லை. நீங்களாவது சொல்லியிருக்கக் கூடாதா?" என்று கேட்டார். அவளைத் திரும்பி கோபமாக முறைத்த ஜம்பு கேட்டார், "நான் ஏன் சொல்ல வேணும்?" "நீங்க அவருடைய நண்பன் தானே!" என்று மனைவியும் விட்டபா-டில்லை. உடனே "நான் திருமணம் செய்யும்-போது அவன் மட்டும் எனக்கு சொன்னானா?" என்று பதில் கேள்வி கேட்டார் ஜம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பின் வலி......

நான் பாரொடு
விண்ணாய்ப் பரந்தவன்
நீ இரண்டுக்குமே
தண்மையளிக்கும்
மழை முகிலானவள்
கலந்தனவாகிய
எமதன்புடை நெஞ்சம்
ஒரு மலைமுகட்டில்
வாழும் பறவைபோல்
கட்டுக் கடங்காதது
இப்பூவுலகோர்
அம்பும் வில்லுமாய்
அலையும் மலை வேடுவர்

ஊழிப் பெரு வெள்ளத்தில்
இம் மண்ணுருண்டை
மூழ்குவதாய் கற்பனிக்கையில்
கர்ணப் பேழையாய் மிதந்து
என்னை மட்டும்
கரையேற்றிச் செல்கிறாயே
ஏனடி என் கனவுத்தோழி

நீ எனக்கு
யாதுமாகி நின்றவள்
நான் காதலாகிச் கசிந்து
கண்ணீர் மல்குகின்றேன்
ஏதொன்றும் அறியார்போல்
வேடமணிந்த அயலும் சுற்றமும்
படகு செலுத்துகிறது
எம் கண்ணீரில்

வேறொன்றுமில்லையடி
தோழி அதன் காரணம்
இப்பூமியர் எல்லோருக்கும்
ஞானக்கண் திறப்பதற்காய்
என்றோ ஒரு நாள்
ஆதாம் புசித்த
அப்பிளின் வீரியம்
விட்டொழிந்து போயிற்றடி

இமை திறந்திருக்க
கண் மூடியிருக்கும்
இவர்களின் இயல்பொழிக்க
இன்னுமோர் ஆதாமுக்கும்
ஏதேன் ஆப்பிளுக்குமாய்
எங்கு சென்றலைவோமடி
என் கனவுத் தோழி.

- வேல்.லவன்



# வெற்றி பெறலாம் வாங்க!

59

உங்களுக்கு மிகவும் பிடித்த மாதிரி வீட்டை மாற்றுவதற்கு 10 சிறிய வழிகள்

ராகவன் அல்பி

அடிக்கடி நீங்கள் உங்களிடம், வீடானது வெறுமனே தூங்கியெழும் இடமாக இருக்கிறதா, அல்லது பிடித்தமானதாக இருக்கிறதா என்று கேட்க வேண்டும். உங்களுக்குப் பிடித்தமான வீட்டை மாற்ற இன்னும் என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்பதைக் கண்டிப்பாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

**சுவரில் புகைப்படம் :** உங்களுக்கு மிகவும் பிடித்த புகைப்படங்களைச் சுவரில் மாட்டி வைக்கலாம். அது குடும்பப் புகைப்படம் அல்லது நண்பர்கள் அல்லது விழாக்களில் எடுக்கப்பட்டது என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். சுவரில் மாட்டிய புகைப்படங்களைப் பார்க்கும் போது சந்தோஷமான தருணங்கள் நினைவுக்கு வரும்.

**செடி நடலாம் :** தோட்டம் என்பது மிக அழகாகத் தான் இருக்கும் என்றாலும், நீங்கள் உங்கள் ரசனையின் அடிப்படையில் செய்யும் சிறிய மாற்றம் கூட, தோட்டம் உங்களுக்கானது என்ற எண்ணத்தை உருவாக்கும். தோட்டம் இடுவது என்பது உங்கள் ஆர்வமாக இருந்தால் தான் இதைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எளிதில் பராமரிக்க இயலும் வேறு எதையாவது செய்யுங்கள்.

**வரவேற்பு :** வீட்டுவாசலில் 'வெல்கம்' என்று எழுதி வைப்பது விருந்தினர்களை மகிழ்விக்கும். வீட்டின் வாயிலில் நம் பெயரைக் கொட்டையாக எழுதி வைத்திருந்தால், வருகிறவர்களுக்கு அது வழிகாட்டியாகவும் அமையும்.

**வண்ணத்தைத் தேர்ந்தெடுத்தல் :** வண்ணத்தைத் தேர்ந்தெடுக்கும்போது கவனமாக இருக்க வேண்டும். எதாவது ஒரு வண்ணத்தைத் தேர்ந்தெடுத்து வீடு முழுவதும் அடித்து விடாதீர்கள். முதலில் வீட்டின் ஒரு பகுதியில் அடியுங்கள். பிடித்திருந்தால் இதர பகுதிக்கும் அடிக்கலாம்.

**தளபாடங்கள் :** வெகு சிலரால்தான் அதிக அளவில் புதிய தளபாடங்களை வாங்க முடியும். எப்படி இருந்தாலும், கொஞ்ச நாளில் அது பழையதாகிப் போய்விடும். அதனால் எல்லாவற்றையும் ஒரேயடியாக மாற்றாமல் ஒவ்வொன்றாக மாற்றலாம். மேலும் புதிய மெத்தைகள், திண்டுகள்கூட வாங்கிப் போடலாம். அது புதுவகையான தோற்றத்தைத் தரும்.

**தேவையற்ற பொருள்கள் :** எந்த ஒரு வீட்டிலும் தேவையற்ற பொருள்கள் இருக்கத்தான் செய்யும். பெரும்பாலான சமயம் நமக்கு அதைத் தூக்கிப் போட மனம் வராது. இதனால் பொருள்கள் நிறைந்து குப்பை கூளமாகி விடும். ஆகையால் ஒரு கட்டத்தில் தேவையற்ற பொருள் எவையெனக் கண்டறிந்து தூக்கிப் போடுவது அவசியமானதாகும்.

**எங்கும் புத்தகங்கள் :** உங்களிடம் நிறையப் புத்தகங்கள் இருந்தால் அதை அலமாரிகளில் அழகாக அடுக்கி வைக்கலாம். உங்களுக்கு மிகவும் விருப்பமான புத்தகங்கள், உங்கள் துறை சார்ந்த புத்தகங்கள் என வாங்கி உங்களைச் சுற்றி வைத்துக் கொள்ளுங்கள்.


**பெரிய திரை :** உங்களுக்குத் திரைப்படம் பிடிக்குமென்றால், ஏன் உங்கள் வீட்டிலேயே திரையரங்கம் ஒன்றை அமைத்துக் கொள்ளக் கூடாது. நண்பர்களுடன் அமர்ந்து கொண்டு, சாப்பிட்டுக் கொண்டே படம் பார்க்கலாம்.

**மெழுகுவர்த்தி ஏற்றுங்கள் :** உங்கள் உள் மனத்துடன் தொடர்ந்து தொடர்பு கொண்டிருப்பதும் மிகவும் முக்கியமானதாகும். உங்கள் மனதை அமைதிப்படுத்த மெழுகுவர்த்தி ஏற்றிவைப்பதுகூடச் சிறந்ததுதான். மனதை அமைதிப்படுத்தும் மெழுகுவர்த்தி மனதில் தளர்வான நிலையையும் ஏற்படுத்தும்.

**பயண நினைவுகள் :** நீங்கள் உலகில் பெரும்பாலான பகுதிகளில் பயணம் செய்திருக்கிறீர்கள் என்றால் அந்தப் புகைப்படங்களை ஏன் வீட்டின் சுவரில் மாட்டி வைக்கக் கூடாது. நீங்கள் அறைக்குள் போகும் ஒவ்வொரு நிமிடமும் அந்தப் பயணம் நினைவுக்கு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எதியோப்பியாவில் உள்ள அதிசயமிக்க தேவாலயங்கள்

ரம்யன்

அடிக்கல் நாட்டியபின் அத்திபாரம் போட்டு கட்டடத்தை கட்டம் கட்டமாகக் கட்டி மேலே கொண்டு செல்வதுதான் நாம் அறிந்த - கண்டு வருகின்ற கட்டட அமைப்பு முறைகளாகும். ஆனால் கூரையை முதலில் அமைத்துக் கொண்டு ஏனைய பகுதிகளை படிப்படியாக கீழே கொண்டு போவது பற்றி கேள்விப்பட்டதுண்டா? அதுவும் பாறைகளைக் குடைந்து கீழ் நோக்கி கட்டடம் அமைப்பது என்பது அதிசயம்தான். ஆனால் அவ்வாறுதான் ஓர் அரசன் தன் நாட்டில் தேவாலயங்களை கட்டி எழுப்பியுள்ளான். இது எதியோப்பிய நாட்டில் 900 வருடங்களுக்கு முன் நடைபெற்றுள்ளது.

12 ஆம் நூற்றாண்டில் எதியோப்பியாவின் கிராமப்புற வடபகுதியில் லிலிபெல்லா என்ற அரசனால் இவ்வாறு கட்டப்பட்ட 11 தேவாலயங்கள் இன்றும் கூட அப்படியே இருக்கின்றன. இந்தப் பகுதிக்கு புதிய ஜெருசலேம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடங்களின் தனித்துவம் என்னவென்றால் அவைகள் கடும் இறுக்கமான பாறைகளை கீழ் நோக்கி குடைந்து கட்டப்பட்டுள்ளமையாம்.

இந்தத் தேவாலயங்களின் உட்புறங்களும் வெளிப்புறங்களும் எரிமலைகளின் இறுக்கமான பாறைகளில் நிலத்துக்குள் செதுக்கப்பட்டுள்ளன.

பணியாளர்கள் முதலில் பாறையின் மேல் புறத்தில் கூரைகளை செதுக்கிக் கொண்டு கீழ்ப்புறமாக சுவர்களையும் ஏனைய அமைப்புக்களையும் செதுக்கிக் கொண்டு சென்றுள்ளார்கள். அதன் பின் தேவாலயத்தின் உள்புறப் பகுதிகளை குடைந்தும் செதுக்கியும் சீர் அமைப்பார்கள்.

இது பற்றி கட்டடக்கலை நிபுணர் அலபெச்சோ ரெட்டா என்பவர் பத்திரிகை ஒன்றுக்கு விவரிக்கையில், இவை முற்றிலும் வித்தியாசமானவை. இவை மேல் இருந்து கீழ் நோக்கி செதுக்கப்பட்டுள்ளன. உலகத்தில் கட்டடங்கள் எவையும் கீழ் இருந்துதான் மேல்நோக்கிக் கட்டப்படும். ஆனால் இங்கு மேலிருந்து கீழ் நோக்கி கட்டியிருக்கிறார்கள். உலகத்தில் இதற்கு ஒப்பாக எதனையும் கூற முடியாது என்றார்.

முஸ்லிம்கள் நடத்திய தாக்குதல் வெற்றிகளின் காரணமாக ஜெருசலேம் புனித நகருக்கான யாத்திரைகள் சிரமாகியிருந்தமையால் இந்த புதிய ஜெருசலேம் நகரம் புதுமையான முறையில் கட்டி முடிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

இந்த தேவாலயங்களை லிலிபெல்லா என்ற அரசன் கட்டி முடித்தமைக்கான பல்வேறு புராதன கதைகள் உண்டு.

ஒரு கதையின் படி கடவுள் அரசனிடம் வந்து இந்தக் கட்டடங்கள் எப்படி நிர்மாணித்து முடிப்பதென்பதையும் சுவர் வர்ணங்களையும் கூட மிகத் தெளிவாகக் கூறிச் சென்றிருந்தார் என்பதாகும்.

இன்னொன்று லிலிபெல்லா தனது சகோதரனால் நஞ்சூட்டப்பட்டு பல நாள்கள் மயக்கத்தில் இருந்தான். அவ்வாறு சிறிதுகாலம் அவன் மோட்சத்தில் கழிக்க வேண்டியிருந்தமையால் இந்தத் தேவாலயங்களை கட்டுவதற்கான அறிவுறுத்தல்கள் அவனுக்கு வழங்கப்பட்டிருந்தனவாம்.

இன்னும் சில கதைகளின்படி ஐரோப்பிய போர் வீரர்களால் அவை கட்டப்பட்டன என்றும், லிலிபெல்லா அரசன் ஒருமுறை ஜெருசலேமுக்கு சென்றதன் போது [illegible] நாட்டில் அதனைப்போல் புதிய வடிவில் புனித நகரை வடிவமைத்தான் என்றும் கூறப்படுகின்றது.

இதில் இன்னும் சுவையான ஒரு தகவல் என்னவென்றால், இந்த கட்டட வேலைகளில் மனிதர்கள் பகல் வேளையில் ஈடுபட்டிருப்பார்கள்.

இரவு வந்ததும் தேவ கணங்கள் வேலைகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டு மனிதர்களை விட இரண்டு மடங்கு வேலைகளைச் செய்து முடிப்பார்கள் என்பதாகும். எதியோப்பியாவில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் கிறிஸ்தவர்கள்.

1978ஆம் ஆண்டு இந்தக் கட்டடத்தொகுதி யுனெஸ்கோவால் உலக புராதன மரபுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் இந்தச் சின்னம் இயற்கையான அழிவுகளில் இருந்து காப்பாற்றப்படுவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை யுனெஸ்கோ செய்தது.

இந்தக் கட்டடங்களின் தனித்துவம் என்னவென்றால் அவைகள் கடும் இறுக்கமான பாறைகளை கீழ் நோக்கி குடைந்து கட்டப்பட்டுள்ளமையாகும். இந்தத் தேவாலயங்களின் உட்புறங்களும் வெளிப்புறங்களும் எரிமலைகளின் இறுக்கமான பாறைகளில் நிலத்துக்குள் செதுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தக் கண்ணீர் வடிக்கும் இளம் பெண்



20 வயதான இந்த இளம் பெண் யாரிட்ஸா ஒலிவா அழுதால் கண்ணீர் வருவதில்லை இரத்தம்தான் வடிகிறது. கடந்த மாதம்தான் இந்த நிலைமை அவருக்கு ஏற்பட்டது. இப்பொழுது தினமும் பல தடவைகளில் அவள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள்.

சிலி நாட்டைச் சேர்ந்த இந்த இளம் பெண் தான் அழும்போது ஒருவித வேதனை ஏற்படுகின்றது. ஆனால் அதை விளக்கப்படுத்த முடிவதில்லை என்கிறாள்.

அவளை மருத்துவரிடம் பெற்றோர் கொண்டு சென்றார்கள். அவருக்கு தொற்று எதுவும் இல்லை என்பதால் வைத்தியர் கண்ணுக்கு சொட்டு மருந்து கொடுத்து அனுப்பிவிட்டார். தன் மகளை கண் நிபுணர்களிடம் காட்டி மருத்துவம் செய்விக்க பெற்றோர் முயன்று வருகிறார்கள்.

இது ஹீமொலக்ரியா (haemolacria) என்ற நோயின் அறிகுறி. மிகச் சிலருக்கே இந்த நோய் ஏற்படுவதுண்டு என்கிறார்கள் சில நிபுணர்கள். இது சில சமயம் தலைக்குள் ஏற்படும் கட்டிகளின் அறிகுறியாக இருக்கலாம் . பெண்களில் ஹோர்மோன் அதிகமான அளவில் சுரப்பதனாலும் ஏற்படலாம் என்கிறார்கள் சில மருத்துவர்கள் மன அழுத்தம் உச்ச நிலைக்குச் சென்றாலும் இந்த நிலை ஏற்படலாமாம். சில சமயம் மனோ நிலை குழப்பமடைவதாலும் ஏற்படலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

# இனப்பிரச்சினைச் செக்கு

தொகுப்பு: ஜெரா

கிட்டத்தட்ட 30 வருடங்கள். காட்சியும், களங்களும், பாத்திரங்களும் மாறியிருக்கின்றனவே தவிர கதையில் எந்த மாற்றமும் நிகழவில்லை. அதற்கான ஆதாரங்கள்தான் இவை. 30 ஆண்டுகாலமாக ஈழத்தமிழர் மீது திணிக்கப்பட்டு வரும் துன்பியலில் இந்தியாவும், உலகமும் எப்படிச் செயற்பட்டு வந்திருக்கின்றன என்பதை இந்தப் பதிவுகள் அடையாளப்படுத்துகின்றன. இனப்பிரச்சினை ஆக்ரோஷமான உச்சத்தைத் தொட்ட காலத்தில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கும் 'உதயன்' பத்திரிகையின், முதல் மாதத்து பதிவுகள் மட்டுமே இங்கு பதிவிடப்பட்டிருக்கின்றன. இதே செய்திகளை 2013இலும் சில சுவாரஸ்யங்களோடு மீண்டும் வாசிக்கின்றோம் என்பது எவ்வளவு வேடிக்கை முரண். இந்தச் செய்திகளின் மீதான நம்பிக்கை ஆரம்ப காலத்தில் இருந்ததை விட, இப்போதுதான் அதிக இறுக்கம் பெற்றுச் செல்கின்றது. ஆனால் அது என்றோ காலாவதியாகிவிட்ட கட்டுக் கதைகளின் அரசியல். இன்னமும் அதனை உயிர்ப்போடு வைத்திருப்பது ஈழத்தவன் கொடுத்த உயிர்க்கொடைகள்தான். புவிசார் அரசியலும், பண்பாட்டு அரசியலும், அடையாளம் தேடலுக்கான அரசியலும் இந்தப் பிரச்சினையை தொடர்ந்தும் காட்டாறாக்குகின்றது.

இலங்கை என்ற குட்டித் தேசம், ஒருபோதும் இந்தியாவிடமிருந்து விலகிச் செல்ல முடியாதென்பதை இந்தச் செய்திகள் நினைவுறுத்துகின்றன. பிரித்தானிய ஆதிக்க விலகலைத் தொடர்ந்து இந்தியப் பெருங்கண்டத்தின் முழுக்கவனிப்பையும் இலங்கை அனுபவித்தது. அதன் தொடர்ச்சியான அவதானிப்புக்களின் விளைவாக இலங்கை ஒருநாடாக இருக்க முடியாதென்பதை தெரிந்துகொண்டது. ஆனால் உடையப்போகும் இரு தரப்பினரையும் தன் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக, உடைந்தும், உடையாமலும் இருக்கக் கூடிய நிர்வாக, அதிகார பிரிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய காரயமியற்றல்களை மேற்கொண்டு வந்திருக்கின்றது. 13 ஆவது சீர்திருத்தம், இணைந்த வடக்கு கீழக்கு' என காலந்தோறும் பல தீர்வுத் திட்டங்களோடு இலங்கையில் அலைந்திருக்கின்றது இந்தியா. ஆனால் இந்த திணிப்புக்களையும், வற்புறுத்தல்களையும், கவனிப்பையும் இலங்கை ஏற்றுச் செயற்படுவதில் அதிகமாக நாடகமாடியே வந்திருக்கின்றது. இந்தியாவின் கவலைகள் தொடர்ந்தபோதும், இலங்கையின் அதிகாரத் தரப்புக்களின் அத்துமீறல்கள் மேலும்மேலும் உரம்பெற்றன.

இலங்கை அரச தரப்பின் சிறுபான்மையினங்கள் மீதான அடாவடித்தனங்களும், வன்முறைகளும் எல்லைகளற்ற நீண்டபோது சர்வதேச கனவான்களின் கவனமும் இந்தப் பக்கம் திரும்பியிருக்கின்றது. இந்தியாவும், இலங்கையை மிரட்டும் சக்திகளும் இந்தக் கவனக்குவிப்பை செய்வதில் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றன. ஆனால் அவை இதயச்சுத்தியோடு செய்யப்பட்டவை அல்ல என்பதை, ஒரே செய்தி மீளவரும் நிலை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் வாழ முடியாத தமிழர்கள் நாடுவிட்டு நாடு தாவுவதும், அங்கிருந்து நாடுகடத்தப்படுவதும் அப்போதிலிருந்தே நடந்துவந்திருக்கின்றது. ஆனால் அதே நிலைதான் இன்றும். இன்று நாடுகடப்பதற்கான தேவைகளும், மார்க்கங்களும் அதிகரித்திருக்கின்றன. உலகம் முழுதும் அதிகளவில் திருட்டுக் குடியேறிகளாகவாழும் இனங்களில் தமிழர்களும் அடையாளம் காணப்படுகின்றனர். அதுபோலலே நாடுகடத்தப்படுவதும், அகதி அந்தஸ்து நிராகரிப்பதுமான சம்பவங்களும் தற்போது அதிகரித்திருக்கின்றது.

இவ்வளவுக்கும் மத்தியில் இலங்கை என்ற குட்டித்தீவுக்கான போட்டி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதையும் கடந்தகாலத்தை திரும்பிப் பார்க்கையில் தெரிகின்றது. பாகிஸ்தான், இந்தியா, சீனா என்கிற தேசங்கள் இலங்கையை தம் செல்லப்பிள்ளையாக்கிப் பார்க்கத் தொடர்ந்தும் போராடி வந்திருக்கின்றன. ஆனால் இந்த ராஜதந்திரப் போரில் எந்தப் பக்கமும் சார்ந்திராது, தேவைக்கேற்றபடி பயன்படுத்திவிட்டு, கழற்றிவிடும் இலங்கையின் இராஜதந்திர பலத்தை கற்றுக் கொண்டேயாக வேண்டும் என்ற அனுபவப் பாடத்தை கடந்த காலம் தந்திருகின்றது. போர் இருந்த காலத்திலும், போர் வற்றிய காலத்திலும் இலங்கைக்கான ஆயுத உதவிகள், படையுதவிகள் போட்டித்தன்மையுடன் கிடைக்கின்றன. அதேபோல அபிவிருத்திக் கடன்களை வழங்குவதற்கான கைகளும் உலகம் முழுவதுமிருந்து நீள்கின்றன.

எத்தகைய கண்டனங்கள், மிரட்டல்கள் இலங்கை நோக்கி வீழ்ந்தாலும், தனது கொள்கையில் அன்றுதொட்டு விடாப்பிடியாக இந்த நாடு இருந்து வருகின்றது. தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்கு கிழக்கு பகுதிகள் சிங்களமயமாக்கப்படும் நிலைமைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டிலும் கிளிநொச்சியில் நில சுவீகரிப்பு நடைபெற்றிருக்கின்றது. 2013 இலும் கிளிநொச்சி மக்கள் நில சுவீகரிப்புக்கு எதிராகப் போராடுகின்றனர்.

இவ்வாறு கடந்த 30 ஆண்டுகளாக தீர்வற்று நீளும் இனப்பிரச்சினையும், இன அழிப்பும் இலகுவில் முற்றுப்புள்ளியிடத்தை சந்திப்பது கடினம். இந்த விடயத்தில் கைநனைத்த எவருமே இதயச்சுத்தியுடன் செயற்படவில்லை என்பதே அதுநீள்வதற்கான பிரதான காரணமாக இருக்கின்றது. அவரவர் அரசியல் இருப்பின் அத்திபாரமாக இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதையே [illegible] யும் வாசிக்க காத்திருக்கும் பழைய செய்திகள் உறுதிப்படுத்திக் [illegible]

## இலங்கை அரசமைப்பு தோல்வி கண்டுவிட்டது

தமிழருக்கு குறைபாடுகள் உண்டு
அமெரிக்க மாநாடு தீர்மானம்

வாஷிங்டன், டிச.13

...லங்கையின் தற்போ...ய அரசமைப்புச் சட்... தோல்வி கண்டுவிட்... இனி புதிய ஒருஅரச...ப்புச் சட்டம் உரு...க்கப்பட வேண்டும்.

...லங்கை இனப்பிரச்... குறித்து அமெரிக்...ன் மேரிலாண்ட் பல்...கழகத்தில் நடந்த ...டு ஒன்றில் மேற்... உடன்பாடு ...ப்பட்டது. இம்மா... டிச. 6-ஆம், 7-ஆம் ...களில் நடைபெற்.

...8-க்குப் பின்னர் ...கைத் தமிழரின் ...ருளாதார நிலைமை ...கெட்டு விட்டது. தமி...க்கும் நியாய...ன குறைபாடுகள் உண்டு-இப்படி மாநாட்டில் ஏகமனதாக உடன்பாடு காணப்பட்டது.

இந்த மாநாட்டில் அறிஞர்கள், நிர்வாக நிபுணர்கள், அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள், சிங்களப் பேராசிரியர் கே.எம்.டி.சில்வா உட்பட பல சிங்களப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட இரண்டு விடயங்களிலும், கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் பொதுவான உடன்பாடுகாணப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இம்மாநாட்டில் அமெரிக்க வெளிநாட்டமைச்சு அதிகாரி திரு.ஜோன்மக்டொனல்ட் கலந்து கொண்டது முக்கியமானது. திரு. மக்டொனல்ட் சொன்னதாவது;

சர்வதேச அரசியலில் இரண்டுவித இராஜதந்திரம் உண்டு.

ஒன்று, அரசுடன் இன்னொரு அரசு நேரடியாகப் பேசுவது,

இரண்டு, உத்தியோகப் பற்றற்ற ரீதியில் பேசுவது.

இலங்கை இனப்பிரச்சினையில் இதுவரை அரசாங்கங்களுக்குஇடையே தான் பேச்சுக்கள் நடந்தன.

இரண்டாவதுரகஇராஜதந்திரத்தைக் கடைப் பிடிக்க காலம் வந்துள்ளது.

உத்தியோகப்பற்றற்ற

(4-ஆம் பக்கம் பார்க்க)

(14.12.1985)

இழப்புகளை நேரில் கண்டறியுங்கள்

## ஐக்கிய நாடுகள் சபையே அவதானிப்புக் குழுவை அவசரமாக அனுப்பு!

(01.12.1985)

சுவிஸிலிருந்து

## இலங்கைத் தமிழரை வெளியேற்றுதீர்!

### மன்னிப்புச் சபை கேட்கிறது

பேர்ன், டிச 10

அரசியல் தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளை, சுவிட்சர்லாந்தில் இருந்து வெளியேற்ற வேண்டாம்.

சர்வதேச மன்னிப்புச் சபை, சுவிட்சர்லாந்து அரசாங்கத்தை மேற் கண்டவாறு கேட்டுள்ளது.

தஞ்சம் அடைந்தவர்களை நிர்ப்பந்தமாக இலங்கைக்கு அனுப்பி வைத்தால் அவர்கள் அங்கு பழிவாங்கப்படுவார்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை, சுவிஸ் அரசுக்கு அறிவித்துள்ளது.

இதனிடையில், தமிழ் அகதிகளை நாடு கடத்துவது இல்லை என்ற இடைக்காலத் தீர்மானத்தை சுவிஸ் அரசாங்கம் மீளாய்வு செய்து வருகின்றது.

4,500 இலங்கைத் தமிழர் அரசியல் தஞ்சம் கோரி சுவிஸ் நாட்டில் தங்கி உள்ளனர்.

(10.12.1985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசைவற்ற 3 தசாப்தங்கள்

...கை மீ 12 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 14 (27-11-1985) UTHAYAN — A LIVELY TAMIL DA...

வடக்கும், கிழக்கும் இணைந்த

## மாநில சுயாட்சியையே இந்தியா வலியுறுத்தும்

டாக்கா உச்சிச் சந்திப்பில் கடும்போக்கை கடைப்பிடிக்க வெளியுறவு பிரிவு தயாராகிறது

புதுடில்லி, நவ. 26

இலங்கை இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வாக, வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சுயாட்சித் திட்டத்தையே இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. டாக்கா உச்சிச் சந்திப்பில் அதையே பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த இருக்கிறார்.

## கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் துரிதம்

### வீதியால் வந்தவர்களும் வேலை வாங்கப்படுகின்றனர்

கிளிநொச்சி, டிச. 20, கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அனுராதபுரத்திலிருந்து வந்த ஆயுதப் படையினர் கவச வாகனங்களுடன் கிளிநொச்சி இராணுவ முகாமில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சக்தி வாய்ந்த விசேஷ தொலைத் தொடர்பு வசதிகள் பொருத்தப்பட்ட கண்ணி வெடிகளுக்குத் தாக்குப் பிடிக்கத்தக்க கவச வாகனங்களுடன் இ.போ.ச. பஸ்களிலும் லொறிகளிலும் நடை பவனியாகவும் கிளிநொச்சி கூட்டுமுகாமுக்கு இராணுவம் வந்தபோது நகரம் பதற்றம் அடைந்தது.

நகரப்பகுதி மக்கள் என்னவோ ஏதோ என்று பயந்து பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றனர்.

இதேவேளை வீதியால் வந்த பலர் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு முகாம் விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அநுராதபுரத்தில் இருந்து வந்த, கவச வாகனங்களையும் ஆயுதப் படையினரையும் எதிர்கொண்டு அழைத்து வருவதற்காக கிளிநொச்சி இராணுவத்தினர் நடைபவனியாக முறிகண்டிப் பகுதிக்கு சென்றிருந்தனர்.

பிரதான கண்டி வீதி ஊடாக செல்லாது கிராமங்களூடாகச் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததால் சில இளைஞர்கள் காயமடைந்தனர்.

வழி நெடுக சோதனைகளை அவர்கள் மேற்கொண்டனர். வாகனங்களும் மறித்துச் சோதனையிடப்பட்டன.

இந்தச் சோதனைகளின் போது இரணைமடுப் பகுதியில் கள்ள மின்சாரம் எடுத்த ஒலைக் கைது செய்ததுடன் அவர் பாவித்த வயர், சுவிச், என்பவைற்றையும் இராணுவத்தினர் எடுத்து வந்தனர்.

அநுராதபுரத்தில் இருந்து கிளிநொச்சி வந்து சேர்ந்த கவச வாகனங்களிலும் ஆயுதப் படையினரிலும் சுமார் 10 கவச வாகனங்களும் 250 படை வீரர்களும் கிளிநொச்சியில் நிரந்தரமாக நிறுத்தப்படலாம் என நம்பப்படுகிறது.

(20.12.1985)

## இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க பாக். ஜனாதிபதி தயார்

5 நாள் விஜயமுடிவில்

(16.12.1985)

இலங்கைத் தமிழர் பிரச்சினை:

## இராணுவத் தீர்வை இந்தியா சகிக்காது

பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் தீர்வே இறுதியானதாக இருக்கும்

லோக சபையில் அமைச்சர் பகத்

புதுடில்லி, டிச9.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படுவதை இந்தியா ஒரு போதும் சகிக்காது. அவ்வாறான ஒரு தீர்வுக்கு இந்தியா எப்போதும் எதிர்ப்பாகவே உள்ளது.

இவ்வாறு வெளியுறவு அமைச்சர் திரு.பி.ஆர். பகத் லோக சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நிலைமை குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் பகத் அதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் வன்செயல்கள் அதிகரித்தது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது. அவை நிறுத்தப்பட வேண்டும். இராணுவத்தை கட்டுப்பாட்டினுள் கொண்டுவர இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது - என்றும் அமைச்சர் பகத் சொன்னார்.

(10.12.1985)

★ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு:

## இலங்கை அரசு ஐ. நாவுக்கு பதில் சொல்லியாக வேண்டும்

சபையில் லெந்தமன் வலியுறுத்து

(03.12.1985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 இன் முப்பரிமாணம்

நப்பின்னை

எண்களிலே பதின்மூன்று நல்வாய்ப்பு இல்லாத எண் என்பது பலரது நம்பிக்கையாகும். இது மூட நம்பிக்கையாகவும் இருக்கலாம். இதன் காரணமாகச் சில மருத்துவ மனைகளில் பதின்மூன்றாம் விடுதி கூட அமைக்கப்படுவதில்லை. இவ்வாறான நல்வாய்ப்பில்லாத பதின்மூன்று தான் சிறிலங்காவின் அரசமைப்பின் திருத்தமாகக் கொண்டு வரப்பட்டு இன்று கூட்டல், கழித்தல், நீக்கல் என்ற முப்பரிமாணத்துடன் பேசப்படும் பொருளாக உள்ளது.

## பதின்மூன்று கூட்டல்

2009இல் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மௌனித்த பின்னர் ஏற்பட்ட பெரும் பின்னடைவைத் தொடர்ந்து இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குப் பதின்மூன்றுக்கும் அப்பால் சென்று தீர்வு காணப்படும் என்று சிறிலங்காவின் ஜனாதிபதி கூறியிருந்தார். இதனைத்தான் பதின்மூன்று கூட்டல் என்று கூறினார்கள்.
பதின்மூன்றோ, பதின்மூன்றின் கூட்டலோ தமிழ்த் தேசிய மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்பது என்றோ உணரப்பட்ட யதார்த்த நிலை.
ஈழம் வாழ் தமிழ் மக்களை தேசிய இனமாகக் கொள்ள மறுப்பவர்களும், தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை மறுப்பவர்களுமே தமிழ் மக்களைச் சிறுபான்மை இனம் என்று கூறிவருகின்றனர். இதனால் தான் பதின்மூன்றை வைத்துத் தீர்வு காணலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.
தற்பொழுது பதின்மூன்று கூட்டல் முடிந்துவிட்டது. பதின்மூன்றுக்கூட்டலுடன் தீர்வு காண முற்பட்டவர்கள் பதின்மூன்றையே காப்பாற்றுங்கள் என்று கூக்குரல் இடுவதோடு புதுடில்லி வரை சென்று கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.
'13' கூட்டல் பற்றிய பேசிய இந்தியாவும் கூட இப்போது அதனைக் காக்க கச்சை கட்டி இறங்க வேண்டியதாகிவிட்டது.

## புதுமையான ஏற்பாடு

1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கும், சிறிலங்கா ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தனாவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய சிறிலங்கா அரசமைப்பில் கொண்டு வரப்பட்டதே 13 ஆவது திருத்தமாகும். இது ஒரு புதுமையான ஏற்பாடு. ஏனெனில் இங்கே பிரச்சினைக்குரிய தமிழர் தரப்பு இந்த ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி எப்படித் தமிழர் தரப்புப் பிரதிநிதியாக ஒப்பந்தம் செய்தார் என்பது கேள்விக்குரியதே.
பொதுவாக பிரச்சினைக்குரிய இரு தரப்பும் மேசையில் பேசுவதும், மூன்றாம் தரப்பாக நடுநிலையானவர்கள் பேச்சில் கலந்து கொள்வதும் உலகெங்கும் நடைபெறும் வழமையாகும். இந்திராகாந்தியும் இவ்வாறே ஜே. ஆரையும், தமிழர் தரப்பையும் பேச்சு மேசைக்கு அழைத்து வந்தார். இந்தப் பேச்சுக்கு அடித்தளமாக இணைப்பு '' சி'' என்ற வரைவையும் மூத்த அரசியல் ஆலோசகர் ஜி.பார்த்த சாரதி மூலம் வகுத்தார்.
ராஜீவ் காந்தியோ வழக்கமான நடைமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்துச் சென்று அசோகா விருந்தினர் மாளிகையில் கறுப்புப் பூனைகள் என்ற காவலர்களையும் துணைக்கு வைத்துக்கொண்டு தானும், ஜே.ஆரும் உடன்படிக்கையில் கையெழுத்திடப் போகிறார்கள் என்றும், அதனை ஏற்றுக் கொள்ளுமாறும் வற்புறுத்தினார். அதனைத் தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையிலேயே தமிழர் தரப்பினர் எவரும் கையெழுந்திடாத ஒப்பந்தம் ஜே. ஆருக்கும் ராஜீவுக்கும் இடையே ஏற்பட்டது.

## மறக்கப்பட்ட கூட்டல்

அதனடிப்படையில் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. மொத்தத்தில் ஜே. ஆர். ராஜீவ் ஒப்பந்தம் ஈழத் தமிழ் மக்கள் மேல் அவர்களது இலட்சியங்களுக்கு எதிராகத் திணிக்கப்பட்ட ஒன்றேயாகும்.
இன்று இலங்கையிலுள்ள சிங்கள தமிழ் அரசியல்வாதிகளும், மதம் சார்ந்த அமைப்புக்களும் தமிழகத்து அரசியல் கட்சிகளும் பதின்மூன்று பதின்மூன்று என்று கூக்குரலிடுகின்றனர். 13 கூட்டலை அனைவரும் மறந்து விட்டனர். 13 கழித்தலையும், 13நீக்கலையுமே இன்று சிங்களத்து அரசியல்வாதிகளும், மதவாதிகளும் வலியுறுத்துகின்றனர். தமிழர் தரப்போ 13ஐக் காப்பாற்றுங்கள் என்று புதுடில்லி வரை சென்று கதறவேண்டி இருக்கிறது. தமிழகத்து அரசியல்வாதிகளும் 13 ஐக் காப்பாற்றுங்கள் என்று அறிக்கைகள் விடுகின்றனர்.
1987 இல் எதிர்க்கட்சியிலிருந்த முத்துவேலர் கருணாநிதி ஜே.ஆர்.- ராஜீவ் ஒப்பந்தத்தை ''வெறுங்கையில் முழம் போடுவதாக'' எள்ளி நகையாடினார். அவர், ஆட்சியில் இருக்கும் பொழுது ஒரு கொள்கையும், எதிர்க்கட்சியில் இருக்கும் பொழுது வேறு கொள்கைகளையும் கடைப்பிடிப்பவர். ஆட்சியில் இருந்த பொழுது, ''1991 இறற்கு முன் 1991 இற்குப் பின் என தி.மு.காவின் கொள்கை மாற்றிவிட்டது'' என்று கூறியவர், இந்திய மத்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை தான் ''திராவிட முன்னேற்றக்கழகத்தின் கொள்கையும், இதில் ஈழத் தமிழர் பிரச்சினையும் உள்ளடங்கியதே'' என்று 2006 இல் வெளிப்படையாக அறிவித்தவர்.
இப்பொழுது 13 ஆவது திருத்தத்தைக் காப்பாற்றுமாறு மன்மோகன்சிங்கிற்கு அவர் கடிதம் எழுதும் நிலை ஏற்பட்டுள்ளது. உண்மையில் ஏன் இவ்வாறு 13 பற்றிய பெரிய விவாதம் நடைபெறுகின்றது?

## வீழ்த்துவதே நோக்கம்

13 ஆல் தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்குச் சமமானவர்களாக வந்துவிடுவார்களா என்றால் இல்லை. அப்படியென்றால் ஏன் இந்த அங்கலாய்ப்புகள்?
2009 வரை முப்படைகள், காவற்றுறை, வங்கிகள் போன்ற கட்டமைப்புடன் வாழ்ந்த தமிழினம் பெரிய தோல்வியை உலக நாடுகளின் ஓரவஞ்சனையால் எதிர்கொண்டது. வெள்ளையர்களின் வெளியேற்றத்துக்குப் பின்னர் நிலம், மொழி, மதம் என்பனவற்றால் சிறுகச் சிறுக அழிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் வலிமை பெற்று வந்த பொழுதுதான் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்த இனம் மீண்டும் எழுச்சி பெற்றுவிடக்கூடாது என்பதே சிங்களத்து அனைத்துக் கட்சிகளின் விருப்பம்.
இதற்கு விதிவிலக்காகக் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ணாவும் வேறு சிலரும் உள்ளனர். தமிழினம் எழுச்சி பெறுவதாக இருந்தால் அதற்குத் தேசியம், சுயநிர்யணம் என்ற அடிப்படைக் கோட்பாடுகள் தேவை. தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றை மக்கள் மறக்கவேண்டும். அல்லது அவர்களின் மனங்களில் இருந்து, சிந்தனைகளிலிருந்து அது மறக்கடிக்கப்பட வேண்டும். இந்தக் கைங்கரியத்தைத்தான் மஹிந்த அரசும், மன்மோகன் சிங் அரசும் கன கச்சிதமாகச் செய்து வருகின்றன 13 இன் மூலம்.

## தப்புக்கணக்கு

தமிழ் அரசியல் கட்சிகளும் ஏதோ 13 ஐக் காப்பாற்றுங்கள் என்று ஓலமிட மக்களும் 13 இல் ஏதோ இருக்கிறது அதனாற்றான் சிங்கள ஆட்சியாளர்களும், இதரர்களும் 13 இல் காத்தலைச் செய்யுங்கள், 13 ஐ முற்றாக நீக்குங்கள் என்று ஓலமிடுகின்றனர். என்று தப்பாக எண்ணுகின்றனர். 2009 இற்குப் பின்னர் சிங்கள ஆக்கிரமிப்பும், பௌத்த மேலாதிக்க ஆக்கிரமிப்பும் தமிழ் மண்ணில் மிக மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றிலிருந்து மக்களின் உணர்வை திசை திருப்ப எடுக்கப்பட்டுள்ள வஞ்சகத் திட்டம் தான் 13 கழித்தலும் நீக்கலுமாகும். இந்தப் பயங்கரச் சதியிலிருந்து யார் தான் தமிழ்த்தேசிய இனத்தைக் காப்பாற்றுவார்களோ தெரியவில்லை.



## ஜெயந்தியைத் தெரியாது...

ஐம்புவின் தடாலடி

புத்த ஜெயந்தியை (வெசாக்) முன்னிட்டு நகரில் நடந்த அலங்கார வெளிச்சவீட்டு நிகழ்வுக்கு ஐம்புலிங்கத்தை வற்புறுத்தி அழைத்துச் சென்றார் நண்பர். வண்ண வண்ண அலங்கார மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த வற்றைப் பார்த்தபடி வந்து கொண்டிருந்த ஐம்புலிங் கத்தை திடீரென ஓரிடத்தில் மறித்தவர்கள், இவ்வளவு நேரமும் அவர் பார்த்தவற்றின் அடிப்படையில் புத்தர் ஜெயந்தி பற்றிச் சில வார்த்தைகள் பேசும்படி சொன்னார் கள். ஆடிப் போனார் ஐம்பு. என்றாலும் சமாளித்துக் கொண்டு சொல்லத் தொடங்கினார்,
"புத்தர் இந்தியாவில் பிறந்தவர். சிறந்த தத்துவவாதி. வாழ்க்கையின் உண்மையை அறிந்து ஞானம் பெற்றவர். ஆனால் ஜெயந்தி யாரென்று எனக்குத் தெரியாது. அவருடைய மனைவியாக இருக்கக்கூடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை



07

■ அழகிய பாண்டியன்

1973இல் 'லேக்சைட்' பாடசாலைப் முடித்த கையோடு பில்கேட்ஸ் ஹவார்டு பல்கலைக் கழகத்தில் இணைந்தார். இதற்கு முன்பாகவே போல் ஆலன் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருந்தார்.

படிப்பின் காரணமாக இருவரும் வெவ்வேறு ஊர்களில் இருந்ததால் தினமும் சந்தித்துப் பேச முடியாத நிலை! போல் ஆலனுக்கு வொஷிங்டனிலும், பில்கேட்ஸுக்கு ஹவார்டிலும் கணினி நண்பர்கள் கிடைக்கவுமில்லை.

அதனால் இருவருமே வெறுத்துப் போய் ஒருவரை ஒருவர் தேடத் தொடங்கினார்கள். தொலைபேசி வழி உரையாடல் மட்டும் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. கணினியைப் பற்றிப் பேசாமல், சிந்திக்கமால் இருவருக்கும் இருக்க முடியவில்லை.

இருவரும் மீண்டும் ஒரே இடத்தில் இருந்தால் அது வருங்காலக் கணினிக் கனவுகளுக்கு வசதியாக இருக்கும் என்று முடிவெடுத்தனர். இதற்கு வசதியாக போல் ஆலன் ஹவார்டு அருகில் ஹனிவெல் (Honeywell) நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து கொண்டார். பிரிந்த நண்பர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தபோது கணினி பற்றியே பேசிப் பேசித் தங்கள் கனவுகளை வளர்த்துக் கொண்டார்கள்.

### திருப்புமுனை

கணினியைப் பற்றிப் பேசுவது தான் அவர்களின் பொழுது போக்காகவும், இலட்சியமாகவும் இருந்தன. ஒருநாள் தன் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போல் ஆலனை, 1975 ஜனவரி மாதம் வெளியாகியிருந்த 'பாப்புலர் எலக்ட்ரானிக்ஸ்' (popular electronics) இதழின் அட்டைப் படம் தடுத்து நிறுத்தியது.

அதன் அட்டையில் ''உலகின் முதல் மைக்ரோ கணினி அல்டெய்ர்'' (Altair 8800) என்று குறிப்பிட்டு, அதன் புகைப்படமும் வெளியாகி இருந்தது!

கணினி பைத்தியமாக இருந்த போல் ஆலன் உடனே அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்தபோது ஒரு விஷயம் புரிந்தது. அதாவது இதுவரையில் பிரம்மாண்ட அளவிலும், பெரிய விலையிலும் இருந்த கணினி இப்போது கொஞ்சம் சிறிய அளவில், நடுத்தர மக்களும் வாங்கக் கூடிய விலையில் வெளிவரப் போகிறது! அதுதான் அல்டெய்ர்!

''சிறிய அளவில், குறைந்த விலையில் கணினிகளை உருவாக்க வேண்டும்'' என்பதுதான் பில், ஆலன் இருவரின் கனவாக இருந்தது. இவர்களின் கனவை ஏதோ ஒரு நிறுவனம் நனவாக்கப் போகிறது என்பது தெரிந்ததும் அவர்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆம்! அவர்களின் கனவு ஒன்று விஞ்ஞானத்தில் சாத்தியமாகிறதென்றால் அது அவர்களின் கற்பனைக்குக் கிடைத்த வெற்றிதானே!

அப்படி ஒன்றும் 'அல்டெய்ர்' பிரமாதமாக இல்லை. இன்றைய கணினியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அல்டெய்ர்க்கு கீபோர்ட், மவுஸ், மானிட்டர் எதுவும் கிடையாது. சாதாரண அளவில் ஒரு பெட்டி மாதிரியும், அதில் சுவிட்சுகளும் சில பிளக்குகளும் இருந்தன.

சில சுவிட்சுகளை அழுத்தினால் அதற்கேற்ப விளக்குகள் வண்ண வண்ணமாக அணைந்தணைந்து எரியும். இதுதான் அல்டெய்ரின் சாதனை. இதுவரை எந்தக் கணினிக்கும் அதனுடன் இணைந்த கீபோர்ட், மவுஸ் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கணினி தொழில்நுட்பம் தனது அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அல்டெய்ர் தெளிவாக எடுத்துரைத்தது.

இதுவரை பிரம்மாண்டமான கணினிகளுக்கு மென்பொருள் எழுதியிருந்த பில்லும், போல் ஆலனும் இந்தச் சிறியராக அல்டெய்ர்க்கும் மென்பொருள் எழுத ஆசைப் பட்டார்கள். ஆனால் அல்டெய்ரில் அதற்கான வசதிகள் இல்லை. இந்த வசதியை மட்டும் அல்டெய்ர்க்குள் கொண்டு வந்துவிட்டால் சிறிய ரகக் கணினிகள், குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைத்துவிடும். அவர்களின் கனவும் நனவாகி விடும்.

'அல்டெய்ர்' கணினியைப் பற்றிப் பத்திரிகையில் படித்த கணினி அபிமானிகள் அதை வாங்குவதற்குப் போட்டிப் போட்டு அதைத் தயாரித்த எம்ஜரிஎஸ்(MITS Micro Instrumentaion and Telemetry Systems) நிறுவனத்துக்கு ஆர்டர் கொடுத்தார்கள்.


அல்டெய்ர்க்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு வியந்த எம்ஜரிஎஸ் நிறுவனத்தின் முதலாளி எட் ராபர்ட்ஸ் செய்வதறியாது திகைத்தார். காரணம், அது உண்மையில் ஒரு கணினி அல்ல விளக்குகள் அணைந்தணைந்து எரியும் ஓர் மின்னியல் பெட்டிதான். ஆனால், அதற்குத் தான் அவர் '' மைக்ரோ கணினி'' என்றுபெயர்சூட்டியிருந்தார். ''இந்தப் பெயரைப் பார்த்துத் தான் மக்கள் தவறாகப் புரிந்து கொண்டு ஆர்டர் கொடுக்கிறார்களோ என்னவோ என்று எட்ராபர்ட்ஸ் குழம்பிப் போனார்.

மக்கள் எதிர்பார்க்கும் அம்சங்கள் அல்டெய்ரில் இல்லாமல் போனால், அதைத் திருப்பியனுப்பி விட்டு ''எங்கள் பணத்தைத் திருப்பிக் கொடு'' என்று கேட்கவும் தயங்க மாட்டார்கள்.

மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க வேண்டுமானால், பெரிய கணினிகளில் இருக்கும் விஷயங்களை அல்டெய்ர்க்குள் கொண்டு வரவேண்டும். அதற்கான வழிமுறைகள் எதுவும் எட்ராபர்ட்ஸுக்குத் தெரியாது. அவர் ஒரு வியாபாரி அவ்வளவுதான்.

''அல்டெய்ரை ஒரு வெற்றிகரான கணினியாக மாற்றுவது எப்படி?'' என்று எட் ராபர்ட்ஸ் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்தார். மற்றொரு பக்கம் பில்லும், போல் ஆலனும் அல்டெய்ர்க்குள் மென்பொருளை நுழைப்பதெப்படி? என்று விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

அல்டெய்ரைத் தயாரித்த எட்ராபர்ட்ஸுக்குத் தோன்றாத யோசனை பில்லுக்கும், போலுக்கும் தோன்றியது. உடனே பில்கேட்ஸ் தொலைபேசி வழியாக எட்ராபர்ட்ஸை தொடர்பு கொண்டு, ''உங்கள் அல்டெய்ர் கணினிக்கு 'பேஸிக் இண்டொர்ப்ரெடர்' என்கிற மென்பொருளை எழுதிக் கொண்டிருக்கிறோம். அதைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார். எதிர்பாராத திசையிலிருந்து இப்படி ஓர் ஆச்சர்யமான கேள்வியை எதிர்பாராத எட்ராபர்ட்ஸ் ''அப்படியா? உடனே... எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு 'ஆல்பகர்க்கீ' நகருக்கு வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தார். அந்நகரில்தான் எம்ஜரிஎஸ் தலைமையகம் இருக்கிறது.



''சிறிய அளவில்,
குறைந்த விலையில்
கணினிகளை உரு
வாக்க வேண்டும்''
என்பதுதான் பில்
ஆலன் இருவரின்
கனவாக இருந்தது.
இவர்களின் கனவை
ஏதோ ஒரு நிறுவனம்
நனவாக்கப் போகிறது
என்பது தெரிந்ததும்
அவர்களுக்கு மட்
டில்லா மகிழ்ச்சி ஏற்பட்
டது! ஆம் அவர்களின்
கனவுஒன்று விஞ்ஞா
னத்தில் சாத்தியமாகிற
தென்றால் அது
அவர்களின் கற்ப
னைக்குக் கிடைத்த
வெற்றிதானே!



## ஜூலை

கால்க்கட்டுக்கழற்றி வந்தார்கள்
நம் முதுகிலேறி வழிந்தனர் எல்லா இடமும்
எல்லா ஊரும்
வேலிகள் பிடுங்கி வேள்விகள் நடந்தது
தீ மூட்டி முளாசியெரிய
செல்லின் சன்னங்கள் பூமி பிளந்து
செத்தனர் என்ற சொல்லும்
காணவில்லை என்ற சொல்லும்
கைதாகினர் என்ற சொல்லும்
எல்லோர் வாயிலுமிருந்தது
பின் ஊரை மேவிய துப்பாக்கிகள்
ஊரைக் கூடரராத்துள் அடைத்தனர்
பலரில்லாமல் போக
பதை பதைத்தன காலம்
சிறை வீடுகள் நிரம்பியும்
பிண அறைகள் நிரம்பியும்
காண்கின்றனர் எஞ்சியோர்
காலம் கறுத்தது நிவாரண வரிசைகளும்
காணாமல் போனோரின்
வரிசைகளும் முடிவில்லாமல் நீண்டது
யாரையும் யாரும் கேள்வி கேட்பதில்லை
கலக்கத்தின் அச்சம் பேச்சை மறைக்க
தீயாய் முளாசி எரிய
அருகி மாண்டனர் மாந்தரெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

07.07.2013 முதல்13.07.2013 வரை

எதருபவர் - வித்தியா

**மேடம்**- திட்டமிட்ட பணிபுரிந்து வாழ்வில், சிறப்பான முன்னேற்றம் காண்பீர்கள். வசீகரமாகப் பேசி, உறவினர்களிடம் நன்மதிப்பைப் பெறுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். நண்பரிடம் கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும். இல்லறத்துணை கருத்து, ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார நடைமுறை திருப்திகரமான அளவில் இருக்கும். பணப்பரிவர்த்தனை சீராகும். பணியாளர், நிர்வாகத்தின் சட்டங்களை அக்கறையுடன் பின்பற்றுவர். மாணவர்கள், கூடுதல் பயிற்சியால் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**இடபம்**- வாழ்வில் கூடுதல் பலம் பெற, கிடைக்கிற வாய்ப்புகளை பயன்படுத்தி, தகுந்த அளவில் நன்மை பெறுவீர்கள். அதிக விலை மதிப்புள்ள பொருள்களை, உரிய கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். நண்பர்களிடம் கருத்து வேறுபாடு காரணமாக, உடல் சோர்வும், படிப்பில் கவனக் குறைவையும் எதிர்கொள்வர். உங்களின் ஊக்கமும், ஆதரவும் நல்வழி நடத்தும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு, சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள், விளையாட்டுகளில் சாகசத்தைத் தவிர்க்கவும்.

**மிதுனம்**-வாழ்வில் எதிர்படுகின்ற சிரமங்களை, மன உறுதி நிறைந்த செயல்களால் சரி செய்வீர்கள். உங்களுக்கு ஆதரவாகச் செயற்படும் நண்பர், உறவினர்களை மதித்து நடப்பீர்கள். தொழிலில் உருவாகிற இடையூறைச் சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை இலக்கு நிறைவேறும். பணியாளர்கள், குடும்ப நலன் கருதி, கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள், சேமிப்பு பணத்தை, குடும்பத்தின் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படுத்துவர். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை தவிர்ப்பதால், படிப்பில் கவனம் வளரும்.

**கடகம்**- ஆடம்பர செயல்களால், தகுதிக்கு மீறிய பணச்செலவு ஏற்படலாம். கவனம் தேவை. அயல் வீட்டாருடன் நட்புறவைப் பாதுகாப்பதில் கூடுதல் அக்கறையும், சகிப்புத் தன்மை குணத்தைப் பின்பற்றுவதும் அவசியமாகும். இல்லறத்துணை உங்களின் மனக்கவலை மாற்ற, தன்வழி சார்ந்த உறவினர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கு நிறைவேற தாமதமாகும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிவதால் மட்டுமே, குளறுபடி வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள், பெற்றோரின் சூழ்நிலை உணர்ந்து தேவைகளை குறைத்து கொள்வது நல்லது.

**சிங்கம்**- சில நேரங்களில் இயலாது என்று, மனதில் நினைத்த காரியம் கூட எதிர்பாராத அளவில் நிறைவேறி, மனதில் மகிழ்ச்சியை உருவாக்கும். பண வசதி திருப்திகரமான அளவில் இருக்கும். இயன்ற அளவில் தானம், தர்மம் நிறைந்த அறப்பணி செய்து, நற்பெயரும், புகழும் பெறுவீர்கள். தொழிலில் ஊற்பத்தி அதிகரிக்க, கூடுதல் உபகரணம் வாங்குவீர்கள். பணியாளர்கள், பணித்திறன் வளர்த்து நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகைப் பயன் பெறுவர். மாணவர்கள், ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டு பெறும் வகையில், அதிக தரத் தேர்ச்சியைப் பெறுவர்.

**கன்னி**-உங்களின் ஒவ்வொரு செயலிலும் முன்யோசனை குணம் அவசியமாகும். அரசு தொடர்பான உதவியை, உரிய முயற்சியால் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு தகுந்த பாதுகாப்பைத் தரும். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி, உற்பத்தி இலக்கை பூர்த்தி செய்வது நல்லது. பெண்கள், கணவரின் நல்ல குணத்தை பாராட்டுவர். மாணவர்கள் அதிக பயிற்சியால், தரதேர்ச்சியை பாதுகாக்கலாம்.

**துலாம்**- சுயலாபம் பெற சிலர், உங்களை புகழ்ந்து பேசுவர். முன் யோசனையுடன் நடந்து கொள்வதால், தேவையற்ற சிரமம், பொருள் செலவு வராமல் தவிர்க்கலாம். உடன் பிறந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செயற்படுவீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை, அக்கறையுடன் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள், உரிய பயிற்சியால் சராசரி தேர்ச்சியைப் பெறுவர்.

**விருச்சிகம்**-உங்கள் பேச்சு சுயநலம் பாதுகாப்பதிலும், பிறரை அவமதிக்கும் வகையிலும் அமைந்து விடும். நற்பெயரைப் பாதுகாப்பதில், தகுந்த கவனம் வேண்டும். பூர்வீக சொத்தில் பெறுகிற வருமானம் கூடுதல் செலவுக்கு பயன்படும். எதிரியால் வரும் தொந்தரவை, மாற்று உபாயத்தால் சரி செய்வது நல்லது. பணியாளர்கள், சக பணியாளர்களின் செயல் திறமையின் உயர்வு, தாழ்வு பற்றி பேசவேண்டாம். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் உரிய கவனம் வேண்டும்.

**தனுசு** -பணவரவு அதிக அளவில் பெறுவதற்காக கிடைக்கிற, புதிய வாப்புகளை தவறாமல் பயன்படுத்துவீர்கள். முயற்சிக்கு, உரிய பலன் முழுமையாக வந்து சேரும். உங்களின் கஷ்ட சூழ்நிலையைப் பார்த்து விலகிய நண்பர், உறவினர் மதித்து அன்பு பாராட்டுவர். எதிரி உங்கள் வாழ்வியல் சிறப்பு கண்டு, வியந்து விலகுவர். இல்லறத் துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து, குடும்ப நலன் காத்திடுவார். பெண்கள், உறவினர்களை உபசரித்து, கணவரிடம் நன்மதிப்பு பெறுவர். மாணவர்கள், கவனமுடன் படித்து, தரதேர்ச்சி இலக்கை அடைவர்.

**மகரம்**-சமூகத்தில் பெற்ற நன்மதிப்பை, அக்கறையுடன் பேணிக் காத்திடுவீர்கள். உங்களின் ஆலோசனையை மதித்து, உறவினர் கூடுதல் அன்பு பாராட்டுவர். இல்லறத் துணையிடம் நிதானத்தைப் பின்பற்றவும். பணியாளர்கள், கூடுதல் தொழில் நுட்பம் அறிவதால் மட்டுமே பணித்திறன் வளரும். குடும்ப பெண்கள், அத்தியாவசிய செலவுக்கு மட்டும், முன்னுரிமை தருவது நல்லது. மாணவர்கள், ஆரோக்கிய உடல்நலம் அமைந்து படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.

**கும்பம்** - உங்கள் மனதில் ஆன்மிக சிந்தனையும், பிறருக்கு உதவுகிற மனப்பான்மையும் வளரும். நட்புக்கு இலக்கணமாக நடந்து கொள்வீர்கள். மனதில் இருந்த பய உணர்வு நீங்கும். இல்லறத் துணை, நீண்ட நாள் மனக் கஷ்டத்தை சொல்லி ஆறுதல் பெறுவார். தொழில், வியாபாரத்தில் ஈடுபட புத்திரருக்கு வாய்ப்பு தர விரும்புபவர்கள் உரிய பயிற்சி வழங்குவர். குடும்ப பெண்கள், கணவரின் சம்மதமின்றி பிறருக்காக, எவ்வித பணப்பொறுப்பும் ஏற்க வேண்டம். மாணவர்கள், முறையான பயிற்சியால் மட்டுமே எதிர்பார்த்த தேர்ச்சியைப் பெறமுடியும்.

**மீனம்**- உங்களின் பொன்னான நேரத்தை வீணான விடயம் பேசி, விரயமாக்குபவரிடம் விலகுவது நல்லது. சான்றோர் தரிசனம், ஆலய வழிபாடு நிறைவேற்றுவீர்கள். மனதில் புத்துணர்வு பிறக்கும். பொறாமை குணம் உள்ளவரால் வருகிற சிரமம் சரி செய்வீர்கள். அதிகாரிகள் சிறப்பாக பணி புரிந்து நிர்வாகத்திடம் பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள், குடும்ப எதிர்கால நலன் சிறக்க, கணவருக்குத் தகுந்த உதவி புரிவர். மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

# நா காக்க.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுத ஏலும். இத்தனையும் கூறியது நான்தான். வடிவேலு பாணியிற் சொல்லப் போனால் ''எனக்கு இது தேவையில்லாத வேலை''இப்போதுதான் மெல்ல மெல்லப் புரிகின்றது.

''டேய்! கதை எழுதிறது அப்பிடிச் சுகமான வேலையெண்டால் நீயும் ஒண்டை எழுதி அனுப்பியிருக்கலாம்தானே?''

இது நண்பன் யசோதரன். ''விசரா! எனக்கு இது தேவையில்லை. வேணுமெண்டாற் சொல்லு! அடுத்த பௌர்ணமி விழாவுக்கு நானும் கதை எழுதி அனுப்புறன். முதற் பரிசும் வாங்கிக் காட்டுகிறன்''

''கதை எழுதிறதெண்டாப் போலை அப்பிடி நினைச்ச உடனை எழுதேலாது. கதைக்குச் சரியான கரு வேணும். கதை மூலமாய் சமூகத்துக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்ல வேணும்''இது நண்பன் ''உங்கை உவங்களெல்லாம் என்ன செய்தியைச் சொல்லுறாங்கள்! சும்மா பேரும் புகழும் தான். கண்டறியாத எழுத்தாளர்கள்.'' இது நான். ஏனோ எனக்கு இப்படியொரு வக்கிரம்!

ரவீந்திரனும் தன்னுடைய பங்கிற்குத் தொடங்குகின்றான். ''உன்னிலை நாங்கள் பொறாமைப்படயில்லை. நீ முயற்சி செய்! எழுது! எழுது! எழுதிக் கொண்டேயிரு! அப்ப எத்தினையோ பிழையளை நீயே கண்டுபிடிப்பாய். பிறகு அதெல்லாத்தையும் திருத்தி எழுத எழுத உன்ரை ஆக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் மெருகேறும் கற்பனை வளம் மெல்ல மெல்ல ஊற்றெடுக்கும். எழுதத் தொடங்கினாற் சொற்பஞ்சங்கள் வராது. அப்பிடியொரு நிலைக்கு வந்தாற்தான் உன்னையொரு முழுமையான எழுத்தாளனாய் வாசக உலகம் ஏற்றுக்கொள்ளும்.''

''போங்கோடா! எடுத்த எடுப்பிலை நான் ஒரு சிறுகதை எழுதியனுப்பி அதுக்கு முதற்பரிசும் வாங்கிக் காட்டுறன். வாற இலக்கிய விழாவிலை முகில் வண்ணன் நிண்ட இடத்திலை நான் நிக்கா விட்டால்...! என்ரை பேரை மாத்திக் கூப்பிடுங்கோ! அதுவும் வேண்டாம். நான் மொட்டையடிக்கிறன். உந்த வீரபத்திரர் ஆணை! நான் நிச்சயம் மொட்டையடிப்பன்''

ஏனோ! நானும் விடுவதாயில்லை. நான் சொன்னாற் சொன்னதுதான். சரியோ பிழையோ விட்டுக் குடுக்க மாட்டான். இது என்னுடையு பலமோ பலவீனமோ நானறியேன்.

''வீணாய்த் தம்பட்டமடிக்காதை.'' ரவீந்திரன் நிதானமாகக் கூறிக்கொண்டிருந்தான். எதையுமே நான் பொருட்படுத்துவதாயில்லை. எப்படியும் கதை எழுதி அனுப்பி முதலிடம் வாங்க வேண்டும். பந்தயமும் பிடித்தாயிற்று இனிக் களத்தில் குதிக்க வேண்டியதுதான்.

அன்றைக்கு ஏதோ ஒரு மன வீச்சில் நான் எடுத்த எடுப்பு இப்படியாகுமென்று யாருக்குத் தெரியும்? அன்றெடுத்த எடுப்புத்தான். இன்றைக்குப் பத்து நாள்கள் நாய்படாப்பாடு நல்ல அமைதியும் தனிமையும் என்றைக்கு மில்லாதளவுக்குக் கிடைத்தும்கூட...! கண்ட பலன் பூச்சியம் தான்.

நேற்றிரவு மெல்லிதாகத் 'தண்ணி'யுமடித்துப் பார்த்தாச்சு. அவனொருத்தன் கண்ணதாசன் பாணியெண்டான். அதைக் கேட்டு உலகமே தெரியாமல் நித்திரை கொண்டது தான் மிச்சம். உருப்படியாய் எதுவுமில்லை. சிகரெட் அடிச்சுக் கண்டது. தொண்டை நோவும் இருமலும் தான். கதையை எப்பிடித் துவங்கிறது. எப்பிடிக் கொண்டு போறது... எதுவுமே விளங்கித் துலையுதில்லை. இதுவரை கரு எண்ட ஒண்டே வந்த பாடில்லை. சரி! அதைப் பற்றிப் பிறகு யோசிப்பம். இப்ப எதையாவது எழுதலாமெண்டால் உருப்படியாய் ஒரு வார்த்தை... மனிசி பிள்ளையளைக் கலைச்சுப் போட்டுக் கதையெழுதிறன். எண்டு தனிய இருந்து யோசிச்சு... யோசிச்சுக் கடைசியிலை விசர் தான் வரும் போலையிருக்கு. கதை எழுதிற கதைக்கே இடமில்லை.

தோல்வியை மனம் ஒப்புக்கொள்கின்றது. ஆனால் அதன் பிரதிபலன்களை எப்படித் தாங்கப் போகின்றேனோ! மனம் வேகமாய் சுழன்றடித்தது. நண்பர்களின் முகத்தில் எப்படி விளிப்பது! அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்ன புத்திமதிகளைக் கொஞ்சமும் மதிக்காமல் வீம்பு பேசிய எனக்கு, இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.

''என்னப்பா! இந்த மனிசன் கண்டறியாத அப்பாச்சிக் கிழவியை நினைச்சுக் கொண்டு சோறு தண்ணியில்லாமற் கிடந்து சாகுது. எழும்புங்கோ அப்பா! இனியெண்டாலும் செத்துப்போன அப்பாச்சியை மறந்து போட்டு எழும்பி ஆக்களோடை பேசிக் கதைச்சுக் கலகலப்பாயிருங்கோ! என்னோடை பேசிப் பறைஞ்சு எத்தினை நாள்? இஞ்சார் இந்தப் பிள்ளையள் மூண்டோடும் அன்பாய் ஆசையாய்க் கதைச்சு எத்தினை நாளெண்டு சொல்லுங்கோ பாப்பம்? அப்பாச்சி செத்துப்போனா. இனியும் அவவின்ரை நினைவை விட்டுட்டு எழும்புங்கோப்பா! அப்பாச்சி அப்பாச்சி கண்டறியாத...!''

''எடி விசரி! நான் உன்ரை அப்பாச்சியையும் நினைக்கயில்லை, ஆட்டுக்குட்டியையும் நினைக்கவில்லை. சிறுகதைப் போட்டிக்குக் கதை எழுதிறதுக்குக் கருவொண்டு தேடுறனடி. அதுதானடி தனிய இருந்து யோசிக்கிறன்''


இப்படி எனது மனைவிக்குச் சொல்ல முடியுமா? முடியாது. மௌனம் தான் எனது பதில். அவள் இப்படியே நினைக்கட்டும். உண்மை தெரிந்தால் எனது மதிப்புக் கெட்டு விடுமே! அன்றைக்கு வாயில் வந்ததை உளறிக் கொட்டாமல் நாவைக் காத்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காதே!

அழகான சுருண்ட என் தலை முடியைப் பரிதாபமாகத் தடவிப் பார்க்கின்றேன். இதுவரை கோயில் நேர்த்திக்காகக் கூட மொட்டை போடாத எனக்கு....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வழித்தடமாயிரு...

பி.சுபீகா



கற்காலத்திலிருந்து மனிதன் கணினி யுகம் வரை வளர்ந்து விட்டான். ஆனால் இன்னும் ஏனோ சீதனத்தை மறக்கவில்லை. அதேபோல் பெண்களை அடக்கும் தன்மையையும், சிறுமைப் படுத்தும் தன்மையையும்கூட மறக்கவில்லை.

இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்த மனிதர்கள் ஏன் இன்னும் பெண்கள் விடயத்தில் பின் தங்கியுள்ளார்கள்?

முதலாம் உலகப்போர் வரை ஐரோப்பியப் பெண்கள்கூட வீட்டுக்குள் ஒடுங்கிக் கிடந்தார்களாம். போரின் காரணமாக தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு, அவர்கள் தொழிற்சாலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், போன்றவற்றில் வேலைக்கமர்த்தப்பட்ட போதுதான் தமது வலிமையை உணர்ந்து விழித்தெழுந்து கோசமிட்டார்களாம். இன்று எமது பெண்கள் கூட விழித்தெழுந்ததாக சொல்கிறார்கள்.ஆனால் பெயரளவில் மட்டும்தான்.

புகுந்த வீடுதான் பெண்ணுக்கு நிரந்தரமாம். பிறந்த வீட்டை மறந்திட வேண்டுமாம். இது என்ன நியாயம்? ஆணுக்கு மட்டும் அம்மா, அப்பா, சகோதரங்கள் என்று பாசம் பொங்கி வழிய வேண்டுமாம். பெண்ணுக்குப் பாசம் பெற்றவரிடம் இருந்தாலே பாவமாம். இது எந்தச் சட்டப் புத்தகத்தில் உள்ளது? ஆண்கள் தமக்காகவே எழுதி வைத்த சட்டம். பேதைப் பெண்கள் காலங்காலமாக இந்தப் பொய்யான சட்டத்துக்குப் பயந்து, வெந்து மாயும் மனதைக் கூட வெளியில் திறந்து காட்டத் துணிவில்லாது, பொங்கிவரும் கண்ணீரை தமக்குள்ளே பூட்டி வைத்து தமக்குள்ளேயே பொருமி மடிந்து விட்டார்களே! இந்த நிலையில் இன்றும், இன்னும் எத்தனை பெண்கள்?

ஆண்கள் பெண்களை தமக்கு அடிமையாக்கி வைத்திருக்க கலாசாரம், பண்பாடு, மரபு... என்று சில ஆயுதங்களைப் பெண்களின் முதுகுத்தண்டில் பிடித்துக் கொண்டுள்ளனர் என்பதைப் பற்றிக் கொஞ்சமேனும் சிந்திக்காமல் பெண்கள் வாழ்கிறார்களே! தமிழர்களின் பண்பாடு, கலாசாரம் எல்லாம் பெண்களுக்கு மட்டுந்தானா? ஆண்களுக்கென்று எதுவுமே இல்லையா? ஏன் இன்னும் பல பெண்கள் இதை உணராமல் வாழ்கிறார்கள்?

இனியாவது பெண்கள் சிந்திக்க வேண்டும். தமது வலிமைகளை உணர வேண்டும். பத்து மாதங்கள் குழந்தையை வயிற்றில் சுமக்கத் தெரிந்த பெண்... தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக என்று ஒவ்வொரு நிலையிலும் குடும்பத்தை அன்பினால் சுமக்கத் தெரிந்த பெண்... அடங்கிப் போக வேண்டிய தேவை என்ன?

அடங்குதல், ஒடுங்குதல், ஆக்கிப் போடுதல், அடித்தாலும் உதைத்தாலும் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று தொழுதல், புகுந்த வீட்டில் பணிந்து நடந்து பிறந்த வீட்டுப் பெருமை காத்தல்... இவை எல்லாமே ஆணாதிக்கச் சிந்தனையாளர்கள் தமது சுயநலத்துக்காகத் தயாரித்து வைத்த பெண் அடிமை அட்டவணைகள்.

பெண்களே! நீங்கள் நினைக்கலாம், இப்போது நாங்கள் விடுதலை பெற்று விட்டோம் என்று. ஆனால் இன்னும் முழுதாக இல்லை.

ஆண் பெண் இருபாலாரும் சமநிலைக்கு வர, இன்றைய இளம் பெண்கள்தான் சரியாகச் செயற்பட வேண்டும். நீங்கள் படிக்க வேண்டும். உங்கள் காலில் நீங்கள் நிற்பதற்கு, சொந்தமாகத் தொழில் பார்க்க வேண்டும். போலிச் சம்பிரதாயங்களையும், ஆடம்பரத்திலான அதிக ஈடுபாட்டையும் தவிர்த்து, எது தேவை என்பதை உணர்ந்து வாழவேண்டும்.

முக்கியமாக, உங்கள் குழந்தைகளை ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று பேதம் காட்டாது சமனாக வளருங்கள். உங்கள் ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்குமான தகராறின் போது, நீ பெண் குழந்தை! நீதான் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்களானால்... அங்கு நீங்கள் பெரிய தவறு செய்கிறீர்கள். இப்படி நீங்கள் சொல்லும்போது பாதிக்கப்படுவது உங்கள் பெண் குழந்தையின் மனம் மட்டுமல்ல, உங்கள் ஆண் குழந்தையின் மனமும்தான்.ஆண் குழந்தையின் மூளையில் அது அப்போதே, பெண்கள் எதையும் விட்டுக் கொடுக்க வேண்டியவர்கள்தான் என்று பதிந்து விடுகிறது.

அதுவே நாளடைவில் அக்கா, தங்கை, மனைவி, மகள் எல்லோரும் தனக்கு விட்டுக் கொடுத்து வாழவேண்டியவர்கள் என அவனை எண்ண வைக்கிறது.


ஆகவே பெண்களே! உங்கள் பிள்ளைகளை, ஆண் பெண் பேதம் காட்டாது, விட்டுக் கொடுத்தலிலிருந்து சமையல், வீட்டு வேலை, கல்வி, தொழிற்கல்வி, தொழில் மற்றும் இதர பிற வேலைகளிலும் செயற்பாடுகளிலும் சமத்துவத்தைப் பேணி வளருங்கள். எந்தக் கட்டத்திலும் உங்கள் பெண் பிள்ளையை நீ பெண் என்று கூறி சமையற் கட்டுக்கும், ஆண் பிள்ளையை வெளி வேலைக்கும் அனுப்பாதீர்கள்.

இன்றைய பிள்ளைகளாவது நாளை, இந்த வேலை ஆணுக்கு, இந்த வேலை பெண்ணுக்கு என்று நினைக்காமல் இருக்க பெண் பிள்ளைகளையும் சகல விளையாட்டு, தற்காப்புப் பயிற்சிகள், (கராத்தே போன்றவை) போன்றவற்றையும் அவர்களது ஆர்வங்களுக்கு ஏற்ற வகையில் பழக அனுமதி கொடுங்கள்.

உங்கள் வளர்ப்பில், பெண் அடங்க வேண்டியவள், ஆண் அடக்குபவன் என்ற நிலை முற்றாக மாற வேண்டும். இதை ஏன் நான் பெண்களுக்கு மட்டும் கூற வேண்டும் என நீங்கள் எண்ணலாம். நாங்கள் குனிந்து நின்று கொண்டு ஆண்களைப் பிழை கூற முடியாது. நாங்கள்தான் நிமிர வேண்டும். நாளைய பெண்கள் சுயமாக வாழ நாங்கள்தான் பாதையமைக்க வேண்டும்.

## புலம்பல்

வாசலில் வகை வகையாய்
மாக்கோலம் இட்டேன்
பாராட்டிச் சென்றார்கள்
மங்கையருக்கான
ஆடைகளை
வண்ண வண்ணமாக
அலங்காரம் செய்து
கொடுத்தேன்
வாழ்த்திச் சென்றார்கள்
என் நெற்றியில்
ஒரு பொட்டு வைக்க மட்டும்
இன்னும் ஏன் உடன்பட
மறுக்கிறார்கள்!
சம்பிரதாயங்கள்
என்னைப் போல
பெண்களுக்காகவே
வகுக்கப்பட்ட
சாபக்கேடா..?
சாகும் வரை
மறுவாழ்வு என்பது
எங்களின் வெறும் கனவா?
சமூகமே பதில் சொல்லு...?
தடைகளை விலக்கித்
தரணியில்
தையலரை வாழவிடு.



குப்பிளான், செ.ரவிசாந்.

# உன்னால் முடியும்...

(சென்றவாரத் தொடர்ச்சி...)

எந்தச் செயலையும் செய்வதற்கான எல்லையற்ற சக்தி ஆண்-பெண் ஆகிய இருவரிடமும் சமமான அளவில் உள்ளது. சமூகம் பெண்ணின் மீது திணித்துள்ள நியதிகள், நிபந்தனைகள் என்னும் சங்கிலியை உடைத்துக்கொண்டு வெளியில் வரப் பெண்ணால் முடியும். கடந்தகாலம் பெண்ணின் மனதில் உருவாக்கிய குறைகள் நிறைந்த பதிவுகள் எல்லாம் பெண்ணின் முன்னேற்றத்துக்குத் தடையாக நிற்கின்றன. பெண்ணின் மனதில் பயத்தையும், சந்தேகத்தையும் வளர்க்கும் நிழல்கள் அவை. நிழல் உண்மையானதல்ல. பொய்யாகும்.

ஆண்கள் பொதுவாக உடலின் வலிமையில் நம்பிக்கை உள்ளவர்கள். வெளிப்பார்வையில் பெண்ணைத் தாயாகவும், மனைவியாகவும், சகோதரியாகவும் காணவும் ஏற்றுக்கொள்ளவும் செய்வார்கள். ஆனால், மனதளவில் அவளை முறையாகப் புரிந்துகொள்ளவோ, புரிந்துகொண்டு அங்கீகரிக்கவோ அவர்களுக்கு இன்றும்கூட கஷ்டமாக இருக்கிறது என்ற உண்மையை மறைத்து வைப்பதில் பயனேதுமில்லை.

ஆணின் கையில் சிக்கியுள்ள வெறும் அலங்காரப் பொருளல்ல பெண். ஆண், ஒரு பூந்தொட்டியில் வளர்க்கும் செடியைப் போல் பெண்ணை ஆக்கி வைத்திருக்கிறான். ஆணுக்கு உணவு தயாரிப்பதற்கு மட்டும் பிறந்தவளல்லள் பெண். பெண்ணை முன்னேற அனுமதிக்காமல், அவளைத் தனது விருப்பத்துக்கு ஏற்ப இயக்கக்கூடியவளாக மாற்றவே ஆண் முயற்சி செய்கிறான்.

உண்மையில் எல்லா ஆண்களும் பெண்ணின் ஒரு பாகமே. எல்லாக் குழந்தைகளும் தாயாரின் உடலின் ஒரு பாகமாகவே கர்ப்பப்பையில் வளர்கின்றன. ஒரு குழந்தைக்குப் பிறப்பளிப்பதைப் பொறுத்தவரை, அவனுக்கு ஒரு நிமிட வேலை. அவ்வளவுதான். அத்துடன் ஆணின் பங்கு முடிந்துவிடுகிறது. ஆனால், பெண் அதனை ஏற்று, அதனைத் தனது உடலின் அம்சமாக மாற்றி, ஜீவனாக உருவாக்குகிறாள். அது வளர்வதற்குத் தேவையான சூழ்நிலையை தனக்குள் அவள் ஏற்படுத்திக் கொடுக்கிறாள். அதன்பிறகு, அதற்குப் பிறப்பளித்து, கவனத்துடன் வளர்க்கவும் செய்கிறாள். பெண் தாயாவாள்.

உலக மக்கள் தொகையில் 50 சதவிகிதத்திற்கும் மேல் பெண்களாவர்.ஆகவே, பெண்ணுக்கு உரிய இடமும், சுதந்திரமும் அளிக்கவில்லை எனில், அது உலகிற்கே மிகப்பெரிய இழப்பாக இருக்கும். ஆண் செய்யக்கூடியவை அனைத்தையும் பெண்ணால் செய்ய முடியும். சொல்லப்போனால், அதைவிடக் கூடுதலாகவே அவளால் செய்ய முடியும். புத்தி சக்தியிலும், திறமைகளிலும் பெண் ஆணைவிடத் தாழ்ந்தவள் அல்லள்.

ஆரம்பம் நன்றாக இருந்தால் இடைப்பகுதியும் முடிவும் சரியாக இருக்கும். தவறான அடிப்படையில் ஆரம்பிக்கும் காரணத்தால் தான் பெண்கள் நலன்களை இழக்க நேரிடுகிறது. உதாரணமாக, ஆணுக்கு சமமாக சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் பெண்ணுக்கும் இடமளிக்க வேண்டும் என்பது நியாயமான ஒரு உரிமையாகும். அதற்காக முயற்சி செய்வதும் சரியே. அதற்கு ஆரம்பம் சரியாக இருக்க வேண்டும். ஆனால், இன்று இந்த ஆரம்பம் தவறாகிவிட்டது. அதைக் குறித்து உருவான கருத்தும் தவறாகிவிட்டது. ஆரம்பத்தை விட்டுவிட்டு, முடிவை நோக்கி அவள் ஒரேடியாகத் தாவ முனைகிறாள். (வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலையும் குரங்கும்



ஒரு காட்டில் குரங்கு வசித்து வந்தது. அந்த காட்டின் நடுப் பகுதியில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் ஒரு நாவல் மரம் நின்றது. அதில் இருந்த நாவல் பழங்களைத் தின்று குரங்கு உயிர் வாழ்ந்து வந்தது.

அந்த ஆற்றில் எப் போதுமே நீர் பெருக் கெடுத்து ஓடும். ஆற் றிற்கு மறுபக்கத்தில் இருக்கும் காடு மிக வும் செழிப்பாகக் காணப்பட்டதால் அங்கு போய் பார்க்க வேண்டும் என்று குரங்கிற்கு ஆசை ஏற்பட்டது. ஆனால் குரங்கிற்கு அந்த ஆற்றைக் கடந்து போகப் பயமாக இருந்தது.

ஆற்றில் இருந்த முதலை ஒன்று ஒருநாள் நாவல் பழம் தின்று கொண்டிருந்த குரங்கைப் பார்த்து "நாவல் பழம் மிகவும் ருசியாக உள்ளதா?" எனக் கேட்டது.



குரங்கும்.. "முதலை யாரே! உமக்கும் சில நாவல் பழம் பறித்துத் தருகிறேன். சாப்பிட்டுப் பாருங்கள்" என்று நாவல் பழங்கள் சில வற்றை பறித்து. ஆற் றில் வாயைப் பிளந்து கொண்டிருந்த முதலை யின் வாயில் போட்டது. முதலையும் பழங்களை ருசித்துச் சாப்பிட்டது.

அவற்றைச் சாப்பிட்ட முதலை இந்த சுவையான பழங்களை உண்ணும் குரங்கின் ஈரல் மிகவும் ருசியாக இருக்கும் என எண்ணியது. அதனால் முதலை குரங்குடன் நண்பனாகப் பழகி அதன் ஈரலை உண்ணத் திட்டம் போட்டது.

"குரங்காரே நீர் எனக்கு நல்லபழங்களைத் தந்து என் பசியைத் தீர்த்தீர். உமக்கு நான் ஏதும் உபகாரம் செய்யலாம் என்று யோசிக்கின்றேன்" என்று கூறியது. அத்துடன் "ஆற்றின் மற்றக் கரையில் நல்ல பழ மரங்கள் பழுத்துத் தொங்கு கின்றன. நீர் அங்கு சென்றால் அந்தப் பழங்களை நீரும் உண்டு எனக்கும் தரலாம் அல்லவா" என்றது. அதற்குக் குரங்கு, "எனக்கும் அக்காட்டைப் பார்க்க வேண்டும் என்று பல நாள்களாக ஆசை இருக்கிறது. ஆனால் எனக்கு இந்த ஆற்றைக் கடந்து போகத்தான் பயமாக இருக்கிறது" என்றது.

அதனைக் கேட்ட முதலை, "நான் இருக்கும்போது நீ ஏன் பயப்பட வேண்டும்? இப்போதே எனது முதுகில் ஏறி இரு. நான் உன்னை அக்கரையில் சேர்த்து விடுகின்றேன்" என்றது.

வஞ்ச எண்ணம் கொண்ட முதலையின் அன்பு வார்த்தையை நம்பிய குரங்கும் முதலையின் முதுகின் மீது தாவி ஏறி அமர்ந்தது.

தனது ஆசையை நிறைவேற்ற இதுதான் தருணம் என்று எண்ணிய முதலை குரங்கை நடு ஆற்றுக் குக் கொண்டு சென்று அங்கே குரங்கின் ஈரலைச் சாப்பிட இருக்கும் தனது ஆசையைக் குரங்குக்குச் சொன்னது.

அப்போது குரங்கு பதற்றமடை யாது, "அப்படியா! நீ அதை முத லில் சொல்லவில்லையே!" என்று கூறி, நீரில் நனைந்து ஈரல் பழுதாகி விடும் என எண்ணித் தான் தனது ஈரலை எடுத்து மரக் கிளையில் வைத்து விட்டு வந்து விட்டதாகக் கூறியது. "என்னை திரும்ப மரத்தடிக்கு கொண்டு செல் நான் அதை எடுத்து மாட்டிக் கொண்டு வருகிறேன்" என்று சமயோசிதமாகக் கூறியது.

முதலையும் யோசிக்காது, குரங்கு உண்மை சொல்வதாக எண்ணிக் கொண்டு அதைத் திரும்ப மரத்திற்கு அழைத்து வந்தது.

வேகமாக மரத்தில் ஏறிய குரங்கு, "முட்டாள்



முதலையே! ஈரலை உடலிலிருந்து கழற்றி மாட்ட முடியுமா? உன்னை நம்பிய என்னை ஏமாற்றி விட்டாயே! நியாயமா?" என்று கேட்டது. முதலையும் ஏமாந்து திரும்பியது. நாமும் யாரையும் உடன் நம்பக்கூடாது. அவர்கள் நல்லவர்களா.. கெட்டவர்களா என நட்பு கொள்ளுமுன் தீர ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

## செங்கடல்

செங்கடல் (Red sea) ஆபிரிக் காவுக்கும் ஆசியாவுக்கும் இடை யில் இந்தியப் பெருங்கடலின் நுழைவாயிலில் அமைந்துள்ளது. செங்கடல், இந்தியப் பெருங்கட லுடன் தெற்கே பப் - எல்- மாண்டெப் நீரிணையும் ஏடன் வளைகுடாவும் இணைக்கின்றன. வடக்கே சினாய் குடா, அக்கபா வளைகுடா, சுரியஸ் வளைகுடா ஆகியன இணைக்கின்றன.

செங்கடலின் மொத்தப் பரப்பு ஏறத்தாழ 438,000 கிலோ மீற்றர். [169,000 மைல்கள்] கிட்டத்தட்ட 2,250 கிலோ மீற்றர் நீளமும், 355 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. இதன் அதி கூடிய ஆழம் 2,211 மீற்றர்களாகும்.





சு.ஆர்த்திகா, தரம் -9டி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## தகவல்கள் சில...

★ அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நாய்களுக்கு என தனி நீதிமன்றம் செயற்படுகின்றது. ஆண்டுக்கு 1,500 வழக்குகள் வரை இதில் விசாரிக்கப்படுகின்றன.

★ ஆந்தையின் கண்கள் பெரியதாக இருந்தாலும் அதனை அங்கு மிங்கும் அசைக்க முடியாது.

★ பின்புறமாக உள்ள பொருள்களை கழுத்தைத் திருப்பாமல் பார்க்கும் திறமை ஒட்டகச்சிவிங்கிக்கு உண்டு.

★ ஆமை நிலத்தில் மெதுவாக நகர்ந்து சென்றாலும் நீரில் மணிக்கு 35 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்தும்.

★ குரங்குக்கு இரண்டு மூளை. ஒன்று உடலையும் மற்றொன்று வாலையும் செயற்பட வைக்கும்.

★ உலகம் முழுவதும் 59 கோடி மூத்த குடிகள் இருக்கின்றன. (60 வயதுக்கு மேற்பட்டோர்)

**அதிசயம்**

முடிவெட்டிக் கொள்வது, நன்றாக உடை அணிவது, முகச்சவரம் செய்வது போன்ற பழக்கங்கள் அவரிடம் இல்லை. பல நேரங்களில் 'பெல்ட்' டைத் தேட சோம்பல்பட்டு கழுத்து "டை" யையே இடுப்பில் கட்டிக்கொண்டு வெளியில் புறப்பட்டு விடுவார். அவர் வேறு யாருமல்ல விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன்தான்.

இப்படிப்பட்டவர் கடைசி 35 ஆண்டுகள் எந்த நேரமும் ஆராய்ச்சிக் கூடத்திலேயே முழுக்கவனத்துடன் இருந்தார் என்பது ஆச்சரியமானது.

ச.லக்சிகா, 9ஏ,
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

## விடை தெரியுமா? 219

### உங்களுக்கும் பரிசுகள்

1. பக்தி மொழி என்றழைக்கப்படும் மொழி எது?
2. இலங்கையின் முதலாவது அஞ்சல் முத்திரை எத்தனையாம் ஆண்டு வெளிவந்தது?
3. ஆத்திசூடியை இயற்றியவர் யார்?
4. பிரான்ஸின் தலைநகரம் எது?
5. சிலந்திகளில் எத்தனை இனங்கள் உண்டு?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 217


1. வட ஆபிரிக்கா
2. நாத்தாண்டியா
3. தாய்லாந்து
4. றிச்டர் அளவு கோல்
5. தென்னாபிரிக்கா

### வெற்றி பெற்றவர் விவரம் (217)


*வி.பிரசாத், தரம்-10ஏ, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.
*வி.லோகினி, யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி
*சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை


### விடை தெரியுமா?

தெரிந்தால் 20.07.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய [illegible] ரூபா 75வீதமும் பரிசுகள் நல்கனாக வழங்கப்படும்.




தி. மேரி துஷக்கா டயஸ், தரம்-5 B
யா/ புனித சவேரியார் பெண்கள் தேசியப் பாடசாலை





வை.விதுரசன், தரம்-8 A
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணச் சகிக்காத படம் சிங்கம் -2



எஸ்.தர்மினி

> படத்தில் மிக மோசமான அம்சமாக நான் கருது வது, அரசமைப்பையும் சட்டம் ஒழுங்கையும் தூக்கி எறிந்து விட்டு - காவல்துறை சீருடை அணிந்த வர்கள் - யாரை வேண்டுமானாலும் சுட்டுக் கொல் லலாம் என்ற அப்பட் டமான - தேச விரோத - எதேச்சதிகார பாசிசம் கொண்டா டப்படுவதைத் தான். முறையான நீதிமன்ற விசாரணை மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு இல்லாமல் அரசமைப்பு உறுதிப்படுத்தும் உயிருக்கு - வாழ்க்கைக்கான உரிமை (Right to Life) என்ற அடிப்படை மனித உரிமையை மீற எந்த காவல் அதிகாரிக்கும் உரிமை இல்லை. அப்படி நடக்கும் சம்பவங்களை களத்திலும் புலத்திலும் எதிர்த்துக் கொண்டிருக் கும் ஈழத் தமிழர்கள்கூட இந்தப் படத்தை எப்படி மனம் வந்து பார்க்கிறார்கள் என்பது புரியவில்லை.

அரசமைப்பும் - குற்றவியல் சட்டங்களும் அளித்திருக்கும் அடிப்படை உரிமைகளை - விசாரணை முறைமைகளை காற்றில் பறக்க விட்டு - நீதிமன்றங்களைப் புறக்கணித்து விட்டு - பொலிஸார் தங்கள் இஷ்டப்படி யாரை வேண்டுமானாலும் கொலை செய்யலாம் - சித்திரவதை செய்யலாம் என்னும் மோசமான - மனிதத்துக்கு விரோதமான - ஜனநாயகத்துக்கு எதிரான பொலிஸ் சர்வாதிகாரத்தை முன்னிலைப்படுத்தும் (இலங்கையில் நடப்பதைப் போன்றே) அப்பட்டமான பாசிசப் படமாக *சிங்கம் 2* வெளிவந்திருக்கிறது.

முதன்மை வில்லனாக ஒரு கறுப்பின ஆப்பிரிக்க நடிகரை நடிக்க வைத்து விட்டு - அவரை ஆப்பிரிக்க குரங்கு, ஆப்பிரிக்க விலங்கு என்றெல்லாம் சூர்யா பேசும் கடுமையான கண்டனத்திற்குரிய இனவெறி வசனங்கள் இப்படத்தில் உள்ளன. ஒரு கறுப்பின ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்கவின் ஜனாதிபதியான பின்பும் தமிழ் சினிமாவில் கறுப்பின ஆப்பிரிக்கர்களை இழிவுபடுத் தும் போக்கு தொடர்கிறது.

இது மட்டுமல்லாமல், சூர்யா கதாபாத்திரத்தால் சுட்டுக் கொல்லப்படுபவர்களாக - குற்றம் புரிபவர்களாக கறுப்புத் தோல் நிறம் கொண்ட உழைக்கும் இளைஞர்களே காட்டப்படுகிறார்கள்! கறுப்புத் தோல் கொண்ட திராவிட உழைக்கும் மக்களை சூத்திரர்களாக இழிவுபடுத்தி அவர்களை ஒடுக்க வேண்டும் என்று கூறும் ஆதிக்க சாதி பொதுப்புத் தியே *சிங்கம் 2* படத்தில் இவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது. இதில் மிக மோசமான வேதனை, இவ்வாறு தங்களை அந்தப் படம் கேவலப்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ளாமலேயே உழைக்கும் வர்க்க இளைஞர்கள் இந்தப் படத்தை சிலாகித்து ஏற்றுக் கொள்வதுதான்.

கறுப்பாக இருக்கும் - அடியாட்களை எல்லாம் இஷ்டப்படி அரிவாளால் வெட்டியோ - துப்பாக்கியால் சுட்டோ கொன்று குவித்து - சட்டம் - நீதி- விசாரணை - வழக்கு மன்றம் என்று எதையும் மதிக்காமல் செயல்படும் பொலிஸ் அதிகாரி, இன்னொரு வில்லனாக நடிக்கும் நடிகர் ரஹ்மானை மட்டும் சுட்டுக் கொல்லாமல் அவரை கைது செய்து சிறையில் அடைப்பது ஏன்? ரஹ்மான் வெளிர் தோலுடன் - மேட்டுக் குடியைச் சேர்ந்தவராக காணப்படுவதாலா? மேலும், சட்டப்படி மேஜர் வயது அடையாத பள்ளி மாணவியாக நடிக்கும் ஹன்சிகா மோத்வானி அவரது பள்ளி தேசிய துணைப் படை ஆசிரியராக உள்ள சூர்யாவை காதலிக்கிறார் என்று சித்தரிக்கப்படும் காட்சிகள் பள்ளி மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே இருக்கக் கூடாத - முறையற்ற - பாலியல் - காதல் உணர்வை சித்தரித்து, ஆசிரியர் - மாணவி உறவைக் கொச்சைப்படுத்தி - பள்ளி மாணவ - மாணவியரின் மனத்தைக் கெடுப்பதாக உள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள காரணிகளைத் தவிர, ஒரு திரைப்படமாகவும் - திரைப்பட மொழி அடிப்படையிலும் *சிங்கம் 2* காணச் சகிக்காத மொக்கைப் படமாகும். ஒரு வரியில் சொல்வதென்றால் பல படங்களில் பார்த்துப் புளித்துப் போன - போதை மருந்துகளைக் கடத்தும் கும்பலை ஒரு காவல் துறை அதிகாரி சுட்டுக் கொன்று அழிப்பதுதான் படத்தின் கதை!

படத்தில்கோர்வையானகதையும்இல்லை - காட்சிகளும் இல்லை. சூர்யா ஒவ்வொரு காட்சியிலும் கத்து - கத்து என்று கத்துகிறார். சுப்பர்மானைவிட அதிக சக்தி உள்ளவர் போல - துப்பாக்கிகூட இல்லாமல் - அரிவாளுடன் வெட்ட வரும் கும்பலை ஒரே ஆளாக கொன்று குவிக்கிறார்.

வில்லன்களை உளவு பார்க்க ஒரு பள்ளியில் என்.சி.சி. ஆசிரியராக சூர்யா கதாபாத்திரம் இருப்பதாக ஆரம்பக் காட்சிகளில் சித்தரிக்கப்படுகிறது. பள்ளியிலும் வில்லன்களை அடித்துத் துவைக்கிறார். சூர்யாவின் காட்டுக் கத்தல் மற்றும் நம்ப முடியாத சுப்பர்மான், அடி உதைகளே படம் முழுவதும்.

*சிங்கம் 1* படத்தில் கதாநாயகியாக வந்த அனுஷ்கா இந்த படத்தில் ஓரங்கட்டப்படுள்ளார். சில காட்சிகளே படத்தில் அனுஷ்காவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டு பாடல்களில் அரைகுறை ஆடைகளுடன் சூர்யாவுடன் ஆட்டம் போட்டு விட்டுச் செல்கிறார். மற்றபடி *சிங்கம் 2* படத்தில் காதல் காட்சிகளும் இல்லை, நல்ல காதல் பாடல்களுமில்லை. தேவி ஸ்ரீ பிராசாத்தின் இசை மிக மோசம். பாடல்கள் கேட்கும்படி இல்லை - பின்னணி இசை காது பிளக்கும் சத்தம் மட்டுமே.

படத்தில் மிக மோசமான அம்சமாக நான் கருதுவது, அரசமைப்பையும் சட்டம் ஒழுங்கையும் தூக்கி எறிந்து விட்டு - பொலிஸ் சீருடை அணிந்தவர்கள் - யாரை வேண்டுமானாலும் சுட்டுக் கொல்லலாம் என்ற அப்பட்டமான - தேச விரோத - எதேச்சதிகார பாசிசம் கொண்டாடப்படுவதைத்தான். முறையான நீதிமன்ற விசாரணை மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு இல்லாமல் அரசமைப்பு உறுதிப்படுத்தும் உயிருக்கு - வாழ்க்கைக்கு உரிமை (Right to Life) என்ற அடிப்படை மனித உரிமையை மீற எந்த பொலிஸ் அதிகாரிக்கும் உரிமை இல்லை. அப்படி நடக்கும் சம்பவங்களை களத்திலும் புலத்திலும் எதிர்த்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள்கூட இந்தப் படத்தை எப்படி மனம் வந்து பார்க்கிறார்கள் என்பது புரியவில்லை.


மேலும், யாரைக் கைது செய்தாலும் இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் கைதானவரை நீதிமன்றத்தில் பொலிஸார் கொண்டுவர வேண்டும். மேலும், சில காரணங்களைத் தவிர, ஒருவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்றால் நீதிவான் மன்றத்திலோ - மற்ற நீதிமன்றங்களிலோ முறைப்படி காவல் துறையினர் பிடியாணை பெற்றிருக்க வேண்டும். இத்தகைய குற்றவியல் சட்ட முறைமைகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு, அரசமைப்பு அளித்திருக்கும் உயிருக்கு - வாழ்வுக்கு உள்ள உரிமையை துச்சமாக எண்ணி, இந்திய அரசமைப்பை கழிவைத் துடைக்கும் காகிதமாகக் கருதி, அவசர நிலை (எமர்ஜென்சி) பிரகடப்படுத்தினால் கூட இல்லாத அதிகாரங்களை - தனியொருவரான சூர்யா நடிக்கும் துரைசிங்கம் கதாபாத்திரத்துக்கு அரசு அளிப்பதாக படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. மன்னராட்சி காலத்தில்கூட இல்லாத வகையில் சர்வாதிகாரம் கொண்டவராக துரை சிங்கத்தை அரசு அறிவிக்கிறதாம்! சூர்யா (துரை சிங்கம்) யாரை வேண்டுமானாலும் பிடித்துக் கொண்டு போய் சித்திரவதை செய்து - துப்பாகியால் சுட்டு கொல்லலாமாம்! இந்திய அரசமைப்பும் - குற்றவியல் சட்டங்களும் - மனித உரிமைச் சட்டங்களும் அவரைக் கட்டுப்படுத்தாதாம்! இது தேச பக்தியாம்!

ஒரு காட்சியில், ஜாலியன் வாலாபாக்கில் ஜெனரல் டயர் அப்பாவிகளை சுட்டுக் கொன்றது போல் செய்யப் போகிறேன் என்று கூறி விட்டு சூர்யா (துரை சிங்கம்) பொலிஸ் அதிகாரி கதாபாத்திரமும் மற்ற காவல் அதிகாரிகளும் குற்றம் சாட்டப்பட்டவர்களை ரவுண்டு கட்டி அடித்து வெளுப்பது போன்று ஒரு காட்சி வருகிறது. இது பொலிஸின் வீரமாம்! இதைக் கண்டு நாம் கை தட்ட வேண்டுமாம்! ஜெனரல் டயர் காலத்தின் கொலனி ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறை காவல் துறை அமைப்பே - இன்றும் நாடு விடுதலை பெற்ற பிறகும் மாற்றமில்லாமல் தொடர்கிறது என்று தன்னையும் அறியாமல் படத்தின் இயக்குநர் இக்காட்சி மூலம் ஒப்புக் கொண்டுள்ளார்.

இன்னொரு காட்சியில், பள்ளியில் தேசிய கீதம் பாடப்படும்போது உள்ளே நுழைந்து ஆசிரியர் ஒருவரை மிரட்டுபவர்களை சூர்யா அடித்துத் துவைக்கிறார். காரணம்: தேச பக்தியாம்! உண்மையான தேச பக்தி என்பது வெளிப்போக்காக கொடி போன்ற சின்னங்களுக்கு மட்டும் சல்யூட் அடிப்பது அல்ல. நாட்டின் அரசமைப்புக்குத் ஒவ்வொரு குடிமகனுக்கும் தந்துள்ள மனித உரிமைகளை கட்டிக் காத்து அவற்றை மேலும் வளர்த்தெடுப்பதேயாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடிய பனையாய் நிமிரக்
காத்திருந்த தேசத்தை
கொடிய நஞ்சேற்றிக்
கொன்றவர்கள் - உங்கள்
நெஞ்சக் கூட்டுக்குள் நெருஞ்சி
குத்தாவிட்டாலும்
நெருடல்கூட நிகழவில்லையா
நாங்கள் போற்றி வணங்கிய
புனித நெருப்பை
ஊதி அணைத்துவிட்டு
ஊளையிட்டு நீர் சொன்ன
வாக்குறுதி என்னாச்சு
நான்காண்டாய் சாத்தியமான
வழியேதும் தெரியாமல்
அப்பால் போய் தீர்வென்று
பிதற்றியோரே இருப்பதையே
காப்பாற்ற முடியாமல் திணறும்
நீங்களெல்லாம்
இல்லாத உங்கள்
கொள்கையையேனும்
காப்பாற்ற முடிந்ததா
எதிரி அழித்ததைவிட உம்மால்;
அழிந்ததே அதிகம்
கானல் நீர் குளத்தில் கழுத்தளவு
நனைந்தோமென்று
கதைவிட்ட செய்தி போதும்
வெற்றிலையில் நாணேற்றி
இராகமிசைத்தல் சாத்தியமா?
காடுமாறிச் செல்வதற்கா
பயணம் புறப்பட்டீர் புதைகுழியில்
போடுதற்கா பூப் பறித்தீர்
பத்திரிகை படிக்கும் போது
பற்றியெரிகிறது தேகம்
ஒரு கூண்டுக்குள்; உள்ள
உங்களுக்கே
ஒற்றுமையில்லையென்றால்
என்னவென்பது
உங்களையும் ஒரு தாய் பெற்றாளே
என்ன பாவம் செய்தாளோ
சிற்றூழியர் நியமனங்கள்
அவல்களென்று
நம்மவர்க்கு தெரியும்
அவலை வாங்கிவிட்டு அவர்கள்
அல்வா கொடுப்பதில் கில்லாடிகள்
கெக்கரித்து கொக்கரிப்போரே
ஒன்றுரைப்பேன்
எங்கள் தலைவர்கள்
இறந்தாலும் இருப்பவர்கள்
நீங்கள் இருந்தபோதும்
இறந்தவர்கள்
இது புரிந்தால் சரி!

- நாரதன்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 274



அனுப்புபவர் பெயர்:.........................................................

விலாசம்:.........................................................

.........................................................

கையொப்பம்:.........................................................

### இடமிருந்து வலம்

1. பாதிப்பான அம்சம்
4. ஒன்றின் பங்கு
7. கலாட்டா
8. உருண்டை
9. மறித்தல்
11. சிரசு
12. மாண்பு
14. பலவகையான ரகம்
16. மரம்
17. செல்வம்
18. அரைவாசி
19. கையால் கொடுக்கும் ஒரு தாக்குதல் வகை
20. பெரிய
22. சிரார்த்த நாள்
23. வயதில் மூத்தவர்

### மேலிருந்து கீழ்

1. இந்தியா
2. மெல்லிய உலோகப்படை
3. அசதியால் வருவது
4. முகத்தில் வரும்
5. இருமல் நோய்
6. அதிர்ச்சி அடை
8. வாயில் அரைக்கும் உறுப்பு
10. சிரசில் எழுதப்பட்டது
12. ஏவுகணை வகை ஒன்றின் பெயர்
13. மகன்மார்.
14. பஞ்சில் இருந்து எடுப்பது
15. தரவேண்டியது
16. தகைமை நிலைமை
21. உலர

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 272 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அகம்பாவம் (6) சனி (7) வட (8) கட (9) அலம்புதல் (11) பாமரன் (13) வலி (14) விதம் (15) என (17) தலை (18) விரும்பல் (20) கொடுமை (21) கல (22) சடுதி (23) கல்வி.

**மேலிருந்து கீழ்**

(1) அசம்பாவிதம் (2) கனி (3) பாவலன் (4) வடம் (5) கடல் (8) கதலி (9) அரம் (10) புவனம் (12) மதலை (15) எருமை (16) பல்லவி (18) விடுதி (19) பகல் (20) கொடு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 274**
நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர். (24.07.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.274இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 28.07.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 272 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சு.ஸ்ரீ குருபிரசாத்,
பரித்தியோலை வீதி, மயிலணி, சுன்னாகம்.

**2 ஆம் பரிசு**
A.பெஞ்சமின்,
இல.25, வேளாங்கண்ணி வீதி, சாவல்கட்டு, மன்னார்.

**3 ஆம் பரிசு**
சிவரூபன் ரூபிணி,
இலட்சுமணன் தோட்டம், தும்பளை, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
வி.அ.ஹம்சினி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**
அ.தமிழ்ப்பிரியா,
இல.34, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

வி.பத்மாவதி,
சப்புவியவத்தை, வல்வெட்டித்துறை.


திருமதி ச.சர்வேஸ்வர ஐயர்,
இல.34, லோறன்ஸ் றோட், பம்பலப்பிட்டி, கொழும்பு-4

ஹ.ஜெயவதனி,
இல.27/9, புதுவீதி, கோய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் செய்தியாளர்



# சர்ச்சைகளின் நாயகர்

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவு செய்யும் முயற்சி கடும் சர்ச்சைகளுக்கு உள்ளாகி உள்ளது. சட்ட அறிவுடைய ஒருவரே வடக்கு முதல்வராக வரவேண்டும் என்ற தலைவர் சம்பந்தனின் விருப்பமும் வடக்கைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சராக வேண்டும் என்று கட்சியிலுள்ள வடபகுதியைச் சேர்ந்தவர்களின் விருப்பமும் மோதிக் கொள்வதால் இந்தச் சர்ச்சை வெடித்துள்ளது.

இதனால் நேற்று வரையில் மூன்று தடவைகள் கூடிய போதும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரைக் கட்சி உறுப்பினர்களால் தெரிவு செய்ய முடியவில்லை. அனேகமாக நாளை அது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவை முன்னிலைப் படுத்த தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை அண்மையில் முயற்சி எடுத்திருந்தது. தலைவர் சம்பந்தன் வேறு ஒருவரை முதலமைச்சராக்க முயற்சிக்கிறார் என்பதன் அடிப்படையிலேயே அந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ஆனால், அவற்றையெல்லாம் மீறி சி.வி.விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக்குவதில் சம்பந்தன் விடாப்பிடியாக உள்ளார்.

கூட்டமைப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்துக் கேட்டால் தான் தேர்தலில் போட்டியிடக்கூடும் என்று சி.வி.விக்னேஸ்வரன் கடந்த வாரம் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கு முன்னதாகவே முதல்வர் வேட்பாளர் ஆவதற்கான இணக்கத்தை அவர் தமிழரசுக் கட்சியிடம் தெரிவித்துவிட்டார் என்று நம்பகமாகத் தெரிகின்றது. அதன் பின்னரே அவரை முதலமைச்சராக்குவதில் சம்பந்தன் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்தார். ஆனால், கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சியினரும் சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் தவிர்ந்த தமிழரசுக் கட்சியினரும்கூட மாவை சேனாதிராசாவை முதன்மை வேட்பாளராக்கும்படி வலியுறுத்தியதையும் தாண்டி சி.வி.விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக்குவதில் சம்பந்தன் விடாப்படியாக இருந்தார்.

இதற்கு சில காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் முதன்மையானது சி.வி.விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக்கும்படி இந்தியாவே சமிக்ஞை காட்டியது என்பது. சம்பந்தனைச் சர்ச்சைக்குள் மாட்டிவிட்டுள்ள பிரச்சினை இதுவே. அவர் இந்தியாவின் சொற்கேட்டே செயற்படுகின்றார் என்பது இப்போது முழுமையாக வெளிவந்து விட்டது என்று அவரை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள்.

சி.வி.விக்னேஸ்வரனை இந்தியா முன்தள்ளுவதற்கு, அவர் இதுவரையில் எந்த அரசியல் சாயமும் பூசிக் கொள்ளாதவர் என்பது காரணமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதாவது, முன்னாள் ஆயுதக் குழுக்கள் அல்லது பிரிவினைக் கோரிக்கையை ஆரம்பித்த தமிழரசுக் கட்சி என்று எந்த அரசியலையும் சாராதவர் அவர். எனவே அவரை தெற்குச் சிங்களவர்கள் அச்சங் கொண்டு பார்க்கப் போவதில்லை என்று இந்தியா கருதுகின்றது. அவருடைய இந்த முகம், அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் கீழான காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்குப் பெற்றுக் கொடுக்கவும் அதிகாரப் பகிர்வை நியாயமாக மேற்கொள்ளவும் உந்து சக்தியாக அமையும் என்றும் அது கருதுகின்றது. அதாவது இயக்கங்களை அல்லது தமிழரசுக் கட்சியைச் சாராத ஒருவர் முதலமைச்சர் ஆவதன் மூலம் அதிலும் சிங்கள அமைச்சரான வாசுதேவ நாணயக்காரவை தனது சம்மந்தியாகக் கொண்டிருக்கக் கூடியவர் முதலமைச்சர் ஆவதன் மூலம் இரு இனங்களுக்கும் இடையிலான வெளியைக் குறைக்க முடியும் என்று நம்பப்படுகிறது. குறிப்பாக சி.வி.விக்னேஸ்வரன் தமிழீழத்தை ஒரு போதும் கோரமாட்டார் என்று சிங்களவர்கள் நம்புவார்கள் என்பதே அந்த எதிர்பார்ப்பு.

இவற்றின் அடிப்படையிலேயே சி.வி.விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக இந்தியா திணிப்பதாகக் கூறப்படுகின்றது.

இதற்கும் மேலாக சி.வி.விக்னேஸ்வரன் சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்தவர் என்பதால் அவர் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் பெரும் பங்காற்றக்கூடியவர் என்றும் அவரது ஆங்கிலப் புலமை வெளிநாட்டுத் தலைவர்களையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை உறுப்பினர்களையும் கையாள்வதற்குப் பெரிதும் உதவும் என்பதும் முதன்மை வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் முன்மொழியப்படுவதற்கான காரணங்கள் என்று ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தன் ஏனையவர்களுக்குக் கூறியிருக்கிறார்.

அவரது இந்த நியாயங்களை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கு சுமந்திரன் தவிர்ந்த தமிழரசுக் கட்சியினரும் ஏனைய கட்சிகளும் ஆரம்பத்தில் தயாராக இருக்கவில்லை. இதனால் எழுந்த சர்ச்சையில் ஒரு கட்டத்தில் தலைவரான தான் முன்வைத்த ஒருவரை ஏனையோர் ஆதரிக்கத்தானே வேண்டும் என்று அழுத்தமாகக் கருத்துத் தெரிவிக்க வேண்டிய ஒரு நிலைமை சம்பந்தனுக்கு ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர், வேண்டுமானால் சுழற்சி முறையில் மாவையும் மற்றொருவரும் முதலமைச்சர் பதவியை வகிக்கலாம் என்றொரு முன்மொழிவும் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை இப்படியே சர்ச்சையாகத் தொடர்ந்து கொண்டிருந்ததன் காரணமாக இந்தப் போட்டியில் இருந்து தான் விலகிக் கொண்டு சி.வி.விக்னேஸ்வரனுக்கு இடமளிக்க மாவை முன்வந்தார். தன்னை முன்னிலைப்படுத்திய தனது ஆதரவாளர்களிடம் அவர் நேற்றுக் காலையில் இதனை வெளிப்படுத்தியிருக்கிறார். "நான் விட்டுக் கொடுத்து விலகியிருக்கப் போகிறேன்" என்று அவர் கூறியிருக்கிறார். ஆனால் அவரது ஆதரவாளர்களிடம் இருந்து இதற்கு எதிர்மாறான கருத்துக்களையே அவர் கேட்க வேண்டியிருந்துள்ளது. சி.வீ. விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக இருந்தால், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்க வேண்டி வரும் என்று கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார். இவற்றை அடுத்து நேற்றைய தினமும் இது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

யாரை முதலமைச்சர் ஆக்குவது என்பது தொடர்பில் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஆராய்ந்து அந்த முடிவுகளுடன் திங்கட்கிழமை மீண்டும் சந்தித்துப் பேசலாம் என்று சம்பந்தன் தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

"தமிழரசுக் கட்சியினர் முதலில் இது விடயத்தில் தங்களுக்குள் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுக்கட்டும். பின்னர் நாங்கள் முடிவெடுக்கலாம்" என்கின்றன மற்றைய கட்சிகள். கூட்டமைப்புக்குள் எல்லா முடிவுகளையும் தலைவர் சம்பந்தன் தானே தனித்து எடுக்கிறார் என்று தாங்கள் ஏற்கனவே கூறிவந்த விடயம் தற்போது தமிழரசுக் கட்சியினருக்கே 'ஆப்பாக' வந்து முடிந்திருப்பதையிட்டு அவர்கள் வேடிக்கை பேசுகிறார்கள். சொந்தக் கட்சியின் விருப்பையே புறந்தள்ளி சம்பந்தன் முடிவெடுக்க முனைகிறார் என்பதை தமிழரசுக் கட்சியினர் இப்போதாவது புரிந்து கொள்வார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவை எதற்கும் சம்பந்தன் அச்சப்படுவதாக – அசருவதாக – இல்லை. சி.வி.விக்னேஸ்வரனே சிறந்த தெரிவு என்று திடமாக இருக்கிறார். தனது அந்த முடிவை நோக்கி ஒட்டுமொத்தக் கூட்டமைப்பையும் கவர்ந்திழுத்துச் செல்வதில் அவர் குறியாக இருக்கிறார்.




சொந்தக் கட்சியின் விருப்பையே புறந்தள்ளி சம்பந்தன் முடிவெடுக்க முனைகிறார் என்பதை தமிழரசுக் கட்சியினர் இப்போதாவது புரிந்து கொள்வார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை மறைக்கப் பார்க்கும் பொலிஸார்

இங்கே சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப் படங்களின் அடிப்படையில் ஓர் ஓட்டோ, டிராக்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ஒரே சமயத்தில் - சமாந்தரமாக - வீதியில் பயணித்தால்கூட அவற்றுக்கு இடையில் போதிய இடம் இருப்பது தெளிவாகின்றது.

அன்ரன்

கடந்த புதன்கிழமை உதயன் அலுவலகச் செய்தியாளர் குணாளன் டிலீப் அமுதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றவரைத் தொடர்ந்து பின்புறமாக வந்த ஓட்டோவில் இருந்த ஒருவர் உதைத்துத் தள்ளி விழுத்தியுள்ளார். வீதியோரத்தில் உள்ள பெரிய வடிகாலினுள் அவரைத் தள்ளி வீழ்த்தி படுகாயப் படுத்துவது அல்லது விபத்துப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக் கொலை செய்வது தாக்குதலாளிகளின் நோக்கமாக இருக்கலாம் என்று சம்பவத்தைக் கொண்டு சந்தேகிக்க இடமிருக்கிறது.

அப்படியிருந்தபோதும், செய்தியாளரைத் தொடர்ந்து வந்த ஓட்டோ பல தடவைகள் ஒலி எழுப்பிய போதும் அது முந்திச் செல்வதற்கு செய்தியாளர் இடமளிக்கவில்லை என்றும் அதனால், குறுகிய பகுதி ஊடாக ஓட்டோ அவரை முந்திச் செல்ல முயன்றபோது விபத்து நிகழ்ந்து செய்தியாளர் விழுந்தார் என்றும் தமக்கு ஒரு தகவல் கிடைத்தது எனவும் வெள்ளிக்கிழமை செய்தியாளர் சந்திப்பில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பில் செய்தியாளரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் தாங்கள் விசாரணையைத் தொடர்ந்து வருகிறார்கள் என்றும் அதேநேரத்தில் தமக்கு இப்படி ஒரு தகவல் கிடைத்தது என்றும் அந்த அதிகாரி கூறியிருக்கிறார்.

அதாவது இடம்பெற்றது செய்தியாளர் மீதான தாக்குதல் அல்ல அது ஒரு விபத்தாக இருக்கலாம் என்ற சந்தேகம் தமக்கு இருக்கிறது என்ற ரீதியில் அந்தப் பொலிஸ் அதிகாரி கூற முற்பட்டிருக்கிறார்.

இங்கே தாக்குதல் நடந்த இடமும் அதில் அதிகாரி கூறுவது போன்று ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ என்பன செல்லும்போது இருக்கக்கூடிய இடவசதியும் மற்றொரு வாகனம் எதிரே இருந்து வரும்போது ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு இடையில் இருக்கக்கூடிய இடவசதியும் படங்களில் காட்டப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் பொலிஸ் அதிகாரி கூறிய கருத்தின் மீது நியாயமான சில கேள்விகளை இங்கு எழுப்புகின்றேன்.

செய்தியாளரை ஓட்டோ முந்திச் செல்ல முயன்றபோது நிகழ்ந்தது விபத்துத்தான் என்று பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தது யார்?

பொலிஸார் சொல்வதின் அடிப்படையில் விபத்து நடந்தபோது செய்தியாளரின் மோட்டார் சைக்கிளும் அவரை முந்திச் செல்ல முற்பட்ட ஓட்டோவும்தான் அங்கிருந்தன என்றால் அந்தத் தகவலை ஓட்டோவிலிருந்தவர்கள்தான் சொல்லியிருக்க முடியும். அப்படியானால் அவர்களை ஏன் பொலிஸார் விசாரிக்கவில்லை?

ஓட்டோவில் இருந்தவர்கள் அல்லாமல் வேறு யாராவது பொலிஸாருக்குத் தகவல் தந்தார்கள் என்றால் அவர்கள் இந்தச் சம்பவத்தின் நேரடிச் சாட்சிகள். அவர்களை ஏன் பொலிஸார் இதுவரை முறையாக விசாரணை செய்யவில்லை? சாட்சியை எப்படி தகவல் தருபவராக பொலிஸ் இனங்கண்டது?

இங்கே சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் அடிப்படையில் ஓர் ஓட்டோ, டிராக்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ஒரே சமயத்தில் - சமாந்தரமாக - வீதியில் பயணித்தால்கூட அவற்றுக்கு இடையில் போதிய இடம் இருப்பது தெளிவாகின்றது. அப்படி இருக்கையில் மோட்டார் சைக்கிளை ஓட்டோ முந்திச் செல்ல முயற்சிக்கையில் வேண்டும் என்று ஏற்படுத்தப்படாத விபத்து எப்படி நிகழ்ந்திருக்க முடியும்?









இத்தகைய ஒரு பெரும் வீதியில் இவ்வாறு ஓட்டோ முந்திச் செல்ல முற்படுகையில் மோட்டார் சைக்கிளுடன் விபத்து நிகழச் சாத்தியம் இருக்கிறதா என்பதைக்கூடச் சிந்திக்கும் திறன் அற்றவர்களா பொலிஸார்?

ஒருவேளை பொலிஸாருக்கு அப்படி ஒரு தகவல் கிடைத்திருந்தால் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து பார்க்காமல் - முடிவு செய்யாமல் - அதனை செய்தியாளர்கள் சந்திப்பில் பொலிஸார் வெளிப்படுத்தியதன் நோக்கம் என்ன?

இந்தக் கேள்விகள் எழுப்பும் சந் %>ï Ý][ ¶ %OÂç ¦| _, உதயன் செய்தியாளர் மீதான தாக்குதலை ஒரு விபத்து என்பதாக பொலிஸ் காண்பிக்க முயல்கின்றது எனக்கொள்வது நியாயமானதே.

உண்மையை விசாரித்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டிய பொலிஸார், குற்றங்களை விபத்துக்களாகக் காண்பிக்க முயல்பவர்களாக இருந்தால் சட்ட ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்ட முடியாமல் போய் விடும்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் அனைத்திலும் கடந்த காலங்களிலும் இந்த நிலையே காணப்பட்டிருக்கிறது. குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடும் போக்கு இலங்கையில் தொடர்ந்து வருகின்றது என்று சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமைக் குழுக்கள் தொடர்ந்து கண்டனங்கள் தெரிவித்து வருகின்றமை கவனத்துக்குரியது.

# ஏன் இந்த இழுபறி?

- ஆதங்கன்

வடக்கு தேர்தல் குறித்த அறிவிப்புகள் வெளிவருமுன்னரே கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக யார் முன்னிறுத்தப்படப் போகிறார் என்ற கேள்விகள் முளைக்கத்தொடங்கிவிட்டன. ஆரம்பத்தில் சிலரது பெயர்கள் அடிபட்டபோதும் கடைசியில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் மாவை. சேனாதிராசா தான் என்ற நிலை வலுப்பெற்றது. ஆயினும் திடீர் திருப்பமாக மாவைக்கு போட்டியாக முன்னாள் நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரனின் பெயர் முன்னிறுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் முதலமைச்சராக போட்டியிடும் எண்ணமே இல்லை என்று தெரிவித்த முன்னாள் நீதியரசர் சில ஊடகங்களினதும், அரசியல் வாதிகளினதும் தொடர் வற்புறுத்தல் காரணமாக மறுப்பு விடாமல் தனக்கும் சம்மதம் என்பதுபோல இந்த விடயத்தில் மௌனம் காக்கத் தொடங்கினார். கூட்டமைப்பின் சில தலைவர்களும் மாவை முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதை விரும்பவில்லை. அவர்களே சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக தெரிவுசெய்ய 'ஓடுப்பட்டு திரிந்தார்கள்'.

கூட்டமைப்பே வடக்குத் தேர்தலில் வாக்குகளை அள்ளி வெல்லப் போகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியான விடயம். இதனை ஜனாதிபதிகூட ஒத்துக்கொண்டிருந்தார். எனவே "வடக்கு மாகாண தேர்தல் என் கனவு" என்று முதலமைச்சர் பதவிக்காக அரச தரப்பைச் சேர்ந்த சிலர் பகல் கனவு கண்டு கொட்டாவி விட்டாலும், உண்மையில் கூட்டமைப்பின் சார்பில் யார் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுகின்றாரோ அவரே வடக்கின் முதல்வர் சிம்மாசனத்தை அலங்கரிப்பார் என்பது பால்குடி குழந்தைக்கும் தெரிந்த உண்மை.

இதனால்தான் வடக்கு தேர்தலில் கட்சிகளுக்கிடையே நிலவும் போட்டியை விடவும் கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் யார் என்பதில் அதிக போட்டிதன்மை ஏற்பட்டது. இதில் இறுதிச் சுற்றில் மாவையும், சி.வி. விக்னேஸ்வரனும் மோதிக்கொண்ட போதும் பெரும்பாலானோர் மாவை. சேனாதிராசாவின் பக்கமே இருந்தார்கள். குறிப்பாக வடக்கு வாழ் புத்திஜீவிகள் சி.வி. விக்னேஸ்வரனின் தெரிவை அறவே விரும்பவில்லை.

- 30 வருடங்களாக அரச பணியாற்றியவர்
- வடக்குக்கு வெளியே பல வருடங்களாக வசிப்பவர்
- தமிழில் பேசினால் தவறாக பேசிவிடுவேன் என்று ஆங்கிலத்தில் உரையாற்றுபவர்
- வடக்கு மக்களின் உள்ளார்ந்த பிரச்சினைகளை உணர முடியாதவர்

என்பனவே விக்னேஸ்வரனின் தெரிவை இவர்கள் ஒதுக்கியமைக்கு முக்கிய காரணிகள். எனினும் சில முக்கிய தலைகள் விக்னேஸ்வரனேயே முதல்வர் வேட்பாளராக்குவது என்று ஒற்றைக் காலில் கடைசிவரை நின்றதாலேயே கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு பல நாட்களாக இழுபறியில் இருந்தது.

உண்மையில் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்காக களத்திலே இறங்கி மக்களோடு மக்களாக குரல் கொடுத்த மாவை. சேனாதிராசாவை எடுத்த எடுப்பிலேயே முதல்வர் வேட்பாளராக அறிவித்திருந்தால் கூட்டமைப்புக்குள் குத்து வெட்டு என்கின்ற அரச தரப்பின் பிரசாரம் சற்றேனும் எடுபடாமல் போயிருக்கும். இன்னும் காலம் கடந்துவிடவில்லை. ஒற்றுமையோடும் தேர்தலை எதிர்கொண்டு தமிழர் தரப்பின் பலத்தை கூட்டமைப்பு வெளிப்படுத்த வேண் டும் என்பதே தமிழ்த் தேசிய பற்றுள்ளவர்களின் அவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தை கைவிட்ட தமிழர்கள்

சோபனா

தங்கரம்கூட இல்லாத வீடு இருக்கலாம் ஆனால் தங்கம் இல்லாத தமிழன் இருக்க முடியுமா? அந்தளவுக்குத் தங்கத்துக்கும் தமிழனுக்கும் ஒரு பாசம், இறுக்கம். காசுள்ள போது தங்கத்தை வாங்கி வைத்துக் கொண்டால் பின்னர் தேவைப்படும்போது முதலீடாக அது உதவும் என்ற எண்ணம் பலரிடம் உண்டு. உலகிலேயே தங்கத்தில் முதலிடும் குடிமக்கள் தெற்காசியாவிலே தான் அதிகம்.

### சீண்ட ஆளில்லை

இத்தனை பெருமைகளுக்கும் உரிய தங்கத்தை அண்மைக் காலமாகச் சீண்டுவார் கிடையாது என்கிறார்கள் யாழ். நகர நகைக் கடை வியாபாரிகள். அக்ஷய திருதியை போன்ற தங்கக் கொள்வனவுக் கொண்டாட்டங்களை பெரும் எடுப்பில் அறிமுகப்படுத்தியும்கூட சரிந்து போய்கிடக்கும் வியாபாரத்தை தூக்கி நிமிர்த்த முடியவில்லை என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

''இப்ப நகைகளை வாங்க ஆக்கள் இல்லை. வியாபாரம் நல்லாக் குறைஞ்சிட்டுது'' என்று முகாரி பாடுகிறார்கள் வியாபாரிகள். தங்கத்தின் விலை கடந்த ஓரிரு வருடங்களாக திடீரென ஏறுவதும் பின்னர் படுபாதாளத்தில் விழுவதுமாக இருந்ததும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. ''விலை எப்ப கூடும் குறையும் என்று நகைக்கடைக்காரர்களான எங்களாலேயே தீர்மானிக்க முடியாத அளவுக்கு விலை மாறிக்கொண்டே இருக்கிறது'' என்கிறார் நகைகளைச் செய்து கொடுப்பவரான திருநெல்வேலியைச் சேர்ந்த பாபு. கடந்த வாரம்கூட தங்கத்தின் விலையில் 3 ஆயிரம் ரூபா வீழ்ச்சி ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தங்கத்தின் விலைச் சரிவு, முன்னெப்போதையும் போலில்லாமல் தங்கம் மீதான மக்களின் மோகத்தை ஈர்க்கவில்லை என்பதுதான் கவலை தரும் விடயம் என்கிறார் யாழ். நகரில் நகைக்கடை வைத்துள்ள விஸ்வநாதன்.

### நிலைமை மாறிவிட்டது

ஆபத்து நேரத்தில் கைகொடுப்பது தங்கம், அடகு வைத்தாவது பணம் பெறலாம் என்ற மனோநிலை பெண்களிடம் இப்போது மாறிவிட்டமையும் இதற்கொரு காரணம் என்கிறார் சமூகவியலாளரான ச.ருக்மணிதேவி.

''இன்றைய இளம் பெண்கள் தங்க ஆபரணங்களுக்குப் பதில் கவரிங் மற்றும் டிசைனிங் நகைகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அது அவர்களுக்குப் பாதுகாப்பானதாக இருப்பதுடன் மிக மலிவாகவும் கிடைக்கிறது. எனவே தங்கம் இப்போது பெண்களுக்கு ஆடம்பரமான பொருளாகிவிட்டது'' என்பது அவரது வாதம். என்றாலும் பெண்களின் கல்யாண விடயத்தில் தங்கத்துக்கு இன்னும் அதிக மவுசு இருப்பதால் யாழ். நகர நகைக் கடைகள் தப்பிப் பிழைத்திருக்கின்றன.

### அப்பாக்களின் பெருமூச்சு

போர் முடிந்த பின்னரான மூன்று வருடங்களில் தங்கத்தின் விலை சடுதியாக உயர்ந்தது. ஆனால் கடந்த ஒரு வருடமாக அதன் விலை தொடர்ச்சியான வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றது. இதனால் நிம்மதிப் பெருமூச்சு விடுபவர்கள் பெண்ணைப் பெற்ற அப்பாக்கள்தான் என்கிறார் பெண்ணியம் பேசும் பெண் அதிகாரி.

தங்கத்தின் மீதான தமிழரின் நாட்டம் குறைந்ததற்கு இலங்கையில் குறிப்பாக வடக்கில் ஏற்பட்ட பொருளாதார முடக்கமும் முக்கிய காரணம் என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

''நகை விலை கூடவா இருக்கேக்க ஒரு சனமும் திரும்பிப் பார்க்காதுகள். கடையில இருந்து இலையான் கலைச்சுக் கொண்டு இருந்தம். விலை குறைஞ்ச பிறகாவது சனம் நகைவாங்க வரும் எண்டு நிணைச்சம். ஆனால் சனம் இப்பவும் ஆர்வம் காட்டேல்லை'' என்று யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் நகைக் கடை உரிமையாளர் மகாலிங்கம் இப்படிக் கூறுகிறார்.


போர் நடந்து கொண்டிருந்தபோது எட்டாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பவுண் தங்க நகை போர் முடிந்து சமாதானச் சூழல் வந்த பின்னர் திடீரென 58,000 ரூபாவையும் தாண்டியது. இப்போது அது 43ஆயிரம் என்ற நிலைக்கு வந்துள்ளது.

தங்கத்தின் விலை தளம்பிக் கொண்டே இருப்பதால் அதனை வாங்கி வைத்து வியாபாரம் செய்ய முடியாத தர்மசங்கடத்தில் தாம் சிக்கிக்கொண்டுள்ளனர் என்று நகைக் கடை உரிமையாளர்கள் கூறுகின்றனர். ''மற்றப் பொருள்களைப் போல தட்டுப்பாடு ஏற்படும் போது கூட்டியும் பிறகு குறைச்சும் விக்க ஏலாது. தீர்மானிச்ச ஒரு விலையிலதான் விக்க முடியும். இப்ப நகைக்கடைக்காரர்களுக்கு பெரிய நஷ்டம். சந்தையில் கூடுதல் விலைக்கு வாங்கின நகைகளை இப்ப குறைச்சுத்தான் விற்கவேண்டி இருக்குது. எல்லாம் நட்டம்தான். ஏனோ தானோ என்றுதான் இப்ப நகை வியாபாரம் போகுது'' என்கிறார் நகை விற்பனை முகவர் கபிலன்.

### எதிர்பார்ப்பு

கொழும்பு வங்கிகளைப் போன்று தங்க பிஸ்கட்டுக்களை யாழ்ப்பாணத்து வங்கிகளும் விற்பனை செய்தால் நகை விற்பனையாளர்களுக்கு அது சாதகமாக அமையும் என்பதோடு அவ்வாறனாதொரு நடைமுறையை வங்கிகள் கொண்டு வர வேண்டும் என்பதே நகை வியாபாரிகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது என்கிறார் யாழ்ப்பாண வணிகர் கழகச் செயலாளரும், நகை வியாபாரியுமான ஜனக்குமார்.






> "இன்றைய இளம் பெண்கள் தங்க ஆபரணங்களுக்குப் பதில் கவரிங் மற்றும் டிசைனிங் நகைகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அது அவர்களுக்குப் பாதுகாப்பானதாக இருப்பதுடன் மிக மலிவாகவும் கிடைக்கிறது."

ஜம்புவின் தடாலடிகள்

ஜம்புலிங்கம் ஒருநாள் யாழ்ப்பாணம் ரவுணுக்கு வந்தார். வந்த இடத்தில் நகரமத்தியில் இருந்த மணிக்கூட்டு கோபுரத்தைக் கண்டார். அவருக்கு அதிலிருந்த கடிகாரத்தின் அழகு பிடித்துப் போனதால அதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதை நோட்டமிட்ட ஒரு ஏமாற்றுக்காரன் அவரை நெருங்கி, ''அந்த மணிக்கூடு என்ரதான். உங்களுக்கு வேணுமெண்டால் பத்தாயிரம் ரூபா தாங்கோ, கழட்டித்தாறன்'' என்று சொன்னான். மணிகூட்டுக் கோபுர அழகில் மயங்கி நின்ற ஜம்புலிங்கம் உடனே அவன் கேட்ட பணத்தைத் தூக்கிக் கொடுத்தார். உடனே ஏமாற்றுக்காரன், ''கொஞ்ச நேரம் இதில நில்லுங்கோ. நான் மேல ஏறுறதுக்கு ஏணி எடுத்துக் கொண்டு வாறன்'' என்று கூறிவிட்டு, அங்கிருந்து பணத்துடன் நழுவிவிட்டான். நீண்டநேரம் அங்கேயே நின்றுவிட்டு ஏமாற்றத்துடன் நகர்ந்தார் ஜம்புலிங்கம்.

சில நாள்களுக்குப் பின்னர் மீண்டும் ஜம்புலிங்கம் நகருக்கு வந்தபோது, பழையபடி மணிக்கூட்டு கோபுரத்தை ரசித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரை ஏமாற்றிய அதேஆள் மீண்டும் அவரை நெருங்கி, அந்த மணிக்கூடு என்ரதான். உங்களுக்கு வேணுமெண்டால் பத்தாயிரம் ரூபா தாங்கோ. கழட்டித்தாறன்'' என்று பழைய பாணியிலேயே கதைவிட்டான். இப்போதும் பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்த ஜம்புலிங்கம், ''என்னை மடையனெண்டு நினைக்காத. போனமுறை இப்படித்தான் பத்தாயிரம் வாங்கிக் கொண்டு ஏணி எடுக்கப்போறன் எண்டு சொல்லி ஏமாத்திப்போட்டு ஓடிட்டாய். இந்தமுறை அந்தச் சேட்டை என்னட்ட வாய்க்காது. மரியாதையா இதில நீ நில்லு. நான் போய் பக்கத்தில எங்கையாவது ஏணி வாங்கிக் கொண்டு வாறன்'' என்று கூறிச் சென்றார். அவர் வரும் வரைக்கும் அவன் நிற்கவா போகிறான் என்று நினைக்கிறீர்கள் என்ன?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''இந்தப் பூமியில் வாழ்ந்ததே போதும். போதுமடா சாமி.. ஒருத்தருக்கும் பாரமாய் இருக்கக் கூடாது. படுக்கையில் விழுமுன்னர் போய்ச் சேர்ந்து விடவேணும். நான் யாருக்கும் கஷ்ரத்தைக் கொடுக்கமாட்டன். கடமைப்படவும் மாட்டன்'' வயது போகப் போகப் பலர் இப்படிச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். காலம் மிகவும் வேகமாய் ஓடுகிறது. மனிதர்கள் இந்த ஓட்டத்தில் பந்தாடப்படுகிறார்கள்.

# செருப்பின்ர ஆட்டம் முடிஞ்சு போச்சு.....

தெருவில் சைக்கிளில் போன சிறுமி, தாயாருக்குச் சொல்லிக் கொண்டு போனாள்..

''அம்மா செருப்பின்ர ஆட்டம் முடிஞ்சு போச்சு''. உடனே சிறுமியைப் பார்த்தேன். இடது காலில் கொழுவியிருந்த செருப்பு அறுந்து தொங்கியபடி இருந்தது. சிறுமி சொன்ன விடயம் என்னைச் சற்று யோசிக்க வைத்தது. இப்படியான வார்த்தைகளை எமது நாளாந்த வாழ்க்கையில் பாவித்துக் கொண்டுதான் இருக்கிறோம். "கதை முடிஞ்ச மாதிரித்தான்'', ''இனி இது கடைசிக் கட்டம் என்றுதான் நினைக்கிறன்'', ''இனி பிழைக்க வாய்ப்பில்லை; மூச்சு இழுக்கத் தொடங்கிட்டுது''.

எல்லாமே வாழ்க்கையின் கடைசிக் காலத்தை நினைவுபடுத்தும் வார்த்தைகள். ''இந்தப் பூமியில் வாழ்ந்ததே போதும். போதுமடா சாமி.. ஒருத்தருக்கும் பாரமாய் இருக்கக் கூடாது. படுக்கையில் விழுமுன்னர் போய்ச் சேர்ந்து விடவேணும். நான் யாருக்கும் கஷ்ரத்தைக் கொடுக்கமாட்டன். கடமைப்படவும் மாட்டன்'' வயது போகப் போகப் பலர் இப்படிச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

கடைசிக் காலம் என்பது படங்களில் வரும் " உச்சக் கட்டத்தை " விடப் பவரானது, திகிலானது. என்ன நடக்கும் என்று ஊகிக்க முடியாதது.

இறுதிக் காலத்தில் யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்பதையே பலரும் விரும்புகிறார்கள். உலகம் பல பாடங்களை மக்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டது. பெற்றோர், பெற்ற பிள்ளைகளின் மேல் சந்தேகம் கொள்கிறார்கள். இவர்கள் என்னைப் பார்த்துக் கொள்வார்களா என்ற கேள்வி எழுகின்றது. சந்தேகம், பயம், அவநம்பிக்கை மனிதர்களை ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிடுகிறது.

யாருமற்றவருக்கான ஆச்சிரமங் கள், வயோதிப இல்லங்கள் பெருகத் தொடங்கிவிட்டன. அன்று பார்த்த பட்டிமன்றத்தில் ''வசதி படைத்தவர்கள் கூட, பெற்றோரைப் பார்த்துக் கொள்ளாமல் முதியோர் இல்லங்களில் கொண்டு போய் விடுகின்றார்கள்'', என நடுவர் சொன்னார். உறவுகள், இரத்தத் தொடர்புள்ளவர்கள் எவ்வளவு தூரம் உண்மையானவர்களாய் இருக்கிறார்கள்? காலம் மிகவும் வேகமாய் ஓடுகிறது. மனிதர்கள் இந்த ஓட்டத்தில் பந்தாடப்படுகிறார்கள். எங்களால் இவ்வளவுதான் கொடுக்க முடியும், பார்க்க முடியும், இதற்கு மேல் எங்களால் முடியாது.

எல்லாமே முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றன. எனக்குத் தெரிந்தவர் வீட்டில், சிறிய வயதிலேயே வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட உறவுகள் இல்லாத மனிதர் இப்போது வயோதிபத்தில் படுக்கையில் விழுந்து விட்டார். அவரது எல்லாத் தேவைகளும் படுக்கையில் நடந்து கொண்டு இருந்தன. அவர் இந்த நிலைக்கு வந்து ஐந்து நாள்கள்கூட ஆகவில்லை. வீட்டிலுள்ளோர் யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் இப்போது இயல்பான நிலையில் இல்லை. வைத்தியசாலையிலும் வீட்டில் வைத்துப் பார்த்துக் கொள்ளுங்கோ என்று சொல்லிவிட்டார்கள்.

'' இப்ப கதைக்கிறது குறைஞ்சு போச்சு. மெல்லிய குரலில்தான் கதைக்கிறார். சாப்பாடும் உள்ளே போக கஷ்ரப்படுகிறது. இந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கும் கொண்டு திரிய ஏலாது. சம்பளத்துக்கு ஒரு ஆளைப் பிடிச்சு வைச்சிருக்கிறன். குளிப்பாட்டி, உடுப்பு மாத்திப் போட்டு போவார்''.

''நான் நினைக்கேல்லை. கன நாள் இருப்பாரெண்டு''

அவருடைய இறப்பை, அவரை விட அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டார்கள்.

ஒவ்வொரு வீடுகளிலும் மரணங்களை எதிர்நோக்கி எத்தனை பேர் காத்திருக்கிறார்கள். படுக்கையில் உள்ளவர்கள் பற்றி, அவரைச் சுற்றி உள்ளவர்கள் என்ன நினைத்துக் கொள்கிறார்கள்?

''அம்மாக்கு இந்த நிலை வருமெண்டு நாங்கள் நினைக்கேல்லை. கடவுளே நல்லா சாப்பிட்டு, நித்திரை கொண்டு, வேலையும் செய்து கொண்டு ஒரு கிளினிக் போகாம.. என்ன மாதிரி இருந்தவ. அண்டைக்கு கோயிலுக்குப் போய்.. தவறி விழுந்து கால் எலும்பு உடைஞ்சு.. இப்ப நாலு வருசமாச்சு.. பாவம் அவவும் கஸ்ரப்படுறா..''

ஒரு வயோதிபம், இன்னொரு வயோதிபத்தைப் படுக்கையில் பார்த்ததும் பயப்படுகின்றது. யோசிக்கின்றது. தனக்கு இறுதிக் காலத்தில் என்ன நடக்கும் என்று அச்சப்படுகின்றது. எனது அம்மாவின் சகோதரியை இப்போது வீட்டுப் பக்கம் பார்க்க முடியவில்லை. ஏனென்று கேட்டால்..

''அப்பு! எனக்கு அக்காவைப் பார்த்த பிறகு பயம் வந்திட்டுது. ராத்திரி நித்திரை வராமல் போட்டுது ராசா! நானும் தனிய இருக்கிறனான். பிள்ளைகளும் வெளியில. உப்பிடி படுக்கையில் விழுந்தால் யார் பார்த்துக் கொள்ளுவினம்? எனக்கு அதுதான் திரும்பி வந்து பாக்க யோசனையாய் கிடக்கு. அப்பு! குறை நினைச்சுப் போடதை..'' இந்த நிலையைக் கடந்து போகத்தானே வேண்டும். வயோதிப நிலையை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். வயோதிப நிலையில் இரண்டு பிரச்சினைகளை நான் பார்த்தேன். நீங்களும் உணர்ந்திருப்பீர்கள். வயோதிப நிலையில் நோய் காரணமாக சில பேர் பலவிதமான பழைய, புதிய கதைகளைக் கதைத்துக் கொண்டிருப்பார்கள். வீட்டில் பிள்ளைகள் அவரை நன்கு பார்த்துக் கொண்டு இருக்கும்போதே. ''கடைசி நேரத்தில் என்னை யார் பாக்கப் போயினம்'', ''யாரையும் நம்பேலாது'', ''என்ர மகள், என்னைக் கஞ்சி காய்கிற மாதிரி காய்ச்சு எடுக்கிறாள்'', பாங்கில இருந்த என்ர காசை எடுத்து உன்ர தம்பிக்கு கொடுத்து விட்டு வாறியோ என்று?'' இப்படி உறவினர்கள் முன்னால் சொல்லும்போது, பிள்ளைகள் எப்பிடி, எந்த நிலையில் இருப்பார்கள். மிகவும் கவலைப்படுவார்கள்.

இங்கே இன்னொருவர் இப்படியான ஒரு தொந்தரவும் செய்யாமல் கொள்ளாமல் அவரைப் பார்க்க வந்திருக்கும் நண்பரையோ, உறவினரையோ... ''சொல்லுங்கோ அம்மா... யார் வந்திருக்கினம்?'', ''என்னம்மா? நீங்க வடிவாய் பாத்துச் சொல்லுங்கோ ................'', '' போனமுறை வரேக்க வடிவாய் 'ஆனந்தி' என்று சொன்னது... இப்ப எல்லாரையும் மறந்திட்டுது''. வாறவர்கள் சிலவேளை என்னைக் [illegible] லுங்கோ பாப்பம்'' ''... உவரை தெரியாதே... மருமகன்''. வாறவர்கள் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். ''பாரேன்... மருமகனை ஞாபகத்தில் வைச்சிருக்கிறார்''

(அதற்கு மாமியிடம் நான் வாங்கிய சிறுதொகை கடன்தான் காரணமென்பது பாவம் அவர்களுக்குத் தெரியாது).

மொத்தத்தில் வயதாளிகள் கூடக் கதைத்தாலும் கதையாமல் விட்டாலும் இருப்பவர்களுக்குத் துயரமே.

அன்று வழியில் உறவு முறைப் பெண் சொன்ன விடயம் எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கியது.

''தம்பீ...எனக்கு...படுக்கையில ஆக்களை பாத்த பிறகு பயமாய் கிடக்கு...நான் படுக் கையில விழுந்தால்..பிள்ளையள் பாப்பினமோ...தெரியாது''.

''ஏன் அப்பிடி யோசிக்கிறியள்? வீட்டில பிள்ளை, மருமகள், பேரன் எல்லாரும் இருக்கினம். உங்களை பாப்பினம்தானே''

''அவையளுக்கு உங்கள மாதிரி 'படுக்கையில' விழுந்த ஆக்களை பாத்துப் பழக்கமில்லை. அதுதான் யோசிக்கிறன்'' அவர் இழுத்தார்.

''சாமி...! ஆசிரிய கல்விக்காக கோப்பாய் பயிற்சிக் கல்லூரி போவதுபோல் என்னை, வயது போனவர்களைப் பார்ப்பதற்கு ஏதாவது, பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்களா? அல்லது இனி வரும் காலத்தில் இது மாதிரியான பயிற்சிப்பட்டறைகள் தேவையாக உள்ளதா?'' (சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்க) நான் அவரை சமாதானப்படுத்தி அவரின் அச்சத்தைப் போக்கினேன்.

எனக்கும் இப்போது கொஞ்சம் யோசிக்கத் தோன்றியது. மறுபடியும் சிறுமி சொன்ன 'வாசகம்' காதில் கேட்டது.

''அம்மா செருப்பின்ரை ஆட்டம் முடிஞ்சுபோச்சு''. அந்த ஆட்டம் முடிந்த செருப்பை சிறுமி எவ்வளவு காலம் போட்டிருப்பாள்? செருப்புக்கு என்ன வயது? இளமையா? முதுமையா? அதற்குரிய வயதை எப்படிக் கணக்கிடுவது? அது எவ்வளவு காலம் சிறுமிக்கு உழைத்துக் கொடுத்திருக்கும்?

காலில் வெயில் சூட்டைத் தடுத்து, தேய்மானத்தைக் குறைத்து, முள் குத்தாமல்... சிறுமிக்குப் பாதுகாப்பைக் கொடுத்த செருப்பு...

இப்போது கண்முன்னே அதன் ஆட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. அதனை மறுபடியும் திருத்தி பயன்படுத்திக் கொள்ளலாமா? அல்லது தூக்கி எறிந்து விடலாமா? மறுபடியும் வாங்கலாம் என்ற துணிவில்...


''எமது ஆட்டம் எப்படியானது? மறுபடியும் வாங்க முடியுமா?''

(யாவும் கற்பனை)



தொல்புரம் சி.கதிர்காமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Make this opportunity Your best break

Commercial Credit is among the finance industry's biggest success stories. Internationally recognized as a leading finance company, our record-breaking growth and premier service has set the industry standard. Our unprecedented performance, pioneering innovation and unparalleled customer service continue to set the industry benchmark and earn us a rapidly multiplying and loyal customer base.

If you are dynamic and energetic, enjoy working in an independent and challenging environment, and looking for an empowering and promising career, look no further. At Commercial Credit we value self motivation and offer you every opportunity to fulfill your dreams.

As we expand rapidly throughout the country to serve our fast expanding client base, we seek dynamic personnel to build on our reputation of reliability, trust and service.

## CREDIT DIVISION

(AMPARA, BADULLA, BALANGODA, BANDARAWELA, BATTICALOA, COLOMBO, DAMBULLA, DENIYAYA, EMBILIPITIYA, GALLE, HOMAGAMA, HORANA ,JAFFNA, KADUWELA, KALMUNAI, KALUTHARA, KEGALLE, KILINOCHCHIYA, KULIYAPITIYA, KURUNEGALA, MAHIYANGANAYA, MATALE, MATARA, MATHUGAMA, MEDAWACHCHIYA, MONARAGALA, MORATUWA, NAWALAPITIYA, NIKAWERATIYA, NITTAMBUWA, NUGEGODA, NUWARAELIYA, PUTTLAM, RIKILLAGASKADA, TRINCOMALEE, VAVUNIYA, WATTALA, WENNAPPUWA, WELLAWATTA, )

### Dream Fulfiller – Credit Level 03 (Equivalent to Managerial Level)

- Minimum of 03-05 years experience in a Financial Institution with exposure to Leasing and Credit sales in a similar capacity
- G.C.E. Advanced Level & Computer literacy
- Strong negotiation skills
- Diploma in Credit Management would be an added advantage

### Dream Fulfiller – Credit Level 02 (Equivalent to Executive Level)

- Minimum of 02-03 years experience in a Financial Institution with exposure to Leasing and Credit sales
- G.C.E. Advanced Level & Computer literacy
- Negotiation skills
- Holding a riding license

Attractive remuneration packages with vehicle allowance and performance bonuses await successful candidates. Apply within ten (10) days of this advertisement. Please specify the post applied for as well as the preferred location on the top left corner of the envelope or in the subject line of the e-mail.

All entries should be addressed to: Catalyst - Human Resources
**Commercial Credit & Finance PLC, No. 45, Dharmapala Mawatha, Colombo 07.**
**E- mail: careers@cclk.lk Web site: www.cclk.lk**

COMMERCIAL
CREDIT


## குரங்குச் செல்லம்

பாசமும் விளையாட்டு உணர்வும் தனியே மனிதர்களுக்கு மாத்திரம் தான் சொந்தமல்ல. விலங்குகளிடமும் இவை நிறையவே இருக்கின்றன.



ஆயினும் அந்தத் தருணங்களை நாம்தான் கவனிக்காது தவறவிட்டு விடுகின்றோம். தென்னாபிரிக்க விலங்குகள் சரணாலயம் ஒன்றில் அண்மையில் கிளிக் செய்யப்பட்ட புகைப்படம் இது. தன்னுடைய ஏழு மாதக் குட்டியை கால்களில் வைத்து மேலே உயர்த்தி விளையாட்டுக் காட்டுகிறது இந்த தாய்க் கொரில்லா.


TVS KING

நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்து TVS King முச்சக்கரவண்டியுடனும்

TVS

முச்சக்கரவண்டியை கொள்வனவு செய்யும் உங்களுக்கு இதோ...

மனதை கொள்ளை கொள்ளும்

வாய்ப்புகள்



- பதிவுக்கட்டணம்
- பெறுமதிவாய்ந்த இருபக்க மழை திரைச்சீலைகள்
- அசல் உதிரிப்பாகங்கள் அடங்கிய பொதி

இலவசம்

இவ் அசல் உதிரிப்பாகங்கள் அடங்கிய பொதியினால் வாடிக்கையாளர்கள் உங்களுக்கு TVS King முச்சக்கர வண்டியின் பராமரிப்பு செலவுகள் தகர்க்கப்பட்டுள்ளன.*

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

இன்றே அழையுங்கள்
0777 867 660

TVS லங்கா (தனியார்) கம்பனி
38, பழைய வீதி, வத்தளை
தொலைபேசி: 4605200 தொலைநகல்: 4614909


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவிலில் 7,562 இடங்களுக்குச் சென்றனர் சுகாதார அதிகாரி தலைமையிலான குழுவினர்

## டெங்கு ஒழிப்பு வாரத்தில் நடவடிக்கை

வலி,வடக்கு, ஜூலை 14

உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வாரம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் 7 ஆயிரத்து 562 இடங்களுக்குச் சென்று பார்வையிடப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி எ.ஜெயக்குமார் தலைமையில் கடந்த ஒரு வாரமாக உடுவில் பிரதேசத்தில் உள்ள 30 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள், சுகாதாரத் தொண்டர்கள், சுகாதாரக் குழுக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சுன்னாகம் சுற்றுச் சூழல் பொலிஸார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தனியார் வீடுகளுடன் பாடசாலைகள், ஆலயங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் என பல இடங்களுக்கும்




சென்று நேரில் பார்வையிட்டதுடன் டெங்கு பரவக்கூடிய அபாயம் காணப்படும் இடங்களை உடனடியாகத் துப்புரவு செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (வ-86)

# கிளிநொச்சி நூல் அறிமுக விழா



புலம் பெயர்ந்த நாடொன்றிலிருந்து வருகை தந்துள்ள எஸ்.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் ' மறுவளம்' என்னும் நூலின் அறிமுக விழா அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர். நூலின் பிரதியை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் வெளியிட கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் எஸ்.கந்தசாமி பெற்றுக் கொண்டார். (வ-9)




# நானாட்டான் பிரதேச செயலகத்தில் டெங்கு தொடர்பான சிரமதானப்பணி



மன்னார், ஜூலை 14

நானாட்டான் பிரதேச செயலகத்தில் டெங்கு ஒழிப்புக்கான சிரமதானப் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்றன.

பிரதேச செயலர் சந்திரையா தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சிரமதானப் பணியில் நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் நானாட்டான் பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிச் சூழலும் இதன்போது துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# அன்னையர் கழகங்களின் போசாக்குக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூலை 14

கச்சாய்ப் பிரதேச அன்னையர் கழகங்களின் சுகாதார போசாக்கு கண்காட்சி எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

விடத்தற்பளை, கச்சாய், பாலாவி, கெற்பேலி, அல்லாரை, வெள்ளாம் போக்கட்டி ஆகிய அன்னையர் கழகங்களால் உருவாக்கப்பட்ட சுகாதார ஆக்கங்களும் போசாக்கு உணவுகள் பற்றிய செய்முறை விளக்கங்களும் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படவுள்ளன.



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்தப்படும் ஆறாவது கண்காட்சி இது வென்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| புதிதாக வைப்பிலிட வேண்டிய தொகை | கால வரையறை | வெல்லக்கூடிய பரிசுகள் |
|---|---|---|
| 50,000/- ரூபா | 2013 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2014 ஜூன் 30 ஆம் திகதி வரை | • 1வது பரிசு: பெற்றோருடன் டிஸ்னிலேன்ட்டிற்கான (ஹொங்கொங்) சுற்றுலாப் பயணம் மற்றும் 18 வயது வரை மாதாந்த புலமைப் பரிசில்கள். • 2வது பரிசு: பெற்றோருடன் மலேசியாவிற்கான சுற்றுலாப் பயணம் மற்றும் 18 வயது வரை மாதாந்த புலமைப் பரிசில்கள். • 3வது பரிசு: பெற்றோருடன் சுற்றுலா மையங்களிலுள்ள ஹோட்டல்களுக்கு செல்வதுடன் 18 வயது வரை மாதாந்த புலமைப் பரிசில்கள். • 10 ஆறுதல் பரிசு: கம்பியூட்டர் மேசை, மேசை கதிரை, கல்விப் புத்தகங்கள் அடங்கிய 10 பரிசுப் பொதிகள். |

| புதிதாக வைப்பிலிட வேண்டிய தொகை | கால வரையறை | வெல்லக்கூடிய பரிசுகள் |
|---|---|---|
| 25,000/- ரூபா | 2013 ஜூலை 1 ஆம் திகதி முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை | • 25 laptops • அனைத்து கிளைகளிலும் இருந்து 630 வெற்றியாளர்களுக்கு பெறுமதியான வவுச்சர்கள். (ஒரு கிளையில் தலா மூவர்) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு - குமுழமுனை ஸ்ரீ



# புனருத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா

### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச் செய்தி



'அருவாய் உருவாய் உளதாய் இலதாய்' எங்கும் நீக்க மற நிறைந்திருக்கும் இறை சக்தியை உருவத் திருமேனியில் ஆவாகனம் செய்து அடியார்களுக்கு அருள் பாலிக்க வேண்டுவதே மஹா கும்பாபிஷேகம் எனலாம். இந்த வகையில் அருள் மிகு முல்லைத்தீவு குமுழமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையினதும் அடியார்களின் அன்புருகும் வேண்டு கோளுக்கு செவி சாய்த்து ஆச்சாரியர்கள் வேத தோத்திர திருமுறை ஒலியில் மனம் குளிர்ந்து எல்லோருக்கும் எல்லா நலனும் கிடைக்க அருள் புரிய வேண்டும் என கும்பாபிஷேக பெருவிழா காணும் கற்பகப்பெருமான் திருத்தாள் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ.சுந்தரஸ்ரீரங்கநாதக்குருக்கள்
(தொல்புரம், வழக்கம்பரை முத்து மாரி அம்மன் தேவஸ்தானம்)

### ஆசிச் செய்தி

ஆகமங்கள் கிரியைகளை நான்கு பிரிவுகளை வகுத்துள்ள அவை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம் என்பன ஆகும். அவற்றுள் பிரதிஷ்டை என்பது நான்கு வகைப்படும். அவை அநாவர்த்தனம், ஆவார்த்தனம், புனராவர்த்தனம், அற்தரிதம் எனப்படும்.

இதன் அடிப்படையில் நோக்கும் போது குமுழமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் புனராவர்த்தனம் நிகழ்வுற்று மஹா கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறுவது மகிழ்வுக்குரியது. நித்திய,நைவேத்தியங்கள் நடைபெற்று வரும் வேளை விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம், ஆலயவிக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ, பிளந்தோ, சிதிலமடையின் பாலஸ்தானம் செய்து பழுதடைந்த கட்டடங்களை முன்பு போல் அழகாகவும் பலம்வாய்ந்ததாகவும் நூற்றாண்டு காலம் அடியார்களுக்கு அருளாசி நல்கும் திடமனதாகவும் அமைத்துப் பிதிஷ்டை செய்வதனைப்புனராவர்த்தனப் பிரதிஷ்டை என நூல்கள் எடுத்தியம்பும்.

கும்பாபிஷேக நிகழ்வானது திரிசத்கலா நியாசம், தம்பபீஜ சமர்ப்பணம், மஹாஹாவிர்திவேதனம் தசன தர்சனம் ஸ்திராவறீதி ஆத்மசமாரோபணம் பிரிதிவிஷ்டா விசர்ஜனம் திருச்சுருப விசர்ஜனம் சண்டேஸ்வர கும்பாபிஷேகம் எஜமானாபிஷேகம் ஆசார்யபூசை மஹாபிஷேக ஆகியன செய்து கல்யாண மஹோற்சவத்துடன் இனிதே நிறைவுறுகின்றது.

இத்துணைப் பெரிய புனராவர்த்தனை நிகழ்வையும் மகாகும்பாபிஷேக கைங்கரியத்தையும் வாழ்த்தி ஆசியுரை வழங்குவதில் அளப்பெரிய மகிழ்வடைகின்றேன். ஒருகைங்கரியம் நிறைவு பெற நிமித்தகாரணராம் கர்த்தா ஒருவர் உறுதுணை புரிய வேண்டும். குமுழமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் பெருமானின் பேரருளின் துணையோடு இவ்வாலயத்தின் பரிபாலன சபையின் துணையோடு தலைவர், அறங்காவலர் சபையும் அவர்தம் அயரா முயற்சியினால் இவ்வாலயத்துக்கு புத்தொளியும் புதுப்பொலிவும் சேர்த்துள்ளனர். இவ்வாலயம் மேன்மேலும் அழகுபெற வாழ்த்துவதோடு ஆலயத்தலைவரும் அறங்காவலர் சபையும் முல்லைத்தீவு முமுழமுனை பதிவாழ் அடியார் கூட்டமும் எல்லாம்வல்ல ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் பேரருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ விநாயகப்பெருமானின் பாதகமலங்களை வணங்கி நல்லாசி கூறுகின்றோம்.

அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்து
அகர உகர மகரங்கள் தம்மால்
பகபமொரு முதலாகி வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லாருக்கு
நிகரில்மறக் கருணைபுரிந் தாண்டு கொண்ட
நிருமலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்.

விநாயகர் புராணம்.

சர்வபோதகம் நடராசக் குருக்கள்.

### கும்பாபிஷேகம் சிறக்க வெளிநாட்டிலிருந்து ஓர் அன்பர்



எல்லாம்வல்ல குமுழமுனை கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள் எம் பெருமானின் திருவருளோடு சிறப்புற்று நிகழ விநாயனை பிரார்த்தித்து மக்களோடு சேர்ந்து தியானிப்போம்.

'வேழ முகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்'

த.தம்பையா (கனடா), ஆலய பரிபாலன சபை போசகர்.

### இறைவழிபாடு மக்களை மேன் மக்களாக்கும்



கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் பொன்மொழி. ஆனால் குமுழமுனை கிராமம் சைவ வழிபாட்டில் முதன்மை வகிப்பது இங்குள்ள ஆலயங்கள் எடுத்துக் காட்டாக அமைகிறது. அந்த வகையில் ஸ்ரீ கற்பக விநாயகனின் திருக்குட முழுக்கு விழா இப் பிரதேச மக்களின் இறை தொண்டை எடுத்தியம்புகிறது. எம் பெரு மானின் பெருந்திருவருள் மக்களனைவரிற்கும் கிடைத்து சகல யோக சுப வாழ்வு வாழ்வோமாக!

வீ.கலைச் செல்வன், கி.மு.ச. தலைவர் குமுழ முனை மேற்கு,
(முன்னாள் சேவா இலங்கா மாவட்ட பொறுப்பாளர்)

### ஆலய பிரதம குருக்களின் அருளாசிச் செய்தி



முல்லைத்தீவு குமுழமுனைப் பகுதியில் பன்னெடுங் காலமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆனை முகப் பெருமானின் பெரும் திருவருள் துணை கொண்டு மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெறுவதையிட்டு அக மகிழ்கிறோம். ஆதி உத்தர நன்னாளில் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நவகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. பன்னிரண்டு ஆண்டுக ளுக்கு ஒரு தடவை நிகழுகின்ற குடமுழுக்கு பெருவிழாவில் நாமெல்லாம் கலந்து திருவருள் பெறும் வாய்ப்பு கிட்டியிருக்கின்றது. இதன் மூலமாக விநாயகப் பெருமானின் எல்லையற்ற அருட் பிரவாகம் அனைவருக்கும் கிடைத்து இந்த நாட்டில் நிரந்தர அமைதியும் சாந்தி, சமாதானம் இறையன்பு என்பன மேலோங்கி பேரின்பம் கிடைப்பதாக.

தி.திருஞானசம்பந்த குருக்கள்

### நவகுண்ட மஹா கும்பாபிஷேகம் சிறக்க என் ஆசிகள்



வளம் குன்றா எழில் மிகு குமுழமுனைப் பதியில் கோயில் கொண்ட ஸ்ரீ கற்பக விநாயகருக்கு குட முழுக்குடன் கூடிய நவ குண்ட மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது. இப் புண்ணிய நிகழ்வுக்கு உறு துணையாக இருந்த பரிபாலன சபை உறுப்பினர், பிரதேசமக்கள், வெளிநாட்டில் உள்ள எமது உறவுகள் கோயில் புனருத்தாரணப்பணிகளை மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டு தந்த சகல ஆச்சாரி, ஆசாரி, வர்ண வேலைகள் செய்தவர்கள், ஏனைய சிப்பந்தி வேலைகள் செய்தவர்கள் அனைவருக்கும் எனது பரிபாலன சபை சார்ந்த நன்றிகள்.

பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் இவற்றை விட உலகில் வேறு எதுவும் உயர்வானதல்ல. இவற்றைப் போற்றி பூஜிப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாதது. அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அரிதிலும் அரிது கூன், செவிடு, குருடு.... நீக்கி பிறத்தல் அரிது... இறைவா! எமக்கு நல்ல மானிடப் பிறவியைத்தந்து நடக்க இருகால்களைத் தந்து எழில் கொஞ்சும் இயற்கை வளங்களை இரசிக்க இரு கண்களைத் தந்து .... இன்னோரன்னவற்றையெல்லாம் தந்து எம் பெருமானை பாடி பணிதல் அல்லால் வேறொன்றும்நான் அறியேன் பராபரமே

அவனருளாலே அவன் தாழ் பணிந்து உனை நாடிப் பணியும் அடியவரை காருமய்யா அருள் தாருமய்யா என வேண்டி இக் கும்பாபிஷேகத்தையும் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பஞ்சகுண்ட மஹாகும்பாபிஷேகத்தையும் எனது தலைமையில் நடத்தி முடிக்க இறையருள் கிட்டியதை எண்ணி மகிழ்ச்சியடைவதுடன் பெரும் பாக்கியமாகவும் கருதுகிறேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

தி.சிவபாதம் JP (தலைவர் பரிபாலன சபை)
ஓய்வு பெற்றபிரதி விவசாய பணிப்பாளர், செஞ்சிலுவைச் சங்க ஆயுள் கால உறுப்பினர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கத்தலைவர்.

### குடமுழுக்குகாண வாரீர்



வட மாகாணத்தின் கிழக்கு மூலையிலே அமைந்த கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் வானுயர் கற்பக தருக்களும், தென்னை, மா, பலா, வாழை, செந்நெல்விளை பூமியாகவும் பால், தயிர் நிறைந்த கிராமமான குமுழமுனை பதியில் கோயில் கொண்ட ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் 2001 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று இருந்தபோதிலும் 12 வருடத்துக்கு ஒருதடவை இந்து ஆகம முறைப்படி நடத்த வேண்டிய நிலை உள்ளது. எனினும் துரதிஷ்ட வசமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக ஏற்பட்ட இடப் பெயர்வுகள் அழிவுகளால் ஆலயம் சேதம் அடைந்து சீர்குலைந்தது.

கற்பக விநாயகர் அருளால் இயல்பு நிலை படிப்படியாக ஆரம்பிக்க எமது ஆலயத்தைப் புனரமைக்கப்பெற பரிபாலன சபையும் புனரமைக்கப்பட்டது. அதில் நானும் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டு இப்புனித பணியை மேற்கொள்ளக் கிடைத்தது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். கேட்டவரம் அருளும் எம் பெருமானின் பெருவிழாவுடன் எம் குறைகள், துன்பங்கள் யாவும் நீங்கி எமது மக்கள் அனைவரும் சுபீட்சமாக வாழ எல்லாம் வல்ல கற்பகவிநாயகரை வேண்டி வழிபட வாரீர்!

*"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"*

வி.வெற்றிவேல், செயலாளர், ஆலய பரிபாலன சபை.

### ஒளியேற்றும் திருநாள்



குமுழமுனை ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக திருநாளில் இப் பிரதேச மக்களின் வாழ்வில் சகல யோக சுப வாழ்வு கிடைக்க மக்களோடு சேர்ந்து விநாயகரை இறைஞ்சி நல்வாழ்வு வாழ்வோமாக

கா.ரதிநாதன், கி.மு.ச தலைவர், குமிழமுனை மத்தி,
(திடீர் மரண விசாரணை அதிகாரி)

### ஸ்ரீ கற்பக விநாய...

ஈழ வள நாட்டில் வட மாகாணத்திலே முல்லைத்தீவு மாவ...
இக் கிராமத்தின் ஸ்ரீ கற்பகவிநாயகராலயமும், ஸ்ரீ கொட்டுக்...
இவற்றுள் ஸ்ரீ கற்பக விநாயகராலயம் நாயாற்றுத் தொடுக...
வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. பண்டார வன்னியன...
வன்னியனாவான். இவரால் இவ் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டன...
காணப்பட்ட இவ்வாலயம், ஆங்கிலேயருக்கும் பண்டா...
அழித்தொழிக்கப்பட்டது. சில காலத்தின் பின்னர் அதே இடத்...
சிலை மட்டும் கண்டெடுக்கப்பட்டு தற்போ... கொடி ம...
இவ்வாலயத்துக்கு பூஜை புரிவதற்காக ...னிந்தியா...
வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் அரண்மனை...
குடியமர்த்தி அவர்களுக்கு இளங் கலைஞன் வயலைப் பரிசளி...
ஆரம்ப காலத்தில் ஓலையால் வேயப்பட்டு வந்த கோயில்...
அமரர் மாணிக்க விநாயகரலின் முயற்சியாலும் பின்னர் அம...
படிப்படியாக வளர்ந்து பத்து திருவிழாவாக வளர்ச்சி கண்டு...
அமைக்கப்பட்டுள்ளது. கோயிலில் பிள்ளையார் கதை, பெருங்க...
சிறப்புற நடைபெறமுன் நின்று உழைத்தவர்களாக க.தாமோதர...
போன்றோர் நினைவு கூரத்தக்கது. இன்று பொலிவுடன் காண...
அளப்பரியது. அதனால் கிராமத்தின் தந்தையாராவார். வள...
போன்றோர் பணிகளால் வன்செயல்களால் உருக்குலைந்த ...
வெளிநாட்டவர்களிடமிருந்தும் பெற்று புனருத்தாரண பணிக...
பலர் பல பணிகளை முன்னெடுத்து இன்றைய சிறப்பு மிகு ஆ...
குண்ட மஹாகும்பாபிசேகம் காண உள்ள எமது ஸ்ரீகற்பக விந...

### மண்ணவரும் விண்ணவரு...

மண்ணிலே சமய பேத வழிபடு...
வெண்ணிய விடு சேர்க்கும் மெ...
புண்ணிய வேதுவாகப் பொருந்...
கண்ணிய மேவும் சீர் சேவை ...

எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளின் சிறப்பை உண...
நோக்கத்தின் அடிப்படையில் தான் நம் சான்றோர்கள் அருவ...
வழிபட வகை செய்துள்ளனர். மந்திரபூர்வமாக பிரதிஷ்...
உயிர்களுக்கு அருள் புரியும் இடமே ஆல... இவ்வாறு ...
அமைந்துள்ளன. ஆலயத்தின் மூலம் நம் நாட்டில் கற்பக...
கண்கொண்டு பார்க்கலாம். மாயமனத்தவர்க்கு அது தெரியா...
இருக்கும்.நமது நாட்டில் காணப்படும் ஆலயங்களில் பெரும்...
போக்கில் பழுதடைந்தோ சிதைவடைந்தோ விட்டிருப்பதை கா...
விமானங்கள், மண்டபங்கள், கர்ப்பக்கிரகங்கள் போன்றவை...
கும்பாபிஷேகம் நடைபெறுகின்றன. இத் தன்மையே இவ்வா...
ஆற்றல் அதிகரித்து அவை அருள் வழங்கும் கேந்திரங்களாகத்...
பொதுவாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்ப...
இதில் ஒரு சித்தாந்தமும் உண்டு. பன்னிரண்டு மாதம் ஒரு...
பன்னிரண்டு ஆண்டு இவரின் விழிப்பு இறையே மனதில் கெ...
கும்பாபிஷேகம் சில காரணங்களின் அடிப்படையில்...
அனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் எனப்படும். மேற்கூ...
நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகம் புனராவர்த்...ம் எனப்படு...
***ஸ்ரீ கற்பக விநாயகர் யாக பூசை :-*** இறைவனை முறைப்படி...
ஒன்று என்ற யாக குண்ட முறைப்படி ஒவ்வொரு காலமும் பூஜை...
ஆசாரியார்கள் செய்து கும்பாபிஷேகம் செய்வார்கள். அன்பர்...
மென்று வேண்டுகின்றோம்.

- ச.ஜெய...

### கற்பக விநாய...



குமுழமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகா கு...
பாதிப்பிற்குள்ளான நிலையிலும், எழுந்தருளி விக்கி...
பணியை மேற்கொள்ள உருவான பரிபாலன சபை...
திருவருளாகும். எமது பிரதேச மக்கள் எமது வெளி...
இவ் ஆலயம் புதுப் பொலிவு பெற்று ஆன்மீகத்தை வளர்க்கும்...
சௌபாக்கியங்களுடன் வாழ எம் பெருமான் துணைபுரிய வே...
சி.இராசேஸ்வரன் (J.P), பொருளாளர், ஆலய பரிபால...

### தும்பிக்கையான் தாள் பணிவோம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச...
முனைப் பதியில் வீற்றிருந்து இப் பிரதேச மக்களின் ஆன்மீக...
கற்பக விநாயகரின் திருக்குடமுழுக்குப் பெருவிழா நடைபெறு...
விநாயகப் பெருமானின் இப்புண்ணிய கைங்கரியங்களில் ஈடுப...
வளம், ஆன்மீக வளம் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்லவிநாயக...
R.குருபரன், உதவிப் பிரதேச செயலர்,...

### ஆலயம் தொழுவது...

குமுழமுனை ஸ்ரீ கற்பக விநாயகனின் திருக்குடமுழுக்கு வி...
கருதுகிறேன். அந்த வகையில் விநாயகரின் இப் பெரும் சாந்...
ஊர் சிறக்க வாழ்த்துவதில் அக மகிழ்வடைகிறேன். - ந. பர...


★★★★★ பிரசுர அனுசரணையாளர்கள் ★★★★★

**செந்தில் பல்பொருள் வாணிபம்**
குமுழமுனை வீதி, முறிப்பு
முள்ளியவளை.

**குமாரையா ரேடிங்சென்ரர்**
கட்டடப்பொருள்கள், மின் உபகரணங்கள், குளியலறை உபகரணங்கள், பெயின்ர்வகைகள், பைப்வகைகள், கூரைத்தகடுகள் போன்ற தரமான பொருள்களை மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை.
தொ.பே: 077 9167310

**பிள்ளையார் ஹாட்வெயார்ஸ்**
கட்டடப் பொருள்கள், பெயின்ற்,
மின்சார உபகரணங்கள், கூரைத்தகடுகள்,
இயந்திர உபகரணங்கள் மலிவு விலையில்
குமுழமுனை பஜார் வீதி,

**செல்லையா...**
மொத்த சில்லறை...
நிலைய...
பிரதான வீதி, மு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கற்பக விநாயகர் ஆலய...



## ...மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ் – 14.07.2013

### ...விநாயகர் ஆலய வரலாறு

...தீவு மாவட்டத்திலேஅமைந்துள்ள அழகிய கிராமம் குமுழமுனையாகும்.
...காட்டுக் கிணற்று விநாயகர்ஆலயமும் இரு கண்களென அமைந்துள்ளன.
... தொடுகடல் அருகில் அமைந்துள்ளதுடன் வன்னி மன்னர்களுடன்
...ன்னியனின் தகப்பனாராகிய வைரமுத்து வன்னியனின் தந்தை குலசேகர
...ப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. பண்டார வன்னியனின் வளவில்
...பண்டார வன்னியனுக்குமிடையிலே ஏற்பட்ட மோதலின் போது
...தே இடத்தில் மீண்டும் கோயில் ஆரம்பிக்கப்பட்டபோது சுமுக விநாயகர்
...காடி ம...ரின் கீழ் வைத்து வழிபட்டு வருகின்றமை காணலாம்.
...ந்தியா...லிருந்து சைவகுருமார் பரம்பரை வரவழைக்கப்பட்டு இன்றும்
...ண்மனை வைத்தியர்களை தஞ்சாவூரிலிருந்து அழைத்து கரடிப்பூவலில்
... பரிசளித்தமை எல்லாம் குலசேகர வன்னியனின் செயற்பாடாகும்.
...கோயில் கந்தையா ஐயா பூசகராகக் கொண்டு வழிபட்டு வந்தது. பின்னர்
...னர் அமரர் வே.கதிரித்தம்பி அவர்களின் பெருமுயற்சியாலும் ஆலயம்
... கண்டுள்ளது. பிள்ளையாருடன் கூடிய ஏனைய பரிவார மூர்த்திகளும்
... பெருங்கதைப் படிப்பும் கந்த புராணப் படிப்பும், கூட்டுப் பிரார்த்தனையும்
...ாமோதரம்பிள்ளை, சி.கந்யைா, சி.தெய்வேந்திரம்பிள்ளை, தி.இராசையா
...டன் காணப்படும் ஆலயத்துக்கு வே.கதிரித்தம்பி அண்ணா செய்த பணி
...ார். வளர்ச்சிக்கென தம்பையா -கந்தையா, கந்தையா மயில்வாகனம்
...லைந்த ஆலயம் இன்று வளர்ச்சி கண்டுள்ளது. அடியார்களிடமிருந்தும்
... பணிகள் மேற்கொள்ளப்பட்டு தி.சிவபாதம், க.தெய்வேந்திரம், இன்னும்
... மிகு ஆலயமாக அமைக்கப்பட்டு, ஆனி உத்தரத்தில் குட முழுக்கு நவ
...ற்பக விநாயகர் எல்லோருக்கும் அருள் பாலிப்பாராக.

### ...எவரும் மகிழும் மகா கும்பாபிஷேகம்

...வழிபடும் புன்மை நீங்க
...தும் மொழிந் சிவமுன்னோன் தன்னை
...பொருந்திட பெருக்குத் தக்க
...சேனை வாழ் கற்பக விநாயகர் வாழி

...பை உணர்ந்து எல்லா மக்களும் போற்றி வழிபடுவது அவசியம். இந்த
...ர் அருவமாம் இறைவனை ஆலயங்களில் உருவமாய் அமைத்து மக்கள்
...திஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் இறைவன் எழுந்தருளி
...ாறு ...ள் வழங்கும் ஆலயங்கள் நம் நாட்டில் எண்ணற்ற இடங்களில்
...ல் கற்பக விநாயகனின் திருவருள் பெருகிக் கொண்டு வருவதைக்
... தெரியாமல் இருக்கலாம். மெய்யடியார்க்கு கையூட்டு கண்ணாடியாக
... பெரும்பாலனவை மிக பழைமை வாய்ந்தவை. இந்த ஆலயங்கள் காலப்
...பதை காண்கிறோம். எனவே இத்தகைய கோயில்களின் ராஜகோபுரங்கள்,
...ன்றவை அவ்வப் போது பழுது பார்த்துத் திருப்பணிகள் செய்யப்பட்டு
... இவ்வாலயமுமாகும். இதனால் ஆலயங்களில் மேலும் மேலும் தெய்வீக
...ங்களாகத் திகழ்ந்து வருகின்றன.
...றை கும்பாபிஷேகம் நடைபெற வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.
...தம் ஒரு வருஷம். அப்படி பன்னிரண்டு வருஷம் ஓர் ஆண்டு. இப்படி
...தில் கொண்டு நம்முன்னோர் வழிவழியாக வாழ்ந்துள்ளனர்.
...டையில் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஆவர்த்தம்,
.... மேற்கூறிய நான்கு வகைகளில் நமது கற்பக விநாயகரின் ஆலயத்தில்
...ானப்படும்.
...றைப்படி ஆவாகனம் செய்து கும்பத்தை யாகசாலையில் ஒன்பது, ஐந்து,
...ம் பூஜை செய்வது, இவ்வாறாகவும் இவற்றின் மேலாகவும் பூரண சம்பிரதாய
... அன்பர்கள், அருளாளர்களும் கண்டு ஆனந்தித்து அருள் பெற வேண்டு


...ச.ஜெயக்குமார் (அகில இலங்கை சமாதான நீதிவான்-கொழும்பு)

### ...விநாயகர் அருள் கிடைக்கட்டும்

... மகா கும்பாபிஷேக நிகழ்வு இன்று நடைபெறுகின்றது. வன்செயலினால்
...ளி விக்கிரகங்கள் இழந்த நிலையிலும் எமது ஆலயத்தைப் புனரமைத்தல்
...ன சபையின் பொருளாளர் பணி செய்யக்கிடைத்தமை பிள்ளையாரின்
... வெளிநாட்டிலுள்ள உறவுகள் ஆகியோரின் பெரும் நிதி உதவியினால்
...ார்க்கும் நிலையமாக விளங்குகின்றது. எதிர் காலத்தில் எமது மக்கள் சகல
...புரிய வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

...ரிபாலன சபை, (ஓய்வு பெற்றபிரதிக் கல்விப் பணிப்பாளர்)


### ...வோம் துன்பங்கள் துடைத்தெறிவோம்



...பிரதேச செயலகத்தின்வளங் கொளிக்கும் கிராமமான குமுழ
...ஆன்மீக ஈடேற்றத்திற்கு துணை புரிந்துவரும் குமுழமுனை ஸ்ரீ
...டபெறுவது இப் பிரதேச மக்கள்செய்த பெரும் புண்ணியமாகும்.
...ல் ஈடுபட்ட எனது பிரதேச மக்களின் பொருளாதார வளம், கல்வி
...விநாயகனைத் தொழுது இந்நன்நாளில் வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

...யலர், கரை துறைப் பற்று பிரதேச செயலகம், முல்லைத்தீவு.

### ...முறைது காலமும் நன்று



...ழுக்கு விழா காண்பதென்பது இப்பிறப்பின் புண்ணிய செயலாக
...நும் சாந்தி விழாவில் எம் பெருமானின் திருவருளை வேண்டி

– ந. பரம்சோதி, கிராம அலுவலர் , குமிழமுனை கிழக்கு.

### குடமுழுக்கு பெருவிழாக் காணும் குமுழ கற்பக விநாயகர் ஆலயம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிஞ்சி, முல்லை, நெய்தலுடன் மருதமென நால்வகை நிலங்களும் நீர் வளத்தால் செழிப்புறும் செந் நெல்லும் ஆநிரை யால் குறையாத பால் தயிரும் வந்தவரை கனிமுகத்தால் வரவேற்று விருந் தோம்பும் தனிச்சிறப்பும் கொண்ட குமுழமுனைக் கிராமத்தில் கற்பகதரு போல் கருணை மழைபொழியும் கற்பக விநாயருக்கு நவகுண்ட மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனநிறைவடைகிறேன்.

இவ் விநாயகப் பெருமானிற்கு தனியான சிறப்புக்கள் உள்ளன. வன்னி மன்னர்காலத்திற்கு முன்பிருந்தே மக்களால் தம் விவசாயமும் கால்நடைகளும் செழிப்படைய வேண்டி வழிபட்டு வந்தனர். அவரின் அற்புதங்களை அறிந்த வன்னி மன்னன் திருப்பணியில் ஈடுபட்டான். பின் மக்கள் தம் பயிற்செய்கையால் பெறும் அறுவடையில் ஒரு பகுதியை கற்பகத்தானிற்கு ஒதுக்கிதிருப்பணிகள்செய்து வந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம முருகனிடம் நடைபயணம் செய்யும் அடியவர்கள் இரு தினங்கள் ஆலயத்தில் தங்கி விருந்துண்டு செல்லும் தலமாக மாறியது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் சிதைவடைந்த ஆலயத்தை மக்கள் தம் அயராத உழைப்பினால் புனரமைத்து புதுப்பொலிவுறச் செய்து இன்று குட முழுக்கு காணும் அளவிற்கு மாறியுள்ளனர். எமது சமயப் பண்பாடுகளையும் விழுமியங்களையும் அழியாது பாதுகாத்த ஆலய பரிபாலன சபையினரையும் புனரமைப்பிற்காக நிதி மூலங்களை வழங்கிய கொடை வள்ளல்களையும் பாராட்டி விநாயகருக்கு எடுக்கப்படும். இக்கைங்கரியம் செம்மையுற கற்பகத்தான் மலர்த்தாள் பணிந்து உளமார வாழ்த்துகிறேன்.

''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

நா.வேதநாயகன், மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.

### விநாயகனின் திருவருள் கிடைக்கட்டும்.....!



வன்னிப் பெருநிலப்பரப்பின் கிழக்கே அமைந்த முல்லைத்தீவு மாவட் டத்தில் கரிக்கட்டு மூலை என வரலாறு படைத்த குமுழமுனையில் கோயில் கொண்டு அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டு இருக்கும் கற்பக விநாயகருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று குட முழுக்கு பெருவிழா நடைபெறுகிறது. விழா சிறப்புற எனது நல்லாசிகள் மேலும் இவ் ஆலயத்துக்கான புனர்நிர்மானப்பணிகளை செய்ய கிடைத்தது அவன் அருள். எதிர்பாராமல் இவ்வாலய தலைவரின் தொடர்பு கிடைத்த தென்றால் அதுவும் விநாயகரின் அதீத அற்புதம் ஆகும். கால நீரோட் டத்தில் இக்கிராமம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் ஆரம்பத்தில் நிதி மூலங்களைப் பெறுவதில் மிகுந்த சிரமத்துக்குள்ளான நிலையில் சில திருப்பணிகளை பிற்போட்ட நிலையில் இப் பெருவிழாவை செய்ய விளைகிறார்கள். ஏனைய திருப்பணிகளும் விரைவில் செய்து முடிக்க திருவருள் கிடைக்க வேண்டும்என வாழ்த்துகிறேன்.

அராலியூர் நடேசு கனகலிங்கம், சிற்ப ஆச்சாரியார்

### வாழ்த்துரைகள்



எல்லாம் வல்ல முமுழமுனை ஸ்ரீ கற்பகவிநாயகரின் பாதார விந்தங்களைப் பணிந்து கொண்டு,எம் பெருமானின் மகா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்கிட கிடைத்தமையை எனக்கு வாய்த்த பெரும் பேறாகக் கருதி மேற்படி பரிபாலன சபையினருக்கும், குமுழமுனைக் கிராம மக்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

என்னைப் பெற்று வளர்த்த புனித மண் குமுழமுனை. இக்கிராமத்தை எவரும் குறைவாக மதிப்பிடுவதை எந்தக்காலத்திலும் சகிக்காத குணம் எனது இரத்தத்தில் ஊறிய ஒரு வெறி என்றே கூறலாம். அவ்வகையில் ஒரு காலத்தில் எமது கிராமத்துக்கு ஏற்பட்ட பழியைத் துடைத்தழித்திடவே எனது எழுதுகோலைத் தூக்கினேன். முதியோர் வாயிலாகவும், வரலாற்று இலக்கியச் சான்றுகளாலும் எமது கிராமத்தை உலகறியச் செய்து பல்கலைக் கழக பேராசிரியர்களையும், எழுத்தாளர்களையும் கிராமத்துக்கே அழைத்து வந்து அவர்களது பதிவுகளையும் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளியிட வைக்க முடிந்ததென்றால் எல்லாம் என்னை ஆளாக்கிய ஸ்ரீ கற்பகவிநாயகர், ஸ்ரீ கொட்டுக் கிணற்று விநாயகர் ஆலயங்களில் நான் வளர்க்கப்பட்டமையே காரணமாகும்.

குமுழமுனையில் உள்ள ஆலயங்கள் அனைத்தையும் இந்து கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்ததோடு, அவற்றின் சுருக்க வரலாறுகளையும் அனுப்பிவைத்து அவையெல்லாம் ''இலங்கையின் இந்து ஆலயங்கள்'' என்னும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, சிறப்பாகக் ''குருந்தூர் சிவன்'' ஆலயமும் ''இலங்கையின் சிவாலயங்கள் நூலில் இடம்பெற்றுள்ளது. ஆயினும் தொன்றுதொட்டு ஐயனார் வழிபாடு இடம் பெறுவதால் ஐயனாரின் ஆலயத்தையும் ஆரம்பிக்கலாம், ஆண்டாங்குளம் ஐயன் ஆலயமும் கட்டப்பட வேண்டும். தற்போது குமுழமுனைக் கிராமத்தின் கிழக்குத் திசையில் விடிவெள்ளி பூத்துள்ளமையை எண்ணி மெய்சிலிர்க்கின்றேன். வாழ்க! வளர்க! வெல்க!

வழங்குபவர் ஓய்வுபெற்ற கிராம அலுவலர்
உயர்திரு சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை.
கலாபூஷணம், கலாமணி குமுழமுருகன், இரா்வைக் குளர், நெடுங்கேணி .

### கும்பாபிஷேக பெருவிழா காண வாரீர்



ஆலய நிகழ்வுகளில் பெரும் புண்ணிய செயலான கும்பாபிஷேக நிகழ்வு விநாயக பெருமானிற்கு இன்று இடம் பெற இருப்பது இப் பிரதேச மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் திருநாளாகும்.இம் மக்களின் வாழ்வு செழிக்க மக்களோடு சேர்ந்து விநாயகரை வேண்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

இ.மயூரன்,உப தபால் அதிபர், கிராம முன்னேற்ற சங்க தலைவர், குமுழ முனை கிழக்கு.

### வரலாற்றுப்புகழ் மிக்க கற்பகவிநாயகர்



குமுழமுனைக் கிராமம் எங்களுடன் பத்து (10) தலை முறையை கடந்த கிராமம். இக் கிராமத்தில் வன்னியர் ஆட் சிக்காலத்தில் தோன்றியவர்களில் கற்பக விநாயகர் முன்னிலை பதித்துள்ளார். இவ்வாலயத்தில் பூசகர்கள் பூசை செய்து வந்தனர். (சைவ ஐயர்மார்) பண்டாரவன்னியன் இந்தியாவில் வேதாரணியத்திலிருந்து ஒரு சைவக் குடும்பத்தை குமு ழமுனையிலே கொண்டு வந்து இருத்தினார். அந்தப் பரம்பரை யில் வந்தவர்கள் தற்போது சைவ ஒழுக்கத்தில் இல்லாமல் பரம்பரைத் தொழிலில் இல்லை. நாங்கள் அறிந்த மட்டில் மாணிக்க விதானையார் தான் இவ்வாலயத்தை ஆரம்பத்தில் புனரமைப்புச் செய்தார். படிப்படியாக பரிநாம வளர்ச்சிய டைந்து பக்தர்களுக்கு அருள்புரிந்த கற்பக விநாயகரை தில்லையம்பலம் சிவபாதம் (ஓய்வுபெற்ற பிரதி விவசாயப் பணிப்பாளர் ) அவர்கள் ஆலய வளர்ச்சியில் அரும் தொண் டாற்றி வருகின்றார். கடந்த கும்பாபிசேகத்தையும் அவரே தலைமை தாங்கி செய்திருந்தார். அதற்குபின் நிர்வாகம் எனது தலைமைக்குட்பட்டு குமாரசாமி ரவிச்சந்திரன் செயலாளர் களுக்கு அரசாங்கத்தின் நிதி உதவியைப் செய்யப்பெற்று திரும்பக்கட்டப்பட்டு கொடியேற்றத் திருவிழாவையும் மேற்கொண்டோம். மீண்டும் இவ்வாலயத்தை புனரமைப்புச் செய்ய ஓய்வு பெற்றபெற்றவர்களான தி.சிவபாதம், ரி.இராஜேஸ்வரன் ஆகியோரின் அரும் பெரும் முயற்சியால் இவ்வாலயம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதை யாரும் மறந்துவிட முடியாது. எனது அம்மா கனகசபை மாணிக்கம் அவர்களின் நினைவாகவும் துணை ஆலயம் ஒன்று புதிதாக உருவாக்கப்படுள்ளது. எனவே இவ்வாலயத்தின் அருள் யாவருக்கும் கிடைக்க பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

க.தெய்வேந்திரன், கிராம உத்தியோகத்தர், குமுழமுனை மேற்கு.

### அற்புதங்கள் புரிந்திடும் கற்பகவிநாயகன்




முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் பெரிய நீர்ப்பாசன குளமது தண்ணீர் முறிப்பையும், பல்வேறு ஆறு, சிறுகடல் மலைக்குன்றுகளும் ஒருங்கே அமையப்பெற்ற வளமிகு குமுழமுனையில் வடக்கே கற்பக விநாயகரும் தெற்கே ''குன்றின்மேல் குமரன்'' ஆலயமும் அமையப் பெற்றது ஒரு தனிச் சிறப்புமிக்கதாகும், எமது ஆலயங்கள் அனைத்தும் போர் சூழல் நிறைவுற்ற நிலையில் புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தநிலையில் அதாவது ஆனி உத்திரத்தில் ஸ்ரீ கற்பக விநாயகருக்கு கும்பாபிஷேக நிகழ்வுக்கு ஆசிவழங்கக் கிடைத்தமை பெரும் பேறாக கருதுகிறேன்.

''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற முதியோர் வாக்குக்கு அமைய இந்துமக்கள் அனைவரும் கருத்தொருமித்த விருப்பு டன் சிறுதுளியென இப்படியான திருப்பணிக்கு வழங்கிட முன்வர வேண்டும் என வேண்டி இன்நாளில் நவகுண்ட கும்பாபி ஷேக பெருவிழா சிறக்க எமது அடியார்கள் அனைவருக்கும் அருள்கிடைக்க எம்பெருமானை வேண்டுகிறேன்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

த. ஸ்ரீஸ்கந்தராசா, தலைவர், குன்றின்மேல் குமரன் ஆலயம், குமுழமுனை.

### கும்பாபிஷேகம் சிறக்கட்டும்



நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்று செந்நெல், பால், தயிரால் வளம் கொழிக்கும் குமுழமுனையில் அமைந்துள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் சிறப்புறவும் விநா யகரின் அருள் எல்லா மக்களுக்கும் கிடைக்கவும் எல்லாம் வல்ல விநாயகரை வேண்டி வாழ்த்துகிறேன்.

எந்திரி கு. செந்தூரன் நீர்ப்பாசன பொறியியலாளர், முத்தையன் கட்டுப் பிரிவு

(C/9754)(2.6.3)


...யா ஸ்ரோர்ஸ்
...ல்லறை விற்பனை
...லையம்
...தி, முல்லைத்தீவு.

செந்தமிழ்குமரன் பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
தண்ணீர் ஊற்று - முள்ளியவளை.
தொ.பே. 077 288 1874

இராசையா மருந்துக்கடை
கும்பாபிஷேக திரவியப் பொருள்கள்
விக்கிரகங்கள்
வலிகாமம் ... வீதி, வலிகாமம்
... யாழ்ப்பாணம்.

விலோஜிகா பல்பொருள் வாணிபம்
6ஆம் வட்டாரம், குமுழமுனை
முள்ளியவளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய எழுத்துவடிவம் சீனாவில் கண்டுபிடிப்பு!

இரு கற்கோடாரிகளில் பொறிக்கப்பட்டிருக்கும், உலகின் மிகப் பழமையான எழுத்து வடிவங்கள் என்று கருதக்கூடிய ஒரு தொகுதி எழுத்து வடிவங்களை சீனாவில் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

உடைந்த கோடரி போன்ற பொருள்களில் காணப்பட்ட இந்த எழுத்து வடிவங்கள் குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகள் பழமையானவை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மெசபத்தேமிய நாகரிக காலத்தில் கண்டெடுக்கப்பட்ட எழுத்து வடிவங்களும் ஏறக்குறைய இந்தக் காலப் பகுதியைச் சேர்ந்தவைதான். அந்தக் கோடரிகளில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் ஆரம்ப கால சீன மொழியாக இருக்கக்கூடும் என்று ஓர் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆனால் இவை ஆதி மனிதர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்திய சித்திரத் தொகுப்புக்கள் என்று வேறு சிலர் கருதுகின்றனர். இந்த எழுத்து வடிவங்களின்



பொருளை இதுவரை படித்தறிய முடியவில்லை. ஷாங்காய்க்குத் தெற்கே 2003 ஆம் ஆண்டுக்கும் 2006 இற்கும் இடையே நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பல மதிப்பு மிக்க பொருள்களில் இந்த எழுத்து வடிவங்களைக் கொண்ட கோடரிகளும் அடக்கம். இதுவரை சீனாவில் கிடைத்த மிகப் பழமையான எழுத்துக்கள் விலங்குகளின் எலும்புகளில் காணப்பட்டுள்ளன. அவை 3,300 ஆண்டுகளுக்கு முந்தியவை.

## தங்க ஊசியில் பைபிள் வசனம்: பிரிட்டன் நபர் சாதனை

ஊசியின் கண் அளவு இடத்தில் பைபிள் வசனத்தை எழுதி சாதனை படைத்துள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த கிரகாம் ஷார்ட். பிரிட்டனைச் சேர்ந்தவரான கிரகாம் ஷார்ட் (வயது-67) மிகச் சிறிய எழுத்துக்களில் அதாவது ஊசியின் கண் அளவு இடத்தில் பைபிள் வசனத்தை எழுதிச் சாதனை படைத்துள்ளார்.

மைக்ரோஸ்கோப் வழியாக மட்டுமே பார்க்கக்கூடிய அந்த எழுத்துக்கள் அடங்கிய தங்க ஊசி, பிரிட்டனில் நடந்த கண்காட்சியில் 80 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

இதனை உருவாக்க இவர் 320 மணிநேரம் கடுமையாக உழைத்துள்ளார்.

''ஊசியின் கண் வழியே, ஒட்டகங்கள் சென்றாலும், இறைவன் இடத்தை பணக்காரர்களால் அடைய முடியாது'' என்ற வசனத்தையே அவர் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




சேத்சுவ
பிராண ஜீவ
புத்துயிரளிக்கும் ஔடதம் (சந்ஜீவீ) Life Giving Medicine

செத்சுவ ப்ராணஜீவ ஔஷதத்தின் முக்கியத்துவம்

- 200 தாவர பதார்த்தங்களைப் பயன்படுத்தி பாரம்பரிய பட்டோலைக்கமைய விசேட நெறிமுறையைப் பின்பற்றி சுமார் 4 1/2 மாதகாலம் இந்த ஔடதம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இயற்கையான நோய் எதிர்ப்புச் சக்தியை விருத்தியாக்கிப் பல நோய்களைக் குணமாக்க வல்லது.
- இளமைத் தன்மையை உண்டாக்கும் வல்லமை இந்த மருந்தில் காணப்படுவதால் வயதாகும் பொழுது ஏற்படும் பலவீனங்களை இதனால் தவிர்த்துக் கொள்ளலாம்.
- அமெரிக்காவிலுள்ள உணவு மற்றும் ஔடத அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டு 100% உணவாக உட்கொள்ளக் கூடிய பானமாக இதனை அமெரிக்க வணிக நிறுவனமான Sun Idustines விநியோகித்து வருகிறது.
- அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வுகூடங்களின் பரிசோதனைகள் மூலம் Bypass சத்திரசிகிச்சைக்கு சிபார்சு செய்யப்பட்ட இருதய நோயாளர்களில் பெரும்பாலானவர்களுக்கு சத்திரசிகிச்சை இல்லாமலே நோய் குணப்படுத்தக்கூடியதாக இருந்ததென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.
- புற்று நோயைக் கட்டுப்படுத்தத் தேவையான Antioxidant மற்றும் Anticytotoxic Properties என்பவை கூடிய வீதத்தில் இந்த ஔடதத்தில் இருப்பதாகப் பல்கலைக்கழக ஆய்வுகளிலிருந்து உறுதியாகியுள்ளது.
- உடலுக்குத் தீங்கான இரசாயன பதார்த்தங்கள் பார உலோகங்கள், மதுபானம், சீனி, நுண்ணுயிர்கள், செயற்கை வர்ணங்கள், சுவையூட்டிகள் என்பவை இந்த மருந்தில் கிடையாதென்பது அமெரிக்காவிலும், இலங்கையிலுமுள்ள ஆய்வுகூடப் பரிசோதனைகளிலிருந்து உறுதியாகியுள்ளது.
- வெட்டுக்காயம், உராய்வு, காயம், வீக்கம் என்பவற்றுக்கும் நோவுக்காக வெளியே பூசுவதன் மூலமும் உடனடி நிவாரணம் கிட்டும்.
- இது அகாலத்தில் தலைமயிர் நரைத்தல், உதிர்தல் என்பவற்றையும் தடுக்கக்கூடிய இரசாயன குண நலன்கள் அடங்கிய மருந்தாகும்.
- வேறு மருந்துகளைப் பயன்படுத்தும் போதே நீண்ட காலத்துக்கு பயன்படுத்தக் கூடிய ஔடதம் அதே வேளை இதனால் பக்கவிளைவுகள் ஏற்படாது என்பது பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்துவதன் மூலமும் ஆய்வுக்கூட பரிசோதனைகள் மூலமும் உறுதியாகியுள்ளது.

Sethsuwa Ayurweda Hospital (Pvt) Limited.
258/19, Vihara Mawatha, Batalanda Road,
Makola South, Sri Lanka.
Tel: 011 2964023 Fax: 011 2962008
E.mail : pranajeewa@hotmail.com
web : www.pranajeewa.com

Hot Line
077 803 3984

Places where Sethsuwa Pranajeewa Medicine is Available
Pharmacies in Islandwide
CARGILLS FOOD CITY PHARMACIES
KEELLS SUPER PHARMACIES
ARPICO SUPER CENTRES PHARMACIES
SUN-UP SUPER CENTRES PHARMACIES
Leading Pharmacies like
UNION CHEMISTS, HEALTHGUARD PHARMACIES etc.
Leading AYURVEDIC PHARMACIES
and Authorised Dealers.



Herbal Menu No : 6/2/1/02/3 / Hospital Reg No : 08 / Co.R.No : PV 14202 / Medical Reg. No : 11003 / ISO 9001-2008 Certified / ආයුර්වේද සංග්‍රහ කමිටුවේ නිර්දේශිත.

(C/10326)

## நிலம் தேவை

யாழ். நகரிலிருந்து
10 கி.மீ க்குள் A9 வீதியின்
முகப்பாக, 3கட்ட மின்சாரம்,
நீர் வசதியுடன்
100 பேர்ச்சிலும் கூடிய
அளவிலான நிலம் தேவை.

தொடர்புகளுக்கு: (C/10307)
0773 318815 | 0773 556631

1717 FOLLOW US www.mobitel.lk

சிறப்புமிகு ரமழான் மாதத்தில்
சிறப்புமிகு IDD கட்டணங்கள்

டயல் 100 <தேசக் குறியீடு> <அழைப்பைப் பெறுபவர் இல.>

| | | | |
|---|---|---|---|
| பஹ்ரெய்ன் | ரூ. 4.00 | ஓமான் | ரூ. 12.00 |
| சைப்ரஸ் | ரூ. 1.00 | கட்டார் | ரூ. 15.00 |
| யோர்தான் | ரூ. 9.00 | சவூதி அரேபியா | ரூ. 8.00 |
| குவைட் | ரூ. 6.00 | | |
| லெபனான் | ரூ. 9.00 | ஐக். அரபு இராஜ்ஜியம் | ரூ. 12.00 |

20
Sri Lanka Telecom
Mobitel

(C/10332)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடன் பெற்றவர் வீட்டை இழந்தார்

குடியிருந்த வீடு ஒன்றை ஈடு வைத்து 5 லட்சம் ரூபா கடன் பெற்ற குடும்பஸ்தர் கடனை செலுத்த முடியாத நிலையில் தனது வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார். இந்தச் சம்பவம் வரணி வடக்கில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது: கடந்த போர் கால கட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வரணிப் பிரதேசத்துக்கு வருகை தந்த குடும்பம் ஒன்று அப்பிரதேசத்தில் காணி ஒன்றை கொள்வனவு செய்து குடியிருந்தனர். காலகட்டத்தில் உலக வங்கி திட்டத்தின் மூலம் வீடு ஒன்றைக் கட்டி குடியிருந்து வசித்து வந்த நிலையில் அவசர பணத் தேவையின் நிமித்தம் வடமராட்சியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் தமது வீட்டை ஈடு வைத்து ரூபா 5 லட்சம் பெற்றுக் கொண்டதாகவும் தற்சமயம் அது வட்டியுடன் கூடிய தொகை கட்டவேண்டிய நிலையில் அக்குடும்பத்தவரால் அப்பணத்தை மீள கட்டி வீட்டை மீளப் பெற முடியாத நிலையில் குறித்த தவணை முடிவடைந்ததனால் கடன் கொடுத்தவர் அக்குடும்பத்தை அவர்கள் வசித்துவந்த வீட்டில் இருந்து வெளியேற்றிவிட்டு விட்டுத் திறப்பை கொண்டு சென்றதாகவும் கூறப்பட்டது. சம்பந்தப்பட்ட குடும்பஸ்தவர் தற்சமயம் உறவினரின் வீடு ஒன்றில் தங்கியுள்ளனர். (ஐ-122)

## கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தால் ஏழை மாணவர்களுக்கு உதவி




அக்கராயன், ஜூலை 14
கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு உதவிகளை வழங்கத் தொடங்கியுள்ளது.
பெற்றோரை இழந்த கல்வி பயில முடியாத வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் தெரிவு செய்து தொடர் நிதியுதவிகளை வழங்கி வருகின்றனர்.
அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் புதிய பாடசாலை என்பதால் பௌதிக வள நெருக்கடிகளுடன் இயங்கி வருகின்றது. 80 மாணவர்கள் வறுமை நிலைக்குட்பட்டுள்ளனர். அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் முதல் தடவையாக இரு மாணவர்களுக்கு உதவிகளை கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழக உப தலைவர் அ.கேதீஸ்வரன் வழங்கினார். (வ-18)

### சோ ஆ நிறுவன ஏற்பாட்டில்

## கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 13
சமுதாயத்தை கட்டியெழுப்புவோம் செயற்றிட்டத்தின் கீழ் சோ ஆ நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 கிராமங்களில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் நாவல் நகர் கிராமத்திலும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பொன்நகர், ஊற்றுப்புலம், எள்ளுக்காடு ஆகிய கிராமங்களிலும் இந்த செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
குறித்த கிராமங்களில் உள்ள மகளிரை குழுக்கள் ரீதியாக ஒன்றிணைத்து அவர்களூடாக கிராமத்தில் உள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.
குறிப்பாக மகளிர் குழுக்களிடையே சேமிப்புப் பழக்கம் மற்றும் பெண்களது உளநலப் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.
சோ ஆ நிறுவனத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த செயற்றிட்டத்தால் பெண்களுக்கான ஆலோசனைகளும், வன்முறைகளில் இருந்து பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்துரைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-14)

### சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர்களுக்கு

## கண்டியில் நடந்த பயிற்சிப் பட்டறை

வலி.வடக்கு, ஜூலை 14
வடக்கு கிழக்கு சமுர்த்தி வங்கிகளின் உதவி முகாமையாளர்களுக்கான ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை கண்டி நில்வரம்பை பயிற்சி மையத்தில் இடம்பெறுகிறது.
கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகிய இந்த ஐந்துநாள் பயிற்சிப் பட்டறையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் உதவி வங்கி முகாமையாளர்கள் 88 பேர் கலந்து கொண்டனர்.
இந்தப் பயிற்சிப் பட்டறையானது உதவி முகாமையாளர்களின் வங்கி நடவடிக்கை தொடர்பான ஆற்றலை அதிகரிப்பதுடன் வறுமையற்ற இலங்கையை கட்டியெழுப்புதல் சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (வ-86)

### நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்பட்ட

## நிதி விவரம் அனுப்பி வைப்பு

வலி.வடக்கு, ஜூலை 14
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், விளையாட்டுக் கழகங்கள், ஆலயங்கள், விவசாய அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்த விவரங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
யாழ். மாவட்டத்தில் இந்த முறை கூடுதலான நிதி நாடாளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் விரைவாக அதனை செயற்படுத்தும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
குறித்த நிதி தொடர்பான அமைப்புக்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளில் திட்டமிடற் கிளையால் அழைக்கப்பட்டு செயற்றிட்டங்கள் பெறப்பட்டு வருவதாகவும் யாழ். மாவட்ட செயலக திட்டமிடற் கிளையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 8820 (வ-86)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமிலை வதந்தி

இந்தியாவில்-ஆந்திராவைச் சேர்ந்த ஓட்டோச் சாரதி ஒருவர் அரச இலை மூலம் கைத்தொலைபேசி பற்றரிக்கு சார்ஜ் செய்ய முடியும் என்பதை கண்டுபிடித்துள்ளார் என்று சில நாள்களுக்குமுன்னர் இணையங்களில் செய்தி வெளிவந்திருந்தது. அரச இலையை செல்போன் பற்றரிக்குப் பின்புறமாகச் செருகினால் பத்து நிமிடத்தில் மின்சாரம் இன்றியே



சார்ஜ் ஏறிவிடும் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் இதனை நம்பிய ஏராளமானோர் அரசமிலையைப் பிடுங்கி தமது செல்போன் பற்றரியில் பொருத்திவிட்டு சார்ஜ் ஏறும் என்று நாள் முழுக்கக் காத்திருந்தனர். ஆனாலும் நீண்ட நேரத்தின் பின்னரே தாங்கள் முட்டாளாக்கப்பட்ட விடயம் அவர்களுக்குத் தெரிய வந்தது.

இலங்கையின் முன்னோடி கண் பாதுகாப்பு நிபுணர்.
"விஷன் கெயார்"
VISION CARE OPTICAL SERVICES



எமது சேவைகள்
- Refraction
- Glasses
- Contact lenses
- Visual field
- Prosthetic eyes
- Biometry
- Hearing aids testing
- Hearing aids

முற்கூட்டிய பதிவுகளை செய்துகொள்ளக்கூடிய வசதி.
- Othoptic Assessment
- GDX
- Fundus PG
- CCT

கண் சத்திரசிகிச்சை ஆலோசனைகள்

www.adinnovations.lk

VISION CARE OPTICAL SERVICES
வரையறுக்கப்பட்ட விஷன் கெயார் ஒப்டிகல் சேர்விசஸ் நிறுவனம்
இல: 108, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
0212-221808



வெற்றியின் மலர்ச்சி

الفلاح
AL-FALAAH
ladies
இஸ்லாமிய நிதிச் சேவைகள்

அவளது ஆசைக்கனவுகளை நனவாக்க உதவும்!

சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களுக்கு அதிக இலாபப் பங்கும் பிரத்தியேகமான கடன் வசதிகளும்

மகளிருக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட அல் ஃபலா மகளிர் இஸ்லாமிய நிதிச் சேவைகளை லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி. வழங்குகிறது

- 5 பிரத்தியேக அல் ஃபலா நிலையங்கள் உட்பட நாடெங்கும் 60க்கு மேற்பட்ட LOFC கிளைகள் மூலம் செயற்படுத்தலாம்
- தரமுயர்ந்த சேவை
- இந்த ஈத் காலத்தில் விசேட வெகுமதிகள்

5 880 785

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(LOLC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனம்)

BRANDS ALLEY

2001 டிசெம்பர் 13இல் கூட்டிணைக்கப்பட்ட லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டுள்ளதுடன், ICRA லங்கா லிமிட்டட்டின் [SL] A- தரப்படுத்தலையும் பெற்றுள்ளது. அல் ஃபலா மகளிர் முதலீடுகள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பான பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுக்கோப்புக்களுக்கு அமையவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பன்னிரண்டு (12) மாத முதிர்ச்சி முதாரபா முதலீட்டுத் திட்டத்திற்கான இலாபப் பங்கீட்டு விகிதம் 62 : 38 ஆகும். இதில் 62% முதலீட்டாளருக்கு வழங்கப்படும். முதாரபா சேமிப்புகளுக்கான இலாபப் பங்கீட்டு விகிதம் 42 : 58 ஆகும். இதில் 42% முதலீட்டாளருக்கு வழங்கப்படும்.

HONDA POWER PRODUCTS

ஹொன்டா நீர் பம்புகள்
எந்த உயரத்திற்கும் அதி வேகமாக நீரை கொடுக்கும் முதல் தர நீர் பம்புகள்



விவசாயிகளுக்கான நிரந்தர நிவாரணம் ஹொன்டா நீர் பம்புகள். நீண்டநாள் பாவிக்கக்கூடிய ஹொன்டா நீர் பம்பு விளைச்சலின் மன்னன்.

✓ நீண்டநாள் பாவனை ✓ இலகுவான உபயோகம் ✓ குறைந்த நிறை

| | | | |
|---|---|---|---|
| WPK - 20(2") | பெட்ரல் / மண்ணெண்ணெய் | குதிரை பலம் 4 நிமிடத்திற்கு லீற்றர் 600 | ருபா. 48,214* |
| WPK - 30(3") | பெட்ரல் / மண்ணெண்ணெய் | குதிரை பலம் 4 நிமிடத்திற்கு லீற்றர் 1000 | ருபா. 50,535* |

நாடெங்கிலுமுள்ள அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து (வரி கட்டணமின்றி)

வரையறுக்கப்பட்ட ஸ்டெஃபர்ட் மோட்டர் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 703/7 மரதானை வீதி, கொழும்பு 10. 011 7607200 மோட்டார் சைக்கிள் நிலையம் 161, கொழும்பு வீதி, இரத்தினபிட்டிய. 011 7607450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org